பாரி தமிழ் மணிமாலை

இரண்டாம் புத்தகம்

(ஐந்தாம் பாரத்திற்குரியது)

தொகுப்பாசிரியர் :

திரு. தே. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

உரிமை பதிவு]

[விலை ரூ. 1-[illegible]

முதற் பதிப்பு: நவம்பர் 1951.
இரண்டாம் பதிப்பு: ஜூன் 1952.
மூன்றாம் பதிப்பு: ஜூலை 1952.

Approved by the Madras Text Book Committee as per consolidated list of approved books—1952. Vide page No. 106 of the Fort St. George Gazette, dated 7-5-52.

Printed at the Shanti Press, Madras.

முன்னுரை

உயர்நிலைப் பள்ளிகளில் கற்கும் தமிழ் மாணவர்களுக்கு இந்நாளைய பாடத் திட்டத்தினை ஒட்டி இந்த இலக்கியத் தொகுதி திரட்டப்பட்டுள்ளது. அங்குக் குறிப்பிட்ட ஒவ்வொரு தலைப்புக்கும் ஒவ்வோர் எடுத்துக் காட்டினை இங்குக் காணலாம். வேண்டிய அளவிற்கு மேலும் இதனுள் பாடல்களும் கட்டுரைகளும் வந்துள்ளன ஆதலின், ஆசிரியர்கள் ஆங்காங்கே தமக்கு விருப்பாயவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். உலகம் போலப் பாடத் திட்டமும் பரந்திருக்கக் காண்கிறோம். ஆதலின், மாணவர் கருத்தினைக் கவர ஆசிரியர்களும் பெருந் திட்டம் இடவேண்டும். மேனாட்டுப் பள்ளிகளைக் கண்டவர்கள், இவ்வாறு செய்தல் கூடும் என உறுதி கூறுகின்றார்கள், அவர்கள் அங்குச் செய்தால், நாம் இங்குச் செய்தல் இயலாதா!

பழையனவும் புதியனவும் ஆன பாடல்களும் கட்டுரைகளும் பொறுக்கு மணிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆதலின், அவை மாணவர்களுக்கு விளங்க வேண்டி, முன்வரும் பகுதிகளையும் பின்வரும் பகுதிகளையும் காட்டி இவற்றில் திளைக்க வைக்க வேண்டும். புத்தம் புதுக் கருத்துக்களையும் வெளியிடத்தக்க ஆற்றலுடையது நம் தமிழ்மொழி என்பதனை இத் தொகுப்பு நன்கு விளக்குகிறது. பழங் கருத்தின் போக்கையும் அழகினையும் உடன் வைத்து ஆராய்தல் வேண்டும். சில பகுதிகள் தொடர்பு காட்ட வேண்டி இங்குச் சேர்க்கப் பெற்றுள்ளன; ஆசிரியர்கள் கடுமை எனக் கண்டால் வேண்டும் இடங்களில் இரண்டொரு வரிகளையோ பத்திகளையோ விட்டுவிடலாம். இப் பகுதிகளை மேலும் கற்றறிய வேண்டும் என்ற பெருவிருப்பால், தாமாக முனைந்து மாணவர்கள் முயலுதல் கூடும் அன்றோ? இலக்கியச் சுவையோடு மொழியின் ஆற்றலையும் மாணவர் கண்டுமகிழ்வதோடு தாமும் அவ்வாறு எழுதத் தூண்டப் பெறுதல் வேண்டும்.

தமிழை மனத்திற் பதிய ஓதி இன்புறுவது ஒருகலை; அதனை இசையோடு பாடுவது ஒருகலை; உரக்க, அதனைப் பிறர் கேட்ட

அறிந்து கொள்ளுமாறு, ஓதுவது ஒருகலை; அதன் பொருளை விளக்குவது ஒருகலை; பேசுவது ஒருகலை; கட்டுரை எழுதுவது ஒருகலை; இலக்கிய நயங்களை ஆராய்வது ஒருகலை; தமிழ் எழுத்துக்களை அழகாக எழுதுவது ஒருகலை; இலக்கண அமைதி காண்பது ஒருகலை; இவ்வாறு ஒன்பது வேறு கலைகளாக அமைந்த இவற்றினைத் தனித் தனியே பழகித் திறம்பெற்று உயரவேண்டும். இதனை மறந்து எல்லாவற்றையும் கலக்கிக் குழப்பினால் இன்பம் பிறப்பது அருமை.

தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் படிக்க வேண்டும் பொதுப் பகுதியை ஒரு பகுதியாகவும், தமிழைச் சிறப்பாக ஆழ படிப்பார் படிக்க வேண்டும் சிறப்புப் பகுதியை வேறொரு பகுதியாகவும் அச்சிட்டுள்ளனர். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இது துணை செய்யும் என எதிர்பார்க்கின்றோம். இதில் வந்துள்ள கட்டுரைகளைப் பதிப்பிக்க அன்புடன் இசைந்த பெரியார்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

பொருளடக்கம்

செய்யுட் பகுதி (பொது)

எண்			பக்கம்
I.	கடவுள் வாழ்த்து		
	1. திருவருட்பா	...	
II.	காதை		
	1. சிலப்பதிகாரம்	...	
	2. கம்பராமாயணம்	...	
	3. வில்லிபுத்தூரார் பாரதம்	...	
	4. மனோன்மணீயம்	...	14
	5. இரக்ஷகர்	....	15
III.	வருணனை		
	1. பந்தடித்தல்	...	17
	2. திருமுனைப்பாடி நாடு	...	18
	3. பெண்ணையாறு	...	18
	4. மருத நிலம்	...	18
	5. உதய சூரியன்	...	18
	6. ஆலமரம்	...	19
IV.	நீதி		
	1. திருக்குறள்	...	19
	2. பழமொழி	...	21
V.	புகழ்ப்பாக்கள்	...	22
VI.	சிறுபிரபந்தங்கள்	...	23
VII.	தனிப்பாடல்கள்	...	24

சிறப்புப்பகுதி

I. நீதி

1. சிலப்பதிகாரம் ... 135
2. பழமொழி ... 135
3. ஏலாதி ... 136

II. சிறுபிரபந்தங்கள்

1. அற்புதத் திருவந்தாதி ... 137
2. திரு இரட்டைமணிமாலை ... 138
3. திருப்புகழ் ... 138
4. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ... 138
5. முக்கூடற்பள்ளு ... 139

III. புகழ்ப்பாக்கள்

1. மகாத்மா காந்தி பஞ்சகம் ... 140
2. சுந்தரன் பாமாலை ... 141

IV. தனிப்பாடல்கள் ... 143

குறிப்புரை ... 145

பொருளடக்கம்

உரை நடைப் பகுதி (பொது)

எண்			பக்கம்
1.	திருக்குறள் — அறத்துப் பாலுக்குப் பரிமேலழகர் முன்னுரை	...	25
2.	இறையனார் களவியல் பொருளதிகாரம் — இறையனார் அகப் பொருளுரை	...	26
3.	திரிசிராப்பள்ளி — திரு. திரு. வி. க.	...	27
4.	நாடக சந்தி — விபுலானந்த சுவாமிகள்	...	31
5.	கர்நாடக சங்கீதம் — திரு. தி. இலக்குமணப் பிள்ளை, B. A.	...	34
6.	பாடுங் கற்கள் — திரு. வை. மு. நரசிம்மன், B.A., B.E., A.M.I.E.	...	39
7.	வாட் என்பாரும் நீராவி எந்திரமும் — திரு. ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார், M.A., L.T.	...	43
8.	மணிமேகலையும் மதுவிலக்கும் — திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, B.A., B.L.	...	52
9.	உலகம் ஏன் அழியவில்லை? — திரு. மொ. அ. துரை அரங்கசாமி, M.A.,M.O.L.	...	55
10.	ஒரு கடிதம் — மறைமலையடிகள்	...	58
11.	யான் கண்ட பொருட்காட்சிகள் — திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார், B.A.	...	61
12.	நீயும் உனது நாடும் — திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,	...	69

13. குடியரசு ... 74
திரு. ஈ. த. சொக்கம்மாள், B.A,. B.L., L.T.

14. நினைவுகள் ... 77
டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

15. விடுதலை ... 86
ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியார்

16. பஞ்சாயத்து ராஜ்யம் ... 90
சென்னை சர்க்கார் செய்தி இலாகா வெளியீடு

சிறப்புப் பகுதி

17. கோயில்களின் இலக்கணம் ... 97
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A., B.L., M.O.L.

18. தமிழகத்து ஓவியங்கள் ... 103
திரு. ஈ. த. பதுமாவதி அம்மையார், M.A., L.T.

19. சங்கப் புலவரும் இயற்கை வருணனையும் ... 109
திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார்

20. அறிஞர் பெர்னார்ட் ஷா—பிறப்பும்வளர்ப்பும்... 112
டாக்டர் மு. வரதராசனார், M.A., M.O.L., Ph.D.

21. மேடு பள்ளம் ... 119
திரு. அ. மு. பரமசிவானந்தம், M.A., M.Litt.

22. உணவு ... 129
திரு. நா. ஹேமாவதி அம்மையார், M.A., L.T.

பாரி தமிழ் மணிமாலை

இரண்டாம் புத்தகம்

செய்யுட் பகுதி

I கடவுள் வாழ்த்து

திருவருட்பா

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

—இராமலிங்க அடிகள்

II. காதை

1. சிலப்பதிகாரம்

அடைக்கலக் காதை

கண்ணகியைக் கவுந்தியடிகள் மாதரியிடம் அடைக்கலமளித்தல்
மாதரி கவுந்தியைத் தொழல்

அறம்புரி நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோ
ளாயர் முதுமகள் **மாதரி** யென்போள்
காவுந்தி யையையைக் கண்டடி தொழலும்

'மாதரி தீதிலள்' எனக் கவுந்தி கருதுதல்

ஆகாத் தோம்பி யாப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலண் முதுமகள் செவ்விய ளளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின ளாகி,

கவுந்தி மாதரியிடம் பத்தினி கண்ணகியின் சிறப்புரைத்தல்

மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
றாதையைக் கேட்கிற் றன்குல வாண
ரரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்;
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு
மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்;
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கய னெடுங்க ணஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பி
னாயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கு; இங்(கு)
என்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு

நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணுத் தகைசால் பூங்கொடி!
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்!
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது!
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்னு
மத்தகு நல்லுரை யறியா யோநீ!

'அடைக்கலம் சிறிதாயினும் பேரின்பம் தரும்' எனல்

தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு
மிகப்பே ரின்பந் தருமது கேளாய்!

[என்று, காவிரிப்பூம்பட்டினத்து எட்டி சாயலன் ஒரு குரங்கிற்கு அடைக்கலம் தந்து முட்டா இன்பத்து முடிவுலகெய்தின வரலாறு கூறி, அம் மாதரியிடம் கண்ணகியை அடைக்கலம் தந்தனள்.]

—இளங்கோவடிகள்

2. கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்

குகப்படலம்

பரதன் கங்கையை அடைதல்

பூவிரி பொலங்கழற் பொருவிற் றானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான். 1

[அவனொடு கரிபரி காலாளும் உடன் சென்றன.]

குகன் சீற்றம்

அப்படை கங்கையை யடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான். 2

குகனெனப் பெயரிய கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமிகக் கண்கடை நாற நாசியில்
புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான். 3

மையுற வுயிரெலா மிறுதி வாங்குவான்
கையுறு கவரயில் பிடித்த காலன்றான்
ஐயைநா ருயிர முருவ மாயின
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான். 4

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்குந் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
இட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினான். 5

எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூயினான்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழி புகுந்த போலவே. 6

மருங்கடை தென்கரை வந்து தோன்றினான்
ஒருங்கடை நெடும்படை யொல்லென் றார்ப்பினோ
டருங்கடை யுகந்தனி லசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே. 7

தோன்றின புளினரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேன்றன னென்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீ ரமைதிரா மென்றான். 8

துடியெறி நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஓடியெறி யம்பிகள் யாது மோட்டலீர்
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனப் பெயர்த்துங் கூறுவான். 9

வேறு

அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உய்ஞ்சிவர் போய்விடி னாய்க்குக னென்றெனை யேசாரோ. 10

ஆழநெ டுந்திரை யாறுக டந்திவர் போவாரோ
வேழநெ டும்படை கண்டுவி லங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடனி றந்தில னென்றெனை யேசாரோ. 11

முன்னவ னென்றுநி னைந்திலன் மொய்புலி யன்னோர்
பின்னவ னின்றன னென்றில னன்னவை பேசானேல்
என்னிவ னென்னையி கழ்ந்ததிவ் வெல்லைக டந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர்வி டுஞ்சரம் வாயாவோ. 12

பாவமு நின்றபெ ரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுல காள்பவ ரெண்ணாரோ
ஆவது போகவென் னாருயிர்த் தோழமை தந்தான்மேல்
போவது சேனையு மாருயி ருங்கொடு போயன்றோ. 13

அருந்தவ மென்றுணை யாளவி வன்புவி யாள்வானோ
மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனோ
பொருந்திய கேண்மையு கந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்றுக ழிக்குவெ னென்கட னின்றோடே. 14

தும்பியு மாவுமி டைந்தபெ ரும்படை சூழ்வாரும்
வம்பிய னாரிவர் வாள்வலி கங்கைக டந்தன்றோ
வெம்பிய வேடரு ளீர்துறை யோடம்வி லக்கீரோ
நம்பிமுன் னேயினி நம்முயிர் மாய்வது நன்றன்றோ. 15

போனப டைத்தலை வீரர்த மக்கிரை போதாவிச்
சேனைகி டக்கிடு தேவர்வ ரிற்சிலை மாமேகம்
சோனைப டக்குடர் சூறைப டச்சுடர் வாளோடும்
தானைப டத்தனி யானைப டத்திரள் சாயேனோ. 16

நின்றகொ டைக்கையென் னன்பனு டுக்கநெ டுஞ்சீரை
அன்றுகொ டுத்தவண் மைந்தர்ப லத்தையெ னம்பாலே
கொன்றுகு வித்தநி ணங்கொள்பி ணக்குவை கொண்டோடித்
துன்றுதி ரைக்கடல் கங்கைம டுக்கிடை காணாரோ 17

ஆடுகொ டிப்படை சாடிய றத்தவ ரேயாள
வேடுகொ டுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடுகொ டுத்தவென் னாயக னுக்கிவர் நாமாளும்
காடுகொ டுக்கில ராகியெ டுத்தது காணீரோ. 18

மாமுனி வர்க்குற வாகிவ னத்திடை யேவாழும்
கோமுனி யத்தகு மென்றும னத்திறை கொள்ளாதே
ஏமுனை யுற்றிடி லேழுக டற்படை யென்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ. 19

என்பன சொல்லியி ரும்பன மேனிய ரேனோர்முன்
வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்
கன்பனு நின்றன னின்றது கண்டரி யேறென்ன
முன்பனில் வந்துமொ ழிந்தனன் மூரிய தேர்வல்லான். 20

வேறு

சுமந்திரன் பரதனிடம் குகனைப்பற்றிக் கூறல்

கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான். 21

கற்காணுந் திண்மையான் கரைகாணாக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தோய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான். 22

பரதன் குகனைக் காண விழைதல்

தன்முன்னே யவன்றன்மை தன்றுணைவன் முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல் [23
என்முன்னே யவற்காண்பேன் யானேசென் றெனவெழுந்தான்.

என்றெழுந்த தம்பியொடு மெழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் றிருமேனி நிலையுணர்ந்தான்

குகன் பரதனை நோக்கல்

வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான். 25

குகன் பரிவு

நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான். 26

குகன் பரதனை யடைதல்

உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டுதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான். 27

குகனும் பரதனும் ஒருவரை ஒருவர் வணங்குதல்

வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினான் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான். 28

—கம்பர்

3. வில்லிபுத்தூரார் பாரதம்

இந்திரப்பிரத்தச் சருக்கம்

1. தெய்வ வணக்கம்

வேதமும் வேதம் விளர்புமெய்ப் பொருளு
மப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனு
மப்பயன் பொலிவுற நுகரு.

ஞாதமு முலகம் படைத்தளித் தழித்து
ஞானமா யகிலமு நிறைவுற்
ருதியு நடுவு முடிவுமாய் நின்ற
வாதியா னடியிணை பணிவாம். 1

திருதராட்டிரன் தருமனுக்கு முடிசூட்ட நினைத்தல்

அத்தின புரியி லையிரு பதின்ம
ரைவரென் றிரண்டறத் தம்மி
லொத்தனர் மருவத் தெவ்வர்மெய் வெருவ
வுளமகிழ் நாளின்மற் றொருநாண்
மைத்துனன் முதலாந் தமரையுந் தக்க
மந்திரத் தவரையுங் கூட்டி
யித்தின முயர்ந்த தினமென மகுடஞ்
சூட்டுதற் கெண்ணினு னிகலோன். 2

தருமபுத்திரனது பட்டாபிஷேகம்

செழுமுர சுயர்த்த வேந்தனுக் கின்று
திருவபி டேகநா ளென்று
முழுமுர சறைந்து நகரிகோ டித்து
முடிபுனை கடிகொண்மண் டபத்தி
னெழுமுர சதிரப் பகீரதி முதலா
மெத்துறைப் புனல்களு மியற்றித்
தொழுமுர சுடன்வெள் வலம்புரி முழங்கச்
சுருதிமா முனிவருந் தொக்கார். 3

அத்தியின் பலகை நவமணி யழுத்தி
யாடகத் தமைத்தரி முகத்தாற்
பத்திகொள் பீடத் தழகுற விருத்திப்
பசும்பொனின் றசும்புக ணிறைந்த
சுத்தநீர் வியாதன் றௌமியன் முதலோர்
சொரிந்தனர் சோமன்வந் துதித்துச்
சித்திர கிரியி னெடுநிலா வெள்ளஞ்
சீருடன் வழியவார்த் தெனவே. 4

உதயமால் வரையி னுதயரா கத்தோ
டுதித்ததே ருதயனென் றுரைப்பத்

துதையளி ததைந்த மாலையான் சென்னிச்
சோதிமா மகுடமுஞ் சூட்டிப்
பதயுக மரசர் முடிகளாற் சிவப்பப்
பகர்விதி முடித்தபின் பலரு
மிதயமொத் தமிர்த மொழியவ ரடைவே
யிருகைநீ ராசன மெடுத்தார். 5

ஒற்றையோ டிரட்டை வலம்புரி மிழற்ற
வொருகுடை மதியென நிழற்றக்
கொற்றவர் முன்பின் போதர மடவார்
குழூப்பொரி சிந்திவாழ்த் தெடுப்ப
விற்றைநா ளெவரும் வாய்த்தவா வென்ன
வேழுய ரிராசகுஞ் சரமேன்
மற்றைநால் வருந்தற் சூழ்வரத் தருமன்
மைந்தன்மா நகர்வலம் வந்தான். 6

திருதராட்டிரனேவலால் தருமன் காண்டவப்பிரத்தம் சேரத் துணிதல்

மாநகர் வலமாய் வந்துதன் குரவர்
மலர்ப்பத முறைமையால் வணங்கிக்
கோநக ரிருக்கை யடைந்தன னொருநாட்
கொற்றவ னேவல்கைக் கொண்டு
பேய்நக ரெனுமா றியாவரும் வழங்காப்
பிறங்குநீள் கானிடை யழிந்த
தூநகர் முன்னோ ரிருந்ததொன் றந்தத்
தொன்னகர் வைகுமா துணிந்தான். 7

பாண்டவர் கண்ணபிரானுடன் காண்டவப்பிரத்தஞ் சேர்தல்

அங்கண்மா ஞால முழுவதுங் கொடுத்தற்
காயர்தம் பதியினங் குரித்த
செங்கண்மான் முதலாங் கிளைஞரும் வயிரத்
தேர்முதற் சேனையுந் தாமும்
வெங்கண்மா சுணத்தோ னெண்ணமெத் திசையும்
வெளிப்பட வேந்தரை வரும்போய்த்
தங்கண்மா தவத்தாற் காண்டவப் பிரத்த
மென்னுமத் தழல்வன மடைந்தார். 8

அங்கு நகர்செய்தற்குக் கண்ணன் இந்திரனோடு விசுவகர்மனை வருவித்தல்

போயவட் புகுந்த பொழுதுபைங் கடலும்
பூவையும் புயலுநேர் வடிவின்
மாயவற் கெவ்வா றிவ்வுழி யிவர்கள்
வாழ்வதென் றெருநினை வெய்தி
நாயகக் கடவு டன்னைமுன் னுதலு
நாகர்நா யகனொடு நடுங்கி
மேயகட் புலன்கள் களித்திடத் திருமுன்
னின்றனன் விச்சுவ கன்மா. 9

இந்திரன் விசுவகர்மனை நோக்கி 'இங்கு ஒரு நகர் செய்' என்றல்

நுண்ணிதி னுணர்ந்தோ ருணர்தருஞ் சிற்ப
நூலறி புலவனை நோக்கித்
திண்ணிதி னமரர் சேகரன் மொழிந்தான்
றேவரு மனிதரும் வியப்ப
மண்ணினும் புயங்கர் பாதல முதலா
மற்றுள வுலகினு நமதாம்
விண்ணினு முவமை யிலதெனக் கடிதோர்
வியனகர் விதித்தி யெனவே. 10

அக்கட்டளைப்படி விசுவகர்மன் சிறந்ததொரு நகரத்தை யமைத்தல்

தேவினுந் தேவ யோனியிற் பிறந்த
திரளினுஞ் சிறந்தயா வர்க்கும்
பூவினு மெவ்வெவ் வுலகினு முன்னம்
புந்தியா லியற்றிய புரங்கள்
யாவினு மழகும் பெருமையுந் திருவு
மின்பமு மெழுமடங் காக
நாவினும் புகலக் கருத்தினு நினைக்க
வரியதோர் நலம்பெறச் சமைத்தான. 11

அந் நகரச் சிறப்பை அனைவருங் கொண்டாடுதல்

மரகதங் கோமே தகந்துகிர் தரளம்
வைரம் வைடூரிய நீல

மெரிமணி புட்ப ராகமென் றிவற்றிற்
காகர மிந்தமா நகரென்
றரிமுத லிமையோ ரனைவரும் புகழ்ந்தா
ராடகப் பொருப்பினை யழித்துத்
தரணியி னகரொன் றமைத்தவா வென்று
தபதியர் யாவரும் வியந்தார். 12

அந் நகரத்தின் சிறப்பு

என்பதி யழகு குலைந்ததென் றெண்ணி
யிந்திரன் வெறுக்கவு மியக்கர்
மன்பதி பொலிவு சிதைந்ததென் றிடவு
மற்றுள வானவர் பதிகள்
புன்பதி யாகிப் போயின வெனவும்
புரையறு புந்தியாற் புவிமே
லன்பதி யிதுவொன் றியற்றினு னென்று
நாரணு திகடுதித் திடவும். 13

அந் நகரத்துக்குக் கண்ணன் இந்திரப்பிரத்தமென்று பேரிடுதல்

சந்திரா பதமுந் தினகரா பதமு
மிருபொழு தினுமெழச் சமைத்த
மந்திரா திகளு மஞ்சமு மதிலு
மகரதோ ரணமணி மறுகுங்
கொந்திரா நின்ற சோலையுந் தடமுங்
கொற்றவன் கோயிலு நோக்கி
யிந்திரா பதியவ் விந்திரன் பெயரா
லிந்திரப் பிரத்தமென் றிட்டான். 14

பாண்டவர் நகரப் பிரவேசஞ் செய்தல்

பரிமள மதுப முரல்பசுந் தொடையற்
பாண்டவ ரைவருங் கடவு
ளெரிவலம் புரிந்து முறைமுறை வேட்ட
வின்னெழி லிளமயி லன்றி
வரிசையி னணுகி யுரிமையா லவனி
மயிலையு மன்றலெய் தினர்போற்
புரிவளை தரளஞ் சொரிபுன லகழி
புரிசைசூழ் பரங்குடி புகுந்தார். 15

வேறு

பாண்டவருக்கு விசுவகருமன் அந் நகரத்தைக் காட்டுதல்

உரங்குடி புகுந்த திண்டோ ளுதிட்டிரன் முதலி யோரப்
புரங்குடி புகுந்து தங்கள் பொன்னெயிற் கோயி லெய்தத்
திரங்குடி புகுந்த கல்விச் சிற்பவித் தகன்ற னெஞ்சாற்
கரங்குடி புகாமற் செய்த கடிநகர் காட்ட லுற்றான். 16

பாண்டவர்கள் கோபுரத்தின்மேலிருந்து அந் நகர்ச் சிறப்பைக் காணுதல்

நாபுரப் பதற்கே யேற்ற நவிர றுவாய்மை வேந்தர்
கோபுரத் தும்பர் மஞ்ச கோடியி னின்று தங்கண்
மாபுரத் துள்ள வெல்லை வளமனை யாவு மாதர்
நூபுரத் தரவ வீதி யகலமு நோக்கி னாரே. 17

அந் நகரச் சிறப்பைப் பாண்டவர் பலவாறு வியந்துகூறுதல்

அரவின்வெஞ் சுடிகை கொண்ட வயிர்மணிச் சோதி மேன்மேல்
விரவிவந் தெறிப்பப் பச்சை மெய்சிவப் பேறிற் றாக
விரவிதன் னிரதம் பூண்ட வெழுபெயர்ப் பவன வேகப்
புரவியை யையுற் றேகொல் புரிவலம் புரிவ தென்பார். 18

அருளுடை யறத்தின் வாழ்வா மந்நக ரில்ல மெங்கு
மிருளுடை யிந்த்ர நீலத் தியன்றசா ளரங்க ளேக்கி
யுருளுடை யொற்றை நேமி யுறுபரித் தேரோன் சீறத்
தெருளுடைத் திமிரம் போன சின்னெறி போலு மென்பார். 19

சமர்முகப் பொறிகண் மிக்க தடமதிற் குடுமி தோறுங்
குமருறப் பிணித்த பைம்பொற் கொடித்துகி லசைவு நோக்கி
நமர்புரக் கிழத்தி யும்பர் நாயகன் புரத்தி னோடு
மமர்பொரப் பற்பல் கையா லழைப்பது போலு மென்பார். 20

தசும்புறு மகிலின் றூபஞ் சாறடு கரும்பின் றூப
மசும்பறு மடையின் றூப மவிபெறு மழலின் றூபம்
விசும்புற நான்கு திக்கு மிசைமிசை யெழுத னேக்கிப்
பசும்புய லேழன் றின்னும் பலவுள வாகு மென்பார். 21

அடுக்குற நிலஞ்செய் மாடத் தணியுறு பெரும்ப தாகை
மிடுக்கினு லனில னெற்றி விசையுட னெடுத்து மோத
வுடுக்களு நாளுங் கோளு முள்ளமு முடலுஞ் சேர
நடுக்குறு கின்ற விந்த நகர்வழி போக வென்பார். 22

துதையளி முரலும் வாசச் சோலையின் பொங்கர் தோறும்
விதமுற வெழுந்து காள மேகங்கள் படிதலேக்கிக்
கதிர்மணி யகழி மாமே கலையுடை நகர மாதின்
புகைநறு மலர்மென் கூந்தல் போலுமா காண்மி னென்பார். 23

ஈட்டிய மணியும் பொன்னு மெழில்பெறப் புடைக டோறும்
பூட்டிய சிகரி சாலப் புரிசையின் புதுமை நோக்கிக்
கோட்டிய நகரி யென்னுங் குலக்கொடி மன்ற லெய்தச்
சூட்டிய சூட்டுப் போலத் துலங்குமா காண்மி னென்பார். 24

பணையினம் பலவு மார்ப்பப் பைங்கொடி நிறைந்த செல்வத்
துணைமணி மாட மன்னுந் தோரண வீதி யாவும்
புணைவன நெருங்க நீடிப் பொழிபுயல் கிழிக்குஞ் சார
லிணைவரை நடுவட் போதும் யாறுபோ லிலங்கு மென்பார். 25

தருமன் விசுவகர்மனுக்கு விடையளித்தல்

கண்ணுறு பொருள்கள் யாவும் கண்டுகண் டுவகை கூர
வெண்ணுறு கிளைஞ ரோடும் யாதவ குமர ரோடும்
பண்ணுறு வேத வாழ்நர் பலரொடும் வைகி யாங்கண்
விண்ணுறு தபதிக் கம்ம விடைகொடுத் தருளி னானே. 26

கண்ணன் முதலியோர் செல்லுதலும், தருமனது அரசாட்சியும்

கேசவன் முதலா வுள்ள கிளைஞரும் கேண்மை தப்பா
வாசவன் முதலி னோரு மன்னுதம் பதிகள் புக்கா
ரோசவன் றிகிரி யோச்சி யுதயபா னுவுக்கு மேலாந்
தேசவன் றானும் வையந் திசைமுறை திருத்தி யாண்டான். 27

—வில்லிபுத்தூரார்

4. மனோன்மணீயம்

இன்பம் பயக்கும் ஓர் இலக்கு வேண்டும்

எவ்வினை யோர்க்கும் இம்மையிற் றம்மை
இயக்குதற் கின்பம் பயக்குமோ ரிலக்கு
வேண்டும்; உயிர்க்கது தூண்டுகோல் போலாம்;
ஈண்டெப் பொருள்தா னிலக்கற் றிருப்பது?

சிறுபுல்

இதோஒ! இக்கரை முளைத்தவிச் சிறுபுல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி!
அதன்சிறு பூக்குலை யடியொன் றுயர்த்தி
இதமுறத் தேன்றுளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூ ணருத்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து
ஆசிலாச் சிறுகா யாக்கி, இதோ! என்
தூசிடைச் சிக்குந் தோட்டியுங் கொடுத்தே,
"இவ்வயின் யாமெலாஞ் செவ்விதில் துன்னில்
தழைப்பதற் கிடமில்லை; சிறார்நீர் பிழைப்பதற்கு
ஏகுமின்; புள்ஆ எருதுஅயத் தொருசார்
சிக்கிநீர் சென்மின்!" எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்
பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையுஞ்
சிறுமையாச் சிந்தனை செயாதுஆங் காங்கு
தோற்றுபே ரழகும் ஆற்றல்சா லன்பும்
போற்றுதங் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப,
ஆர்த்தெழு மன்பினா லனைத்தையுங் கலந்துதம்
என்பெலாங் கரைக்குநல் லின்பந் திளைப்பர்.

நாங்கூழ்ப் புழு

ஓகோ! நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு
ஓவாப் பாடே! உணர்வேன்! உணர்வேன்!
உழைப்போ ருழைப்பி னுழுவோர் தொழில்மிகும்;
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ!
எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை!
விடுத்தனை யிதற்கா, எடுத்தவுன் யாக்கை!

உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந் தும்,புகழ் வேண்டார் போல
ஒளிக்குவை யுன்குழி வாயுமோ ருருண்டையால்!
இப்புற் பயிர்நீ யிங்ஙன முழாயேல்
எப்படி யுண்டாம்? எண்ணா துனக்கும்
குறும்புசெய் யெறும்பும் கோடி கோடியாப்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள?
விழுப்புகழ் வேண்டலை! அறிவோம்; ஏனிது?
துதிக்கலம்; உன்றொழில் நடத்துதி; ஆ! ஆ!
எங்கு மிங்ஙனே யிணையிலா இன்பும்
பங்கமி லன்புந் தங்குதல் திருந்தக்
காணார் பேணும் வாணா ளென்னே!

ராவ் பகதூர் பி. சுந்தரம் பிள்ளை

5. மலரும் மாலையும்

இரக்ஷகர்

அன்னியர் ஆட்சியிலே—யூதர்
அடைந்த துன்பமெலாம்
பன்னள விதோ? அம்மா!—நினைக்கில்
பதைக்குது உள்ளம்அம்மா! 1

நீசர் சண்டாளர்—சற்றும்
நெஞ்சினில் அச்சமில்லார்
ஈச னுக்குரிய—பீடத்தில்
ஏறியி ருந்துகொண்டார். 2

உண்ண உணவுமின்றி—உழைப்புக்கு
ஓய்வொரு நாளுமின்றிக்
கண்ணீர்சொ ரிந்துநின்றார்—யூதர்
கலங்கித் தட்டழிந்தார். 3

அல்லும் பகலுமே—துயரில்
ஆழ்ந்து மூழ்கிடினும்,
நல்ல காலம்வரும்—வருமென
நம்பி நாள்கழித்தார். 4

" இருள்ஒ துங்கிடவே—கதிரோன்
எழுந்துகி ளர்வதுபோல்,
அருள்இ றைமகனும்—நம்மை
ஆள வந்திடுவான். 5

உண்மைஒ ளிவீசும்; அப்போது
உலகில் நீதியோங்கும்;
அண்மையி லேநாமும்—நன்மை
அடைவோம்" என்றிருந்தார். 6

"அருங்கு ணச்செல்வன்—புவியில்
அவத ரித்திடுநாள்
நெருங்கி வந்ததிதோ !—மிகவும்
நெருங்கி வந்ததிதோ ! 7

வருவீர் வருவீரே— எவரும்
வருவீர்" என்று நலம்
மருவு காலிலிமா—நகரிலோர்
வார்த்தை கேட்டதம்மா ! 8

சின்னாள் சென்றிடஓர்—அற்புதத்
தீர்க்கத ரிசிதோன்றி,
எங்நா டும்அறியச்—சிங்க
ஏறுபோ லேஎழுந்து : 9

"விடுவீர் எப்பொருளும்—விடுவீர்
விட்டுவந் தென்வழியைத்
தொடர்வீர் தொடர்வீரே"—என்று
சொல்மு ழக்கஞ்செய்தான். 10

பூமியை ஆளுதற்குத்—தேவ
புத்திரன் வந்துதித்தான் ;
க்ஷேமம் பிறக்குமென—யூதர்
சிந்தைக ளித்திருந்தார். 11

"ஈசன் நாமத்தை—அனுதினம்
ஏத்திப் புகழவேண்டும் ;
தாச தாசனாய்ப்—பணிந்து
தருமம் காக்கவேண்டும். 12

உன்னுயி ரைப்போல—இந்த
உலகில்உ யிரையெல்லாம்
மன்னும் அன்பொடுநீ—என்றும்
மதித்து வாழவேண்டும். 13

மேவும்எ னதாட்சி—அந்த
விண்ணுல காட்சியேயாம் ;
ஏவல்இ டம்பொருளில்—எனக்கிங்கு
ஏதும்ம யக்கமில்லை." 14

என்னும்இப் பொன்னுரைகள்—நாட்டில்
எங்கும்எ டுத்துரைத்தான் ;
மன்னுயிர் காத்திடவே—மண்ணில்
வந்துபி றந்தமகன். 15

III. வருணனை

1. பந்தடித்தல்

பொன்னி லங்கு பூங்கொ டிபொ லஞ்செய் கோதை வில்லிட
மின்னி லங்கு மேக லைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்த டித்துமே
தேவ ரார மார்பன் வாழ்க என்று பந்த டித்துமே. 1

பின்னு முன்னும் எங்க ணும்பெ யர்ந்து வந்தெ ழுந்துலாய்
மின்னு மின்னி ளங்கொ டிவி யனி லத்தி ழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்த டித்துமே
தேவ ரார மார்பன் வாழ்க என்று பந்த டித்துமே. 2

துன்னி வந்து கைத்த லத்தி ருந்த தில்லை நீணிலந்
தன்னி னின்று மந்த ரத்தெ ழுந்த தில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்த டித்துமே
தேவ ரார மார்பன் வாழ்க என்று பந்த டித்துமே. 3

—இளங்கோவடிகள்

2. திருமுனைப்பாடி நாடு

தொன்மைமுறை வருமண்ணின் துகளன்றித் துகளில்லா
நன்மைநிலை ஒழுக்கத்து நலஞ்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவ்ளர் மணிமாடச் செழும்பதிகள்
மன்னிநிறைந் துளதுதிரு முனைப்பாடி வளநாடு.

—சேக்கிழார்

3. பெண்ணையாறு

புனப்பண்ணை மணியிநெடும் புறவினறும் புதுமலரின்
கனப்பெண்ணில் திரைசுமந்து கரைமருங்கு பெரும்பகட்டேர்
இனப்பண்ணை உழும்பண்ணை எறிந்துலவி எவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை மாநதிபாய் வளம்பெருகும்.

—சேக்கிழார்

4. மருத நிலம்

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞர்ஆர்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல நிகர்ப்பனவாம் நிறைமருதம்.

—சேக்கிழார்

5. உதய சூரியன்

உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்துவிட்டான் செங்கதிரோன் ; தகத்தகாயம் பாரீர் !
விலகிற்றுக் காரிருள்தான் ; பறந்ததுபார் அயர்வு ;
விண்ணிலெலாம் பொன்னொளியை ஏற்றுகின்றான் அடடா!
மிலையும்எழிற் பெருங்கடலின் அமுதப்ர வாகம்
மேலெல்லாம் விழிஅள்ளும் ஒளியின்ப்ர வாகம்
நலம்செய்தான் ; ஒளிமுகத்தைக் காட்டிவிட்டான், காட்டி
நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை. 1

ஒளிசெய்தான் கதிர்க்கோமான் வானகத்தில் மண்ணில்
உயர்மலைகள் சோலைநதி இயற்கைஎழில் கள்பார் !
களிசெய்தான் பெருமக்கள் உள்ளத்தில் ! அதனால்
கவிதைகள் கைத்தொழில்கள் என்னென்ன ஆக்கம்

தெளிவளிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி !
திசைமகளை அறிவுலகில் தழுவுகின்றார் மக்கள் ;
ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான் வானில்
உயர்கின்றான் ; உதயசூரியன்வாழ்க நன்றே ! 2

—பாரதிதாசனார்

6. ஆலமரம்

கிளையினிற் பாம்பு தொங்க விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்டபிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக் கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணிஎண்ணி உச்சிபோய்த் தன்வால் பார்க்[கும். 1

ஆலினைக் காற்று மோதும் அசைவெனோ எனச்சிரித்துக்
கோலத்துக் கிளைகுலுங்க அடிமரக் குன்று நிற்கும்
தாலாட்ட ஆளில் லாமல் தவித்திட்ட கிளைப்புள் எல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக் காற்றுக்கு நன்றி கூறும். 2

—பாரதிதாசனார்

IV. நீதி

1. திருக்குறள்

கடவுள் வாழ்த்து

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. 1

வான் சிறப்பு

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை. 2

நீத்தார் பெருமை

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 3

அறன்வலியுறுத்தல்

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 4

இல்வாழ்க்கை

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில். 5

வாழ்க்கைத்துணை நலம்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

புதல்வரைப் பெறுதல்

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். 7

அன்புடைமை

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று. 8

விருந்தோம்பல்

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 9

இனியவை கூறல்

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு. 10

செய்ந்நன்றி யறிதல்

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். 11

நடுவு நிலைமை

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். 12

அடக்கமுடைமை

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது. 13

ஒழுக்க முடைமை

ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து. 14

பொறை யுடைமை

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 15

அழுக்காறாமை

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும். 16

வெஃகாமை

இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. 17

புறங்கூறாமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 18

பயனில சொல்லாமை

நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து. 19

2. பழமொழி

வறுமை யுறினும் நின்ற நிலையில் வழுவாமை

ஒற்கந்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி. 1

பகைவரிடத்தும் கண்ணோடுதல்

தெற்றப் பகைவ ரிடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு. 2

தீயாரைப் பெருக்கலின் தீமை

ஊழாயி னாரைக் களைந்திட் டுதவாத
கீழாயி னாரைப் பெருக்குதல்—யாழ்போலும்
தீஞ்சொல் மழலையாய்! தேனார் பலாக்குறைத்துக்

நட்பினர் பழியைத் தூற்றாமை

கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார்; என் கொல்?
விழித்தலரும் நெய்தற் றுறைவா ! உரையார்
இழித்தக்க காணிற் கனா. 4

உற்றுழி உதவாமை

எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றாக் குதவலார் ; பைத்தொடீஇ !
அச்சிடை யிட்டுத் திரியின், அதுவன்றோ
மச்சேற்றி ஏணி களைவு. 5

V. புகழ்ப்பாக்கள்

1. தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

—திருநாவுக்கரசர்

2. நாச்சியார் திருமொழி

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே. 2

—ஆண்டாள்

3. திரு அருட்பா

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தேங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுதெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந் தருளே. 3

—இராமலிங்க அடிகள்

VI. சிறுபிரபந்தங்கள்

நால்வர் நான்மணிமாலை

வெண்பா

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவால்
மறித்துஎஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை
வெறித்தண் கமலமே வீடு. 1

கட்டளைக் கலித்துறை

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல்வேந்தபொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினைக்குமுன் நல்கினுமென்
பாட்டிற்கு நீயும் அவனும்ஒப் பீரெப் படியினுமே. 2

ஆசிரிய விருத்தம்

படியிலா நின்பாட்டில் ஆரூர!
நனிவிருப்பன் பரம னென்பது
அடியனேன் அறிந்தனன்வான் தொழுமீசன்
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலாம் மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்
மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே. 3

ஆசிரியப்பா

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெக்கநெக் குருகி நின் மலர்த் தாள்[illegible]

திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை உலகின் மற்றைய ரிலரே. 4

—சிவப்பிரகாச சுவாமிகள்

VII. தனிப் பாடல்கள்

நகைச்சுவை

அரனவனி டத்திலே யைங்கரன் வந்துதான்
ஐயவென் செவியைமிகவும்
அறுமுகன் கிள்ளினு னென்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே அண்ணனென் சென்னியில்
விளங்குகண் ணெண்ணி னனென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
விகடமேன் செய்தாயென,
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன
மயிலவன கைத்துநிற்க,
மலையரைய னுதவவரு முமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராயெனக்
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
கருப்பமாய்ப் பெற்றகன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டவள்
களிப்புட னுமைக்காக்கவே. 1

—சிவப்பிரகாச சுவாமிகள்

இன்னின்னார்க்குப் பொய் சொன்னால் இன்னின்ன பயனுண்டாமெனப் பாடியது.

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாம்
அவருக்குப் பொய்யா காது ;
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோற்
றவங்குறையும் மிடியுண் டாகும்;
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா என்றும்;
உய்யவருள் தேசிகர்க்குப் பொய்யுரைத்தால்
நரகமது வுண்மை தானே. 2

1. திருக்குறள்

அறத்துப் பாலுக்குப் பரிமேலழகர் முன்னுரை

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை-அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், வீடென்பது, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப் படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்க ளாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது, மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கின ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரம்மசரியம் முதலிய நிலைகளி னின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களில் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முண் மாறுபட்டு அப் பொருள்மேற்செல்வது. அது கடன்கோடன் முதலிய பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ் வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇனாரை அந் நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக ஒறுத்தல்.

இவற்றுள் வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பில வாதலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேயவியற்கையானும் அறியப்படுத லானும் அவற்றையொழித்து ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்

அதுதான் நால்வகை நிலத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகளொழித்து எல்லார்க்கும் ஒத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது.

2. இறையனார் ஈந்த பொருளதிகாரம்

நக்கீரர்

இறையனார் அகப்பொருளுரை

அக் காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசிகடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங்கூவி, "வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்தபின்றை, அரசன், இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலே மென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக்கடவுள் சிந்திப்பான்; "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று இவ் வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர்தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவானென்று உள்ளங்குளிர அல

கிட்டான். இட்டாற்கு அவ் வலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தா யிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப் பார்ப் பான் சிந்திப்பான்: "அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றா னென்பதுபட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச் செய்தானாகும்" என்று, தன் அகம் புகாதே கோயில் தலைக்கடைச் சென்றுநின்று கடைக்காப்பார்க் குணர்த் தக் கடைக்காப்பார் அரசர்க்குணர்த்த, அரசன் புகுதருக வென்று பார்ப்பானைக்கூவச் சென்றுபுக்குக் காட்டக் கொண்டு நோக்கி, "இது பொருளதிகாரம்! நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்தா னாகற்பாலது" என்று அத் திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, "நம் பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்" என அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கன்மாப் பலகை ஏறியிருந் தாராய்வுழி எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாஞ்சென்றன.

3. திரிசிராப்பள்ளி*

திரு. திரு. வி. க.

திரிசிராப்பள்ளிப் பெயர்

"திரிசிராப்பள்ளி" என்னுந் தலைநகர்ப் பெயரே ஜில்லா விற்குஞ் சூட்டப்பட்டது. திரிசிராப்பள்ளிக்குத் திரிசிரபுரம் என்னும் மற்றொரு பெயருமுண்டு. இரண்டிற்கும் பொருள் ஒன்றே. "திரிசிராப்பள்ளி" என்பது, இதுபோழ்து, "திருச்சினாப்பள்ளி" என வழங்கிவருகிறது. திரிசிராப்பள்ளி என்னும் பெயருக்குக் காரணம் பல பகரப்படுகின்றன. மூன்று சிரமுடைய ஓர் அரக்கன், ஆண்டவனை வழிபட்ட காரணத்தால், அந் நகர், "திரிசிராப்பள்ளி" என்னும்

* இது திரிசிராப்பள்ளி ஜில்லா ஆறும் அரசியல் மாநாடு குளித்தலை என வழங்கும் குளிர்தண்டலையில் 1924-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5-ஆம் நாள் கூடியபோது ஆற்றிய தலைமையுரையி லிருந் தெடுக்கப்பட்டன.

பெயர் பெற்றதென்று புராணம் புகல்கிறது. அவ் ஊர்க்கண் ஒரு பெருங்கற்பாறை வானுறவோங்கி நிற்குங் காட்சி முதலில் புலனுதல்கொண்டு, அவ் ஊர், திரு-சிலா-பள்ளி, அல்லது திரு-சைல-பள்ளி என்று அழைக்கப்பெற்றிருக்கலாமென்றும், பின்னை அப் பெயர் திரிசிராப்பள்ளி எனவும், "திருச்சிறுப்பள்ளி" எனவும் மருவப்பெற்றிருக்கலா மென்றும் ஆராய்ச்சிக்காரருள் ஒரு சிலர் உரைக்கின்றனர்; வேறு சிலர், சிறிய ஊர் என்னும் பொருள்பற்றித் திரு-சின்ன-பள்ளி என்னும் பெயர் பெற்றிருக்கலாமென்றும், பின்னை அப் பெயர் "திருச்சிராப்பள்ளி" என்றோ, "திருச்சிறுப்பள்ளி" என்றோ திரிந்திருக்கலா மென்றுஞ் சொல்கின்றனர். மற்றும் பல காரணங் கூறுவோரு முளர். தொன்றுதொட்டு நூலாட்சி பெற்றுவருவது திரிசிராப்பள்ளி என்னும் சீரிய பெயரே.

திரிசிராப்பள்ளியின் இயற்கை வளம்

திரிசிராப்பள்ளியின் இயற்கை வளத்தைச் சிறிது உற்று நோக்கின், சில இடங்களில் வெண்கல் அடுக்குகளும், செங்கற் சூழல்களும், கருங்கற் குன்றுகளும் முறையே வெண்பொன்னும், செம்பொன்னும், கரும்பொன்னும் உருகிப் படர்ந்து இடையுடைந்து மிடைந்தாலெனத் திகழ்வது காணலாம்: சில இடங்களில் செஞ்ஞாயிற் றொளியுண்டு வெயிலுமிழுங் கூர்முகக் குண்டுகளும், வட்டப்பாறைகளும், பட்டைச் சிலைகளும் மலிவது காணலாம்; சில இடங்களில் அறலின் செறிவும், தொழிற் கற்களின் திரளும், இருப்பின் இருப்பும் மல்குவது காணலாம் இந்த ஜில்லாவின் எல்லைப்புறத்தின் ஒரு பாங்கர் பசுங்கொண்டல் படுத்துறங்குவதுபோலக் கான் பரந்த பச்சை மலை பள்ளி கொண்டிருக்குங் காட்சியும், மற்றப் பாங்கரில் குறிச்சிகளும் சாரல்களும் அடர்ந்தும் தொடர்ந்தும் உள்ள தோற்றமும், ஆங்காங்கே நாடு நோக்குங் காடுகளின் இடையீடும் புலன்களைக் கவர்வனவாம். இந் நிலத்தெழும் அனலைத் தணிக்க இயற்கையன்னை தண்புனல் சொரிந்தாலொப்ப இந்த ஜில்லாவைக் கிழித்தோடுங் காவிரிப் பெருக்கை என்னென்று வருணிப்பது! அக் காவிரி தன்னிருகை விரித்து நீலமேனியனையும், செம்மேனியனையும் தழுவித் தொழுமுறை காட்டுவது

[illegible]

மற்ெறாரு புறமும் பாட்டெனப் பரந்தோடும் அழகை எழுத்தால் எழுதல் முடியுமோ ! அமராவதி முதலிய ஆறுகள் போந்து தெய்வக் காவிரியில் உறவுகொள்ளும் ஒழுங்கை எழுதும் எழுத்தோவியர் இந் நாள் உளரோ ! இவ் வாறுகளினின்றும் பிரிந்தோடுங் கால்வாய்களின் கோலமும், இவைகளின் நீருண்ணும் செய்களின் செழுமையும், இவைகளை விட்டுந் தொட்டுஞ் சூழ்ந்துள்ள பொழில்களின் செழுமையும் திரிசிராப் பள்ளியை அழகு செய்கின்றன.

இறை மணம்

இந்த ஜில்லா இயற்கைமணங் கமழப்பெற் றிருப்பதோடு இறை மணமுங் கமழப்பெற் றிருக்கிறது. "பெரிய கோயில்" என்னும் ஸ்ரீரங்கத்தையும் அப்புத் தலமாம் திருவானைக்காவையும் இந்த ஜில்லா தன்னகத்தே தாங்கும் பேறு பெற்றிருக்கிறதெனில், இதன் தெய்வத் தன்மையைச் சொல்லலும் வேண்டுமோ ! இந்த ஜில்லாவில் பல இடங்களில் பாடல்பெற்ற சைவ வைணவ ஆலயங்களும், பண்டை அருகர் அறக்கோட்டக் குலைவுகளும், பேர்பெற்ற மகமதியப் பள்ளிவாசல்களும், கிறிஸ்துவக் கோயில்களுந் தெய்வமணங் கமழச் செய்கின்றன. தெய்வ நினைவிற்குத் திரிசிராப்பள்ளி ஜில்லாவை ஒரு வைப்பு என்று கூறுவது மிகையாகாது.

சோழ நாட்டின் மாண்பு

திரிசிராப்பள்ளி ஜில்லாவின் தொன்மை பெரிதுங் கருதற்பாற்று. திரிசிராப்பள்ளி மிகத் தொன்மையது. இப்போதைய திரிசிராப்பள்ளி ஜில்லாவின் பெரும்பகுதி பண்டைச் சோழ நாட்டின் ஒரு கூறு. இதிகாசங்களிலும், பண்டைத் தமிழ் நூல்களிலும், அசோகன் காலத்திய சிலாசாசனங்களிலும் சோழ நாடு பதிவு பெற்றிருக்கிறது. சரித்திரக் காலத்துக்கு முன்னரே சோழநாடு நாகரிகத்தில் சிறந்து விளங்கியது. சோழ மன்னன்,

" கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ "

என்று புலவர் போற்றக் "குடிதழீஇக் கோலோச்சி" வந்தனர். சோழர் அருளாட்சியை அறிவுறுத்த மனுநீதிச் சோழன் வரலா

ஒன்றே சாலும். அவர் காலத்துக் கல்விநிலை பண்டைத் தமிழ் நூல்களால் அறியக்கிடக்கிறது. சோழ நாட்டு வினைஞர் கூட்டத்தையும், பொருளீட்டத்தையும், வாணிப முறையையும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களிற் காணலாம். சோழ வேந்தர் வீரம் இந் நாட்டில் மட்டுமின்றி மற்ற இடங்களிலும் செறிந்து நின்றது. அவர்தம் புலிக் கொடி ஒரு காலத்தில் இமயத்தில் பறந்தது ; கங்கைக் கரையில் பறந்தது; பர்மா இலங்கை முதலிய இடங்களிலும் பறந்தது. அம் மன்னர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் நிலவிய பலவேறு நாகரிகத் துறைகளை நூல்கள் வாயிலானும், கல்வெட்டுக்கள் வாயிலானும் இன்னும் அறியலாம்.

சோழரது பெரும்புகழ் விளக்கும் பதிகள் பல இந்த ஜில்லாவில் இருக்கின்றன. அவற்றுள், சோழ மன்னர் தலைநகரா யிலங்கிய உறையூரும், போர் மிகுந்த கருவூரும், வெற்றி விளங்குங் கங்கைகொண்டபுரமும், சிற்பஞ் சிறந்து நினைவுக் குறிகள் பல தாங்கி நிற்கும் சீநிவாச நல்லூரும் சிறப்பாகக் குறிக்கத் தக்கன. அவற்றின் நிலை உள்ளத்துறும்போது கண்ணீர் கலங்குகிறது.

சோழ நாட்டின் வளம் என்னே ! என்னே! ' சோழ நாடு சோறுடைத்து ' என்னும் பழமொழியன்றோ இப் புனல் நாடு பெற்றிருந்தது ? அச் சோற்றுக்கன்றோ இதுபோழ்து நம்மவர் வருந்துகின்றனர் ? வெளிநாடுகளுக்கு ஓடுகின்றனர் ? அங்கே மனித உரிமையிழந்து தவிக்கின்றனர் ? அன்று சோறளித்த சோழநாடு இன்று எங்கே ? யாண்டு உற்றது ? கரிகாலன் தமிழ் நாட்டைக் காணோம் ; இராஜராஜன் திருநாட்டைக் காணோம் ; இராஜேந்திரன் பெருநாட்டைக் காணோம் ; அவர் புரந்த நாட்டைக் காணோம். ஆனால், அவர் வெட்டிய கால்வாய்கள் நமக்குப் புனல் அளிக்கின்றன ; அவர் கட்டிய கோயில்களும் அறச்சாலைகளும் அன்பையும் அறத்தையும் வளர்க்கின்றன ; அவர் நூல்கள் அறிவை விளக்குகின்றன.

பலர் ஆட்சி

அறமும் அன்பும் வளமும் நலமும் கொழித்த திருநாடாகிய இந் நாட்டைச் சோழர் ஏழாம் நூற்றாண்டுவரை எவ் வித

இடுக்கணுமின்றி ஆண்டுவந்தனர். பின்னர், அறுநூறாண்டு சோழ மன்னர் ஆட்சி வீழ்ந்தும் எழுந்தும் இடர்ப்பட்டுக் கொண்டிருந்தது; பதின்மூன்றாம் ஆண்டுத் தொடக்கத்தில் சோழர் ஆட்சி அறவே மறைவுற்றது. சோழருக்குப் பின்னர் இந் நாட்டில் பலர் புகுந்தனர். அவருள் சிறப்பாகப் பல்லவரையும் நாயக்கரையும் குறிப்பிடலாம். நாயக்கர் ஆட்சி பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் முற்றும் ஒடுங்கிற்று. அவர்க்குப் பின்னை இந் நாடு மகம்மதியர் வயப்பட்டது. இவர் காலத்தில் சந்தா சாஹிப் என்பவருக்கும், மகமத் அலி என்பவர்க்கும் நேர்ந்த பிணக்கே மகம்மதியர் ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாக நின்றது.

சந்தா சாஹிப் பக்கம் பிரஞ்சுக்காரரும், மகமத் அலி பக்கம் இங்கிலீஷ்காரரும் நின்று போர்புரிந்த வரலாற்றை ஈண்டு விரித்துரைக்க வேண்டுவதில்லை. அக் காலத்தில் இந்த ஜில்லா பெருஞ் செருக்களமாய் விளங்கிற்று. முடிவில் பிரிட்டிஷார் ஆள்வோராய்விட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்த ஜில்லா பிரிட்டிஷார் ஆட்சிக்கு உட்பட்டது. பிரிட்டிஷ் அரசாட்சியை இந்தியாவில் நிலை பெறுத்திய இடங்கள் மூன்றனுள் இத் திரிசிராப்பள்ளியும் ஒன்று.

4. நாடக சந்தி *

விபுலானந்த சுவாமிகள்

சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் நான்கும் நாடக வுறுப்புக்களாம்; இவை ஒருபாலாக இவற்றொடு பொருள், சாதி, யோனி, விருத்தி என நான்கும், சொல், சொல்வகை, வண்ணம், வரி என நான்கும், சந்தி, சேதம் என இரண்டும் கூடிய பதினான்கும் நாடகவுறுப்புக்களாம். இவற்றினுட் சந்தி என்னும் இலக்கணம் நாடகத்தின் அமைப்பினைக் காட்டும் நீர்மையது........

---

* இது 'மதங்க சூளாமணி' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

" சந்தியிற் றொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி "

எனத் தண்டியாசிரியர் காப்பியவிலக்கணம் கூறினு ராதலின், சந்தியென்னும் இலக்கணம் காப்பியத்துக்கும் உரியது ; கத்திய ரூபமாக முடிந்த கதைகளுக்கும் உரியது.

சந்தி ஐந்துவகைப்படும். அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என இவை. இவற்றை ஓர் உதாரணத்திலுல் விளக்குவாம்:

கீழ்மக்களது தீ நட்பினை எய்துதலினும் பார்க்க எய்தாமை நன்று என்னும் உண்மையை அறிவுறுத்துவதற்கு ஒரு புலவன் ஒரு நாடகம் அமைக்கப்போகின்றுன் என்று வைத்துக் கொள்ளுவோம்.

" செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று."

[செய்துவைத்தாலும் அரணுகாத கீழ்மக்களது திநட்பு ஒருவர்க்கு உண்டாதலின் இல்லையாதல் நன்று.]

" உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்."

[தமக்குப் பயனுள்வழி நட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினைப் பெற்றுல் ஆக்கமியாது ? இழந்தாற் கேடியாது ?]

" கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்."

[ஒருவன் கெடுங்காலத்து அவனைவிட்டு நீங்குவார் முன் அவனேடு செய்த நட்புத் தன்னைக் கூற்றடுங் காலத்து ஒருவன் நினைப்பினும் அந் நினைத்த உள்ளத்தைச் சுடும்.]

மேற்காட்டிய மூன்று திருக்குறட்பாக்களும் அமைக்கப் புகுந்த நாடகத்துக்கு "வித்து" என்னும் நீர்மைய. வித்தினையெடுத்து உழவினுற் சமைக்கப்பட்ட புழுதியினுள்ளே விதைத்தால், அது முளைத்து, நாற்ருகி, கருப்பமுற்றி, விரிந்து, கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்த்து முற்றி விளைய, விளையப்பட்ட பொருளை அப் பொருளுக்குரியோர் அறுத்துப் போரிட்டுக் கூடா

விட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வர். இம் மரபே நாட்டியக் கட்டுரையும் ஐந்து வகைப் படும்.

"முகமாவது எழுவகைப்பட்ட உழவினுற் சமைக்கப்பட்ட பூழியுளிட்ட வித்துப் பருவஞ் செய்து முளைத்து முடிவது போல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலைதோன்றி நாற்றாய் முடிவது போல்வது. கருப்பமாவது அந் நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட் பொருள் பொதிந்து கருப்பமுற்றி நிற்பது போல்வது. விளைவாவது கருப்பமுதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது. துய்த்தலாவது விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது."

இங்ஙனம் ஐந்து சந்தியாய்ப் பகுத்துக்கொண்ட முறை யினையே செகசிற்பியாரும் (Shakespeare) மாறாது கைக் கொண்டார்.

முளையினைக் கண்டோர் விளைவு இதுவென ஊகித்தறிந்து கொள்ளுதல்போல நாடகத்தின் முகத்தினைப் படித்த மாத்தி ரத்தே விளைவு இதுவாகும் என ஊகித்தறியத் தக்கதாக முதற் சந்தியாகிய முகம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். முதற் சந்தியாகிய முகத்தில் கட்டியக்காரன், விதூஷகன், சூத்திர தாரன், அரசன், மந்திரி என்னும் இவரை மாத்திரம் வருவித்து நிறுத்தி, அரசன் நாட்டுவளம் விசாரிப்பதோடு நிறுத்திவிட்டால், பார்ப்போருடைய உள்ளம் ஒருவழிப்படாது பல வழியினும் சென்று மேல் நடப்பது இதுவாமோ அதுவாமோ என ஐயப் பாடுற்று அலையும். ஆதலினால், முதற்சந்தியாகிய முகத்திலேயே விளைவு ஒருவகையாகக் குறிக்கப்பட்டிருத்தல்வேண்டும். கீழ் மக்களது தீ நட்பினை எய்துதலினும் பார்க்க எய்தாமை நன்று என்னும் உண்மையை அறிவுறுத்துதற்கு எழுந்த நாடகத்துக்கு நாடகபாத்திரர் யாவராக விருத்தல்வேண்டு மெனின், கதாநாயக னுக ஒரு செல்வப் பிரபு வேண்டும்; அவரது செல்வத்தையுண்டு அநுபவித்துப் பின்னர் வறுமை வந்துற்றகாலத்து அவரை விட் டுப்பிரிந்து அவரை இகழ்ந்து அவமதிக்கின்ற பொய்ந் நண்பர்

ஒருவரோ பலரோ இருத்தல் வேண்டும் ; பிரபுவுக்கு வேண்டிய விடத்து இடித்துரை கூறும் அறிவுடையோன் ஒருவன் இருத்தல் வேண்டும் ; உண்மையுள்ள ஒரு வேலைக்காரன் இருத்தல் வேண்டும் ; இச்சகம் பேசுவார் பலரிருத்தல் வேண்டுமென்பது. செல்வப் பிரபுவானவர் நட்பாளராயாது பலரையும் நட்புச்செய்தா ரென்றும், இச்சகம் பேசுவோருக்குத் தமது பொருளெல்லாம் அளித்த காரணத்தினாலே அவருக்கு வறுமை வந்துற்றது எனவும், தாம் நட்பாளராகக் கருதியவரிடத்துச் சிறிதளவு உதவி பெறுதற்கு முயன்றாரெனவும், அன்னோர் மறுத்தா ரெனவும், பிரபுவை இழித்துரைத்தா ரெனவும், பிரபு அன்னோர் கண்முன் இருக்காது காட்டிற்கேகின ரெனவும், ஆங்கு ஒரு பொற்குவை யகப்பட்டது எனவும் அவர் பொன்னால் விளையும் கேட்டை அனுபவித்தவ ராதலினால், பொற் குவியலைக் கருதிற்றில ரென வும், அவ் வழி ஒரு சேனைத் தலைவன் சென்றான் எனவும், அவன் அப்பிரபுவின் பக்கத்திலிருந்த பொற் குவியலைக் கண்டு விழைந்து நின்றா னெனவும், அவனை அக் குவியலை எடுத்துக்கொள்ளும்படி பிரபு அனுமதி கொடுத்தாரெனவும், அதனைப் பெற்ற போர் வீரன் நன்றியறிதலுக்கு அறிகுறியாகப் பிரபுவின் நாட்டினைத் தாக்கித் தீநட்பாளரை அழித்தானெனவும், இவ்வாறே பிற வாறே பொருளை வகைசெய்து நாடகக் கட்டுரை வகுத்துக் கொண்ட பின்பு ஏற்ற பெற்றியறிந்து ஐந்துசந்தியாகப் பகுத்துக் கொள்ளலாம். செகசிற்பியார் இத்துறைமேல் " தீநட்பஞ்சிய தீமோன் சரிதை " எனப்பெயரிய ஒரு நாடகம் செய்திருக் கின்றார்.

5. கர்னாடக சங்கீதம்*

[இசைத்தமிழ்ச் செல்வர் தி. இலக்குமணப் பிள்ளை அவர்கள், B. A.]

சங்கீதத்தால் வரும் பெரு நலங்கள்

சங்கீதத்தால் வரும் பெரு நலங்கள் (1) உடற் சார்பாகவும், (Body) (2) மனச் சார்பாகவும், (Mind) (3) இதயச் சார்பாகவும், (Heart) (4) ஆன்மச் சார்பாகவும், (Soul) இப்படி நான்கு வகைகளினும் உள்ளனவாம்.

---

* இது ' கரந்தைக் கட்டுரை-வெள்ளிவிழா நினைவு மலர் ' (1938)

உடற் சார்பு

பாட்டுப் பாடுவதால் இயற்கையாயுள்ள குரல் உரமுற்று நன்ருவதோடு, நமது மார்பிலுள்ள தசைகளுக்கும் சுவாச ஈரலி லுள்ள (Lungs) தசைகளுக்கும் அசைவுண்டாய், அதனுல் அவ் விடங்கள் உரப்படவே, காசம், இருமல், கணை முதலிய நோய்கள் உடலில் இடம்பெருமல் போய்விடும். "நோய்க்கிடங் கொடேல்" என்பது ஆன்ருேர் வாக்கு. இசைவல்லாருக்கு இந் நோய்கள் சாதாரணமாய்ப் பிடிபடாமலே இருப்பதோடு, அரு கியவழி பிடிபட்டாலும், அவர் உயிருக்கு இடையூறு வராமலிருப் பதற்கும் சங்கீதம் துணைக்காரணமாய் நின்றுதவியதாக அநுப வத்தால் வெளிப்பட்டிருக்கின்றது மருத்துவ நூற் சார்பாக ஆங்கில டாக்டர்கள் உபதேசிக்கின்ற நீண்ட மூச்சு விடுதல் (Long breath) முதலிய பயிற்சிகள் வாய்ப்பாட்டில் இயல் பாகவே அமைந்து கிடக்கின்றன.

மனச் சார்பு

நமது கவலைகளுக்கு ஓய்வும், துயரங்களுக்கு ஆறுதலும் சங்கீதத்தால் கிடைக்கலாகும் இதைத் தவிர சங்கீதக் கலையின் தனிச்சுவையால், ஆனந்தமும் உண்டாகின்றது. இசை கேட்கும் போது நம்முடைய அயற்பாடுகளிலுள்ள விசாரகாரணங்களைத் தற்காலமேனும் நாம் மறக்கின்ருேம். மனதுக்குள்ள ஆனந்தத் தால் மற்ருெரு வழியினும் நமக்கு உடல்நலம் கிடைக்கின்றது.

இதயச் சார்பு, அல்லது, உணர்ச்சிச் (Feeling) சார்பு

முதலாவது, சங்கீதம் இதய சுத்தியை யுண்டாக்குகின்றது. அதாவது இதயத்திலுள்ள அழுக்காறு சுரடு கறைகளை நீக்க அது துணைக்கருவியாய் நிற்கின்றது. எவ்வாறென்ருல், இராகங் களுடைய அழகிய சுரச் சேர்க்கைகள் (Beautiful Combinations of Musical Notes) இதயத்தில் அழகிய உணர்ச்சிகளை எழுப்புகின்றன. அழகிய உணர்ச்சிகள் ஏராளமாய் உள்ளத்தில் நிகழும்பொழுது, அழகலாதனவாகிய அழுக்காறு, அவா, வெகுளி, பொல்லாங்கு முதலிய தீய உணர்ச்சிகள் இருப்பிடங் கிடையாமல் வெளிக் கிளம்பிவிடும். அழகிய உணர்ச்சிகள் இதயத்தில் பெருகும்போது, [illegible]தனவாகிய செயல்களை

இல்லாமற் போகின்றன. ஏனெனில் புணர்ச்சியும், செயலும் ஒன்றுக்கொன்று பெரும் இயைபும் உணர்ச்சியுமுள்ளன. ஒரு மனிதனுடைய உள்ளத்தில் அழகிய உணர்ச்சிகள் பெருக்க முற்று, அவற்றால் அழகிய செயல்களும் வெளிப்படுமாயின், அதுவே அவனுக்கு அறத்தாறெனப் (Virtue) படும். இதெல்லாம், உண்மையான சங்கீதத்தால் உண்மையான ஞானமுடையவரின் உள்ளத்தில் உண்டாகும் நிகழ்ச்சிகள் என்று கொள்ள வேண்டும். எல்லாப் பாட்டும் உண்மையான சங்கீதமாகாது. அன்றியும், சங்கீதத்தால் வரும் நற்பயன்கள் வேறு காரணங்களால் சிதைவும் படலாம். இவ்வாறு அறத்திற்கும் இசைக்கும் எவ்வளவு நெருங்கிய உறவுண்டென்பது சிந்திப்போருக்கே தெரியவரும். இப்படி நினைத்தே, பழைய கிரீஸ் (Greece) நாட்டார் குழந்தைகளின் கல்விப் பயிற்சியின் முதற்படியில் சங்கீதத்தைக் கட்டாயப் பாடமாய் வைத்திருந்தார் போலும்! கிரீஸிலிருந்த ப்ளேற்றோ (Plato) என்னும் பெரிய ஞானி சங்கீதத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு உரைக்கின்றார் :—

"சங்கீதம் இப் பிரபஞ்சத்திற்கு ஓர் ஆன்மாவையும், மனதுக்குக் கிளர்ச்சியையும், நிரூபண சக்திக்கு (Imagination) உயர்வையும், துயரத்துக்கு ஓர் வனப்பையும் எல்லாவற்றிற்கும் களிப்பையும், உயிரையும் அளிக்கின்றது. அது ஒழுங்கின் உள்மயமாயிருந்து, நல்லதும், நடுநிலையும், அழகும், ஆகிய எவ்வெவைக்கும் ஓர் வழிகாட்டியா யிருப்பதுடன், அவற்றில் மறைந்து கிடக்கின்ற சிறந்த, அழுந்திய, என்றும் அழிவுறு வடிவமுமாகும்."

ஆன்மச் சார்பு

ஆன்மீகமாய் நோக்குங்கால், சங்கீதம் இந்த உலக வியாபாரங்களைத் தற்காலம் மறப்பித்து, மறுமையின் உண்மையை நேரிட்டுத் தெளிவித்துக் காட்டி, பரம்பொருளின் நித்யசுக நிலையின்பால் மனதைத் திருப்பி, வாக்குக் கதீதமான ஓர் ஆன்மீக உணர்ச்சியை எழுப்புகின்றது. இன்னும், எல்லாச் சங்கீதத்தைப் பார்க்கினும், தெய்வத்தைக் குறித்துள்ள சங்கீதத்தின் உதவியால், அதாவது, பக்தி உணர்ச்சியோடு கூடிய கீர்த்தனங்கள், சங்கீர்த்தனங்கள், பாடல்கள் முதலியவற்றால், தெய்வபக்தி தெய்வத்தியானம், ஆன்மஞானம் இவற்றைத் தன்படியே

பிறப்பிக்கின்றது. தெய்வ பக்தி யென்பது உலகத்தில் நல்லொழுக்க நிலைபேற்றிற்கு அடிப்படையாய்க் கிடக்கின்ற ஓர் தன்மையே.

இவ்வாறு, நான்கு வழியாகவும் இயலும் நன்மைகளால், சங்கீதம் உலகத்திற்கு எவ்வளவு இன்றியமையாததென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

ஆன்மீகமாகிய ஓர் ஒற்றுமையை உள்ளே பிறப்பிக்கும்போழ்து, மக்களிடையில் அந்த மட்டுக்கும் அழுக்காறு, பகை முதலிய தீய உணர்ச்சிகளைச் சங்கீதம் அகற்றும் என்பது நியாயமாக உய்த்துணரக்கிடக்கின்றது. முன்கூறியவாறு, மத வைராக்கியம் என்பது மக்களிடையில் கடுமையான பிளவுகளை யுண்டாக்கி வருகின்றது. இப் பிளவுகளை ஒருவாறு தீர்க்கவல்ல ஒரு சாதனம் உலகத்திற்கு எப்போதும், எவ்வளவும் தேவையாயிருக்கின்றது. மக்களிடையில் சகோதர உணர்ச்சியைப் பிறப்பித்து, ஒற்றுமையுண்டாக்குவதே சமயத்தின் முதன்மையான கடமையாகும். இவ் வுண்மைக்கு நேரெதிராக இப்போது நிலவும் பல சமயங்களும் நாட்டுப் போரையும் தீராப் பொறாமையையும் நீங்காப் பகைமையையும் ஊட்டி வளர்த்து வருவதைக் காண்கின்றோம். தெய்வம் ஒன்றே. கிறிஸ்தவருக்கு ஒரு தெய்வம்; மகம்மதியருக்கு ஒரு தெய்வம்; இந்துக்களுக்கு ஒரு தெய்வம்; வெவ்வேறு தெய்வங்களில்லை. தெய்வத்தின் உண்மையான உருவைக் கண்டறிந்தவருமில்லை. ஆயினும், கண்டறியக்கூடிய சடப் பொருளுடைமையைப் பற்றிய வழக்கையும் தீராப் பகையையும் விடக் கூடிய கேட்டைச் சில சமயங்கள் விளைக்கின்றன. இந் நிலைமைக்குக் காரணம் என்ன? சமயங்களெல்லாம் அடிப்படையாகக் கூறும் உண்மைகள் மிக்கவாறும் ஒத்தேயிருக்கின்றன. ஆயின், உண்மைச் சமய உணர்ச்சிக்கு அவசியமில்லாத சில வெளியாசாரங்களின் வேறுபாட்டால், பகைமை முதலிய வேற்றுணர்ச்சிகள் எழுகின்றன. தத்தம் மதக்கோட்பாடுகளே பெரியன; தத்தம் மதக்குருக்களே பெரியவர்; ஏனைய கோட்பாடுகள் பொய் நிரம்பியன; ஏனைய குருக்கள்மார் புரட்டர்கள் என்று கொண்டு, அகந்தையும் மதவெறி [illegible]

கின்றன. இக் கலவரத்தினிடையில், இதய சுத்தி செய்து ஒற்றுமையை நாட்டவல்ல ஒரு விடயமும் தலைநீட்டக் காண்கிலோம். மக்களிடையில், உண்மையான ஆன்மீக வாழ்வு மருந்துக்கும் கிடையாது.

இந் நிலைமையில் எல்லா நாட்டாருக்கும், எல்லாச் சமயத்தாருக்கும் ஆன்மீக உணர்ச்சியையும், ஒற்றுமையையும், ஒருவாறெனினும் தரவல்ல ஒரு கலையுண்டெனில், அது சங்கீதமேயாகும். அத்தகைய சங்கீதமே நமது கர்னாடக சங்கீதம்.

அது எவ்வகை வகுப்பாளரும், எல்லா வகுப்பாளரும் ஒருங்கிருந்து ஒற்றுமையாய் ஒழுகக்கூடிய ஓர் அரங்கினை உண்டாக்குகின்றது. சாதி வேறுபாட்டுக்கு அடிப்படையாக, உணவு வேறுபாடு முதலிய ஒழிக்கலாகாத காரணங்கள் இருப்பினும், அதனிடையில் அவ் வேறுபாட்டுணர்ச்சியை மறக்கவைத்து மக்களிடையில் ஒருவாறு ஒற்றுமை விளைக்கக்கூடிய சாதனங்கள் யாதேனும் உண்டெனில், அவை நுட்பக்கலைகளே. (The Fine Arts) ஆயின், நுட்பக்கலைகளில் அதி நுட்பமானது சங்கீதம் (Music is the finest of the fine arts) என்று ஹெர்பெர்ட் ச்பென்சர் (Herbert Spencer) என்னும் பெரிய ஆங்கிலத் தத்துவஞானி உரைக்கின்றார். ஆதலால், சங்கீதம் சாதிவேறுபாட்டையும், மதவேறுபாடு முதலிய மற்றைய வேறுபாடுகளையும் பாராட்டாமல், எல்லாராலும் போற்றத்தகுந்த கலையென்பதை நாம் மனதார உணர்ந்து நடந்துகொள்வோமாக!

ஜான் கியூபெலிக் (Jan Kubelik) என்னும் உலகப் புகழ் வாய்ந்த ஐரோப்பிய பிட்டில் வாத்திய மகாவித்வான், கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்:—

"சங்கீதம் ஒரு பெருமித போகம் (Luxury) அன்று; ஒவ்வொருவருடைய தினசரி வாழ்க்கையில் ஓர் பகுதியாயிருக்கின்றது, அல்லது இருக்கவேண்டியது என்றே கொள்ளவேண்டும்."

"Music is or should be, not a luxury, but a part of every one's daily life"

Jan Kubelik.

6. பாடுங் கற்கள்*

திரு. வை. மு. நரசிம்மன், B. A., B. E., A. M. I. E.

மனிதருக்கு இயற்கையாக அமைந்துள்ள சாரீரம் எத்தகைய இசைக் கருவிக்கும் மேம்பட்டது. எனினும், மனித சாரீரத்தை ஒத்திருக்கும் செயற்கை வாத்தியங்களும் இருக்கத்தான் செய்கின்றன. சங்கீதப் பிரியர்கள் தொன்று தொட்டுத் தங்களுடைய புத்தியினாலும் யுக்தியினாலும் மனித சாரீரத்தைப் பின்பற்றக் கூடிய இசைக் கருவிகளைக் கண்டு பிடிப்பதிலும், புதிதாகக் கண்டவற்றைச் செவ்வனே சீர்திருத்தி அமைப்பதிலும் மிக்க கவனம் செலுத்தி வந்துள்ளனர். இதன் பலனாக இன்று நாம் பற்பல அற்புதமான இசைக் கருவிகளைக் காண்கிறோம், கேட்கிறோம்.

நமது பண்டைக் காவியங்களிலும் பலவகை இசைக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. சிற்பங்களிலும் அவற்றை நாம் பார்க்கிறோம்.

விஜய நகர மன்னர்கள் கற்களிலிருந்து என்றும் அழியாமல் இருக்கும் இசைக் கருவிகளைத் தயாரிக்க ஆர்வம் கொண்டார்கள். அவர்களுடைய அரிய முயற்சியால் அந்த எண்ணம் கைகூடியது. அவ்விதம் தங்கள் கனவு நனவானதைக் குறித்து அவர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். அந்த அற்புதச் சிருஷ்டிகள் இன்று நம்மையெல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கும்படி செய்கின்றன. உதாரணமாக மாக்கல்லால் செய்யப்பட்ட நாதசுர வாத்தியங்கள், இனிய கீதம் பாடும் கருங்கல் படிக்கட்டுகள், ஜல தரங்கம்போல் ஒலிக்கும் கருங்கல், கருங்கல்லில் செதுக்கப்பட்ட பியானோ வாத்தியக்கம்பங்கள் இவைகளைப் பார்ப்போர் பரவசம் அடையாமல் இருக்கமுடியுமா?

மாக்கல்லினால் செய்யப்பட்ட இரண்டு பெரிய நாதசுர வாத்தியங்கள் கும்பகோணத்தில் உள்ள ஆதிகும்பேசுவரர் கோவிலில் இன்றைக்கும் இருக்கின்றன.

சிறிய மற்றொன்று, ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிக முக்கிய ஸ்தலமான ஆழ்வார் திருநகரியில் ஆதிநாதப்பிரான் கோவிலில் இன்றும் உபயோகத்தில் இருந்துவருகிறது.

---

*இது 1951 'கல்கி' தீபாவளி மலரிலிருந்து எடுக்கப்பட்டது.

கும்பகோணத்தில் உள்ள நாதசுர வாத்தியங்களின் சிறப்பை வர்ணிக்க முடியாது. அவ் விரண்டும் ஒருவிதமான சிவப்புக் கொடிகள் படர்ந்த மாக்கல்லிலிருந்து குடைந்து செய்யப்பட்டுள்ளன: ஒரே அங்குல கனமான மேல் துவாரமும், ஆரம்பத்தில் ஓர் அங்குலமும், முடிவில் அரை அங்குலமும் கொண்டு நேரே நெடுக ஓடும் துவாரத்தை உடையனவாயும் இருக்கின்றன. அதற்கு ஏழு அங்குலப் பித்தளை வாய்த்திறப்பும் இருக்கிறது. அதன் நீளம் இருபத்திரண்டு அங்குலம். மற்றும், அவை மூன்று துண்டுகளை வெகு அற்புதமான பித்தளைத் தகடுகளால் செய்யப்பட்ட வளையங்களால் இணைத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

சாதாரண நாதசுர வாத்தியங்களில் காண்பதுபோன்ற பல துவாரங்கள் அவைகளிலும் இருக்கின்றன. அந்த இரண்டில் ஒன்று யாருடைய அஜாக்கிரதையினாலோ உடைந்துவிட்டது. மற்றொன்று நல்ல நிலையில் இருக்கின்றது. அதை இன்றைக்கும் வாசிக்கலாம். ஆதலால், இந்தக் கல் நாதசுர வாத்தியங்கள் அந்தக் கோவிலின் உபயோகத்திற்கென்றே செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆழ்வார் திருநகரியில் உள்ள வாத்தியம், கும்பகோணத்தில் உள்ள வாத்தியங்களைக் காட்டிலும் மிகச் சிறந்தது. அது கரிய ஒரே மாக்கல் துண்டிலிருந்து செய்யப்பட்டிருக்கிறது. அது எட்டு அங்குல நீளமுடையதாக இருக்கிறது. அந்த நாதசுர வாத்தியத்திலும் அரை அங்குலத்திலிருந்து முக்கால் அங்குலம் வரையில் நெடுகச் செல்லும் துவாரம் காணப்படுகிறது.

அந்த வாத்தியத்தை "முகவீணை" என்று அவ் ஊரார் குறிப்பிடுகின்றனர். நாயக்க மன்னர் ஒருவரால் அந்த முகவீணை அளிக்கப்பட்டதாயும், கோவிலில் நடந்துவந்த பரத நாட்டியங்களில் அதை உபயோகித்து வந்ததாயும் நாம் கேள்விப்படுகிறோம். இன்றைக்கும் அங்கு அது உபயோகத்தில் இருந்து வருகிறது.

* * *

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரத்திலே

ஆனால், இப்போது அது பாழடைந்துவருகிறது. அந்தக் கோவிலில்தான் "பாடும்படிக்கட்டுகள்" இருக்கின்றன. அது நான்கு படிக்கட்டுகளைக் கொண்டு இரண்டு பக்கத்துக் கைப் பிடிகளுடன் கேட்பாரற்று மிக்க பரிதாபமான நிலையில் இருக் கிறது. ஒரு சிறிய கருங்கல் உடைசலைக்கொண்டு அதன் பல பாகங்களையும் மெதுவாகத் தட்டினால், தட்டப்பட்ட ஒவ்வொரு பாகத்திலிருந்தும் ஒவ்வொரு விதமான ஸ்வரம் எழுகின்றது. ரசிகர்கள் பல மணிநேரம் அந்தப் படிக்கட்டுகளைத் தட்டி, அதி லிருந்து எழும் இசையைக் கேட்டு ஆனந்திக்க முடியும்.

* * *

திருநெல்வேலி ஸ்ரீ சுவாமி நெல்லையப்பர் கோவில் மணி மண்டபத்தின்முன் கால் வரிசையிலுள்ள ஒரு கல், பியானோ வைப்போல் நாதத்தைக் கொடுக்கிறது. திருவாங்கூர் சமஸ் தானத்திலுள்ள சுசீந்திரம் கோவிலில் இருக்கும் கல்லும் அவ் விதமே அற்புத நாதத்தை எழுப்புகிறது. மதுரை ஸ்ரீ மீனாட்சி யம்மன் கோவில் பிராகாரத்தில் இருக்கும் பாடும் கம்பமும் குறிப்பிடத்தக்கது.

இன்னும், ஆழ்வார் திருநகரிக் கோயில் வசந்த மண்டபத் தில் இரண்டு பியானோக் கம்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள், நெல்லையப்பர் கோவில் தூணைப்போல அவ்வளவு கம்பீரமாகத் தென்படாவிட்டாலும், சிற்பச் சிறப்பில் மேலான தாக இருக்கின்றன.

நெல்லையப்பர் கோவிலிலேயே, அம்பாள் சந்நிதிக்குமுன் இரண்டு பியானோக் கம்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் மிக நுட்பமான வேலைப்பாடுடனும் இனிய நாதத்தை உடையனவாகவும் இருக்கின்றன.

விஜய நகர மன்னரது தலைநகரமாகத் திகழ்ந்த ஹம்பியில் பம்பாபதி ஈசுவரர் ஆலயத்தின் பிராகாரங்களில் வரிசையாக அநேக பியானோக் கம்பங்கள் இருக்கின்றன. அதனால், விஜய நகர மன்னர்கள் காலத்தில், சுவாமி அந்தப் பிராகாரத்தின் வழியே எழுந்தருளும் சமயங்களில் அந்தக் கல் பியானோக்களை வாசித்துவந்திருக்கலாம் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. [illegible] பியானோக்களைப் [illegible]

தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அப் பியாஞேக்களைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தத் தூணின் கீழ்ப்பாகமும் மேல்பாகமும் நடுப்பாகமும் ஒரே கல்லிலிருந்து செய்யப்பட்டவை. எனினும், நடுப்பாகம் பல சிறிய தூண்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. நடுவில் ஒரு பெரிய தூணும், அதைச் சுற்றி நாற்பத்தெட்டுச் சிறிய தூண் களும் இருக்கின்றன. சிறிய தூண்கள் மூன்று அங்குலக் கனத் திலும், வட்டம், கோணம், சதுரம், எட்டுப்பட்டை, வளைவு முதலிய பற்பல வடிவங்களிலும் இருக்கின்றன. அந்தப் பெரிய தூணின் அடிப்பாகம் ஐந்தடி சதுரம் உள்ளது உயரம் எட்டு அடி இருக்கிறது. பக்கத்தில் உள்ள ஒரு தூணை மெதுவாகத் தட்டினுல், அது ஒலிப்பதோடு, நடுவிலுள்ள தாய்க்கம்பத் திலும் பிரதித் தொனி உண்டாகச் செய்கிறது. ஆழ்வார் திரு நகரி பியாஞேவில், கீழ்மட்டத்தில் இரண்டு அங்குல வெட்டு ஒன்று நெடுக ஓடி, ஒவ்வொரு கம்பத்தையும் தொடுகிறது. அவ் வெட்டு ஒரே மட்டத்தில் செல்லவில்லை. பிரதித்தொனி ஏற் படவே, அந்த வெட்டை அமைத்துள்ளனர் போலும்.

கல்லிலிருந்து செய்விக்கப்பட்ட அந்த இசைக் கருவிகள் காலத்திலுைம் தட்பவெப்பங்களின் மாறுபாடுகளினுலும் ஏற் படும் அழிவுகளை எதிர்த்து நின்று, பண்டைக் காலத்தில் நன்கு வரையறுக்கப்பட்ட இசையின் நுட்பங்களை இன்றும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆதலால், இசைவல்லாரும், இசை யில் ஆர்வமுள்ளவர்களும் மேலே குறித்த இசைக் கருவிகளை நன்கு ஆராய்ந்து, அவைகளை மீண்டும் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும். அப்போதுதான் அந்த இன்னிசை விருந்தளிக்கும் கற்களின் இணையற்ற அற்புதத்தை எல்லோரும் கண்டு களிக்கமுடியும்.

7. வாட் என்பாரும் நீராவி எந்திரமும்

திரு. ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார்

நீராவியை அறியாதார் யார்? சோறு கொதிக்ும்போது மேலே மூடிய தட்டைத் தள புள எனத் தாளம்போடச் செய்து புகைபோல நீராவி போவதைப் பாராத குழந்தையும் உண்டோ? இந்த நீராவி செய்யும் புதுமைகளை என்ன என்று சொல்லுவது? நீராவி எந்திரங்கள் இல்லையானால் நம்முடைய தற்கால நாகரிகம் ஏது? நீராவி, தண்ணீர் இறைத்தது உண்டு; ஆலை எந்திரங்களை ஓட்டியது உண்டு. உலகில் இருப்புப்பாதை எவ்வளவு நீளம் தெரியுமா? 8-லக்ஷம் மைல்; இன்று கணக்கிட்டுப் பார்த்தாலோ 10-லக்ஷம் மைலுக்கு மேல் இருக்கும். இஃது இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட நன்மை. இந்த இருப்புப்பாதையை நம் பூமாதேவியின் இடுப்பில் மணிமேகலையாக 32 சுற்றுச் சுற்றலாம். இப்படித் தரை முழுவதும் வலை விரித்தாற்போல இந்த இருப்புப்பாதைகள் பின்னிக்கொண்டிருக்கின்றன. நம் புகை வண்டிகள், நீராவி எந்திரம் இல்லையானால் எப்படி ஓடும்? உலகில் நிலத்தைவிட நீரே பெரிய பகுதி. இதில் கப்பல்கள் ஓடுகிற வழிகளை எந்தக் கணக்கில் சொல்லுவது? கப்பல்களும் நீராவியாலேயே ஓடுகின்றன. நாம் ஆகாய விமானத்தில் பறப்பது என்று முடிவு செய்தாலும் நம் பொருள்களை ஏற்றிவர இவை வேண்டுமல்லவா? மின்சாரம் பரவியுள்ள இந்த நாளில் இந்த எந்திரத்திற்கு வேலை இல்லை என்று சொல்லமுடியுமா? மின்சாரத்தை விளைவிக்கும் எந்திரங்களை ஓட்டுவது பெரும்பாலும் நீராவியே. எனவே, நீராவி இல்லையானால் புகை வண்டிப் பயணம் இல்லை; உணவுப் பொருள்கள் விரைந்து வர வழியில்லை. கப்பல்களும் இல்லை; வெளிநாட்டுப் பொருள்கள் எளிதில் வர வழி இல்லை; வானத்தைப் பார்த்து வயிறு எரியவேண்டுவதுதான்.

நீராவி எந்திரம் கண்டவர் **ஜேம்ஸ் வாட்** (James Watt) என்பவர். இவர் பிறந்தது தமிழர் சிறப்பாகக் கொண்

1951 அக்டோபரில் எழுதிய கட்டுரை.

டாடும் பொங்கல்வாரம்தான்; அதாவது 19-1-1736. பிறந்த நாடு **ஸ்காட்லாண்டு** (Scotland). ஊரின் பெயர் **க்ரீனக்** (Greenock) என்பதாம். இவருக்கு இந்த ஆண்டில் 216-ஆம் பிறந்த நாள் கொண்டாடினார்கள். நாமும் நம் நாட்டில் இவர் பிறந்த தினத்தைக் கொண்டாடவேண்டும். சிறப்பாகப் பள்ளிப்பிள்ளைகள் தங்கள் தங்கள் பள்ளியில் நீராவி எந்திரத்தை வைத்துத் திருநாள் கொண்டாடவேண்டும். இவருடைய தாயாரின் பெயர் **அஞ்ஞஸ்** (Ognes) அம்மையார்; தந்தையாரின் பெயரும் **ஜேம்ஸ் வாட்** என்பதேயாம். இவர் குடி, பெயர் பெற்றதொரு பெருங்குடி. ஆனால், கால வேற்றுமையால் அவர்களை வறுமை வாட்டியது. வீட்டிலேயே இவர் படிப்பு முடிந்தது. ஆனால், இவருக்கு ஒரு பெரிய வாய்ப்பு. விளையும் பயிர் முளையிலே தெரியும் அன்றோ? கப்பல் கட்டும் வேலையில் இவர்கள் குடும்பம் ஈடுபட்டு இருந்தது இவர்கள் வீட்டில் சுற்றும் முற்றும் தச்சுக் கருவிகள் நிறைந்துகிடந்தன. இவற்றிடையே பழகிய பழக்கத்தால் இவருக்குக் கைவேலையின்மேல் காதல் பிறந்தது. இவர் குழந்தைவயதிலேயே வேலைப்பாட்டைக் கண்ட கம்மாளர், "இவன் விரல் நுனியில் திருமகளும் கலைமகளும் கூத்தாடுகின்றார்கள்" என்று புகழ்ந்தனர். பாவம்! இவர் பதினேழாம் வயதில் தம் தாயை இழந்தார். என்செய்வது? எப்படியேனும் வயிறுகழுவ வேண்டுமே? கணக்குக் கருவிகளைச் செய்வதற்கு (Mathematical instruments) கற்றுக்கொள்ள ஊரெல்லாம் இவர் அலைந்தார். பின், லண்டனில், இவருக்கு ஓரிடம் கிடைத்தது. கருவிலேயே கைத்திருவுடைய இவர் விரைவில் வேலையைக் கற்றுக்கொண்டார்; இருபது வயதில் தம் ஊர் திரும்பினார். **க்ளாஸ்கோ** (Glasgow) பல்கலைக் கழகத்தில் கருவிகளைச் சீர்திருத்தும் வேலையும் அதனைச் செய்ய ஓர் அறையும் கிடைத்தன. இவருடைய வரவுக்கும் செலவுக்கும் இவர் பெற்ற ஊதியம் சரியாய்ப் போயிற்று. அவ்வளவே ஆனாலும், பெரியோர்களுடைய நட்பு இவருக்கு நிரம்பக் கிடைத்தது.

இவர் கைவேலையில் சிறந்தவர்; **எடிசனுக்கு** (Edison) இருந்த வாய்ப்பு இவருக்கு இருந்திருந்தால் எத்தனையோ கருவிகளைக் கண்டுபிடித்திருப்பார். இவருக்கு ஒருவித வாய்ப்பும் இல்லா[illegible] இவர் [illegible] கருவிகள் [illegible]

தொலைவு கண்டுபிடிப்பான் (Gelemeter), **பிரதி எடுப்பான்** (Copying Press for letters), **தோற்றம் காட்டி** (Perspective machine), **அளவுகோல் பிரிப்பான்** (Scale dividing engine), **சிலை செதுக்கி** (Statue carving machine) என்று பல கருவிகளைச் சாகும் வரையில் இவர் செய்துகொண்டே வந்தார். சங்கீதம் தெரியாத இவர் சங்கீதம் கற்றுச் செய்த சங்கீதக் கருவிகள் மாதாகோவில் களில் இன்றும் உண்டு.

கைவேலையோடு விஞ்ஞான ஆராய்ச்சியிலும் இவர் தலை சிறந்தவர், 'ஒரு மடங்கு நீராவியில் ஆறு மடங்கு தண்ணீரை வளாவினால் நீராவி குளிராது ; தண்ணீரே கொதிக்கும். இதற்கு வேண்டும் சூடு நீராவியில் ஒளித்துக் கிடக்கின்றது. அதுவே உள் உறைசூடு (Latent heat) என்று இவர் கண்டார். ஒரு மடங்கு தண்ணீர் 1800 மடங்கு நீராவியாகும் எனக் கண்டார் ; தண்ணீர் தனிப் பொருள் அன்று, கலவைப் பொருளே என்றும் கண்டார். **பர்மிங்ஹாம்** என்ற நகரில் பௌர்ணமிதோறும் கூடிய விஞ்ஞானிகள் கழகமான திங்கள் கழகத்தில் இவர் பேரும் புகழும் பெற்றார். கிழவயதில் விஞ்ஞானிகள் இவரைப் புகழ்ந்தனர்.

ஆனால் இவற்றால் அல்ல வாட் என்பாரது பெயர் இன்றும் மறையாது விளங்குவது. இவர் பெயரே நீராவி எந்திரத்தை என்றென்றும் நினைப்பூட்டுகிறது. நீராவி எந்திரம் இவர் கண்ட தன்று. இதனை எந்திரமாகப் பெரு வழக்கில் கொண்டுவந்த பெருமையே இவருடையது. விஞ்ஞான முன்னேற்றம் தனி ஒருவனின் பெருமையன்று. புதிய மாற்றம் வந்தாலன்றி உலகம் வாழ முடியாது என்று வாடி வதங்கும் நெருக்கடி தோன்றும் போது மக்கள் அனைவரும் அதே நினைவாக இருக்கின்றனர். அப் போது யாரேனும் ஒருவர் வாயிலாக வழி தெரிகிறது. மக்கள் தரைமேல் உள்ளவற்றை எல்லாம் பயன்படுத்தி ஆயிற்று. கடலை ஆண்டு வாணிபம் செய்யவும், விஞ்ஞானத்தை வளர்க்கவும் மக்கள் முற்பட்டனர். இந்த வளர்ச்சிக்குத் தேவையை எங்குப் போய்த் தேடுவது ? தரைக்குக் கீழேதான் போக வேண்டும். ஆனால் அந்தச் சுரங்கங்களைத் தோண்டிக் கொண்டு போன போது கீழூற்று மேலே பொங்கி இவர்களைத் தடுத்தது. தண்ணீரை

இறைத்தே கீழிறங்க வேண்டும். இந்த நெருக்கடி தோன்றிய போதே நீராவி எந்திரம் உருப்பெற்றது.

நீராவி எந்திரம் இதற்கு முன்னும் இருந்தது என்பர் சிலர். **அலெக்சாண்டர்** (Alexander) கண்டது அலக்சாண்டரியா நகரம். யவன நாகரிகத்தின் முடிமணியான அந் நகரத்தில் ஹீரான் என்பார் ஒன்று கண்டாராம். அதுதான் நீராவி எந்திரம் என்பர். நெருக்கடி இல்லாதபோது நீராவி எந்திரம் காண்பது எங்கே? அவர் கண்டது ஒரு விளையாட்டுப் பொருளே. கொதி பானையின்மேல் பந்தொன்றைச் சுழலும் நிலையில்வைத்து, அப் பந்தின் மேலும் கீழும் குழையொன்று பிதுங்கி இருக்கும்படி அவர் வைத்தார். அதில் நீராவி வழியும்போது அது வரும் வேகத்தில் பந்து சுழலுமாம். அந்த விளையாட்டெல்லாம் சுரங்கத்தில் எழுந்த நெருக்கடியைத் தீர்க்கப் பயன்படாது. **மாக்டிபர்க்** (Magdeburg) கோமகனார் விளையாடிய விளையாட்டும் ஒன்று உண்டு. ஓர் உருளைக்குழை—அதில் ஒரு புகுதண்டு; அதனைப் பாதி அளவு இழுக்க ஐம்பதுபேர் வேண்டும். பாதி அளவு இழுத்ததும் ஒரு வேடிக்கை—உறிஞ்சு பொறி ஒன்று குழையிலுள்ள காற்றை வெளியேற்றுகிறது. உடனே திடீ ரெனப் புகுதண்டு குழைக்குள் விழுகிறது. அவ்வளவுதானா? ஐம்பது பேரையும் மேலே தூக்கி விட்டுவிட்டு விழுகிறது. இது தான் இந்த விளையாட்டு. ஆனால், இது வெற்றிடத்தின் விளை யாட்டே அன்றி நீராவியின் விளையாட்டு அன்று. என்றாலும், இங்கே ஓர் எண்ணம் பிறக்க இடம் உண்டு. நீராவி கொண்டு இப்படி வெற்றிடம் உண்டாக்கினால் 50 பேரைத் தூக்கி எறிந் ததுபோலத் தண்ணீர் இறைக்கும் உறிஞ்சி பொறியும் புகு தண்டைத் தூக்கி எறிந்து எளிதில் தண்ணீர் இறைக்கும்படி அதனை வேலை வாங்கலாம் அல்லவா? **பாபின்** (Papin) என்பவர் அவ்வாறே நீராவி கொண்டு வெற்றிடம் உண்டாக்கினார்; கொதி பானையில் நீரை ஆவியாக்கினார்; உடனே தண்ணீர் விட்டுக் குளிர வைத்தார். பெரிய இடத்தில் பரந்து இருந்த நீராவி சிறிய இடத்தில் குறுகி இறுகியது. மிகுதி நின்ற இடம் வெற் றிடமாகியது. மேலிருந்த புகுதண்டு திடீர் எனக் கொதி பானைக் குள் விழுந்தது. இப்படி எல்லாம் விளையாடியவர் பலர்.

விளையாட்டெல்லாம் போய் நெருக்கடிக்கேற்ற. நீராவி எந்திரம் செய்ய வந்தவர் **நியூகோமன்** (Nowcoman) என்பவரே. ஏற்றக்கோல் போன்ற அமைப்பு—ஏற்றக்கோலின் ஒரு முனையில் தண்ணீர் இறைக்கும் உறிஞ்சு பொறி தொங்கும். இதன் பளுவால் மற்றொரு முனை மேலேறி நிற்கும். அந்த முனையில் ஒரு புகுதண்டு உண்டு. அஃது ஓர் உருளைக் குழையில் முடியும். அந்தக் குழையின் கீழே கொதிபானை இருக்கும். அதிலுள்ள தண்ணீர் நீராவி ஆகிக் குழையில் ஏறும். பின் தண்ணீர் ஊற்றியதும் நீராவி இறுகும். இடம் குறுகும் வெற்றிடம் தோன்றும். மேலிருந்த புகுதண்டு திடீரெனக் குழைக்குள் விழும். அப்படி விழும்போது, ஏற்றக்கோலின் மற்றொரு முனை மேலே எழும். உறிஞ்சு பொறியின் புகுதண்டு மேலே ஏறியதும் தண்ணீர் மேலேறிப் பாயும்.

க்ளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் **நியூகோமன்** செய்த எந்திரத்தின் மாதிரி ஒன்று சீர்கெட்டுக் கிடந்தது. அதனைச் சீர்திருத்தும் வேலை **வாட்டுக்கு** வந்தது. இவர் அதனைச் சீர்திருத்தினர்; அதன் நுட்பங்களைக் கண்டார். இவர் ஒருநாள் நடந்து கொண்டே போகும்போது இவர் மூளை வேலை செய்யத் தொடங்கியது. செலவெல்லாம் செய்து எழுப்பிய நீராவி முழுதினையும் தண்ணீர் ஊற்றிக் குளிர வைப்பது வீண் வேலை அன்றோ? நீராவிக் குழையை வேருகவும், நீராவி இறுகும் இடத்தை வேருகவும் பிரிக்கக்கூடாதா? அப்படிப் பிரித்தால், நீராவியை எல்லாம் பாழாக்க வேண்டாமே. நீராவி வில்போல் விரிந்து சுருங்கும் **மீள்திறன்** (Elasticity) கொண்டது. நீராவியை நீராவிக் குழையில் இருந்து வேறோரிடத்திற்குப் பரவிச் செல்லச் செய்யவேண்டும். அந்த இறுகுவானில் (Condenser) நீராவியைக் குளிரச் செய்யவேண்டும். நடையோடு நடையாக இவ்வாறு அவர் மூளையும் விரைந்து ஓடியது. ஆனால், அன்றோ ஞாயிற்றுக்கிழமை. ஓய்வு நாளில் ஒன்றும் செய்தல் கூடாது. ஆதலின் மறுநாள்தான் அவர் தாம் எண்ணியபடி செய்துபார்க்க முடிந்தது. நீராவிக் குழையும் இறுகுவானும் கொதிபானையும் எல்லாம் **பாபின்** கண்டதில் ஒன்ருகவே இருந்தன. **நியூகோமன்** கொதிபானையை மட்டும் வேறு பிரித்தார்; நீராவிக் குழையை

கொதிபானையையும் வேறு பிரித்தார்; நீராவிக் குழையையும் வேறுபிரித்தார்; இறுகுவானையும் வேறுபிரித்தார். இதன் பயனாக எந்திரம் ஓட்டுகிற செலவு எவ்வளவோ குறையுமன்றோ! ஒரு மடங்கு வேலை செய்யும் எந்திரம் இதன் பயனாக நாலு மடங்கு வேலை செய்யும்.

இப்படி எந்திரத்தைப் பற்றிக் கால் நடையாக நடக்கும் போது எண்ணியதும் தண்ணீர் இறைக்கும் எந்திரம் உறுப் பெற்று எதிர் நிற்குமா? எந்திரம் என்றால் முதலாளி உலகம் அன்றோ? இவர் கையில் முதல் ஏது? என்ன என்ன வேலை செய்வார்? பாவம்! வெண்மண்கொண்டு பாத்திரங்கள் செய்யும் தொழிலிலும் இவர் பங்கெடுத்தார். இவர் குயவராகவும் வேலை செய்தார் என்ற கதை இதனாலேயும் வழங்கலாயிற்று. இவர் கண்ட கனவு நனவாக வேண்டுமானால் பணமுடையார் ஒருவருடன் இவர் கலந்து வேலைசெய்யவேண்டும் இவருக்குத் தகுந்த ஓர் நண்பர் **க்ரேய்** (Gray) என்பார். அவரோடு சேர்ந்து இவர் தொழிலாற்றி வந்தார். அந்தோ! வாட்டுக்கு 26 வயது முடியு முன் அவர் இறந்தார். ஆண்டவன் கருணைக்கடல் அல்லவா? தன் இளம் பிள்ளையைத் தவிக்கவிடுவானா? வாட் இப்போது பெற்ற நண்பர் **ரோபக்** (Robuck). இவர் ஓர் சுரங்க முதலாளி. வாட் கண்ட எந்திரத்தைச் செய்வதற்கு இவர் பணவுதவி செய்தார். வாட் என்பவர் மிகமிக அமைதியானவர்; தம் பெருமையைத் தாம் அறியாத் தன்மையினர். அனுமாருக்கு அவர் பெருமையை எடுத்துச் சொல்ல ஒரு சாம்பவான் வேண்டியிருந் தார். அதுபோல இவருக்கும் ஊக்கமளிக்க ஒருவர் வேண்டியிருந் தார். அவர்தாம் **மார்கிரட்** (Margret) அம்மையார். அவரை வாட் தமது 32-ம் வயதில் மணந்தார். ஆனால், அப்போது எப்படி வயிறு கழுவுவது? **ஸ்காட்லாண்டில்** (Scotland) கால்வாய்கள் வெட்ட வழி காண்பதற்கு நிலத்தை அளந்துவந்தனர். அந்த வேலையில் இவர் அமர்ந்தார். இந்த வேலையைப் பார்த்துக் கொண்டு இருக்கும்போது மணமான ஆறாம் ஆண்டில் **மார்கிரட்** அம்மையார் இறந்தார். இல்லாள் இல்லாத வீட்டில் இருப்பது ஒன்றும் இல்லை. நல்லமனைவியை இழந்த இவர் மனம் குன்றியது. 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பதற்கு இணங்க இவருக்குப் பண உதவி செய்துவந்த **ரோபக்**கும் செல்

வத்தை இழந்தார். முதலாளிக்கு லாபம் எப்படி வருமோ அப்படியே நஷ்டமும் வரும். என்ன செய்வார் (வாட்)? பாவம்! நல்குரவும செல்வமும் மாறிமாறி அல்லவா வரும்! இவருக்கு நல்ல காலம் பிறந்தது. காலச்சக்கரம் இடம் மாறியது. **போல்டன்** (Bolton) என்ற தொழில் நுட்பம் அறிந்த முதலாளியின் நட்புக் கிடைத்தது. **ரோபக்கிடம்** இருந்த அவர் பங்கினை இந்த ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் **போல்டன்** 1715-இல் வாங்கிக் கொண்டார். இந்த எந்திரம் செய்யும் உரிமையை வாட் என்பாரே பெற்றிருந்தார். ஆனால், அந்தத் தனிஉரிமை (Patent) சில ஆண்டுகளில் முடிந்துபோவதாய் இருந்தது. எந்திரம் செய்து முடியும் தறுவாயில் பிறரும் இந்த உரிமையைப் பெற்றால் என் செய்வது? ஆதலின் மிகமிக முயன்று, உரிமையை இவர் நீட்டித்துக்கொண்டார் (Ext ended its time); இதற்குள் 1776-ஆம் ஆண்டில் இரண்டாம் முறை மணம் செய்துகொண்டார். ஒருவாறுக எல்லா ஏற்பாடுகளும் முடிந்தன. 1780-க்குள் 40 எந்திரங்கள் வெளிவந்தன. அவற்றில் 20 எந்திரங்கள் **கார்ன் வாலிலேயே** செலவாயின. இவர் விற்ற விதம் இன்று நாம் ஒரு பொருளைக் கடைக்காரன் விற்க வாங்குகிறோமே அம் மாதிரி அன்று. வாங்குகிறவர்களிடம் ஒருவித ஒப்பந்தம் செய்துகொண்டு இதனை அவர்களுக்கு ஜேம்ஸ் வாட் விற்றார். இந்த எந்திரங்களை அவர்கள் வாங்குவதால் எரிகரும்பின் செலவு குறையுமன்றோ? அக் குறைந்த செலவினால் ஏற்படும் லாபத்தில் மூன்றில் ஒரு பங்கினை அவர்கள் கொடுக்கவேண்டும். என்ன? ஜீவிய காலம் உள்ள வரையும் அவர்கள் இப்படியே கொடுத்து வரவேண்டுமா? இல்லை. இதற்குக் கால எல்லை உண்டு. 25 வருஷம் வரை இப்படி ஆண்டாண்டு கொடுத்து வரலாம். இல்லையானல் 10 வருஷ பணத்தையும் ஒரே தடவையில் கொடுத்தாலும் இந்த எந்திரத்தைப் பெறலாம். இங்கே எந்திரம் எவ்வளவு தண்ணீர் இறைக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். உறிஞ்சு பொறியின் குழையின் அளவு தெரியும். அது கொள்ளும் தண்ணீர் எவ்வளவு என்று கூறிவிடலாம். ஆனல் எத்தனை முறை உறிஞ்சுகிறது என்று கண்டால்தானே இறைத்த தண்ணீரின் முழு அளவும் காணலாம். புகுதண்டு மேலுங்கீழும் போய்வருவதனை எண்ணிக் கணக்கிடும் எந்திரம் (Mathematical Counter) ஒன்று இவர் அமைத்தார்.

கார்ன்வாலில் தண்ணீர் இறைப்பதற்கு மட்டும் இவர் கண்ட எந்திரம் பயன்பட்டால் போதுமா என்று எண்ணினர் போல்டன். "போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து" என்றதற்கு மாருக அன்றோ இத் துறைகளில் உழைக்கவேண்டும்! தொழிற்சாலை எந்திரங்களைச் சுற்றவும், மற்றப்படி வண்டிகளை ஓட்டவும் இந்த எந்திரம் பயன்பட்டால் ஊதியம் பெரிதாகும் என்று அவர் கண்டார். அவர் இல்லையானல், வாட் என்பார் சோம்பித் திரிந்து இருப்பர். வாட் என்பாருக்குப் போல்டன், மேலும் மேலும் ஊக்கம் கொடுத்துத் தூண்டியதன் பயனுக தொழிற்சாலை எந்திரங்களைச் சுழற்றும் எந்திரமும் இவர் செய்தார்; இதில் ஒரு மாற்றம்—மேலும் கீழும் போய் வந்த தண்டினை மாற்றிப் பெருஞ்சக்கரமும் சிறுசக்கரமுமாக அமைத்து மேலும் கீழுமாக இயங்கிய இயக்கத்தினை வட்டமாக இயங்கும்படி செய்தார்; இதனல் எந்திரங்களைச் சுழற்றவைத்தார்.

நீராவிக் குழைகளைப் பற்றவைப்பது எளிதன்று. அதற்கென இரும்பும், நவசாரமும், கந்தகமும் கலந்த சாந்து ஒன்று கண்டார் இவர்; நீராவி மிகுதியாகவோ குறைவாகவோ பாயாது, ஒரே அளவில் வேண்டுகின்றபடி பாய, அமைப்பு ஒன்றும் கண்டு பிடித்தார். நீராவி அடக்கி ஆளி (Governor) என்பது இதற்குப் பெயர். இந்தப் புது எந்திரத்தை எப்படி மதிப்பிட்டு விற்பது? இதற்குமுன் குதிரைகள் சுழன்று சுழன்று ஆலைகளை இயக்கி வந்தன குதிரைகளை நிறுத்தி விட்டதால் ஏற்பட்ட லாபத்தை இவர் மதிப்பிட்டார். இவருக்கு முன்னும் எந்திரங்களின் வேலையைக் குதிரை ஓட்டத்தோடு ஒப்பிட்டுப் பேசியதும் உண்டு. ஆனல், அதனை எல்லோரும் ஒப்புக்கொள்ளுதற்கு உரிய அளவாக வாட் என்பவரே அறுதியிட்டார்; 24 அடி விட்டமுள்ள வழியில் சுற்றிவரும் குதிரை, நிமிஷத்திற்கு 33000 ராத்தல் தண்ணீரை ஓர் அடி உயரம் தூக்கும் என்றுர். இதற்கே ஒரு குதிரை ஓட்டம் என்று இவர் பெயரிட்டார்.

இவருடைய தனி உரிமை முடிவதற்கு முன்பே, பலரும் இவர் எந்திரத்தைப் போலச் செய்யத் தொடங்கினர். அவர்கள் மேல் வழக்குத் தொடங்க இருந்தது. இஃது ஒரு பெரிய

தொல்லை. ஆனால், முடிவில் இவர் வெற்றிகண்டார். எந்திரங்கள் பல்கிப் பெருகுவதனை இந்த வெற்றி தடுத்தது. இதற்காக வருந்தவேண்டுவதில்லை. இந்தத் தனி உரிமை இல்லையானால் இவ்வளவு முன்பணம் போட்டு இந்த எந்திரங்களைக் கண்டு பிடித்திருக்கமுடியாது.

வாழ்க்கையின் முடிவில் இவருக்கு அமைதி கிடைத்தது. இவரும் போல்டனும் வியாபாரத்தினைத் தத்தம் மக்களிடம் கொடுத்துவிட்டு அமைதி தேடினர். தாம் இளமையில் நிலம் அளந்து வேலை செய்த கால்வாய் 1812-இல் முடிவடைந்தது கேட்டு இவர் மகிழ்ந்தார். ஆனால், போல்டன் போன்ற நண்பர்களும் இறந்தனர். இவருடைய மக்களும் மனைவியும் மறைந்தனர். இந்தத் துன்பங்களையும் இவர் துய்க்கவேண்டுவதாயிற்று. உலகம் போற்றும் புகழ் ஒன்றே இவருக்கு ஆறுதல் அளித்தது. 1819-இல், தமது 83-ஆம் வயதில் இவர் மறைந்தார். சாகும் வரையும் இவர் தம் கைத்திறத்தைக் காட்டியே வந்திருந்தார். 60,000 பொற்காசுகளை விட்டுவிட்டு இவர் இறந்தார் என்பர். இவரது தொண்டு இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு உதவியது என்று இதிலிருந்தே நாம் அறியலாம். 500 எந்திரங்கள் செய்தார். அவற்றில் ஒவ்வொன்றும் ஏறக்குறைய 15 குதிரை ஓட்டங்கள் உடையது. இப்படியும் இவர் தொண்டினைக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

மேலும் வளர்ந்தது நீராவி எந்திரம். நீராவியைக் குளிரவையாது பரவவிட்டும் இறுகவைத்தும் எந்திரத்தை ஓட்டலாம் என்றும் இவர் கண்டார். அக் கனவு பின் வந்தவர்கள் கையில் நனவாகிப் பயன்தந்தது. எல்லாத் துறைகளிலும் இந்த எந்திரம் பரவியது என்று முதலிலேயே கூறினோம். இங்கிலாந்து இதன் பயனாக உலக முன் அணியில் முதலிடம் பெற்றது.

8. மணிமேகலையும் மதுவிலக்கும்*

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், B. A., B. L.

[மதுவிலக்குச் சங்க ஆண்டுவிழாவில் பேசியது.]

அன்பர்களே, "இயற்கை வளம் நிறைந்த தமிழ் நாட்டில் பனையும் தென்னையும் பல்லாயிரம் உண்டு. பாண்டி நாடு தொன்றுதொட்டுப் பனைவளம் படைத்ததாகும். சோழநாட்டிலும் சேரநாட்டிலும் தென்னைச் செல்வம் சிறந்து விளங்குகிறது. தென்னையிலும் பனையிலும் ஊறுகின்ற மது ஆறாகப் பாய்வதற்குப் போதியதாகும். ஆயினும், தென்னாட்டிற் பிறந்த சமயங்களும், புகுந்த சமயங்களும் மதுவிலக்குப் பிரசாரம், செய்தன. சைவமும் வைணவமும், பௌத்தமும் சமணமும், மகம்மதியமும் கிருஸ்தவமும் மதுபானத்தைக் கடிந்தன. மற்றைய கொள்கைகளில் பிணக்கமுற்ற இப் பெருஞ் சமயங்கள் நமது மதுவிலக்குக் கொள்கையில் இணக்கமுற்றுப் பணிசெய்த பான்மையாலேயே தமிழ்நாட்டில் மதுபானம் மட்டுப்படுவதாயிற்று.

தமிழ்மொழியில் இறவாத பெருநூல்கள் இயற்றிய பேரறிவாளரும் தம் கவிகளின் வாயிலாக மதுவிலக்குப் பிரசாரம் செய்துள்ளார்கள். தமிழ் மறையென்று தமிழ்நாட்டில் போற்றும் திருக்குறள், மனித சமுதாயத்துக்குக் கேடு விளைக்கும் மூன்று தீமைகளை மிக அழுத்தமாகக் கண்டிக்கின்றது. விபசாரம், மதுபானம், சூதாட்டம் இம் மூன்றும் செல்வத்தைச் சிதைத்துச் சீர்மையை அழிக்கும் என்று அந் நூல் கூறுகின்றது.

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு"

என்பது வள்ளுவர் வாய்மொழி.

சமண முனிவராகிய பவணந்தியார், நன்னூல் என்னும் இலக்கண நூலின் வாயிலாக மதுவிலக்குப் பிரசாரம் செய்கின்றார். கள்ளுண்பவர் கல்வியறிவைப் பெறுதற்கு உரிய

---

*1949-ஆம் ஆண்டில் வெளியான மேடைத் தமிழ் இரண்டாம்பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

ரல்லர் என்பது அவர் கொள்கை. 'களி மடி மானி காமி கள்வன்' முதலியவர்கள் கல்விபெறுதற் குரியராகார் என்று ஆசிரியர் கட்டுரைக்கின்றார். கள்ளுண்பவன் 'களி' யெனப்படுவான். மாணவராதற்குத் தகுதி யற்றவர்களில் முதல் வரிசையில் முதலாகக் கள்ளுண்பவனை வைத்தமையால் மதுவிலக்குப் பிரசாரத்தில் நன்னூலார்க்கு எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

பௌத்த சமயத்தைச் சார்ந்த நூல் மணிமேகலை. அந் நூல் ஐந்து சிறந்த கொள்கைகளைப் பஞ்சசீலம் எனப் பாராட்டுகின்றது. பஞ்சசீலம் வாய்ந்தோரே சிறந்தோர் ஆவர். கள்ளுண்ணாமை, பொய்யுரையாமை, கொலைசெய்யாமை, களவு செய்யாமை, விபசாரம் செய்யாமை ஐந்தும் பஞ்சசீலம் எனப்படும்.

இனி, மணிமேகலையில் அமைந்த மதுவிலக்குப் பிரசாரத்தைப் பார்ப்போம்.

பசிப்பிணி யென்னும் பாவியை இப் பாரினின்றும் ஒழிக்க முயன்றாள் ஆதிரை; அவள் கணவனாகிய சாதுவன் மது என்னும் அரக்கனை இம் மாநிலத்தினின்றும் அகற்ற முயன்றான். ஒரு நாள் அவன் கப்பலேறி வங்க நாட்டுக்குப் புறப்பட்டான். நடுக்கடலிற் கப்பல் செல்லும்பொழுது ஒரு சுழல்காற்று எழுந்தது. மரக்கலம் சின்ன பின்னமாகச் சிதைந்து தாழ்ந்தது. கருங்கடலில் மிதந்த சாதுவன் கையில் ஒரு பாய்மரம் அகப்பட்டது. சிலநாள் இரவு பகலாக அலைகளால் மொத்துண்டு அலைந்த அம் மரம் ஒரு தீவிலே அவனைக் கொண்டுசேர்த்தது. அங்கே நாகர் என்னும் வகுப்பார் வாழ்ந்துவந்தார்கள். விலங்குகளுக்கும் அவர்களுக்கும் வேற்றுமை இல்லை. தம்முள் ஒருவனைத் தலைவனாகவும் குருவாகவும் அவர்கள் கொண்டிருந்தார்கள். அவன் ஆண் கரடி போன்றவன். அவன் மனையாள் பெண் கரடி போன்றவள். கரையிலே ஒதுக்கப்பட்ட சாதுவனைச் சில நாகர் கண்டார்கள்; நரமாமிசம் கிடைத்ததென்று நாக்கு ஊறினார்கள்; தம் குருநாதனிடம் அவனைக் கொண்டு சென்றார்கள். பசியால் மெலிந்து குளிரால் நலிந்த சாதுவனைக் குருநாதன் கூர்ந்து நோக்கினான்; "நீ யார்? இங்கு வந்த காரணம் என்னை?" என்று நாகநாட்டு மொழியிலே வினவினான்.

அம் மொழியை அறிந்திருந்த சாதுவன் கருங்கடலில் நேர்ந்த துன்பத்தை உருக்கமாக எடுத்துரைத்தான். அந் நிலையில் குருநாதன் உள்ளத்தில் இரக்கம் பிறந்தது. அருந்துயருற்ற நம்பிக்கு நாட்பட்ட கள்ளும் நல்ல ஊனும் கொடுக்கும்படி, குரு, அருகே நின்ற நாகரைப் பணித்தான். அவ் வுரை கேட்ட சாதுவன் திடுக்கிட்டான் ; இரு கையாலும் செவியைப் பொத்திக் கொண்டு, 'ஐயனே ! கள்ளும் ஊனும் வேண்டேன்' என்று உறுதியாக உரைத்தான். அவ் வுரை கேட்ட குருநாதன் வியப்படைந்தான் ; 'கள் என்ற சொல்லைக் கேட்டபொழுது துள்ளி மகிழாத உள்ளமும் உண்டோ ! நாவுக்கினிய ஊனையும், கவலையை ஒழிக்கும் கள்ளையும் விலக்கலாமோ' என்று வெகுண்டு வினவினான். அதுகேட்ட சாதுவன் மதுபானத்தின் தீமையைக் குருநாதன் மனங்கொள்ள உணர்த்தலுற்றான்: "ஐயனே, மானிடப் பிறவியில் நாம் அடைந்துள்ள செல்வங்களுள் எல்லாம் சிறந்தது அறிவுச் செல்வமே ஆகும். அவ் வறிவாலேயே நன்மை தீமைகள், குற்றநற்றங்கள் இவற்றைப் பகுத்து உணர்கிறோம். இத்தகைய அறிவை வளர்க்கின்றவர்களே மேலோர் ; அதனைக் கெடுக்கிறவர்கள் கீழோராவர். மதுபானம் நம் அறிவை மயக்குகின்றது ; நாளடைவில் அதனைக் கெடுத்துவிடுகின்றது. செய்யத்தக்கது இது, செய்யத் தகாதது இது என்று பகுத்தறியும் திறமையை இழந்து விட்டால் மாலுமியில்லாத மரக்கலம்போல நமது வாழ்க்கை நெறி கெட்டொழியும். இதனாலேயே,

" மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்."

என்று சாதுவன் எடுத்துரைத்தான்.

உயிர்க்குறுதி பயக்கும் உண்மைகளைச் சாதுவன் வாயிலாகக் கேட்ட நாகர் தலைவன் அவனடிகளில் வீழ்ந்து வணங்கினான் ; அதுவரை கடலிற் கவிழ்ந்த மரக்கலங்களிலிருந்து கைப்பற்றிய அரும்பெரும் பொருள்களை அவனுக்குக் கையுறை

யாகக் கொடுத்தான்; வங்க நாட்டினின்றும் அங்கு வந்தடைந்த வாணிகக் கப்பலில் அவனை ஏற்றி அனுப்பினான்.

ஆகவே, மதுவிலக்குப் பிரசாரம் தமிழ்நாட்டில் புதிதாகத் தோன்றிய தொன்றன்று என்பது இக் கதையால் விளங்கும். செல்லுமிடந்தோறும் தமிழ் மக்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் கடமையை மேற்கொண்டிருந்தார்கள்; நாட்டில் இருந்தாலும் நடுக்கடலிற் போந்தாலும் இப் பணியை ஒல்லும் வகையால் செல்லும் வாயெல்லாம் செய்துவந்தார்கள். நரமாமிசம் புசிக்கும் நாகர் நாட்டிலே ஒதுக்கப்பட்ட ஒரு தமிழ் வணிகன், அறவுரையால் அந் நாட்டு அரசனைத் திருத்தி யருளினான் என்னும் தெள்ளிய வரலாறு நாம் போற்றுதற்குரியதன்றோ"?

9. உலகம் ஏன் அழியவில்லை?*

திரு. M. A. துரை அரங்கசாமி, M. A., M. O. L.

உலகில் மக்கள் செய்யும் தொழில்கள், நல்லன சிலவாகவும் தீயன பலப் பலவாகவும் உள்ளன. தாமே வாழவேண்டும், தாமே அதிகாரம் செலுத்த வேண்டும், தாமே பெரும் பணக்காரர் என்று பெயர் எய்தவேண்டும், தாமே பெரும் படிப்பாளிகள் என்று பிறரால் போற்றப்படவேண்டும், மற்றவரெல்லாம் தமக்குக் கீழ்ப்படிபவராக, ஏழையராக, அஞ்சுபவராக, எதிர் பேசாதவராக இருத்தல் வேண்டும் என்று எண்ணுபவரே உலகில் பெரும்பான்மையோர். எண்ணுகின்றபடி நிறைவேறுகின்றதோ இல்லையோ, இத்தகைய எண்ணம் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்களிடத்தில் இருக்கக் காண்கின்றோம். எண்ணத்திற்குத் தகவே தொழில்கள் நிகழ்வன. எனவே, 'தீய தொழில்களே மிகுந்துள்ளன உலகில்' என்பது வெளிப்படை. இம் மிகுதி, இன்று மட்டு மன்று, முன்னும், மிக மிகப் பண்டைக் காலத்திலும்கூட இருந்தேவந்துளது.

"தீமை மிகுதியால், உலகம் அழிதல் வேண்டும்! உலகம் தோன்றி எத்தனையோ கோடி ஆண்டுகள் ஆயின என்று கூறுகின்றனர். ஆனால் உலகம் அழியாமல் நிலைபெற்றிருக்கின்றதே"

*1948-ஆம் ஆண்டில் எழுதிய கட்டுரை.

என்றால், அவ்வாறு நிலை பெற்றிருப்பது ஒரு சிலரால், ஒரு சிலர் செய்யும் நல்ல செயல்களால் என்று காணலாம். ஒரு சிலர் செய்யும் நற் செயல்களால் உலகம் நிலைபெறுகின்றது என்றால், அனைவரும் அச் செயல்களைக் கடைப்பிடிப்பராயின், உலகம், அழியாத பேரின்ப வீடாகும் என்பதில் தடை ஏதேனும் உண்டோ ?

உலகின் பெரும் பகுதிகள், போரினால் அழிந்து போயிருக் கின்றன. போர் உண்டாவது, பசி பொருட்குறைவு முதலிய காரணங்களினால்தானே! எனவே, உணவு மிகுதியுடையோரும், பொருள் மிகுதியுடையோரும் அவை இல்லாதவர்க்குத் தாமே அவற்றை பங்கிட்டுக் கொடுத்து விடுவராயின் போர் உண்டாக மாட்டாது; உலகம் அழியாது. இப்படியும் பங்கிட்டுக் கொடுப்பார் உண்டா ? இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பு, தமிழ் நாட்டில், ஒரு சிலர், அப்படிப் பங்கிட்டுக் கொடுத்து வாழ்ந்துவந்தனர். உணவு மட்டுமா ! தேவாமிர்தம், கிடைத்தாலும், அது மிக அருமையான பொருளாயிற்றே என்று கருதித் தாமே தமியராய் உண்ணாமல், பலரோடும் கூடி அதை உண்பர் அவர்.

அது மட்டுமா ! அவர் யாருடனும் வெறுப்புக் கொள்ளவே மாட்டார் ; எல்லாருடனும் இனிமையாகவே பேசுவர். பிறருக் குத் தம்மிடத்தில் உள்ள ஒன்றைக் கொடுக்கும்போது, முக மலர்ச்சியோடு இனிய சொல் கூறிக் கொடுத்தால்தான், ஒருவர் கொடுப்பதை மற்றவர் ஏற்பர்; சிறிது வெறுப்புக்கொண் டாலும், கொடுப்பதை மற்றவர் ஏற்கமாட்டார். எனவே, கொடுக்கும் இயல்புடையார் அதனோடு வெறுப்பில்லாமையை யும் பூணுகைக்கொள்வர்.

துன்பங் கண்டு அஞ்சுவதும் இன்பங் கண்டு மகிழ்வதும் மக்கள் இயற்கை. கொடையும் வெறுப்பின்மையும் உடைய வர், பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அது தீர்த்தற் பொருட்டுச் சோம்பலும் கொள்ளமாட்டார் ; உடனே துன்பத்தைத் தீர்த்துக்கொள்ளவும் முயல்வர்.

துன்பத்தைப் போக்கிக்கொள்ள முயல்பவர், கள்ளத்தன மாகவோ, நெறியின்மையாகவோ சென்றால், பலர் பழிக்கு

ஆளாவர்; ஆதலால், நெறி பிறழாத வகையில் முயல்வர்; புகழ் பெறும் நெறியில் முயல்வர்; புகழ் நெறிக்கண் செல்லுதலில் தம் உயிரையும் கொடுப்பர்; பழி வருவதெனின் உலகம் முழுதுமே கொடுத்தாலும் கொள்ள இயையார். ஆகையால் அத் தகையோர்க்கு மனக்கவலை யென்பதே ஏற்படுவதில்லை.

கொடையும், வெறுப்பின்மையும், துன்பங் கண்டு அஞ்சி அதைப் போக்கச் சோம்பல் கொள்ளாமையும், புகழின் பொருட்டு உயிரையும் தர இயைதலும், பழிவருவதெனின் உலகம் முழுதும் பெறுவதாயினும் கொள்ள இயையாமையும், மனக்கவலை இன்மையும் ஆகிய இத் தகைய மாண்புடைய குணங்களுடன், தமக்கென முயலாத, ஆனால் வலிய முயற்சியுடையராய்ப் பிறர் பொருட்டே முயல்வார் ஒரு சிலர் இருத்தலால், அவரைச் சூழ்ந்துள்ள இடங்கள் அழிதல் இல்லை. அது காரணமாக உலகம் முழுவதும் அழியாதிருக்கின்றது. உலகம் முழுமையும் அத் தகையோர் போன்றவரே இருந்துவிடுவ ராயின் எவ்வளவு சிறப்பை உலகம் பெறும்! ஏன் பெறுவதில்லை? அத் தகவோராக யாவரும் ஆகாமையால்! ஏன் ஆகவில்லை?

உலகில் அனைவரும் தமக்கென முயலாது, பிறர்க்கெனவே முயலும் பெற்றியை யடையாதிருப்பதற்குக் காரணம் யாது? இந்தக் கேள்வியை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த ஒரு தமிழ்ப் புலவமன்னன் தனக்குள்ளே கேட்டுப்பார்த்தான். அமைதி தரும் பதில் ஒன்றும் அவனுக்கே கிடைக்கவில்லையென்றால் நாம் என் சொல்வது? பாண்டிமா நாட்டுக்கு அரசனாய், இளமையிலேயே பேரறிவு பெற்றவனாய், இளம் பெரு வழுதி என்ற சிறப்புப் பெயர் உடையவனாய், கடற்படை யெடுப்பில் முன் வைத்த காலைப் பின்வாங்காது போர் செய்து கடல் நடுவிலேயே இறந்தான் ஆதலின், கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி என்று பின்னர் அழைக்கப் பெற்றவனாய் வாழ்ந்த தமிழ்ப் புலவன், காரணம் கூறமாட்டாமல் கூறவில்லை என்பதற்கு இல்லை. "அவரவர் தாமாகத் திருந்தினாலொழியப் பிறவாற்றால் திருந்தி நன்மக்களாகார். சட்டமோ, தண்டனையோ, ஓரளவிற்குத்தான் பயன்படும், மக்களை நன்னெறியில் நிறுத்துதற்கு. தாமாகவே திருந்தியொழுகும் நன் மக்கள் ஒரு சிலர் இருக்கின்றனர். அவர் இருப்பதால்தான் உலகம் அழியாமல் நிலைபெறு

கின்றது" என்று அவன் கண்டான்; நெடு நாள் எண்ணி எண்ணி அவன் கண்ட உண்மையை ஒரு பாட்டாக நமக்குத் தந்து போயினன். அந்தப் பாட்டு நம் நல்வினையால் இன்று கிடைத்திருக்கின்றது. அவன் பாடியதன் நோக்கம், அப்படிப் பட்டவரால் உலகம் நிலைபெறுகின்றது ஆதலின், யாவரும் அவர் போலவே ஆதல் வேண்டும் என்பது. ஆகவே அப் பாடலின் பொருளுணர்ந்து யாவரும் அவ்வாறு ஆக விரும்புவார்களாக!

உண்டால் அம்மஇவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவ(து) ஆயினும், இனிதுஎனத்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ(து) அஞ்சி;
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென வாழுநர் உண்மையானே.

(புறநானூறு 182)

10. ஒரு கடிதம்*

இளைஞரே நாட்டுப் பணிக்குரியர்—நாடோறும் வழிபாட்டுப் பயிற்சி (யாழ்ப்பாணம்—வட்டுக்கோட்டை—நாகலிங்கம் பிள்ளை அவர்கட்கு)

டி. எம். அச்சுக்கூடம்,
பல்லாவரம், 16—5—1921.

அன்பிற்கும் அருமைப் பண்புகளுக்கும் ஓர் உறைவிடமாய்த் திகழும் சைவத் திருவாளர் நாகலிங்கம் அவர்கட்கு எல்லாம் வல்ல நம் இறைவனருளால் எல்லா நலங்களும் உண்டாகுக.

ஆராய்ச்சியில்லாப் போலிக் கல்வியிலும் நம்பிக்கையிலும் பழகிய நந்தமிழ்ப் புலவர் சிலரைத் திருத்துதல் இனி இயலாது. இனி, நுங்களைப்போல் ஆராய்ச்சி அறிவிற் செழித்து வளரும் இளம்பெருமான்களால் மட்டுமே நம் சித்தாந்தமும் தமிழுந்

* இது 1951 பிப்ரவரியில் வெளியான மறைமலையடிகள் வாழ்வும் பணியும் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

தழைத்தோங்க வேண்டும். ஆகமங்கள் தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களால் ஆயிர ஆண்டுகளாக எழுதப்பட்டவைகளே யாகும். நாம் ஆராய்ந்து கண்ட உண்மைகளைக் கரவாது உலகிற்குத் தெரிவிப்பதே நம் கடமையாகும். அது நிற்க.

நாடோறுஞ்செய்ய வேண்டும் அகப் பயிற்சியைப் பற்றித் தங்கட்குத் தெரிவிக்கவேண்டுவன பலவுள. அவை நேரிற் றெரிவித்தலே நலமாகும். நித்திய கன்மானுட்டான முறைப்படி தாங்கள் நாடோறுஞ் செய்துவருவது நன்றுதான். ஆயினும், அறிவு ஒரு மேற்பொருளை நாடி நிற்குமாறு பழகுதலே எல்லாவற்றினுஞ் சிறந்ததாகையால் அப் பயிற்சியை நாடோறுங் கால்மணி நேரமாவது காலை மாலையிற் செய்து வருதல் நன்று. கடவுளின் மேற்பட்ட பொருள் இல்லையாதலால், அதனையே நாடல் வேண்டும். கடவுள் நம்பொருட்டு ஒளியுடைப் பொருளிலேதான் விளங்கித் தோன்றுகிறார்; நமதுடம்பின் அகத்தும் புறத்தும் ஒளியில் விளங்குகிறார். ஆகையால், நமதகக் கண்ணாலும் புறக்கண்ணாலும் ஒளிவடிவில் இறைவனைக் கண்டு உருகி வழிபடுக. நமதுடம்பின் அகத்தே முக்கோண வடிவமாயுள்ள மூலத்திலிருந்து தலைஉச்சி வரையில், நுண்ணிய ஒளிவடிவு ஒன்றிருக்கின்றது. இதனை நன்றாக நினைவிற் பதித்துக்கொள்ளும் பொருட்டுப் புறத்தேயும் அவ் வொளி வடிவினை அமைத்தல் வேண்டும். அதனைப் பின்வருமாறு செய்க:

முக்கோண வடிவமான ஓர் இருப்புச் சட்டத்தின்மேல் வட்ட வடிவமான ஓர் இருப்புச் சட்டியை வைத்து, அதில் தீ வளர்த்து, அதன் எதிரே அசைவின்றியிருக்க, கீழே ஒரு பலகையிட்டு அதன்மேல் இருந்து, வலக்காலை இடத்தொடைமேல் ஏற்றி நிமிர்ந்திருத்தல் வேண்டும். கைகளிரண்டும் முழங்காலின் மேல் வைத்துக் கொள்க. சட்டியில், எரியும் ஒளிவடிவினை நன்றாய்ப் பார்த்து வணங்கி நினைவிலேற்றியபின், கண்ணை மூடிக்கொண்டு மூலத்தின்கண் உள்ள முக்கோணத்தினையும் அதிலிருந்து எழுந்தெரியும் குண்டலி ஒளியினையும் நினைத்து வழிபடுக. அதன்பின் அங்கிருந்து ஏறி, நெஞ்சத் தாமரையுள் அசையும் ஒளிவடிவாகிய அம்பலக் கூத்தனை வழிபடுக. அதன் பின் அங்கிருந்தேறித் தலையிற் புருவத்திடை வெளியில் அவ் வொளியின் உச்சியிலே சிவந்த நிறமுடைய அப்பனும் வெண்

ணீல நிறமுடைய அம்மையும் ஒருங்கு பிணைந்திருக்கும் வடிவினைக் கருத்தூன்றி வழிபட்டு, முடிவில் திரு நீறணிந் தெழுக. இந்த மூன்றிடங்களிலும் நினைவை நிறுத்துகையில் உங்கட்கு ஆகவேண்டுவனவற்றைச் சிறிது நினைத்தால், இறைவன், நினைத்தவற்றை நினைத்தபடியே நிறைவேற்றுவான். இவ் வழிபாட்டின் உண்மையை 'விந்துநாதங்'களைப்பற்றி, யான் சிவஞான போத ஆராய்ச்சியில் எழுதிய பகுதியிற் றுங்கள் கண்டு தெளியலாம். இவ் வழிபாட்டோடு சேர்த்துச் செயற்பாலதாகிய 'பிராணாயாம'மும் வேறு சில முதன்மையான பயிற்சிகளும் நேரே தெரிவிக்க வேண்டும்.

மந்திரங்களாகச் சொல்லற்பாலன திருவாசகம் போற்றித் திருவகவலிலுள்ள சொற் றொடர்களேயாகும்.

தேவார திருவாசகத்திற் றங்கட்கு விருப்பமான செய்யுட்களை உருவேற்றலாம்.

அம்மையப்பர், முருகர், பிள்ளையார், நடராசர் முதலான திரு வுருவங்களில் எதன்கண் உங்கட்கு அன்பு மீதூர்கின்றதோ அதனையே வழிபடலாம். எதை நினைத்தாலும் ஒளிவடிவாக நினைத்தல் வேண்டும். கல்லினுஞ் செம்பினுஞ் செய்த வடிவங்களும் ஒளிவடிவின் குறிகளேயாம். பளிங்கிற் செய்த சிவலிங்கமேனும் பொன்னிற் செய்த மற்ற உருக்களேனும் இவை இல்லையாயிற் றுமிரம் முதலியவற்றிற் செய்தனவேனும் விளக்கொளி முன் வைத்து வழிபடுதற்காம்.

அன்புள்ள,

வேதாசலம்.

11. யான் கண்ட பொருட்காட்சிகள் *

திரு. சோம. லெ இலக்குமணச் செட்டியார், B. A.

எனது ஆறுமாத கால உலகச் சுற்றுப் பிரயாணத்தின் போது, மூன்று பெரிய பொருட்காட்சிகள் நிகழ்ந்தன. இவை அனைத்துமே ஐரோப்பாவில்தான் நடைபெற்றன. இந்த மூன்று காட்சிகளையும் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

முதலாவது பொருட்காட்சி: 1948 ஆகஸ்டில் பிரிட்டனின் தலைநகரான லண்டனில் நடைபெற்ற இயந்திரக் கருவிகள் பொருட்காட்சி. அடுத்தது: செப்டம்பரில் செக்கோசுலவேகியா வின் தலைநகரான பிராஹாவில் நடைபெற்ற வர்த்தகப் பொருட் காட்சி. கடைசிப் பொருட்காட்சி: அக்டோபரில், பிரான்சின் தலைநகரான பாரிசில் நடைபெற்ற உலக மோட்டார்கார் பொருட்காட்சி.

இம் முப்பெருங் காட்சிகளுக்கும் பல ஒற்றுமைகள் இருந் தன. இவை யாவும் மிகப் பெரும் அளவில், பல லட்சம் ரூபாய்ச் செலவில் நடைபெற்றன. இவற்றுக்கான ஏற்பாடுகள் பல மாதங்களாகச் செய்யப்பட்டன. காட்சிகளைக் காண வர வேண்டுமென்று உலக முழுவதற்கும் அழைப்புக்கள் அனுப்பப் பட்டன. ஒரே கட்டிடத்தில் இடம் போதியதாயில்லாததால், பல மாடிகளுள்ள பல கட்டிடங்களில் காட்சியின் பகுதிகள் தனித்தனியே அமைக்கப்பெற்றன. காட்சி நடந்த நாட்டு மொழியை அறியாதவரும் எல்லா நிகழ்ச்சிகளையும் கவனிப்ப தற்கு உதவியாக மொழி பெயர்ப்பாளர்களையும் காட்சி நிருவாகி கள் நியமித்திருந்தனர். பொருட்காட்சிக்குள்ளே செல்ல வாங் கும் டிக்கட்டுடன் ஒரு 'பிளான்' கொடுத்தனர். தீப்பிடித்தால் நாம் இருக்கக்கூடிய எந்த இடத்திலிருந்தும் வெளியே செல்ல எது மிகச் சுருக்கமான, சுலபமான வழி என்பது இந்தப் பிளா னில், பால் மணம் மாறாப் பச்சிளங்குழந்தையும் புரிந்துகொள் ளும்படி நன்றாகக் காட்டப்பட்டிருந்தது.

எந்த இடத்தில், எந்தப் பகுதி காட்டப்படுகிறது, எத்தனை விதமான கடைகள்...ஸ்டால்கள்...உள, எந்த ஸ்டால் எங்கே

---

* 1951-ல் வெளியான 'என் பிரயாண நினைவுகள்' என்ற நூலி லிருந்து இஃது எடுக்கப்பட்டது.

இருக்கிறது என்பன போன்ற விவரங்கள் அடங்கிய புத்தகங்களும் படங்களும் பொருட்காட்சியில் வியாபாரம் முடிப்பதற்குரிய சட்டதிட்டங்கள் அடங்கிய பிரசுரங்களும் யாவருக்கும் வழங்கப்பட்டன.

பொருட்காட்சி நடந்த இடத்துக்குச் செல்ல, தனி ரயில்கள் விடப்பட்டன. காட்சியின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குப் போய்வர பஸ் வசதி செய்யப்பட்டிருந்தது. தபால், தந்தி, டெலிபோன் நிலையங்களும், பேங்குகளும், சினிமா, நாடக, ரயில், கப்பல், ஆகாய விமான டிக்கட்டுகள் விற்கும் கடைகளும், ஹோட்டல்களும், ஓய்வு எடுத்துக்கொள்ளும் அறைகளும், முதல் சிகிச்சை செய்யும் இடமும், விசாரணைகளுக்குப் பதில் கூறும் அலுவலகங்களும் காட்சிச் சாலையிலேயே ஆங்காங்கு இருந்தன. கடிதங்களை டைப் அடித்துக்கொடுக்கும் அலுவலகங்களும் பொருள்களைக் கொள்வோரும் கொடுப்போரும் கூடிப் பேசும் அறைகளும் இம் மண்டபங்களில் இருந்தன.

குறிப்பாகப் பிற நாடுகளிலிருந்து வந்திருந்த விருந்தினர்களுக்குத் தக்க உதவிகளை, உடனடியாக அளிப்பதற்காக, அவர்கட்கு அடையாளச் சீட்டு (Badge) கொடுக்கப்பட்டது. அவர்கள் ஏராளமானவர் இக் காட்சிக்கு வருவதற்குத் தூண்டுகோலாக, அவர்களுக்குப் பிரயாண டிக்கட்டுகள் மலிவான விலைக்கு விற்கப்பட்டன. 'விசா' (Visa) என்னும் ஒரு நாட்டுக்குள்வர அந்த நாட்டு அரசியலார் கொடுக்கும் அனுமதி எளிதாய்த் தரப்பட்டது. அவர்களுடைய தபால்கள் தனி இலாகா மூலம் பொருட்காட்சி நிருவாகிகளால் சேர்க்கப்பட்டன.

விற்பனை செய்யப்படும் பொருள்களின் படங்களும் பார்வையாளருக்கு வழங்கப்பட்டன. ஒரு பொருளை வாங்கிவிட்டால், அதை உலகின் எப்பகுதிக்கும் கப்பலில் ஏற்றியனுப்பி வைக்கும் பணியைத் திறமையாயும் பொறுப்பாயும் செய்யும் வணிகக் குழுவினரும் இக் காட்சிகளில் இருந்தனர். எந்த நாட்டில், எந்தப் பொருளை இறக்குமதி செய்ய எவ் விதமான சட்டம் அல்லது தடை அமலிலுள்ளது, அங்கு அதன் இறக்குமதி வரி எவ்வளவு ஆகிய விவரங்களைச் சரிவரத் தெரிந்த அலுவலரும் இக் காட்சிகளில் இருந்தனர். இக் [illegible]

பல லட்சம் மக்கள் வந்து கலந்துகொண்டனர்; பத்திரிகைகள், அவ்வப் பொருட்காட்சியைப் பற்றித் தனிமலர் வெளியிட்டு அவற்றை விளம்பரம் செய்தன.

இப் பொருட்காட்சிகள் வெற்றிகரமாக நடக்க, உரிய அரசியலார் பேருதவி புரிந்தனர். மேலும், இக் காட்சிகளின் எல்லாத் துறைகளிலும், பெண்டிரும் முழுதும் ஈடுபட்டுத் தாங்களும் நல்ல பங்கெடுத்துக் கொண்டார்கள். இன்னொரு முக்கியமான ஒற்றுமையையும் குறிப்பிடவேண்டும். இம் மூன்று காட்சிகளுள், ஒன்றிலேனும் சிவப்புத் தொப்பி அதாவது போலீசாரை (அமெரிக்காவில் சிவப்புத் தொப்பி என்றால் ரயில்வே போர்ட்டர் என்று பொருள்) யான் காணவில்லை. இனி, தனித் தனியாக இப் பொருட்காட்சிகளைக் கவனிப்போம் :

லண்டன் பொருட்காட்சி

1939 முதல் 1945 வரை நடந்த போரால் பிரிட்டனின் உற்பத்தி அளவு குறையவில்லை. பிரிட்டிஷார் தங்களுடைய உற்பத்தியை விரைவுபடுத்தி, அவைகளுக்குப் பண்டமாற்றாகத் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யவேண்டும் என்பதைப் பிரிட்டிஷ் மக்களுக்கு உணர்த்துவதற்காகவும், பிரிட்டனின் ஏற்றுமதியை மேலும் பெருக்கவும், தொழில் திறமையில் பிரிட்டிஷ் நிபுணர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை ஏனைய நாட்டினருக்குக் காட்டவும் இப் பொருட்காட்சி இயந்திர வியாபாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டது. இயந்திரம் செய்பவரும் விற்பவரும் மட்டுமன்றி இயந்திர நுட்பங்களை விளக்கும் ஆற்றல் பெற்றவர்களும், இயந்திர ஆராய்ச்சியைப் பற்றிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வெளியிடுவோரும் தம் அலுவலகங்களை இக் காட்சியில் அமைத்திருந்தனர்.

இயந்திரம்தான் இன்றைய நாகரிகத்தின் அடிப்படை. விவசாயத்தைப் பெருக்குவது இயந்திரம்; பலவகை உணவுகளைத் தயாரிப்பதும் இயந்திரம் ; மானத்தைக் காக்க நாம் உடுக்கும் துணியை உற்பத்தி செய்வதும் இயந்திரம்; அறிவை வளர்க்க நாள்தோறும் நாம் படிக்கும் பத்திரிகையை அச்சிடுவதும் இயந்திரம்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மனிதன் செல்வ

உதவுவதும் பலவகை இயந்திரங்கள்தாம்; நாம் நம்மைத் தற்காத்துக்கொள்ள உதவுவதும் இயந்திரம். இத்தகைய இயந்திரங்களின் உற்பத்தியில் பிரிட்டன் உயர்நிலை எய்தியிருப்பது இக் காட்சியிலிருந்து தெளிவாகத் தெரிந்தது.

மேனாடுகளின் பொருளாதாரச் செழிப்புக்குக் காரணமே இயந்திரங்கள்தாம். இயந்திர உதவியோடு ஒருமணி நேரம் வேலை செய்பவன் 10 மின்சார பல்புகளைத் தயாரித்தால், அதை விடச் சிறந்த இயந்திரத்தோடும் மின்சார உதவியோடும் அதே நேரத்தில் அதைப்போல இருமடங்கு பொருள்களைச் செய்துவிட இயலும்; ஆகவே, உற்பத்தியையும் தொழிலாளியின் ஓய்வையும் அதிகமாக்கவும், நாட்டின் மொத்த வருவாயைப் பெருக்கவும், பெருகிக் கொண்டேவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றவும், இன்னும் சிறந்த உற்பத்தி இயந்திரங்களைக் கண்டு பிடித்தாகவேண்டும். வறுமையை ஒழிக்க மின்சாரத்தைப் பயன் படுத்தவேண்டும், விஞ்ஞான உதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணரும்படியாக இந்தக் காட்சி அமைந்திருந்தது.

இயந்திரக் கருவிகள், தூசி துப்புரவு செய்யும் இயந்திரங்கள், ஆக்கர் போடும் இயந்திரங்கள், கட்டிடங்களையோ கனத்த பொருள்களையோ தூள்தூளாக்கும் இயந்திரங்கள், அறுக்கும் இயந்திரங்கள், மின்சாரத்தால் இயங்கும் சுத்தியல், சக்கரங்களின் பல்லை உண்டாக்கும் இயந்திரங்கள், அரைக்கும் இயந்திரம், மின்சாரத்தால் இயங்கும் இயந்திரங்கள், கொல்லர் பட்டறை போன்ற எண்ணிறந்த இயந்திரங்கள் இக் காட்சியில் இயங்கக் கண்டேன்.

உணவருந்திய பின்னரோ வேறு நேரத்திலோ ஈரக் கையைத் துடைப்பதற்கும் காயவைப்பதற்கும் உதவும் ஓர் இயந்திரம் வைக்கப்பட்டிருந்தது. இதன் உயரம் நான்கு அடி இருக்கலாம். இது மின்சாரத்தால் இயங்குகின்றது. இதன் எதிரில் நின்று, நம் காலுக்கு அருகிலுள்ள ஒரு பொத்தானை மிதித்தால், இக் கருவி வேலை செய்யும். நம் கைக்கு நேர் எதிரில் இருக்கும்படி இக் கருவியின் வாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இரு கைகளையும் காட்டினால், ஒரு நிமிஷத்தில் இக் கருவி அவைகளை

உலர்த்திவிடுகிறது. இதுவும் விஞ்ஞான வளர்ச்சியால் நிகழும் ஓர் அற்புதம். இது கையைத் துடைக்க மிகவும் சுகாதாரமான முறையாம். இதனால் கைக்குட்டைகளும் இனி வேண்டுவதில்லை என்று கூறலாம். இந்த இயந்திரம் மட்டும் சென்னை நகர் எங்கும் இருந்தால், குழாய்த் தண்ணீர் பிரச்சினை பாதிக்குமேல் தீர்ந்துவிடும் அல்லவா ?

இக் காட்சிகளில் கலந்துகொண்ட வணிகர், உற்சாகத்தோடும் பெருமையோடும் காணப்பட்டனர். உதாரணமாக, "இப்போது நடக்கும் இயந்திரப் பொருட்காட்சியில் எங்கள் கடை இன்ன இடத்தில் இருக்கிறது ; அதைப் பார்வையிடத் தவறுதீர்கள்" என்று மேலச்சிட்ட கடிதத்தாள்களை வணிகர் பயன்படுத்தினர். விளம்பரக் கலையில் இந்த நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்திற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டாகும். டெலிபோனில் ஒருவர் நம்மைக் கூப்பிட்டதும், கூப்பிட்டவரின் டெலிபோன் எண்ணை நம்முடைய டெலிபோனுக்கு அருகில் ஒரு சுவிட்சுபோர்டில் காட்டும் கருவியையும் பிரிட்டிஷார் கண்டுள்ளனர். அதுவும் இக் காட்சிச் சாலையில் சிறப்பாகக் காணப்பட்டது.

ஒருசில பவுண்டுகள் எடை முதல் பல நூறு டன்கள் எடை வரையுள்ள இயந்திரங்களும் அங்கே இருந்தன. பிரிட்டிஷ் சப்ளை மந்திரி ஜார்ஜ் ஸட்ராஸ் காட்சியைத் திறந்து வைக்கும் போது 35 மிலியன் பவுன் (46 கோடி ரூபாய்) மதிப்புள்ள இயந்திரங்களை 1949-ல் பிரிட்டன் உற்பத்தி செய்யுமென எதிர்பார்ப்பதாகக் கூறினர். நல்ல வேளையாக யானும் ஓர் இயந்திரமாக மாறுவதற்கு முன்னதாக அக் காட்சி நடந்த மண்டபத்திலிருந்து வெளியே வந்துவிட்டேன்.

பிராஹாப் பொருட்காட்சி

போருக்கு முன்பு செக்கோசுலவேகியா தொழில் வளம் நிரம்பிப் பொருளாதாரத் துறையில் மிகவும் மேம்பாடு அடைந்திருந்தது.

கடந்த மூன்றாண்டுகளில் இந் நாட்டின் அரசியல் நிலையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாறுதல்களால், இப்போது தொழில்கள் நல்ல நிலையிலில்லை என்ற கருத்து வெளியுலகில்

இருந்துவருகிறது. தொழில்களை அரசியலாரின் உடைமையாக்கிய ஈராண்டுத் திட்டம் வெற்றிகரமாய் நடந்திருப்பதாக உலகத்தாருக்குப் பறை சாற்றவும், திட்டமிட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் ஏற்படும் நற்பலன்களைச் செக் மக்களுக்குத் தெரிவிக்கவும் இக் காட்சி அமைக்கப்பட்டது.

முக்கியமாகத் தொழிலாளர் தம் திறமையைப் பற்றித் தாம் உள்ளக்களிப் படையவேண்டும் என்பதற்காகப் பொருட்காட்சியைக் காணத் தொழிற்சாலைகளிலிருந்து அவர்கள் கூட்டம் கூட்டமாக அழைத்துவரப்பட்டனர். மாணவர் கட்டணமின்றி அனுமதிக்கப்பட்டனர். காட்சிவிழா படமாக எடுக்கப்பட்டு நாடு முழுவதும் எல்லாக் கல்லூரிகளிலும் காட்டப்பட்டது. வானொலியில் இக் காட்சியைப் பற்றிப் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. இக் காட்சி நினைவாகப் புதிய தபால் ஸ்டாம்புகள் வெளியிடப்பட்டன.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள மற்ற நாடுகளிலிருந்தும் காட்சிப் பொருள்கள் வந்திருந்தன. தொடக்க நாள் காட்சியை மட்டும் மூன்று லட்சத்துக்கு மேற்பட்டவர் கண்டு இன்புற்றனர்.

பீங்கான் (Glass) தொழிலில் செக் நாடு அடைந்துள்ள முன்னேற்றம் இக் காட்சியைக் கண்டவர் மனத்தைக் கவர்ந்தது. உலோகத் தொழில்கள், விவசாயக் கருவிகள், இசைக் கருவிகள், பொம்மைகள், பத்திரிகைக் காகிதம், விதவிதமான தோல் சாமான்கள் ஆகியவற்றில் பிறநாடுகளி லிருப்பதைவிடச் செக் தொழில் சிறப்பாயிருப்பதை இக் காட்சி எடுத்துக்காட்டியது. இக் காட்சியின் பயனாக அமெரிக்க செக் வர்த்தக உடன்பாடு ஏற்பட்டது.

ஐரோப்பாவுக்குச் செல்லும் நம் நாட்டினரில் பெ பாலோர் செக் நாட்டுக்குச் செல்லுவதில்லை. செக் நண்பர் பலர் அவர்கள் சந்தித்த முதல் இந்தியர் யானே என்று கூறினர். இந்தியத்தூதரும் அப்போது அங்கு இல்லை.* இக் காரணங்

* 1949-ல் இந்தியாவும் செக் நாடும் தூதர்களை நியமித்துக் கொண்டன.

களால் பிராஹாக் காட்சியில் யானும் ஒரு காட்சிப் பொருளாகவே விளங்கினேன்! ஆனால், பிற காட்சிப் பொருள்களைப் போல யான் இருந்த இடத்திலேயே இருக்கவில்லை; என்னைச் செக் அரசியலார் தேசீய மயமாக்கிவிடவுமில்லை.

பாரிஸ் காட்சி

இன்பவாழ்விலேயே தங்கள் நேரத்தை எல்லாம் செலவிடும் பாரிஸ் மக்கள், சர்வதேச மோட்டார் கண்காட்சியைத் தம் நகரில் நடத்தினர். சிறந்த கார்களைச் செய்யும் பல தொழிற் சாலைகள் பிரான்சில் உள்ளன. ஏனைய நாடுகளில் செய்யப் பட்ட கார்களும் (நமது ஹிந்துஸ்தான் கார் தவிர) இங்கே காட்சி தந்தன.

மோட்டார் தொழிலின் உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் விளக்கப்பட்டதோடன்றி, மோட்டார்காரின் ஒவ்வொரு சிறு பகுதிக்கும் தனித்தனிக் காட்சி இருந்தது. இங்கே 'ஸ்பேர் பார்ட்' செய்பவர்கள் தம் பொருள்களை விளம்பரப்படுத்தினர். வாகனத்தின் ஒவ்வொரு உட்பிரிவையும் சரிபார்க்கும் இயந்திரங்களும் இங்கே இருந்தன.

ஒவ்வொரு வாகனத்துக்கு அருகிலும் அதனுடைய பெயர், அது செய்யப்பட்ட நாடு, நிறை, பெட்ரோல் உட்கொள்ளும் சக்தி, டயர்களைப் பற்றிய விவரங்கள், விலை ஆகிய செய்திகள் அடங்கிய அறிக்கை ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் இயந்திரத்தை விளக்கவல்லவரும் அவ் வாகனத்தில் அமர்ந்திருந்து, பொறுமையாய்ப் பல்லாயிரவருக்குப் பதில் சொன்னார்கள். மிகச் சிறந்த கார் எனப் பார்வையாளர் மதிப்பிட்ட காருக்கும் அதைத் தேர்ந்தெடுத்தவருக்கும் பரிசுகள் கொடுக்கப் பட்டன. இரண்டு நிமிஷங்களில், ஒரு காரை உட்புறமும் வெளிப்புறமும் அதன் இயந்திரத்தையும் கழுவித் தூய்மையாக்கிவிடும் கார் லாண்டரி என்ற மின்சாரக் கருவி இக் காட்சியில் இயக்கிக் காட்டப்பட்டது.

இக் காட்சியில் ஏறக்குறைய பத்தாயிரம் விதமான புதிய கார்கள் காட்சியளித்தன. அவற்றின் உற்பத்தியாளருள் சிலர் சிறு உருவங்களில் செய்த பொம்மைக் கார்களை மலிவான விலைக்கு விற்றுத் தங்கள் பொருள்களை விளம்பரப்படுத்தினர்.

இந்தியாவிலும்

நம் நாட்டில் ஆடிக்கொரு தடவையும் அமாவாசைக்கு ஒரு முறையும் இதுவரை பொருட்காட்சிகள் நடத்தியுள்ளோம். இந்திய மக்களிற் பலருக்கே இந்தியாவில் என்ன என்ன பொருள்கள் செய்யப்படுகின்றன என்பது தெரிய வாய்ப்பு ஏற்படவில்லை. உற்பத்தியாளரும் தம் பொருள்களைத் தக்கபடி விளம்பரம் செய்வதில்லை. இதனால், வெளிநாட்டவருக்கு நம் உற்பத்தியைப்பற்றித் தெரியாமல்போய், அதன் பலனாக நமது ஏற்றுமதி குறைந்துகொண்டும் இறக்குமதி அதிகரித்துக் கொண்டும் வருகின்றன. பெரிய திட்டங்களைச் செவ்வனே வரைந்து, அவற்றுக்கு அடிப்படையாகப் பொருட்காட்சிகளைச் சீரிய முறையில் அடிக்கடி நடத்தி, நம் நாட்டில் செய்யப்படும் எல்லாப் பொருள்களையும் ஒருங்கே காண வசதி ஏற்பட வேண்டும். பொருட்காட்சி மனப்பான்மை நமது மக்களிடையே வேரூன்றவேண்டும். நமது பொருளாதாரத்தைச் சீர்திருத்தவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மேலும் தொழில் வளர்ச்சியடையவேண்டிய இன்றியமையாமையை உணர்த்தவும் அந்த உணர்ச்சியைச் செயலில் காட்டவும் இவையே சிறந்த வழிகள். நமது இந்திய நாடு குடியரசான பிறகுதான் நம் நாட்டில் மேல்குறித்தது போன்ற சிறந்த ஒரு வணிகப் பொருட்காட்சி டில்லி நகரில் நடத்தப் பெற்றது. மற்றத் துறைகளைப்போல வணிகத் துறையிலும் இந்திய நாடு சிறந்து விளங்க, நம் மக்களும் அரசியலாரும் கொண்டுள்ள உறுதிக்கு இஃது அடையாளமாக விளங்குகிறது.

12. நீயும் உனது நாடும்*

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M. A., B. L., M. O. L.

உலகம் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறது? உலகம் வெறும் கல்லும் மண்ணும் அன்று. மக்கட்கூட்டம் உலகினை மாற்றியமைத்த வரலாறே உலக வரலாறு. எத்தனையோ இக்கட்டு! எத்தனையோ வருத்தம்! இவ்வளவும் பட்டு, மரத்தில் தொத்தியும் குகையில் ஒளிந்தும் வாழ்ந்த மனிதன், இன்று ஆகாயத்திற் பறந்தும் அணுவைப் பிளந்தும் வாழ்கிறான். காந்தியடிகளைப் போலத் தம் உயிரையும் கொடுத்து அறத்தோடு அன்பினை நிலை நாட்டி வரும் மக்களின் முயற்சியே இந்த உலகின் முடிமணியாக விளங்குகிறது. விலங்கு நிலையிலிருந்து மனிதத் தன்மை பெற்று நிற்கும் இந்த வெற்றியைப் பாதுகாப்பது உன்னுடைய கடமை.

உலகம் இன்று ஒரு குடும்பமாக விளங்குகிறது. வானொலி, ஆகாய விமானம் முதலான விஞ்ஞானக் கருவிகள், தொலைதூரம் என்பதே இல்லாதபடி, எல்லா நாட்டினையும் அண்டை அயல் வீடுகள் போல அமைத்து வருகின்றன. அமெரிக்காவில் பேசுவது அந்த இமைப் போதிலேயே நமக்குக் கேட்கவில்லையா? உலகம் ஒரு குடும்பம் என்பது அவ்வளவு தூரம் உண்மையாகி விட்டது. ஆதலின், தனியே நான் என்ன செய்வேன் என்று தயங்காதே! புலியும் சிங்கமும் யானையும் இன்று உன் அடிமைகள்! நீர் வீழ்ச்சிகளும், பெரு மலையும், நீலக் கடலும், அகன்ற வானமும் உன் காலடியில் பணிசெய்து வழிபடும் கையாட்கள். ஐந்தாறடி மனிதன் உயிர்ப் பொருள்களையும் உயிரல்லாத பொருள்களையும் ஆள்கிறான். அண்டத்தில் அரிசிப் புழுப் போன்ற இவன் அண்டத்தினையே எடையிட்டுச் சொல்கிறான். இந்த வியத்தகு செயலினை இவன் செய்வது எப்படி? கூட்டுறவு வாழ்வின் பயன் இஃது. ஆதலின் தனியே நான் என்ன செய்ய முடியும் என்று தயங்காதே! கூட்டுறவு வாழ்வே மனித வாழ்வு. தனியே நீ செய்ய வேண்டுவது என்ன? தனித் தனியே ஒவ்-

*இது 1951-ஆம் [illegible]

வொருவனும் இந்த உலக அறிவினை, இந்த உலக அன்பினை, இந்த உலக அறத்தினை, இந்த உலக அழகினை எண்ணத்தாலோ பேச்சாலோ செயலாலோ கெடுக்காமல் இருக்கவேண்டும். இஃது உன்னால் ஆகக்கூடியது. 'எல்லோரும் வாழக் கேடு ஒன்றும் இல்லை' இந்த நோக்கத்தோடு கூடும் மக்கட் சமுதாய நிலையங்களில் சேர்ந்து உழைப்பதும் உன்னால் ஆகக்கூடியதே ஆம்.

அணுக்குண்டால் உலகம் அழியுமோ என்று எல்லோரும் நடுநடுங்குகின்றனர். தீயைக் கண்ட மனிதன் விருந்து உண்ணக் கற்றுக்கொண்டதோடு, அயலார் வீட்டினையும் எரித்தழித்தான். அன்றும் உலகம் நடுநடுங்கிற்று. வெடிகுண்டு கொண்டு மலையைப் பிளந்து வழிகண்ட மனிதன், வெடிகுண்டு கொண்டு மக்களைக் கொன்றுகுவித்தான். அன்றும் உலகம் நடுநடுங்கிற்று. இன்றும், அணுச்சக்தியால், கப்பலோட்டலாம்; விமானத்தில் பறக்கலாம்; எந்திரம் சுழற்றலாம்; இன்பமாக வாழலாம். ஆனால், மனிதன், விலங்கிலிருந்து வளர்ந்தோங்கியவன். புலியும் சிங்கமும், நரியும் ஓநாயும் அவனுக்கு உள்ளே அடங்கிக் கிடக்கின்றன; அப்போதப்போது எரிமலைத் தீயைக் கக்குகின்றன. அணுக் குண்டு அத் தகையதொரு நிகழ்ச்சி. ஆனால், மனிதனிடம் கடவுள் தன்மையும் உண்டு. புத்தரும் காந்தியும் கிறிஸ்துவும் மகமது நபியும் அவனுள்ளே ஓங்கி வளர்கின்றார்கள். உலகம் நடுநடுங்குகிறது என்றாலும், அந்த நடுக்கம் கெட உன் நாளில், நீ காண வாழ்ந்த காந்தியடிகள் வழியே நடந்து செல்; விஞ்ஞானப் புலவர்கள் அணுச்சக்தியைப் பயன்படுத்தி உலகினை வாழ்விக்க முயல்கின்ற முயற்சியில் நீயும் ஈடுபடு. எல்லோருமாகச் சேர்ந்து அவர்களுக்குத் துணை செய்து போற்றவேண்டும். அதுவேனும் செய். முன் சென்றோரைப்போல நீயும் மனிதன்; வெறும் விலங்கன்று. புத்தர் வழி வந்தவன் நீ. வள்ளுவர் வழி வந்தவன் நீ. ஆளுடைய நாயன்மார்கள் வழி வந்தவன் நீ. ஆழ்வார்கள் வழி வந்தவன் நீ. அசோகன் வழி வந்தவன் நீ. அக்பர் வழி வந்தவன் நீ. சிவாஜி வழி வந்தவன் நீ. கரிகாலன் வழி வந்தவன் நீ. செங்குட்டுவன் வழி வந்தவன் நீ. நெடுஞ்செழியன் வழி வந்தவன் நீ. கண்ணகி வழி வந்தவன் நீ. சங்கப்புலவர் வழி வந்தவன் நீ. காளிதாசன் வழி வந்தவன் நீ. கம்பன் வழி வந்தவன் நீ. பாரதி வழி வந்தவன் நீ. அம்மட்டுமா! உலகப் பெரியார்

எண்ணியன எல்லாம் இன்று உன் எண்ணம் அன்றோ? சாக்ரடீஸ், கிறிஸ்து, மகமது நபிகள், கன்பூசியஸ், ஷேக்ஸ்பியர்—அனைவரும் எண்ணிய எண்ணங்களும், பேசிய பேச்சுக்களும், செய்த செயல்களும் உன்னை மாற்றி யமைத்திருக்கவில்லையா? இத்தனை பேர் தோளிலும் ஏறி நிற்கின்ற நீ வானகத்தினையே கண்ணாரக் காணவில்லையா? அஞ்சாது முன் செல்.

உன்னுடைய உடம்பிலே பல ஆற்றல்கள் வளரக்கூடும். உன்னுடைய அறிவு உயர்ந்த நிலையை அடையக்கூடும். உன்னுடைய ஒழுக்கம் எல்லோரும் வியக்கும் நிலையை எட்டுதல் கூடும். பொன்னும் மணியுமிருந்தால் அவற்றினைக் காத்துப் பொலிவு பெறச் செய்யாது, கடலில் எறிவார் உண்டோ? இந்த ஆற்றல்களை வீணே நீ அழியவிடலாமா? உன்னால் முடிந்தவரையில் முயன்று சிறப்படைய வேண்டாவா? முயன்றால் முடியாதது எது? '**எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்** என்று உன் நாட்டு வள்ளுவர் கூறியுள்ளார். கதிரவன் மறையாத சாம்ராஜ்யம் என்று பெருமை பேசும் ஆங்கிலப் பேரரசினைக் காந்தியடிகள் தன்னந் தனியே அன்பால் வென்ற காட்சியினை நீ காணவில்லையா? ஆதலால், முடிந்தவரையில் முயல்! அஃது உனக்கும் நல்லது; உலகுக்கும் நல்லது. உலகம் இதற்கு மேல் உன்னிடம் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. இயற்கை, முன் சென்றவர்களுக்கு எல்லாம் துணை செய்தது போல, உனக்கும் துணை செய்ய வளங்கொழித்துக் கிடக்கிறது. இமயமலை நொறுங்கவில்லை. காவிரியும் கங்கையும் வற்றவில்லை. கடல் தூர்ந்து விடவில்லை. வானம் இடியவில்லை. கதிரவன் கறுக்கவில்லை. காற்று ஓய்ந்துவிடவில்லை. பிரளயம் வந்துவிடவில்லை. இவை யத்தனையும் மேலும் மேலும் சிறந்து உனக்குத் துணை செய்யக் காத்துக்கிடக்கின்றன. பொன்னும் இரும்பும் உன் கைப் பட்டதும் உடலெல்லாம் பூரித்துக் காட்சியளிக்கக் காத்துக்கொண் டிருக்கின்றன. உன் நாட்டு மண்ணுக்குள் என்ன என்ன வியப்பு!—அருகே சென்று உழைத்துப் பார். இயற்கை மட்டுமா? மக்கள் கூட்டமும் இந்தக் குறிக்கோள்களைப் போற்றி வழிபட்டு உன்னைச் சுற்றி நிற்கின்றது. மனங் குன்றாதே, எழுந்திரு. உன்னை நீயே பார். நடந்து செல்! உயர்ந்த நோக்

கத்தினை மறவாதே. ஆனால், இந்த நோக்கங்கள் வெறும் பகற் கனவாக் ஒழிதல் ஆகாது. இவை செயலாக மலரவேண்டும். உலகெல்லாம் மணக்கவேண்டும். அடுத்த அடி எங்கு எடுத்து வைப்பது என்பதனையும் மறவாதே. தொலைவிலும் பார்; அண்மையிலும் பார். முடிவையும் நோக்கு; வழியையும் நோக்கு. வெற்றி நமதே !

தனியாளின் பெருமை உனக்கு விளங்குகிறது அன்றோ? நீ சாகப் பிறந்தவன் அல்லன்; வாழப் பிறந்தவன்—வாழ்விக்கப் பிறந்தவன். யார் அறிவார்? நீ காந்தியாகலாம்; விஞ்ஞான இராமனாகலாம்; கணக்கறிஞன் இராமானுசனாகலாம்; பாவலன் பாரதியாகலாம்; இராசேந்திர சோழன் போன்ற படைவீரனாக லாம்; காவிரிக்குக் கரைகோலி யணைகட்டும் கரிகாலனாகலாம். உன் தனித் தொந்தரவுகள் பல இருக்கலாம். வறுமை, நோய் இன்னும் எத்தனை எத்தனையோ இக்கட்டுகள்! வருங்காலத்தி லேனும் வருகின்ற உனது பரம்பரை இப்படி வாடக்கூடா தன்றோ? உன் சிக்கல் எனச் சோர்ந்துவிடாதே. இவை ஒரு வகையில் உலகினை அரித்துத் தின்னும் பெருநோய்கள் என உறுதிகொள் ஆதலின், அவற்றினை அடியோடு அழிக்க ஊக் கத்தோடும் போரிடு. ஆனால் தன்னலத்திற்கு அடிமையாகாதே. உலக நலமே இவ்வாறு உன்னலமாக இன்பந்தர எதிர் நிற்கும் போது, நீ வாடி வதங்குவதேன்! உன் சிக்கல்களைக் கட்டாயம் தீர்க்கத்தான் வேண்டும். ஆனால். அவற்றினை நினைத்தவுடன் ஒழித்துவிட முடியும் என மனப்பால் குடியாதே. நீ ஒருவன் மட்டுமா உலகில் வாழ்கிறாய்? எல்லோரும் வாழ எல்லோரும் உழைக்கின்றனர். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? ஆத லின், ஒருநாள் தீரும்; ஐயம் இல்லை. அறிவோடும் அன்போடும் அனைவருடனும் ஒத்துழை. பெனிசிலின் போன்ற மருந்துகள் சஞ்சீவிகளாய் எவ்வளவு உயிர்களைக் காப்பாற்றுகின்றன! விஞ்ஞானம் எவ்வளவு வகையில் நம் தொந்தரவுகளைக் குறைத் திருக்கின்றது பார்!

ஆனால், இந்த நெறியில் ஆளும் மனப்பான்மை வேண்டா. அடிமை மனப்பான்மை வேண்டா. தொண்டு மனப்பான்மையே வேண்டும். எல்லோரும் இந்த நாட்டின் தலைவராக (ஜனதி

பதி) முடியுமோ! ஒருபோது ஒருவர்தாமே தலைவராக இருக்க முடியும்! அப்படித்தான் ஒவ்வொரு துறையிலும்! ஆதலால், அதற்காக வருந்திக்கொண்டு கிடக்க வேண்டா. கிடைத்தால் நல்லது. கிட்டாதாயின் வெட்டென மற. இந்த நாட்டில், பிறர் கொள்ளை நோயால் சாவாதபடி, குப்பை வாரும் தோட்டியும் நாட்டுத் தலைவர் போல நாட்டினையும் உலகினையும் காக்கும் பெருந் தொண்டினையே செய்கின்றான் என்று உள்ளத்திலே உறுதிகொள். ஒவ்வொருவனும் தன்தன் கடமையைச் சரிவரச் செய்துவந்தால், உலகம் இன்பம் கொழிக்கும். இந்த அறிவுரையைத் தோட்டியிடம் பேசி ஏமாற்றாதே. தோட்டியும் தொண்டைமானும் ஒன்றென நடந்து காட்டு. தோட்டியாகவும் தொண்டு செய்; தொண்டைமானாகவும் தொண்டு செய். 'புறக் கடையில் இருந்து (பாய்கானாவிலிருந்து) ஓலக்கம் (திவான்கானா) வரை தன் தொண்டினைத் தானே செய்யப் பழகவேண்டும்' என்றார் காந்தியடிகள். ஆளும் மனப்பான்மை ஒழியுமானால், உரிமையைப் பறிக்கும் நிலைமையும் ஒழியும்; எல்லோரும் உரிமையோடு வாழமுடியும். கடமையும் உரிமையும் ஒன்றாக இயைந்து உலகினை வாழ்விக்கும் வழி இதுதான்.

உன்னுடைய தொழில் என்ன? நீ எதற்காகப் பிறந்திருக்கிறாய்? உன்னுடைய வாழ்வின் நோக்கம் என்ன? உன்னுடைய ஆற்றலை எல்லாம், அறிவினை எல்லாம், அன்பினையெல்லாம், அறத்தினை எல்லாம் உன்னால் முடிந்தவரை வளர்த்துவிடு! பயன்படுத்து! உன் தொல்லைகள் உலகத் தொல்லைகள் என எண்ணி உறுதி கொண்டு நீக்க முயல். தன்னலம் ஒழியும் என்பது இல்லை. அஃது உலக நலமாக மாறிவிடும். ஆளும் மனப்பான்மை வேண்டா. நீ இன்பமாக இருக்க இதுவே வழி; வாழ இதுவே வழி. உன்னால் ஆனதை வஞ்சனையின்றி உன் நிலைமைக்குத் தக்கபடி உன்னையும் மறவாது உன்னலத்தினை உலக நலமாகக் கருதி எல்லோர் உரிமையையும் போற்றி ஓரடியேனும் முன்வைத்து நடப்பதே உன் வாழ்வில் வெற்றி பெறும் வழியாம். நடந்து செல். நிமிர்ந்து நில். உனக்கும் வெற்றி! உன் நாட்டிற்கும் வெற்றி! உலகுக்கும் வெற்றி!

13. குடியரசு*

திரு. ஈ. த. சொக்கம்மாள், B. A., B. L., L. T.

சென்னை நகர்க் குடிக்கூலி அறவாளர்.

நமது தாய் நாடு இன்று உரிமை பெற்று விளங்குகிறது. நாமே நமது அரசியலைச் சட்டத்தின் வழியே வரையறுத்துள்ளோம். "நாம்" என்றால் நமது பிரதிநிதிகள்தாம். இந்தச் சட்டம் நமது அரசியலைக் குடியரசு என்று கூறுகின்றது. குடியரசு என்றால் என்ன? வேறு வகையான அரசுகள் யாவை? இவற்றை நாம் அறியவேண்டும் அன்றோ?

முன் எல்லாம் அரசர்கள் நாட்டினை ஆண்டுவந்தனர். அவர்கள், தம் விருப்பப்படி செங்கோல் செலுத்தினர். அப்போது, அவர்கள் இட்டதே சட்டம். இதனை விருப்பாட்சி (Despotism) எனலாம். விருப்பாட்சி நடந்த காலத்திலும், பகைவருக்கு இடங் கொடாதபடி, நாட்டினை அமைதியாக வைத்திருக்கவேண்டுமாதலின் அந்த "விருப்பாட்சி முடியரசிலும்" மக்கள் எண்ணத்தினை அடியோடு புறக்கணித்துவிட முடியாது. பழக்கவழக்கங்கள், உயர் மக்களது கொள்கை முதலியவற்றிற்கு அங்கும் இடம் உண்டு. நாளடைவில் மக்களது கூட்டுறவோடு அரசியல் நடைபெறுவது வளர்ந்து கொண்டே வந்துள்ளது. ஒருவராட்சி (Monarchy), இருவராட்சி, சிலராட்சி (Oligarchy), உயர்ந்தோர் ஆட்சி, செல்வராட்சி, வல்லோர் ஆட்சி என முடியரசே பலவகையாக வழங்கியது உண்டு பொது மக்கள் அனைவரோ, பெரும்பான்மையரோ ஈடுபட்டுவரும் அரசே குடியரசாம். ஆனால், அங்கு ஆட்சியின் விளக்கமாக விளங்குபவன் வரன் முறை அரசனாகவும் இருக்கலாம்; அரச னல்லாமலும் இருக்கலாம். **முடிவிருப்பாட்சி முடியரசு, சிலர் விருப்பாட்சி முடியரசு, பொறுப்பாட்சி** (Responsible Government) **முடியரசு, குடியாட்சி முடியரசு** என்று அரசியல் வளர்ந்து ஓங்கி வந்துள்ளது.

---

*இக் கட்டுரை 1951-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் எழுதப்பட்டது.

இங்கிலாந்தில், ஆணைப் பெண்ணாக்குதல், பெண்ணை ஆணாக்குதல் என்பவை நீங்கப் பிற அதிகாரங்களை எல்லாம் அம் மக்களது பாராளும் மன்றமே கொண்டு விளங்குகிறது. பொது மக்கள் தேர்ந்தெடுத்த வாரியர்களே அப் பாராளும் மன்றத்தில் வீற்றிருக்கின்றனர். இவர்கள் தேர்ந்தெடுக்கும் தலைவர்களே அமைச்சர்களாக அரசியலை நடத்துகின்றனர். இவர்கள் சொற்படி அரசினை நடத்தும் தலைவராக, அந் நாட்டு மன்னர் விளங்குகின்றார். ஆதலின், இவர்கள் அரசியல், **குடியாட்சி முடியரசாகும்.**

நம் நாட்டிலோ, அரசர் என நிலையாக ஒருவர் இல்லை; வரன்முறையாகவும் அரசர் வர இடம் இல்லை. நம் பாராளும் மன்றத்தின் தலைவர்களே அமைச்சர்கள். நம் நாட்டுத் தலைவரையும் தேர்தல் முறையாலேயே தேர்ந்தெடுக்கக் காண்கிறோம். ஆதலின், நம்முடைய அரசியல் **குடியாட்சிக் குடியரசு** (Democratic Republic)

குடியாட்சிக் குடியரசிலும் இரண்டு வகை உண்டு; ஒன்று, நேர்முகக் குடியாட்சி (Direct Democracy) பழைய யவன நாட்டு நகரங்களில் உரிமைபெற்ற அனைவரும் தத்தம் பாராளும் மன்றத்தில் கூடி அரசினை நடத்திவந்தனர். அடிமைகளுக்கு அங்கு உரிமை ஒன்றும் இல்லை, ஆனாலும், மற்றையோர் எல்லோரும் நேர்முகமாகவே அரசியல் மன்றத்தில் கலந்துகொண்டனர். இதுவே நேர்முகக் குடியாட்சி. ஆனால், நாடு பெரிதாக விரிந்த பொழுது அனைவரும் எவ்வாறு நேர்முகமாகக் கலந்து கொள்ள முடியும்? நாற்பது கோடி இந்திய மக்கள் எவ்வாறு ஓரிடத்தில் கூட முடியும்? இதற்காகவே அரசியல் மன்றத்தினரைத் தேர்ந்தெடுக்கும் மற்றொரு முறை ஏற்பட்டது. பிரதிநிதிகளாட்சி அல்லது வாரியர் ஆட்சி (Representative Democracy) தொடங்கியது. பழைய அரசியல் ஊர்ச் சபைகளுக்கு வாரியங்கள் என்று பெயர். ஆதலின், இந்த மறைமுகக் குடியாட்சியினை **வாரியக் குடியாட்சிக் குடியரசு** என வழங்கலாம்.

குடியாட்சிக் குடியரசே ஆனாலும், முடியாட்சிக் குடியரசே ஆனாலும், குடியரசின் அடிப்படை அதிகாரம் எல்லாம்

நாட்டின் மக்களதே; பிறர் எல்லாம் அப்போது மக்களின் கையும் வாயும் காலும் கருவியுமே ஆவர் என்பதே ஆகும். பெரும்பான்மையரின் பெரும்பான்மையான நன்மையே நோக்கமாக நடைபெறுவதே (The greatest good of the greatest number) இந்தக் குடியரசின் சிறப்பியல்பு எனக் குடியரசுக் கொள்கையை அனைவரும் அளந்தறிந்து உணர்ந்து கொள்ளும் வகையில் சென்ற நூற்றாண்டின் பேரறிஞர்கள் விளக்கிவைத்தனர்.

இன்று, குடியாட்சியில் மற்றொரு வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கக் காண்கிறோம். அரசினர் இதுவரை அனைத்தினையும், தம்முரிமை என அனைத்துத் துறையிலும் நுழைந்தது இல்லை. மதம், குடும்ப வரம்பு முதலிய பல துறைகளில் அரசியல் பொதுவாகத் தலையிட்டதே கிடையாது. ஆனால், இரண்டு உலகப் போர்கள் இந்த நூற்றாண்டில் எழுந்ததும், "வாழ்வதா; சாவதா?" என்று, உயிரைக் கையில் வைத்துப் போராட நேர்ந்தபோது, நாடு என்பது அனைத்தினையும் விழுங்கும் ஒரு பெரும் பூதமாக வளரத் தொடங்கியது. போர் நிகழும் காலத்தில் அன்றி, எப்போதுமே அரசியல் இவ்வாறு மக்களது அனைத்து வகை உரிமைகளையும் அனைத்து வகைத் துறைகளிலும் மேற்கொண்டாலன்றி நாட்டினை ஆள முடியாது என ஒரு சில நாடுகள் நம்பலாயின. இத்தகைய குடியரசுகளை "அனைத்துரிமைக் குடியரசுகள்" என வழங்கலாம். விருப்பாட்சி, பொறுப்பாட்சி என்பது போல இவற்றினை அனைத்தாட்சி என வழங்கலாம். இவை வழங்கும் நாடுகளே அனைத்தாட்சி நாடுகள் (Totalitarian States). அனைத்தாட்சிக் கொள்கை பரவும் போது, ஒரு கட்சியே புறப்பட்டுப் பிற கட்சிகளை வற்புறுத்தி அடக்கத் தொடங்கும். ஒருவனே அனைத்துரிமைத் தலைவனாக வருவான். விருப்பாட்சிச் சர்வாதிகாரி (Dictator) என்று பேசுவதெல்லாம் இந்த அனைத்தாட்சித் தனியரசினையே ஆம். விருப்பாட்சியில் தொடங்கிய அரசியல் இப்படி விருப்பாட்சியில் முடிவது ஓர் வியப்பு. இவ்வாறு ஆகும்போது குடியாட்சி, குடியரசு, பொறுப்பாட்சி என்பன எல்லாம் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாக ஒழிகின்றன. இதனைச் சர்மனியில் கண்டோம் இத்தாலியில் கண்டோம். குடியரசு என்றால் மக்கள் [illegible]

இருக்கவேண்டும்; இல்லையானால், குடியரசு காற்றாய்ப் பறந்தோடிவிடும். ஆதலின், விழிப்பாய்க் குடியாட்சிக் குடியரசினைக் காப்பது நம் ஒவ்வொருவரது கடைமையாகும்.

14. நினைவுகள்*

டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

நான் அப்போது சென்னையில் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். தென் ஆப்பிரிக்காவில் குடியேறியிருந்த நம் நாட்டு மக்களின் நிலைமையைப்பற்றிப் பிரசாரம் செய்யும் வேலையாக காந்திஜி சென்னைக்கு வந்திருந்தார். சுங்குராம செட்டித் தெருவில் திரு. ஜி. ஏ. நடேசன் அவர்களுடைய ஜாகையில் அவரைப் பார்ப்பதற்கு நானும் மற்ற மாணவர்களும் போயிருந்தோம். வெள்ளைத் தலைப்பாகை, வெள்ளைச் சட்டை, அதன் மேல் ஒரு அங்கவஸ்திரம்! தரையில் விரிக்கப்பட்ட ஜமக்காளத்தின் மேல் அவர் உட்கார்ந்துகொண்டிருந்தார். நாங்களும் அவரைச் சுற்றி உட்கார்ந்தோம். மெல்லிய குரலில் தென் ஆப்ரிக்கா இந்தியர்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் அன்று கண்டவர், குஜராத்து நாட்டின் சாமான்ய மனிதர் ஒருவரைப் போல்தான் எங்களுக்குத் தோன்றினார். அன்று ஒரு அவதார புருஷனோடு பேசும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்ததென்று எங்கள் மனதில் தோன்றவில்லை.

பத்து வருஷங்கள் கழிந்தன. மகாத்மா காந்தி தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். கோயமுத்தூருக்கு வரப்போகிறார் என்று தெரியவந்தது. நான் அப்போது அவ்வூர் நகர சபையில் ஒரு அங்கத்தினராக இருந்தேன். மகாத்மாவுக்கு நகரசபை வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவேண்டுமென்று சபையில் பிரேரணை செய்தனர்.

*இது 1949 அக்டோபரில் வெளியான ‘வாழ்க்கைத் துணை நூல்’ என்பதிலிருந்து எடுக்கப்பட்டது.

எதிர்ப்புப் பலமாக ஏற்பட்டது. மகாத்மா ஒத்துழையாமைப் பிரசாரம் செய்து வருவதால் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கக் கடமைப்பட்ட நகரசபை அவரை வரவேற்பது சரியல்லவென்று சிலர் வாதித்தார்கள்.

"ஒத்துழையாமை இயக்கத்தை நாம் ஆதரிக்காவிடினும், மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், கதர் முதலிய சீர்திருத்த வேலைகளை நாம் ஏன் ஒத்துக்கொள்ளக்கூடாது?" என்று பலர் பதில் அளித்தனர்.

"வரவேற்புப் பத்திரத்தில் வெறும் பாராட்டுக்களைச் சொல்லாமல் நம்முடைய உண்மையான கருத்தை விளக்கமாய்ச் சொல்லலாமென்றும், நாங்கள் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டிக்கின்றோம் என்றும்கூடக் குறிப்பிடலாம்" என்று நான் சொன்னேன். இப்படி ஒரு வரவேற்புப் பத்திரம் கொடுப்பது மகாத்மாவை அவமரியாதை செய்வதாகுமென்று பலர் கருதினார்கள். "மகாத்மா உண்மைவாதி. நம் மனதில் உள்ளதை ஒளியாமல் எடுத்துச் சொன்னால் அவர் மகிழ்ச்சி யடைவார்" என்று நான் அபிப்பிராயப்பட்டேன். கடைசியாகச் சபையில் பெரும்பான்மையோர் என்னுடைய கருத்துக்கு இணங்கி, நான் குறித்த வண்ணம் வரவேற்புப் பத்திரம் கொடுக்கலாமென்று தீர்மானித்தார்கள்.

வரவேற்புப் பத்திரத்தைத் தயார் செய்யும் பொறுப்பு என் மீதே சுமத்தப்பட்டது. இவ்விதமான பத்திரங்களில் குறிக்கப்படும் உபசார வார்த்தைகளைச் சுருக்கமாக எழுதிவிட்டு நகரசபையில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயத்தையும் நம்பிக்கையையும் தெளிவாக எழுதினேன். "தங்களுடைய ஒத்துழையாமை இயக்கத்தில் எங்களுக்குச் சிறிதேனும் நம்பிக்கை இல்லை. ஒத்துழைப்பின் மூல்யமாகத்தான் நாடு விடுதலை அடையக்கூடும். ஆனால், தாங்கள் எடுத்துக்கொண்ட சீர்திருத்த வேலைகளை நாங்கள் முழுமனதோடு வரவேற்கின்றோம். தீண்டாமையை ஒழித்தல், மதுவிலக்கு, கதர் அபிவிருத்தி, கிராம முன்னேற்றம் இவைபோன்ற காரியங்களில் நாங்கள் தங்களுக்கு முழு ஆதரவையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்" என்று தெளிவாக வரவேற்புப் பத்திரத்தில்

எழுதப்பட்டது. இவ்விதமான ஒரு புதிய வரவேற்புக்கு மகாத்மா என்ன பதில் சொல்லப் போகின்றார் என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். நான் நினைத்த படியேதான் மகாத்மாவின் பதிலும் இருந்தது.

"இன்று நான் என் எதிரிகளின் கூட்டத்தில் இருக்கின்றேனென்று பலர் அபிப்பிராயப்படலாம். ஆனால், கோயமுத்தூர் நகர சபையார் என்னுடைய உண்மையான நண்பர்கள் என்று நான் கருதுகின்றேன். வரவேற்புப் பத்திரத்தில் வழக்கம் போல் வெறும் புகழுரைகளைச் சொல்லாமல் அவர்கள் தங்கள் உண்மையான கருத்துக்களை விளக்கியிருப்பது எனக்கு அளவிலா மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. என்னுடைய ஒத்துழையாமை இயக்கத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையானால் அதை முற்றிலும் மறந்துவிடுங்கள். அதற்காக நான் வருந்தப்போவதில்லை. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் சீர்திருத்த வேலைகளில் உங்களுக்கு நம்பிக்கை உண்டு என்று காட்டியிருப்பதே எனக்குப் போதுமானது. அவ் வேலைகளில் ஈடுபடுங்கள்" என்று பதில் அளித்தார்.

1926-ஆம் வருஷம் பின்னும் ஒருமுறை மகாத்மா கோயமுத்தூருக்கு விஜயம் செய்தபோது என்வீட்டில் ஒருவாரம் தங்கியிருந்தார். அப்போதுதான் அவருடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நாள்தோறும் அதிகாலையில் உலாவுவதற்குப் புறப்படுவார். நானும் அவருடன் செல்வது வழக்கம்.

ஒருநாள் காலை ஏதோ காரணத்தால் நான் அவருடன் போக முடியவில்லை. காலை சுமார் எட்டுமணிக்குத் திரும்பியவுடன் என்னை உடனே பார்க்கவேண்டு மென்று தெரிவித்தார். என்ன விஷயம் என்று தெரிவதற்காக அவர் இருக்கும் அறைக்குச் சென்றேன்.

"இவ்வூர்ப் போலீஸ் மேலதிகாரியை உனக்குத் தெரியுமா?" என்று அவர் கேட்டார்.

"கொஞ்சம் தெரியும்" என்று சொன்னேன்.

"நீ உடனே அந்தப் போலீஸ் அதிகாரியிடம் தூதுபோக வேண்டும்" என்றார்.

விஷயம் என்னவென்று கேட்கும்போது, மகாத்மா தெருவில் போய்க்கொண்டிருந்தபோது எண்ணெய் விற்கும் ஒரு எளிய மனிதன், தோள்மேல் உள்ள ஒரு மூங்கிலின் இரு முனையிலும் தொங்கிக்கொண்டிருக்கும் இரண்டு எண்ணெய் டின்களைச் சுமந்துகொண்டு போய்க்கொண்டிருந்தானும். எதிரில் ஒரு போலீஸ் கூட்டம் ஓட்டமாய் வந்துகொண்டிருந்தது. எண்ணெய்க்காரன் ரஸ்தாவின் மத்தியில் போய்க்கொண்டிருக்கவே ஒரு போலீஸ்காரன் தன்னுடைய ஓட்ட வேகத்தால் அவனைத் தாக்கித் தள்ளிவிட்டுப் போனான். எண்ணெய்க்காரனும் கீழே விழுந்தான்; டின்களில் இருந்த எண்ணெயும் சிந்தப்பட்டது. போலீஸ் கூட்டத்தில் எவரும் இந்தச் சம்பவத்தைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. சிலர் எண்ணெய்க்காரனைப் பார்த்துச் சிரித்துப் பரிகாசமும் செய்தார்கள். மகாத்மா இதைக் கண்டவுடன் எண்ணெய்க்காரனையும் கூட்டிக்கொண்டு என்னுடைய பங்களாவுக்கு வந்து சேர்ந்திருந்தார்.

நடந்த விஷயத்தை நான் அவர் வாயினால் கேட்டபின், "கேஸ் ஏதாவது கொடுக்கவேண்டுமா" என்று கேட்டேன். "கேஸ் எதுவும் வேண்டியதில்லை. போலீஸ் மேலதிகாரியிடம் சாந்த தூதனாக நீ போய், இதற்கு நிவர்த்தி தேடவேண்டும்" என்றார். "போலீஸ் மேலதிகாரியும், இந்த அக்ரமத்தைச் செய்த போலீஸ்காரனும் இந்த எண்ணெய்க்காரனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். சிந்திப்போன எண்ணெயின் விலையையும் இவனுக்குக் கொடுக்கவேண்டும். இதுதான் செய்ய வேண்டிய வேலை" என்றார்.

அவ்வூர்ப் போலீஸ் மேலதிகாரி ஒரு முரட்டு வெள்ளைக்காரன். என் தூது ஜயம் அடையும் என்னும் நம்பிக்கையே இல்லாமல் நான் அதிகாரியிடம் போய், நடந்த விஷயங்களைச் சொல்லி, மகாத்மா என்ன நிவர்த்தியைத் தேடுகின்றார் என்றும் அவரிடம் சொன்னேன். அதிகாரி இதற்குச் சம்மதப்படவில்லை.

“நீங்களே மகாத்மாவிடம் வந்து பேசினால் நலமாயிருக்கும்” என்று அவரிடம் சொன்னேன்.

கொஞ்சமும் மனமில்லாதவராக முனகிக்கொண்டே என்னுடன் வந்தார்; மகாத்மாவிடம் பத்து நிமிஷம் பேசியதும் வெள்ளை அதிகாரி எண்ணெய்க்காரனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு எண்ணெயின் விலையைத் தாமே கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்.

அன்பு மார்க்கத்தின் பலனை நேரில் கண்டேன்.

அன்று சாயந்திரம், மகாத்மாவின் போட்டோ ஒன்றை எடுத்துக்கொண்டு அதில் அவருடைய கையெழுத்தை வாங்க வேண்டுமென்று அவர் இருக்கும் அறைக்குச் சென்று கேட்டேன்.

“என்னுடைய கையெழுத்து இந்தப் போட்டோவில் போடவேண்டுமென்றால், அதற்குச் சரியான விலை நீ கொடுக்கத் தயாராக இருக்கின்றாயா?” என்று கேட்டார்.

“எவ்வளவுதான் பணம் கேட்டுவிடுவார், பார்ப்போம்!” என்று நினைத்து, “விலை கொடுக்கத் தயார். எவ்வளவு தொகை வேண்டும்?” என்று கேட்டேன்.

“எனக்கு நீ பணம் ஒன்றும் கொடுக்கவேண்டாம். நான் கேட்கும் ஒரு வாக்குறுதி கொடுத்தால் அதுவே சரியான விலையாகும்” என்றார்.

என்ன கேட்கப் போகின்றாரோ என்று தெரியாமல், “என்னால் என்ன ஆகவேண்டும்?” என்று கேட்டேன்.

“நாள்தோறும் அரைமணி நேரத்துக்குக் குறையாமல் கைராட்டையில் நூல் நூற்பதாக நீ எனக்கு வாக்குறுதி செய்யவேண்டும்” என்றார்.

சற்று நேரம் யோசித்து, “இது என்னால் முடியாத காரியம்” என்று சொன்னேன். நான் சொன்ன பதில் அவருக்கு அதிருப்தியை உண்டாக்கும் என்று நினைத்தேன். ஆனால் அவர் சொன்னதாவது, “நீ சொன்ன உண்மையான பதிலைப் பாராட்டுகின்றேன். [illegible]

தவறுவதைவிட உன் அசக்தியை ஒத்துக்கொண்டதே மேல்" என்றார்.

"நான் ஒளியாமல் உண்மை பேசினதை ஒரு விலையாக வைத்துக்கொண்டு கையெழுத்துக் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டேன்.

"நான் ஒரு 'பனியா' (வர்த்தகன்); நீயும் ஒரு 'பனியா. வியாபாரத்தில் ஜெயித்துவிட்டாய்" என்று சிரித்துக்கொண்டு போட்டோவில் கையெழுத்துச் செய்தார்.

திருவாங்கூர்ச் சமஸ்தானத்தில் ஹரிஜனங்களுக்கு ஆலயங்கள் திறக்கப்பட்டன. இந்த உற்சவத்தைக் கொண்டாட மகாத்மா திருவனந்தபுரம் சென்றிருந்தார். நான் அப்போது, அடுத்த கொச்சி நாட்டில், திவான் பதவியில் இருந்தேன். திருவாங்கூரில் ஆலயங்கள் திறக்கப்படவே, கொச்சியிலும் பெரிய கிளர்ச்சி உண்டாயிற்று. இந்த விஷயத்தில் எனக்கு என்ன ஊக்கம் இருந்தபோதிலும் கொச்சி மகாராஜா ஒரு பெரிய வைதிகர். ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு ஒரு நாளும் அவர் சம்மதிக்கமாட்டார். என் நிலைமை மிகவும் கஷ்டமாகி விட்டது. திருவனந்தபுரத்திலிருந்து மகாத்மா எனக்கு ஒரு தந்தி அனுப்பி யிருந்தார்.

"கொச்சி நாட்டிற்கு ஆலயப் பிரவேசப் பிரசாரத்திற்கு நான் வரவேண்டும் என்று சிலர் மிகவும் வற்புறுத்துகிறார்கள். நீ திவான் என்பதை மறந்து, என் சிநேகிதன் என்னும் நிலைமையில் எனக்கு என்ன ஆலோசனை சொல்லுகின்றாய்? உன்னுடைய உண்மையான கருத்தை உடனே தெரிவிக்கவும். நான் கொச்சிக்கு வரலாமா? வேண்டாமா?"

இந்தத் தந்தியைப் பார்த்தவுடன் என்ன செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. மகாத்மாவை ஓரிடத்திற்கு வர வேண்டாம் என்று சொல்வதற்கு யாருக்காகிலும் மனம் வருமா? அவரை வரும்படி சொன்னால் கிளர்ச்சி கொச்சியில் அதிகம் ஏற்படும். வயது முதிர்ந்த வைதிக மகாராஜாவுக்கும் மனக்கவலை ஏற்படும். இவற்றையெல்லாம் யோசித்துப் பதில்

"கொச்சிக்கு நீங்கள் வருவது ஒரு பாக்கியம். எனக்கும் அளவிலா மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால் வயோதிக மகா ராஜாவின் மனது உடைந்துவிடும். இவற்றை யெல்லாம் யோசித்துத் தங்கள் இஷ்டம்போல் செய்யலாம்" என்று பதில் தந்தி அடித்தேன்.

உடனே மறு பதிலும் வந்து விட்டது :—"கொச்சியின் நிலைமையை நான் நன்றாக அறிவேன். உன்னுடைய கஷ்ட மான நிலைமையும் எனக்குத் தெரிந்திருக்கிறது. நான் இப் போது கொச்சிக்கு வருவதில்லை என்று தீர்மானித்து விட்டேன்."

*

டெல்லியில் நிதி மந்திரி வேலை பார்த்துக் கொண்டிருந் தேன். வங்காளத்திலிருந்து மகாத்மா டெல்லிக்கு வந்து சேர்ந் தார். மறுநாளே அவரைத் தரிசிக்கவேண்டு மென்று பிர்லா வீட்டுக்குப் போனேன். அவருக்கென்றே தனிப்பட்ட சிரிப் புடன், "வாருங்கள், ஐயா! உட்காருங்கள்! க்ஷேமம்தானா?" என்று தமிழில் என்னை அழைத்தார்.

நானும் தமிழிலேயே, "நான் க்ஷேமந்தான், சுவாமி! இன்று முதல் என்னிடம் தாங்கள் தமிழிலேயே பேச வேண்டும் என்று கோருகின்றேன்" என்றேன். சிரித்தார்! அதற்குமேல் அதிகம் தமிழ் பேச அவருக்குத் தெரியாது. தென்னாப்பிரிக்காவில் தமிழ் மக்களிடையே வேலை செய்தபோது சில தமிழ் வார்த்தைகளை மட்டும் படித்திருந்தார்; மேற்கொண்டு சம்பாஷணையை ஆங்கி லத்திலேயே ஆரம்பித்தார்.

"சுதந்திர இந்தியாவில் மந்திரி ஸ்தானம் நீ பெற்றிருக்கின் றாய். உன்னுடைய சகாக்களாகிய மற்ற மந்திரிகளுக்கு நீ தமிழ் கற்றுக் கொடுக்கவேண்டும். அது உன்னால் முடியா விட்டால் நீ ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்.

நான், "ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்வது சுலபம் என்று எனக்குத் தோன்றவில்லை. தங்களுடன் நாள்தோறும் முப்பது வருஷ காலமாக நெருங்கிப் பழகிய ராஜாஜி அவர்களே சரியாக ஹிந்துஸ்தானி பேசக் கற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் என்னால் எப்படி முடியும்?" என்றேன்.

பலத்த சிரிப்புச் சிரித்தார்.

டெல்லியில் மகாத்மா உண்ணாவிரதம் ஆரம்பித்துவிட்டார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட பாகப் பிரிவினையில் நாம் பாகிஸ்தானுக்குக் கொடுக்கவேண்டிய 55 கோடி ரூபாய் ரொக்க விஷயத்தில் தகராறு ஏற்பட்டது.

உண்ணாவிரதம் ஆரம்பித்த மறுநாள் இது விஷயமாக மகாத்மா என்னிடம் பேச விரும்புகின்றார் என்ற செய்தி வந்தது. காலை ஒன்பது மணிக்குப் பிர்லா வீட்டுக்குப் போனேன்.

டெல்லியில் அப்போது குளிர்காலம். பிர்லா வீட்டுப் பூந்தோட்டத்தில் வெயிலில் ஒரு கட்டிலின்மீது அவர் படுத்திருந்தார். நான் போனவுடன் பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸர்தார் பட்டேல், டாக்டர் மத்தாய் இவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

மூன்று மணி நேரம் நமக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட தகராறு விஷயமாகப் பேச்சு நடந்தது. சட்டப்படிக்கும், நாங்கள் செய்த ஒப்பந்தப்படிக்கும், அந்தச் சமயம், ரொக்கப் பணத்தைக் கொடுக்க நாம் கட்டுப்படவில்லை யென்று நானும் ஸர்தாரும் வாதாடினோம். நாங்கள் சொல்வதை யெல்லாம் பொறுமையுடன் கேட்ட பிறகு, மெல்லிய குரலில், ஒரு மணி நேரம், இந்த விஷயத்தை ஆராய்ச்சி செய்து எங்களுக்கு எடுத்துக் காட்டினார்: "பாகிஸ்தான் என்ன தவறுகள் செய்த போதிலும் இந்தியாவின் அஹிம்சா தர்மத்துக்கு முரண்பாடாக இருக்கிறது உங்கள் மனப்பான்மை" என்றார். அவர் பேசப் பேச நாங்கள் செய்த முடிவு நியாயம் அல்லவென்று எங்கள் மனத்திலேயே தோன்றி விட்டது.

மறுநாளே, 'காபினெட்' கூட்டத்தில் 55 கோடி ரூபாய் ரொக்கத்தை உடனே பாகிஸ்தானுக்குக் கொடுத்துவிடுவதென்று தீர்மானித்தோம்.

இந்தச் சம்பாஷணையின்போது ஒரு சிறிய வேடிக்கை நடந்தது. வெயில் அதிகமாகவே, நான் என்னுடைய கைக்குட்டையை எடுத்துத் தலையில் கட்டினேன். இதைப் பார்த்த

வுடன் மகாத்மா, ஜவாஹர்லால் நேருவிடம் ஏதோ மெள்ள மாகப் பேசினார்கள். உடனே ஜவாஹர்லால் நேரு பங்களா வுக்குள் போய் வெயிலுக்கென்று பர்மா தேசத்தார் தலையில் அணியும் கூடை போன்ற ஒரு பெரிய தொப்பியை எடுத்துக் கொண்டுவந்து மகாத்மாவின் கையில் கொடுத்தார். மகாத்மா வும் வெயில் பொறுக்காமல் தொப்பியை அணிந்து கொள்ளப் போகிறார் என்று நான் நினைத்தேன். தொப்பியைக் கையில் வாங்கி அதை என்னிடம் நீட்டி, "இதைத் தலையில் அணிந்து கொள்" என்றார்.

ஜனவரி மாதம் 30-ஆம் தேதி மாலை சுமார் ஐந்தரை மணி இருக்கும். டெல்லியில் என்னுடைய ஆபீசில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய 'ஸெக்ரிடரி' ஓடிவந்து, "மகாத்மாவை யாரோ சுட்டு விட்டார்களாம்" என்றார். அவர் என்னதான் சொன்னார் என்று அந்தச் சமயம் எனக்குத் தோன்ற வில்லை. மேஜைமேலிருந்த காகிதங்களை யெல்லாம்அப்படியே விட்டுவிட்டு எழுந்து வெளியே ஓடினேன். என்னுடைய வண் டியிலேறிப் பிர்லா வீட்டிற்குச் சென்றேன். அதிகக் கூட்டம். இன்னும் சேரவில்லை. மகாத்மா தங்கும் அறைக்குள் ஓடினேன்

தரையில் விரிக்கப்பட்ட மெத்தையின்மேல் மகாத்மா படுக்க வைக்கப்பட்டிருந்தார். ஜவாஹர்லால் நேருவும் வந்தார். ஸர்தார் பட்டேலும் அருகே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். தலை மாட்டில் மகாத்மாவின் பேர்த்திகள் விம்மிவிம்மி அழுதுகொண்டு கீதையைப் படித்துக்கொண்டு இருந்தார்கள். என் வாழ்க்கை யில் நான் கண்ணீர் விட்டு அழுதது மூன்றே தடவைதான். அன்றுதான் மூன்றும் தடவை.

மகாத்மாவைப் பார்க்கும்போது, குண்டுபட்டவர் என்று வது, உயிர்போன உடல் என்றுவது தோன்றவில்லை.

மறுநாள் அவரைத் தகனம் செய்தோம். சந்தனக் கட்டை யின் தீ ஓங்கி எரிந்து பிரகாசித்தது.

ஆனால் அந்த வெளிச்சத்தோடு உலக ஜோதியும் மறைந்தது

15. விடுதலை*

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார்

நாடகம்

அங்கம் 1.

காட்சி 1.

இடம் :—வானுலகம்.

காலம் :—கலிமுடிவு.

பாத்திரங்கள் :—இந்திரன், வாயு, அக்நி, ஒளி (சூரியன்), ஸோமன் இரட்டையர் (அசுவினி தேவர்), மருத்துக்கள், வசுக்கள், த்வஷ்டா, விசுவேதேவர் முதலாயினோர்.

இந்திரன் : உமக்கு நன்று, தோழரே.

மற்றவர் : தோழா, உனக்கு நன்று.

இந்திரன் : பிரமதேவன் நமக்கோர் பணியிட்டான்.

மற்றோர் : யாங்ஙனம் ?

இந்திரன் : 'மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக' என்று.

அக்நி : வாழ்க தந்தை ! மானுடர் வாழ்க !

மற்றோர் : தந்தை வாழ்க ! தனிமுதல் வாழ்க ! உண்மை வாழ்க ! உலக மோங்குக ! தீது கெடுக ! திறமை வளர்க !

ஒளி : உண்மையும் அறிவும் இன்பமு மாகி, பலவெனத் தோன்றிப் பலவினைசெய்து, பலபயன் உண்ணும் பரமநற் பொருளை, உயிர்க்கெலாந் தந்தையை உயிர்க்கெலாந் தாயை, உயிர்க்கெலாந் தலைவனை உயிர்க்கெலாந் துணைவனை, உயிர்க்கெலாம் உயிரை, உயிர்க்கெலாம் உணர்வை, அறிவிலே கண்டு போற்றி, நெறியினி லவன்பணி நேர்படச் செய்வோம்.

---

*இது 1941-ல் 5-ஆம் பதிப்பாக வெளியான பாரதி நூல்கள்

இந்திரன் : நன்று தோழரே ! அமிழ்த முண்போம்.

மற்றோர் : அமிழ்தம் நன்றே ! ஆம். அஃதுண்போம்.

(எல்லோரும் அமிர்தபானம் செய்கிறார்கள்.)

இந்திரன் : நித்தமும் வலிது.

வாயு : நித்தமும் புதிது.

அக்நி : தீரா விரைவு.

இரட்டையர் : மாறா இன்பம்.

மருத்துக்கள் : என்றும் இளமை.

ஒளி : என்றுந் தெளிவு.

அக்நி : மண்ணுலகத்து மானிடர் வடிக்கும் ஸோமப் பாலுமிவ் வமிழ்தமு மோர் சுவை.

இந்திரன் : மண்ணுலகத்து மக்களே, நீவிர் இன்பங் கேட்பீர், எண்ணிய மறப்பீர், செயல்பல செய்வீர், செய்கையில் இளைப்பீர், எண்ணளவதனால் ஏழுலகினையும் விழுங்குதல் வேண்டுவீர், மீளவு மறப்பீர், தோழரென் றெம்மை நித்தமும் சார்ந்தீர், ஸோமப் பாலொடு சொல்லமுதூட்டுவீர், நும்மையே அவுணர் நோவுறச் செய்தார்? ஆஅஅ! மறவுக் குறும்பா, அரக்கா, விருத்திரா, ஒளியினை மறைத்திடும் வேடா, நமுசிப் புழுவே, வலனே, நலிசெயுந் துன்பமே, அச்சமே, இருளே, தொழும்பர்காள், பெயர் பல காட்டும் ஒரு கொடும் பேயே, உருப்பல காட்டும் ஒரு புலைப்பாம்பே, படை பல கொணர்ந்து மயக்கிடும் பாழே, ஏடா, வீழ்ந்தனை, யாவரும் வீழ்ந்தீர். அரக்கரே, மனித அறிவெனுங் கோயிலை விட்டு நீரொழிந்தால் மேவிடும் பொன்னுகம் முந்தை நாள் தொடங்கி மானுடர் தமக்குச் சீர்தர நினைந்து நாம் செய்ததை யெல்லாம் மேகக் கரும்புலை விருத்திரன் கெடுத்தான். 'வலியிலார் தேவர் வலியவர் அரக்கர். அறமே நொய்யது; மறமே வலியது; மெய்யே செத்தை; பொய்யே குன்றம். இன்பமே சோர்வது; துன்பமே வெல்வது' என்றோர் வார்த்தையும் பிறந்தது மண்மேல், மானுடர் திகைத்தார்; மந்திரத் தோழராம் விசுவாமித்திரன், வசிட்டன், காசிபன்

முதலியோர் செய்த முதனூல் மறைந்தது; பொய்ந்நூல் பெருகின பூமியின் கண்ணே. வேதங்கெட்டு வெறுங்கதை மலிந்தது. போதச் சுடரைப் புகை யிருள் சூழ்ந்தது. தவமெலாங் குறைந்து சதிபல வளர்ந்தன. எல்லாப் பொழுதினும் ஏழை மானுடர் இன்பங் கருதி யிளைத்தனர், மடிந்தார்; கங்கைநீர் விரும்பிக் கானனீர் கண்டார்; அமுதம் வேண்டி விடத்தினை யுண்டார். ஏஎ! வலியரே போலுமிவ் வஞ்சக அரக்கர்!

விதியின் பணிதான் விரைக. மதியின் வலிமையால் மானுடன் ஓங்குக.

ஒலி: ஒருவனைக் கொண்டு சிறுமை நீக்கி நித்திய வாழ்விலே நிலைபெறச் செய்தால் மானுடச் சாதி முழுதுநல் வழிப் படும்; மானுடச் சாதி யொன்று; மனத்திலும் உயிரிலுந் தொழிலினும் ஒன்றே யாகும்.

தீ: பரத கண்டத்திற் பாண்டிய நாட்டிலே விரதந் தவறிய வேதியர் குலத்தில் வசுபதி யென்றோ ரிளைஞன் வாழ்கின்றான்; தோளிலே மெலிந்தான், துயரிலே யமிழ்ந்தான், நாளும் வறுமை நாயொடு பொருவான். செய்வினை யறியான், தெய்வமுந் துணியான், ஐய வலையி லகப்படலாயினன். இவனைக் காப்போம். இவன் புவி காப்பான்.

காற்று: உயிர்வளங் கொடுத்தேன்; உயிரால் வெல்க.

இந்திரன்: மதிவலி கொடுத்தேன்; வசுபதி வாழ்க.

சூரியன்: அறிவிலே யொளியை அமைத்தேன்; வாழ்க.

தேவர்: மந்திரங் கூறுவோம். உண்மையே தெய்வம். கவலை யற் றிருத்தலே வீடு. களியே அமிழ்தம். பயன் வருஞ் செய்கையே யறமாம். அச்சமே நரகம்; அதனைச் சுட்டு நல்லதை நம்பி நல்லதே செய்க. மகனே, வசுபதி, மயக்கந் தெளிந்து, தவத்தொழில் செய்து தரணியைக் காப்பாய்.

காட்சி 2.

பாண்டி நாட்டில் வேதபுரம், கடற்கரை; வசுபதி தனியே வைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

வசுபதி பாடுகிறான் :—

நிலவுப் பாட்டு

வாராய் நிலவே வையத் திருவே,
வெள்ளைத் தீவில் விளையுங் கடலே,
வானப் பெண்ணின் மதமே, ஒளியே,
வாராய், நிலவே, வா. (1)

மண்ணுக் குள்ளே யமுதைக் கூட்டிக்
கண்ணுக் குள்ளே களியைக் காட்டி
எண்ணுக் குள்ளே யின்பத் தெளிவாய்
வாராய், நிலவே, வா. (2)

இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்,
வானொளி தன்னை மண்ணிற் காண்பீர்,
துன்பந் தானோர் பேதைமை யன்றே!
வாராய், நிலவே, வா. (3)

அச்சப் பேயைக் கொல்லும் படையாம்
வித்தைத் தேனில் விளையுங் களியாய்
வாராய், நிலவே, வா. (4)

---

16. பஞ்சாயத்து ராஜ்யம் *

எல்லா அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதை விட, பல்வேறிடங்களில் பரவியிருப்பது ஒரு நாட்டின் நிரந்தர க்ஷேமத்துக்கு மிகவும் நன்மை பயக்கும் என்பது அனுபவ அறிஞரின் சித்தாந்தம். நம் நாட்டில் பன்னெடுங் காலமாகவே இக் கொள்கை நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. நாட்டில் எத்தனையோ அரசியல் மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும், கிராமாந்தரங்களில் பல நூற்றாண்டுகளாய் ஒரு விதமான அமைதி வாழ்வு நிலவிவந்ததென்று கூறலாம். அதற்கு முக்கியமான காரணங்களுள் ஒன்று பஞ்சாயத்து ஆட்சி.

'ஏரி வாரியர், பொன் வாரியர், பஞ்ச வாரியர்' முதலிய தொடர்கள் இன்று பலருக்குப் புதியவாகத் தோன்றலாம். ஆனால் சுமார் ஆயிரம் வருஷத்திற்கு முன்பெல்லாம், இவை சாதாரணமாக வழக்கத்தில் இருந்தவை. அந் நாளைய கிராமங்களில் குடவோலை மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ச்சபையாருக்கு, இப் பெயர்கள் வழங்கப்பட்டன. திருநெல்வேலியைச் சார்ந்த மானூர் என்னும் இடத்துச் சாசனமும் இதை வலியுறுத்தும். செங்கல்பட்டு ஜில்லாவில் இருக்கும் உத்திரன்மேரூர் என்னுமிடத்தில் கிடைத்த சாசனம் இது பற்றிய விவரங்களை நன்குணர்த்துகிறது.

பொறுப்பு வாய்ந்த ஒரு சிலரைக் கிராம மக்கள் தேர்ந்தெடுத்து, அவர்களிடத்தில் கிராமத்தின் பல்வேறு பொது நலப் பணிகளை ஒப்படைத்திருந்தனர். கிராம சம்பந்தமான எல்லாத் தேவைகளையும் சௌகரியங்களையும் கவனித்து ஆவன செய்யவேண்டுவது அவர்களுடைய கடமையாக இருந்தது.

பண்டைய முறைக்குப் புத்துயிர்

மிகப் பழையகாலம் முதல் நம் அனுஷ்டானத்தில் இருந்து வந்த இந்தப் பஞ்சாயத்து முறை, ஆங்கில ஆட்சியின்போது

---

*சென்னைச் சர்க்கார் செய்தி இலாகா 1951-ஆம் ஆண்டு வெளியிட்ட, [illegible] "[illegible]" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

மிகவும் சீர்கேடடையத் தொடங்கியது. சில ஆண்டுகளுக்குமுன், பொதுவாக ஸ்தல ஸ்தாபன ஆட்சிக்கு ஊக்கமளிக்கப்பட்ட போது, ஏதோ பெயரளவிலே சில இடங்களில் பஞ்சாயத்துக் கள் நிறுவப்பட்டன. ஆனால், அவற்றிற்குப் போதுமான அதி காரங்களும் நிதி வசதியும் இல்லாததால், ஜனங்களுக்கு அதிக நன்மை ஏற்படாமல் இருந்தது.

இந்த நிலையை மாற்ற, மக்கள் அரசாங்கம் முன் வந்தனர்; பண்டைக் காலச் சிறப்புக்குக் காரணமாயிருந்த பஞ்சாயத்து முறையை இக் காலத் தேவைக் கேற்பச் சிறந்த முறையில் திருத்தி யமைத்தனர். அதன்பயனாக, சென்னைக் கிராமப் பஞ்சா யத்துச்சட்டம், 1950-ஆம் வருஷம் நிறைவேறியது.

இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பஞ்சாயத்துக்கள் கிராம சுய ஆட்சிக்கான எல்லாவித் வசதிகளுடன் விளங்கும். கிராம வாழ்க்கைக்கும் கிராமப் பொருளாதாரத்துக்கும் உகந்த தான ஸ்தல நிர்வாக முறையும், அதற்குவேண்டும் அதிகாரங் களும் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படும். இவைகளின்மீது மேலதிகாரக் கட்டுப்பாடு மிகவும் குறைந்த அளவுக்குத்தானிருக் கும். ஒவ்வொரு கிராமத்தையும், அதன் மக்களுடைய சமூக, பொருளாதார, கலாசாரங்களின் தேவைக்கு அவசியமானவற் றில் சுயநிறைவுள்ளனவாக நிர்மாணித்து, தாங்களே தங்கள் நிர்வாகத்தை நன்கு பராமரித்துவரும்படி செய்வதே இந்தச் சட் டத்தை வகுத்த மக்கள் சர்க்காரின் நோக்கமாகும். இந்தச் சட் டம் 1951-ஆம்௵ ஏப்ரல்மீ முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது.

பஞ்சாயத்து அமைப்பு

500-க்குமேல் ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்தி லும் ஒரு பஞ்சாயத்து அமைக்கப்படும். குறைந்த ஜனத் தொகையுள்ள சில கிராமங்களை ஒன்றாய் இணைத்து, அவை களுக்கு ஒரு கூட்டுப் பஞ்சாயத்து அமைக்கலாம். புதிய சட் டத்தின் கீழ்ப் பஞ்சாயத்துக்கள் அமைப்பது கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது. அது, முன்போல் சிலரின் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. ஜனத்தொகை 5,000க்கு மேலும் வருமானம் 10,000 ரூபாய்க்குக் குறையாமலும் உள்ளவை, முதல் வகுப்பு

பஞ்சாயத்துக்கள். மற்றவை இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள். புதுச் சட்டம் அமுலுக்கு வருமுன், ராஜ்யத்தில் மொத்தம் 8,335 பஞ்சாயத்துக்கள் இருந்தன. புதுச் சட்டத்தின்கீழ், இன்னும் 15,830 பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட வேண்டும்.

தற்போது முனிசிபாலிட்டிகளிலும் ஜில்லாபோர்டுகளிலும், அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் ஒருவரை அந்த அங்கத்தினர்கள் தலைவராய்த் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் புதுப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், பஞ்சாயத்துச் சபைத் தலைவரும் ரகசிய ஓட்டு மூலம் நேரடியாகப் பொது மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரை உபதலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். முன்னேற்றமடையாத வகுப்பினருக்கு மட்டும், 10 வருஷ காலத்துக்குப் பஞ்சாயத்துச் சபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படும். சட்டசபை வாக்காளர் ஜாபிதாவே இந்தப் பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் உபயோகிக்கப்படுமாகையால் வயது வந்தோர் ஓட்டுரிமை அடிப்படையில்தான், தேர்தல் நடைபெறும்.

கடமைகளும் பொறுப்புகளும்

கிராமத்திலுள்ள ரோட்டுகளை மராமத்துச் செய்வதும், புது ரஸ்தாக்கள் அமைப்பதும், தெருக்களுக்கு விளக்குகள் போடுவதும், சுகாதார சாதனங்கள் நிறுவுவதும், பாதுகாப்புள்ள குடிதண்ணீர் விநியோகிப்பதும், அந்தந்தப் பஞ்சாயத்துச் சபைகளின் முக்கிய அலுவல்களாகும். இவை தவிர, மக்களின் வசதிக்காக ஆஸ்பத்திரிகள், பிரசவ, சிசு சம்ரக்ஷண நிலையங்கள், மார்க்கெட்டுகள், வண்டிப் பேட்டைகள், ரேடியோக்கள் முதலியவைகளும் ஏற்படுத்தலாம்.

முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களில் நிர்வாக சம்பந்தமான அவசியம் ஏற்படும் இடங்களில், நிர்வாக அதிகாரிகளைச் சர்க்கார் நியமிக்கும். சப்-ரிஜிஸ்ட்ரார் காரியாலயம் இல்லாத கிராமங்களில் அந்த நிர்வாக அதிகாரிக்குத் தஸ்தாவேஜுகளைப் பதிவு செய்யும் அதிகாரமும் வரைவு கொடுக்கப்படும். ¶ சென்னைக்

கிராமக் கோர்ட்டுகள் சட்டத்தின் சிவில் கிரிமினல் விவகார அலுவல்களை, புதுச் சட்டத்தின்படி, கிராம பஞ்சாயத்துகளே அமுல் நடத்தும்.

பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்கு வேண்டிடும் நிதியைச் சேகரிக்க, பஞ்சாயத்துச் சபைக்கு வரி விதிக்கும் அதிகாரங்களை சட்டம் அளிக்கிறது. இனி, பஞ்சாயத்துகளின்மீது ஜில்லா போர்டுக்கு மேலதிகாரம் எதுவுங்கிடையாது. ஜில்லாக் கலெக்டரும் அந்தப் பிரதேசத்தின் அமைதி, பாதுகாப்பு நிர்வாகம் வரையில்தான் தலையிடலாம். இதர விஷயங்களில் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் மூலம், சர்க்கார் மேலதிகாரத்தைக் கொண்டுள்ளனர். ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டரின் கீழ், பிரதேச இன்ஸ்பெக்டர்கள், ஜில்லாப் பஞ்சாயத்து அதிகாரிகள், டெபுடி அதிகாரிகள் முதலியோர் இருந்துவருவர்.

1949-50-இல், ராஜ்யத்தில் 414 சிறிய பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுள்ளன; 60 சிறிய பஞ்சாயத்துக்கள் பெரிய பஞ்சாயத்துக்களாகவும் மாற்றப்பட்டுள்ளன ; அதாவது 1949-ஆம் வருஷ ஆரம்பத்தில் 7,241 ஆக இருந்த சிறிய பஞ்சாயத்துக்கள் எண்ணிக்கை, 7,595 ஆகவும், 414 பெரிய பஞ்சாயத்துக்கள் 474 ஆகவும் அதிகரித்தன. பழைய பஞ்சாயத்துச் சட்டப்படி ரூ. 3,000 வருமானத்துக்குட்பட்டவை சிறிய பஞ்சாயத்தாகவும், மேற்பட்டவை பெரிய பஞ்சாயத்தாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

ஸ்தல ஸ்தாபனங்கள்

ராஜ்யத்தில் தற்போது 24 ஜில்லாபோர்டுகளும், 95 முனிஸிபாலிடிகளும் இருக்கின்றன. இந்த ஸ்தல சுய ஆட்சி முறை அமுலுக்கு வந்து நூறு ஆண்டுகள் நிறைந்துவிட்டன.

ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்களை அதிகப்படுத்தவும் அவைகளின் வருமானத்தைப் பெருக்க வசதியளிக்கவும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

சிறப்புப் பகுதி

உரைநடையும் செய்யுளும்

17. கோயில்களின் இலக்கணம்

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M. A., B. L., M. O. L.

தென்னிந்தியாவில் நமது கண்ணைக் கவர்வன கோயில்களே. தொலைவில் இருந்து, கோபுரங்கள் காட்சி அளிக்கின்றன. இவற்றைக் கட்டிய மக்களது உயர்ந்த உட்கோளைப்போல, இவை வானத்தை அளாவிநிற்கின்றன; அவர்களது பரந்த மனம்போல, அகன்று நீண்டு கிடக்கின்றன. இப்படி இவை வளர்ந்த தன் நுட்பம் யாது? இவையே சமுதாயத்தின் உயிர் நிலையாய் விட்டன. கடவுளைத்தொழும் இடமாக மட்டும் கோயில்கள் விளங்கவில்லை. கலைக்கு எல்லாம், கோயிலே இருப்பிடம். சிற்பம் ஓவியம் என்பவைமட்டும் அல்ல; சங்கீதமும் அங்கே வளர்ந்தது. சர்வ வாத்திய மண்டபங்கள், பல கோயிலில் உண்டு. பரத நாட்டியம், கோயிற்கலையே அன்றோ! கூத்துக்கள் நிகழ, அங்கே வெட்டவெளியுண்டு. குறவஞ்சிக் கூத்து, இன்றும் தஞ்சாவூர்க் கோயிலில் நிகழ்ந்துவருகிறது. தேவாரமும் நாலாயிரமும் பாடக் கோயில்களில் ஏற்பாடுகள் உண்டு; இவற்றிற்குப் பேருரை கூறும் மண்டபங்களும் உண்டு. சேக்கிழார், தமது பெரிய புராணத்தினைத் தில்லையில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்திலன்றோ அரங்கேற்றினார்! மதுரைப் பொற்றாமரைக் குளமன்றோ தமிழ்ச்சங்கம் இருந்த இடமாம்! முத் தமிழ்க்கும் கோயிலுக்கும் இந்தத் தொடர்பு என்றும் உண்டு. இலக்கணம் கற்பிக்கவும் மண்டபங்கள் இருந்தன. திரு ஒற்றியூர்த் தியாகர் எழுந்தருளி யிருக்கும் மண்டபம் வியாகரண மண்டபமாம்; அதனால் அவருக்கு எழுத்தறியும் பெருமாள் என்று பெயர். மீமாம்சம் முதலிய தத்துவக் கலையை ஆராயும் மண்டபங்களும் உண்டு. நூல் நிலையங்களுக்கும் இடமுண்டு. ஆபரணம் வாகனம் முதலியவற்றை வைத்திருக்கும் மண்டபங்களைவிடச் சிறந்த காட்சிச்சாலை ஏது? யானை, குதிரை, ஒட்டை, மாடு, பசு, மயில், புறா, கிளி முதலியவற்றிற்கும் கோயிலில் இடம் உண்டு. இவற்றை விடச் சீரிய உயிர்ப் பொருட்காட்சிச் சாலை ஏது? எனவே, கோயிலே சிறந்த பல்கலைக் கழகமாக விளங்கியது. பாடல்களைக்

19—7—19-இல் சென்னை வானொலியில் நிகழ்த்திய பேச்சு.

கல்லில் செதுக்குவது உண்டு; அரசர்கள் வரலாறும் மெய்க்கீர்த்திகளைச் செதுக்குவதும் உண்டு; நாட்டிய சாத்திரத்தைச் சிற்பமாகக் காணத் தில்லைக் கோயிலில் செதுக்கியிருக்கக் காணலாம். கண்வழிக் கல்வி என்பது அந்த நாளிலே கையாளப்பெற்று வந்தது என்று இதனால் தெரியவில்லையா? பள்ளிக்கூடங்களும் கோயிலைச் சார்ந்திருந்தன. பள்ளி என்ற பெயரே அவை புத்த மடங்களைச் சார்ந்து எழுந்து கோயில்களோடு தொடர்பு பெற்றதனை விளக்குகிறது.

கோயிலே அறப்பள்ளியாகவும் விளங்கியது. அங்கே வெளியூரார் உணவுபெறும் வழக்கம் இன்றும் இருக்கிறது. மருத்துவச்சாலைகள் அங்கு உண்டு. நோயாளர் படுக்கப் படுக்கைகள், உணவு, மருந்து முதலியவற்றிற்கும் ஏற்பாடுகள், அவர்களைப் பார்த்துக்கொள்ள மருத்துவப் பெண்கள் இவை எல்லாம் இருந்தனவாக அறிகின்றோம். மானங்கெடாமல் ஏழைகளைக் காப்பாற்றப் புதிய வழியில் ஏற்பாடுகள் இருந்தன. குருடர் முழவு கொட்ட, முடவர் திருப்பதியம்பாட—இப்படி எல்லாம் ஏற்பாடுகள் இருந்தன.

கோயிலே அரசியல் நிலையமாகவும் இருந்தது. ஊர்ச்சபைகள் கூடுவதும் வாரியத்தாரைத் தேர்ந்தெடுப்பதும் ஊரைப் பற்றியவற்றை யெல்லாம் மேல்பார்ப்பதும் அங்குத்தான். ஏரி வரி, தர்மம், பொன், வழக்கு முதலிய எல்லாம் வாரியத்தார் கையிலேயே இருந்தன. கோயிலே ஒரு பண்டாரமாக (பாங்காக), காசுக்கடையாக இவர்கள் கையில் இருந்தது. இவர்களே அரசனுடைய ஆணைகளைக் கல்லில் அடித்து வைத்தார்கள். ஆவணம் (பத்திரம்) முதலியவற்றைச் சேகரித்து வைக்கும் இடமாகவும் கோயில் இருந்தது. ஆவணத்தினைக் கல்லில் அடித்தே வந்தனர் எனலாம்.

இப்படியெல்லாம் இருந்ததாலேயே, 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்று அவ்வையார் பாடினர். கோயில்கள், முன்னெல்லாம், செங்கல்லிலும் மரத்திலும் கட்டப்படும். சிதம்பர நடராசர் இருப்பிடம் இன்றும் மரமாக விளங்கவில்லையா? காஞ்சிபுரம் ஆயிரக்கால் மண்டபத்தில் பழைய செங்கற் பகுதிகளைக் காணலாம். அப்பர் மாணவனை மகேந்

திரவர்ம பல்லவன் புதிய முறையில் கருங்கல்லில் கோயில் கட்டியதாகத் தன்னைத் தானே புகழ்ந்துகொள்கிறான். பல்லவர் காலத்தில் நால்வர்களும் ஆழ்வார்களும் வாழ்ந்தனர். பல கோயில்கள் தோன்றின. பின் வந்த சோழர்கள் வானளாவிய கோயில்களைக் கட்டினர். தஞ்சாவூர்க் கோயில், கங்கை கொண்ட சோழபுரக் கோயில், தாராசுரக் கோயில்—இவை எவ்வளவு பெரிய கோயில்கள் !

இவ்வளவும் கூறியதால் கோயில்கள் எப்படி எல்லாம் இருக்கவேண்டும் என்ற இலக்கணமும் தெரிகிறதன்றோ? '**மானசாரம்**' என்ற சிற்ப நூல், சில இலக்கணங்களைத் தருகிறது. கச்யபருடைய **அம்சுமத்பேதம்** என்ற நூலும், **மயமதம்** முதலிய சிற்ப நூல்களும், **மச்சபுராணம், கந்தபுராணம், கருடபுராணம், அக்நிபுராணம், நாரதபுராணம், பவிஷ்யத் புராணம்** முதலிய புராணங்களும் கோயிலமைப்பினைக் கூறுகின்றன. தென்னாட்டிற் சிறப்பாக நாம் கொள்வன ஆகமங்கள், **காமிகாகமம், காரண ஆகமம்** என்பவை பேர்போனவை. இவை பெரும்பாலும் கோயிற் சிற்பமே கூறுகின்றன. **சுப்ரபேதாகமம்** மிகச் சுருக்கமாக இதனைக் கூறுகிறது.

மானசாரம் 32-ஆம் அத்தியாயம், கோயில் தேவதைகள் இருக்குமிடங்களையே அன்றி, மேலும் பலவற்றைக் குறிக்கின்றது. பண்டாரம் அல்லது பொக்கிஷசாலை தென் கிழக்கில் இருக்கவேண்டும். பூஞ்செடித் தோட்டம் ஒருபுறம், நைவேத்திய அறை ஒருபுறம், ஆடை அறை ஒருபுறம், பூக்கோக்கும் மண்டபம் ஒருபுறம், ஆபரண அறை ஒருபுறம், நூல் நிலைய மண்டபம் ஒருபுறம், அலங்கார மண்டபம் ஒருபுறம், அபிஷேகத்திற்கு வேண்டும் மணமுள்ள பொருள்கள் வைக்கும் மண மண்டபம் ஒருபுறம், பள்ளியறை அல்லது சிங்கார மண்டபம் ஒருபுறம், குடிநீர் மண்டபம் ஒருபுறம், மடைப்பள்ளி ஒருபுறம், நெல் மண்டபம் ஒருபுறம் இவ்வாறு எல்லாம் இருக்கவேண்டும். குருக்கள் முதலியோர் வாழுமிடம், ஆயுத சாலை, குப்பைமேடு, ஆஸ்தான மண்டபம், தேர் முதலியன வைக்கும் வாகன மண்டபங்கள், வேலைக்காரர் வாழும் இடம் வாத்தியக்காரர் இடம், நாட்டியக்காரர் இடம், கோயிற்

பெண்கள் இடம், கோயிற் பிள்ளைகள் இடம், வருவாரைப் பாராட்டும் ஆராமகாரர் இடம், நித்ய கர்மக்காரர் இடம், இசை வாணர் இடம், சங்கீத மண்டபம், குளம், சத்திரம், மடம், கோயிலைக்காக்கும் வீர முஷ்டிகள் அல்லது வீரபத்திரர்கள் வாழும் இடம், கோபுரத்தின் இடப்பக்கத்திலுள்ள யானை குதிரை முதலிய கட்டும் இடம், தொழுவங்கள்—இவ்வளவு ஏற்பாடுகளும் இருப்பது ஏன் என்பது நாம் முன்னர் விளக்கிய தால் தெளிவாகும். கோயில் ஓர் அரண்மனை போலவும் கோட்டை போலவும் அமைந்திருப்பதனைக் காணலாம்.

இத்தனை இடங்களும் இந்த இந்தப் பக்கத்தில் அமைய வேண்டும் எனத் திட்டம் இட்டிருக்கிறார்கள் பழைய அறிஞர் கள். அவை, வெறும் மூட நம்பிக்கை அல்ல என்பது ஆராய்ந் தால் தெரியும். இவற்றை எளிதில் நினைவில் வைத்துக்கொள் வதற்காக, வசிக்கும் இடமாம் வஸ்துவை, ஒரு மனிதனாக உரு வகப்படுத்திக் காது இது, கண் இது, கை இது, முதுகெலும்பு இஃது என்றெல்லாம் விரிவாகக் கூறுகின்றனர். இப்படி உரு வகித்தபின், கண்ணில் இந்தக் கடவுள், காதில் இந்தக் கடவுள் எனக் கூறிவிட்டால் நன்றாகக் கதைபோல மனத்தில் பதிந்துவிடு கிறது. எங்கே எங்கே எது எது இருக்கவேண்டும் என்பதை விதிக்கும் விதிகளும், கதைபோலச் சுவையுள்ள பாடங்கள் ஆகின்றன. வாஸ்து புருஷனைப் பற்றிக் கூறுவனவற்றை இந்தக் கண் கொண்டு ஆராயவேண்டும்.

பெரிய பெரிய மண்டபங்கள் அழகாக இருக்கவேண்டும். பலரும் கூடிப் பேச வரும் மண்டபங்கள் அழகாக இருக்கவேண் டாவா? பலமுள்ளவையாகவும் இருக்கவேண்டாவா? மண்ட பங்களின் கால்களைப் பற்றிச் சிற்ப நூல்களும் ஆகமங்களும் பரக்கக் கூறுகின்றன. அடித்தளம், போதிகை முதலியன எல் லாம் எத்தனையோ வகையாக அழகு அழகாக அமைந்திருப்ப தனை நாம் கோயில்களில் காண்கிறோம். மேற்பரப்பு இணைப்பு... கடைகால் முதலியவற்றினைப் பற்றி யெல்லாம் கொடுத் துள்ள குறிப்புக்கள் விஞ்ஞான முறையைப் பின்பற்றி யவையே. பிற நாட்டுத் தூண்கள் இப்படி ஆயிரக்கணக்கான வேறுபாடுகளோடு தோன்றக் காணோம். "ஓர் ஆள், மேலே தன் கையைத் தூக்கி நின்றால் எவ்வளவு உயரமாமோ,

அவ்வளவு ஆழம் கடைகால் எடுக்க வேண்டும்"; இது போன்ற குறிப்புக்களைக் கண்டு நாம் சிரிக்க முடியுமா? இந் நாளைய சிற்பி களாலும் அக் குறிப்புக்கள் பாராட்டத் தக்கன அல்லவோ?

கோயில் கட்ட, நல்ல நிலமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். பால் மரம் நிறைந்த இடம், பழம், பூ நிறைந்த இடம், நல்லதாய் ஓருயிர்ப் பொருள் வளம் பெற்ற இடம் நல்லனவாம். இவை பிற உயிர்ப் பொருள்கள் வாழ உதவும் என்று கருதினர் போலும்! நாற்கோணமான இடம் நல்லதாம். அருகே ஓடை ஓடும் இடம் நல்லதாம். இதற்கு மாறாக இருப்பவை நல்லவை அல்ல. இதற்கு எலும்பு, பூச்சிப் புற்று, நிலக்கரி, பாழ்ங் கிணறு, சுரங்கம் முதலியவை உள்ள இடங்கள் தீயவை. இவை எல்லாம் பகுத்தறிவுக்கு ஒத்தனதாமே!

கட்டடம் கட்டுவதற்கு முன்னர்த் திக்குகளைச் சரிவரத் தெரிந்துகொள்ள வேண்டுமாம். இந்த ஆராய்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏன் கொள்ளவேண்டும்? திக்கினை அறிந்தே காற்று ஒளி முதலிய வரும் வழிகளை அறிந்து, வாயில் சாளரம் முதலிய வற்றை அமைக்கவேண்டும். அவற்றிற்கு ஏற்பப் பின்னர், முன் நாம் கூறிய மண்டபம், அறை முதலியவற்றை அமைக்கவேண் டும். ஆகையால், எல்லா நூல்களும் இவற்றைப் பற்றிய நுட்ப மான குறிப்புக்களைப் பரக்கப் பேசுகின்றன. ஆட்டுக்கல் போல அடி பருத்து நுனி சிறுத்துக் குடைபோல முடியும் ஒரு கோலை நாட்டி, அதன் நிழல், காலையிலும் மாலையிலும் விழுவதனைக் குறித்துவைத்துக் கிழக்கு மேற்கு வரையறுக்கவேண்டும். நிழல் மாதத்திற்கு மாதம் மாறும். அதற்காகச் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் வழிகளை எல்லாம் பழைய அறிஞர்கள் கூறி யுள்ளார்கள்.

கோயிலின் நடுவிடமே கர்ப்பக்ருகம். அடுத்துள்ளது அர்த்த மண்டபம். அதற்கு முன்பாக வருவது மகா மண்டபம். ஸ்தபன மண்டபம், ந்ருத்திய மண்டபம் என்று வரும் இவற் றிற்கு எல்லாம் இவ்வாறு வேறு வேறு அளவுகள் கொடுத்திருக் கிறார்கள். கோயிலைச் சுற்றி இவ்வாறு வெளிப் பிராகாரங்கள் வரை வரலாம்.

முடிவாக விமானம் அல்லது கோபுரங்களைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார்கள். ஒரு நிலைக்கோபுரம் முதல் 16 நிலைக் கோபுரம் வரை பேசியுள்ளார்கள். அவற்றின் அகல நீள உயரம், படிக்கட்டு, சுற்றுப்புறம் முதலிய எல்லாவற்றையும் குறித்திருக்கிறார்கள். நம்முடைய கோபுரங்களை நாம் மறக்க முடியுமா ? கோபுரத்திலிருந்து இராமானுசர் திரு மந்திரத்தை வாரி இறைத்தாராம் ; அருணகிரிநாதர் கோபுரத்துக் கிளியாகப் பாடினாராம். இந்தக் கதைகளிலிருந்து, கோபுரங்கள் அறிஞர் இருப்பிடமாக இருந்தமை விளங்கும். காஞ்சிபுரத்துக் கோபுரத்தைப் பார்த்தால், ஒவ்வொரு கோபுரத்திலும் ஒவ்வொரு பல்கலைக் கழகம் நடத்தலாம் என்றன்றோ தோன்றுகிறது !

மக்கள் வாழ்க்கை அனைத்திற்கும் உதவுகின்ற முறையில் நம் முன்னோர் கோயில்கள் கட்ட இலக்கணம் அமைத்துள்ளார்கள். இடைக்காலத்தில், அவற்றின் பொருள் தெரியாமல் கோயில்களைப் பூதம் காக்கவிட்டோம். இப்போது உரிமைக் கதிரவன் தோன்றியுள்ளான். அறிவுக் கண்களைத் திறந்து பார்த்துப் பழைய இலக்கணங்களின் பொருத்தத்தை அறிந்து பழையபடி கோயில்களை மக்கள் சமுதாய வாழ்வின் உயிர் நிலையாம் பொதுவிடமாக்கவேண்டும்.

மானசாரம் முதலிய சிற்ப நூல்களில் கூறியுள்ள பல அளவுகளோடு நம் தமிழ் நாட்டுக் கோயில்களின் அளவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையினரும் கோயிலாளரும் கோயில்களின் அளவு, மண்டபங்களின் அளவு, தூண்களின் அளவு முதலியவற்றை வெளியிட்டால் இந்த இலக்கணங்களின் பொருள் நன்கு விளங்கலாம். கோபுரங்களும் கோயில்களும் வானத்தை முட்டி நிற்கிற தமிழ் நாட்டில் இத் தகைய ஆராய்ச்சி இதுவரை எழாதது வருந்தத் தக்கதே ஆம். இப்போது நாம் பெற்றுள்ள உரிமை ஒளியால் இந்த அறியாமை நீங்கும் என எதிர்பார்க்கிறோம்.

18. தமிழகத்து ஓவியங்கள்*

திரு. ஈ. த. பதுமாவதி அம்மையார், M. A., L. T.

மனிதன் பொருள்களைக் காண்கிறான்; அனுபவிக்கின்றான். அவ்வாறு திளைக்கின்ற திளைப்பினை வெளியிட்டாலன்றி அவன் அமைதி அடைவதில்லை. இனிய மாம்பழத்தினைத் தின்றாலும் நாவினைத் தட்டி இன்பத்தினை நாம் வெளிப்படுத்தவில்லையா? மனிதன் பாடுவான்; ஆடுவான்; எழுதுவான்; செதுக்குவான்; எவ்வாறேனும் ஒருவழியாகத் தான்பெற்ற இன்பத்தினை உலகம் பெறுமாறு வெளிப்படுத்துவான். காவியம், சிற்பம், ஆடல், பாடல் என்ற இவற்றைப் போல ஓவியமும் ஓர் இன்கலை; வெளிப்படுவதால் ஏற்படும் இன்பம் அன்றி வேறொருபயனும் இங்கு இல்லை. குகையில் வாழ்ந்த நாள்தொட்டு இந்த ஓவியக் கலையின் வரலாற்றில் மனிதன் ஈடுபட்டு வருகிறான். தான் கண்ட விலங்குகளை நினைத்துத் தான் வாழ்ந்த குகையின் சுவரில் ஓவியன் எழுதிப்போன ஓவியங்கள் இன்றும் நாம் காண அங்கே வாழ்கின்றன.

தமிழ் நாட்டுக் குகை மனிதன் எழுதிய ஓவியங்கள் கிட்டவில்லை. ஆனால், எழுத்துக்கள் எல்லாம் ஓவியங்களின் திரிபுகளே ஆம். எழுத்து என்பதற்குச் சங்க காலத்தில் ஓவியம் என்ற பொருளும் உண்டு. திருப்பரங்குன்றத்தில் இருந்த அழகிய ஓவிய மண்டபத்தினை **எழுந்து நிலை மண்டபம்** என்றே அந்நாளில் வழங்கிவந்தனர். தமிழில் பழைய நூல்கள் சங்க நூல்களே ஆம். அந்த நாளில் எழுந்த கட்டடங்கள் செங்கல்லாலும் மரத்தாலும் ஆனவை; ஆதலின், அவை எல்லாம் அழிந்து போயின. ஆனால், அந்நாளைய ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் சங்க நூல்களிலும் சங்க காலத்தை ஒட்டி எழுந்த சிலப்பதிகார மணிமேகலைகளிலும் நிறைய உண்டு. ஓவியக் கலையைப் பற்றிய நூலும், "ஓவியச் செந்நூல்" என ஒன்று, பாராட்டும் வகையில் வழங்கிவந்தது. அதனைப் பரத்தையர் துறைபோகக் கற்றிருந்தனர். ஓவியப் புலவனைக் கண்ணுள் வினைஞன் என்ற பொருள் மிக்க பெயர்கொண்டு வழங்கினர். செங்கல்லின்மேல்

---

*இது 1951 அக்டோபரில் எழுதப்பெற்ற கட்டுரை.

வெண்சுதை பூசி ஓவியந் தீற்றி வந்தார்கள் என அறிகின்றோம். திருப்பரங்குன்றத்தின் குகையில் எழுதப்பெற்ற ஓவியங்கள் பேரும் புகழும் பெற்றுப் பாட்டிலும் இடம் பெற்றுவிட்டன. கட்டடங்களின் வெளிப்புறங்களிலும், உட்சுவர்களிலும், மேற்கட்டிகளிலும் பலவகை நிறத்தில் உருவங்கள் வரையப்பட்டிருந்தன. வானத்தில் செல்லும் சூரியனும் அவனைச் சூழ்ந்த கோள்களும் திங்களும் அவனைச்சேர்ந்த நாள்களும் அடிக்கடி எழுதப்பெற்றன. புராண ஓவியங்களும் அந் நாளிலிருந்தே தமிழ்நாட்டில் பொதுமக்கள் உள்ளத்தினைக் கவர்ந்து வருதலையும் அறிகிறோம். இயற்கை அழகினை மறவா இயல்பினையும் காண்கிறோம் பொய்கைகள், பறவைகள், மான்கள், யானைகள், புலிகள் என்ற இவற்றின் ஓவியங்கள் மக்கள் கண்ணையே அன்றி விலங்குகளின் கண்ணையும் மருட்டினவாம். இயற்கைப் பொருளைக் கூறும்போதெல்லாம் அந் நாளைய புலவர்கள் "ஓவியம் போல இருந்தது" என்று கூறுவதால், ஓவியம் எவ்வளவு தலை சிறந்த நிலையில் இருந்தது என ஒருவாறு உய்த்துணரலாம். கட்டடங்களில், வெண்சுதையில் வடிவங்களைத் தீற்றுவதோடு, மரப்பலகையிலும், கிழி என்ற திரையிலும் ஓவியம் எழுதிவந்தமையும் ,பழைய நூல்களால் தெரியவருகின்றது. "உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியில் உருஎழுதி" என்று பாடும் திருநாவுக்கரையர், ஓவியம் எழுதும் நுட்பத்தை விளக்குகின்றார்.

சங்க காலத்தின் பின்னர்க் கற்கோயில்கள் எழுந்தமை பல்லவர் காலத்திலாகும். மஹேந்திர பல்லவன் இவ்வாறு கற்கோயில் எழுப்பிய புதுமையைத் தானே முதலில் கையாண்டதாகப் பெருமை பாராட்டிக்கொள்கிறான். இவன் அருங்கலை விநோதன்; மத்தப் பிரகசனம் என்ற நகைச்சுவை நாடகம் எழுதி, நாடகக் கலையை வளர்த்தவன். குடியான்மலைக் கல்வெட்டுக்களிலிருந்து இசைக் கலையை இவன் வளர்த்தமை புலனாகிறது. சித்திரக்காரப்புலி என்ற இவனது சிறப்புப் பெயர், ஓவியக் கலையில் இவன் கொண்ட ஈடுபாட்டினை விளக்குகிறது. புதுக்கோட்டைக்கு அருகே சிற்றண்ணவாசல் என்ற ஊரில் உள்ள மலையில் குடைந்த மண்டபமே இன்றும் இவனது ஓவியக்கலையின் பெருமையை உலக முழுவதும் முரசறைகிறது.

இந்தியாவில் உள்ள அஜாந்தா ஓவியங்களும், இலங்கையில் உள்ள சிகிரியா ஓவியங்களும்போல இவையும் இந்திய நாட்டுக் கலை ஒற்றுமையினையும் தலைசிறந்த அழகினையும் நிலை நாட்டு கின்றன. வெண்சுதை பற்றுதற்காகக் கல்லைப் பொளிந்து, அதன்மேல் சுண்ணும்பினைப் பூசி, ஈரத்திலேயே ஓவியத்தினை வரைந்திருத்தல் வேண்டும். இவற்றில், பல சிதைந்து கிடக் கின்றன. எஞ்சியுள்ளவற்றிலும் எவ்வளவு அழகு! எவ்வளவு கைத்திறம்! இங்குள்ள பொய்கை ஓவியத்திலும், அதில் பூத்த மலர்களின் அழகிலும், மொட்டும் இலையும் கொடியு மாய்ப் படர்ந்தவற்றின் சிறப்பிலும், அங்கே உயிரோவியமாகப் பாயும் நீர் வாழ்வனவற்றிலும், அவற்றின் இயக்கத்திலும், கரையில் பூவினைக் கொய்தும் பூக்கொடி தாங்கியும் அல்லியை யும் தாமரையையும் வலத்தோளிலும் இடத்தோளிலும் சார்த்தி நிற்கின்ற மக்களது ஆன்ம விளக்கக் கைத்தொண்டின் அழ கொளியிலும், தம்மை மறந்து நில்லாதவர் யார்? இயற்கை யழகிலும் கலை யழகிலும் ஈடுபட்ட அந் நாளைய மக்கள் நாட் டிய மங்கையரின் ஓவியத்தையும் செடிகொடிகளையும் எழுதி எழுதி மகிழ்ந்த உண்மையினையும் அங்குக் காண்கிறோம். இந்த அழகோவியத்தின் வனப்பு டுப்ரவில் போன்ற பிற நாட்டறிஞர் கருத்தையும் கண்ணையும் ஒருங்கே கவர்ந்தது. உலகினை மறந்தவர்கள் இந் நாட்டினர் என்ற பெரும்பழியை இவை எதிரே நின்று மறுத்துரையாடுகின்றன. மகேந்திர வர்ம பல்லவன் மனைவியோடு கோயில் செல்லும் காட்சியே என்று பல அறிஞர் முடிவுகட்டும் ஓவியமும் அங்குள்ளது. அவ் வரசனுக்கு என்ன, இயற்கை அன்னையின் உள்ளத்தின் வழியே ஓடாவியின் தூரிகையில் பூத்த நினைவு மலரே ஆகும் அந்த ஓவியம். சிற்றண்ணவாசல் மட்டுமன்று பல்லவர் புகழைப் பாடுவது. பனைமலைக் கோயில் சுவர்களில் நீரரமகளிரும் கந்தருவருமாம் வானகத்தாரோடு அந் நாளில் வாழ்ந்த மண்ண கத்தார் ஓவியங்களும் உள்ளன. பல்லவரது தலைநகரம் காஞ்சி அன்றோ? அங்கு அவர்கள் எழுப்பிய கோயில்கள் பலப்பல. அதற்கடுத்த திருப்பருத்திக் குன்றத்தினையும் அதன் எல்லைக் குள் அடக்கி விடலாம். இங்குப் பல்லவர்கள் தீற்றிய ஓவியங்கள் மிகச்சிறந்த நிலையில் அவர்கள் ஆட்சியின் விளக்கங்களாக

ஒளிர்ந்திருத்தல் வேண்டும். ஆனால், இன்று நாம் காண்பன மூலை முடுக்கிலுள்ள துண்டு துணுக்குகளே. கல்லில் பொளித்த உருவங்கள் சுதை தீற்றி நிறம்பூசி அழகுசெய்து வைத்திருந்தவை கண்கொளாக் காட்சியாகத் திகழ்ந்திருக்கும். இன்னும் பல பல விடங்களிலிருந்தும் அவர்கள் ஓவியம் கண்டெடுக்கப் பெற்று வருகிறது.

"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" என்று சுந்தரர் பாடிய பல்லவர்க்குப் பிறகு, அந்தப் பெருமை மறுபடியும் பூத்தது சோழப் பேரரசர்கள் காலத்திலாம். விஜயாலயன் எடுத்த நார்த்தாமலைக் கோயிலிலும் ஓவியங்கள் உண்டு. ஆனால், தஞ்சைப் பெரிய உடையார் கோயிலே, இராஜராஜச் சோழப் பேரரசரது கலைப் பெருவிளக்கமாகும். முத்தமிழை வளர்க்க முற்பட்ட அச் சோழர் பெருமகனார் ஓவியக் கலை கொண்டும் தாம் கொண்ட கடவுளன்பிற்கு அழகு செய்தனர். கர்ப்பக் கிருகம் என்ற கருவறையைச் சுற்றியுள்ள பகுதியில் ஓவியங்கள் விளங்குகின்றன. சுந்தரரை ஆவணங்காட்டி அலைக் கழித்த காட்சி, அங்கு உயிரோவியமாகத் தோன்றுகின்றது; சுந்தரர், சேரமானோடு கைலைக்கு விரைந்து செல்லும் அந்த விரைவெல்லாம் தோன்றக் காட்சி அளிக்கின்றது மற்றோர் ஓவியம். தில்லைக்கூத்தன், சோழரது கடவுள். அவனுடைய திருக்கூத்துக்களில் சோழர் பெருமகனார் ஈடுபட்டிருந்தார். அவர் ஏற்படுத்திய அளவுகளுக்கு ஆடவல்லான் என்று பெயரிட்டனர் அன்றோ? ஆண்டவனுடைய திருக்கூத்தின் காட்சி ஒருபுறம் தோன்றுகிறது. திரிபுரம் எரித்த வீரிசடைக் கடவுளின் தோற்றம் மற்றொரு புறம் தோன்றுகிறது. வீரச் சுவை எதிர், அசுரர் கழுத்தைக் கட்டியழுகின்ற மனைவிமாரின் அவலச் சுவை, மனத்தினை நீர்ப்பிண்டமாக உருக்குகின்றது. இக் கலைஞர்கள் வானத்தினை நோக்கியதும், உலகினை மறக்கவில்லை என்பதனை எங்கும் காண்கிறோம். தில்லைக் காட்சியில் அந்நாளைய மக்கள் நிலைமையை உள்ளவாறு அவர்கள் தீற்றிய இயல்பினையும் காண்கிறோம். சுந்தரரது ஆவணக் காட்சித் திருவிளையாடலுக் கருகே நாளும் நாம் காணும் நாட்டுப்புறக் காட்சியினையும் ஓடாவி தீற்றியுள்ளார். பெண்கள், மட்பானை

யில் சோற்றினைச் சமைக்க, பண்ணையாள் ஒருவன், பெண் ஒருத்தி கையில் உணவுபெற்று மகிழும் காட்சியும் ஓடாவியின் கருத்தினைக் கவர்ந்தது.

சோழர்களுக்குப் பின்னர்ப் பேரரசாக விளங்கியது விஜய நகரப் பேரரசேயாம். சோழப் பேரரசுக்கும் விஜயநகரப் பேரரசுக்கும் இடைப்பட்ட காலத்திலும், விஜயநகரப் பேரரசு காலத்திலும் எழுந்த தென்னாட்டு ஓவியங்கள் திருவாங்கூர் அரண்மனைகளை இன்றும் அழகு செய்யக் காணலாம். மேல் நாட்டுத் தொடர்பு கொண்ட ஓவியங்களும் தொடர்ந்து அங்கே தோன்றுகின்றன.

விஜய நகரப் பேரரசர்கள் இன்கலைகள் பலவற்றிலும் ஈடுபட்டனர். திருவரங்கம் முதலிய கோயில்களில் இவர்கள் எழுதிய ஓவியங்களைக் காணலாம். திருவரங்கத்துச் சுற்றுலை யின் மேற்சுற்றில் தீற்றப்பெற்ற காளைமாடுகளின் வடிவம் பலர் கருத்தினைக் கவர்ந்துள்ளது. புராண ஓவியங்களுக்கு எல்லையே இல்லை. இலேபாட்சியில் உள்ள ஓவியங்களின் பெருமையைப் பற்றி இன்று உலகம் உணர்ந்துவருகிறது. இது தமிழகத்தில் இல்லாமற் போனாலும், மதுரை ஓவியங்களோடு தொடர் புடையதாதலின் தமிழோவியத்தினை விளக்க இவை உதவி செய்கின்றன.

தஞ்சைப் பெரிய உடையார் கருவறையைச் சுற்றித் தோன்றும் ஓவியங்கள் இவர்கள் காலத்தனவே ஆம். இங்குத் தான் மறக்கற்கரியதொரு கொடுமை தோன்றுகிறது. பழைய சோழ கால ஓவியங்களின்மேல், சுதையைத் தீட்டி இவர்களது ஓவியத்தினைப் பொறித்த கொடுமையை என்ன என்பது? விசய நகரத்தார் காலத்திய ஓவியப் படையைப் பேர்த்தெடுத்தபோது தான் சோழர்கால ஓவியம் தோன்றலாயிற்று. மதுரையில் வாழ்ந்த திருமலைநாயகர் காலத்து ஓவியங்கள் மதுரை மீனாட்சி கோயிலில் விளங்கக் காண்கிறோம். இங்குப் புராணங்கள் அசையாப் படங்களாய் மக்கள் மனத்தினைத் திருத்தி வந்த வரலாற் றைக் காணலாம்.

பின்னர், மராட்டியர் காலத்தில், தஞ்சையில் மராட்டிய ஓவியம் வளர்ந்தது. மராட்டிய மன்னர் ஓவியங்களைக் கண்ணாடிகளில் எழுதியுள்ளனவற்றை இன்றுங் காணலாம்.

மராட்டிய அரசர் ஆண்ட சரசுவதி மஹால், கல்யாண மஹால் முதலிய இடங்களில் இரத்தினங்கள் பதித்த சரசுவதி, இராமர், பரமபத நாதர், சுகர் முதலிய தெய்வ வடிவ ஓவியங்களைக் காணலாம். கண்ணாடியிலும் பலகையில் ஒட்டிய திரைச்சீலையிலும் எழுதப்பெற்ற படங்கள், பழைய வீடுகளில் இன்றும் தொங்கக் காண்கிறோம். இன்று இந்தக் கலை, போற்றுவார் அற்றுக் கெடுகிறது. திருவிளையாடல், பெரிய புராணம் முதலியவற்றின் கதைகளை ஒரே படத்தில் தீற்றுகின்ற காட்சியையும் காண்கிறோம். புராணங்களில் மட்டுமன்றி, அழகிய பெண்களின் அழகிலும் இந்த ஓடாவிகள் ஈடுபட்டு எழுதி வந்தனர்.

இவர்களுக்குப் பின்னர் மேனாட்டுத் தொடர்பும் அவர்கள் ஓவியக் கலைகளும் நம் நாட்டில் புகுந்தன. நம் நாட்டிலேயே பழமையை ஆராய்வதில் நாட்டம் எழுந்தது. இரவிவர்மாவின் ஓவியங்கள் எங்கும் பரவின. இவை, மேனாட்டுக் கலையின் ஒளி கொண்டு இந் நாட்டு ஓவியங்களை அழகு செய்வன. நம் நாட்டுக் கலைகளைக் காணாத குருட்டு நிலை ஒழிந்தது. அஜாந்தா ஓவியம் முதலியன மக்கள் மனத்தினைக் கவரத் தொடங்கின. மறுமலர்ச்சி ஓவியங்கள் அந்தப் பழைய ஓவிய முறைகளைப் பின்பற்றத் தொடங்கின. இந்த மறுமலர்ச்சி, வங்கத்தில், தாகூர்ப் பாவாணரைச் சூழ்ந்தெழுந்தது. தமிழ் நாட்டு ஓவியம் இன்னமும் விடுதலை பெற்றபாடில்லை. சிற்றண்ணவாயில் முதலாக விளங்கிவரும் தமிழோவிய வரலாறு தேங்காதவாறு, தமிழர், அதனைக் கரைபுரண்டோடும் பேராறாக ஓடவிட்டு அதனில் திளைத்துக் குளித்து மகிழ்தல் வேண்டும். உலகமும் அது கண்டு இன்பமடையும்.

19. சங்கப் புலவரும் இயற்கை வருணனையும்*

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார்

மக்களால் இயற்றப்படாது கடவுளால் படைக்கப்பட்டனவோ, இயற்கையில் அமைந்திருப்பனவோ ஆகிய மலை, கடல், நாடு, காடு என்பனவும், அவற்றிடை இயல்பில் உண்டானவும் கவிஞருலகிலே இயற்கைப் பொருள் எனக் கொள்ளப்படும். இதனை, "Nature" என்று ஆங்கிலத்திற் கூறுவர். மக்களால் இயற்றப்படும் அறுசுவை யுண்டி, எழு நிலை மாடம், பட்டாடை, மணிக்கலன் முதலிய யாவும் செயற்கைப் பொருள் ஆகும். மக்கள், தம் அறிவாற்றல்களால் எவ்வளவு அரிய பொருள்களை ஆக்கிக்கொள்ளினும் அவையெல்லாம் இயற்கைப் பொருள்கள்போல் உடல் வளமும் மனமகிழ்வும் தரற்பாலன அல்ல. இவ்வுண்மையை அறிந்தே, நம் முன்னோர்கள் தம் வாழ்க்கையைப் பெரிதும் இயற்கையை ஒட்டி நடத்திவந்திருக்கின்றனர். பண்டைக் காலத்தினராகிய சங்கப்புலவர்கள் இயற்கையின் பெருமையை நன்கறிந்தவர்கள் என்பதற்குத் தமிழின் திணை வகுப்புக்களே சான்றாகும்.

மலையும் அதனைச் சார்ந்த இடமும் குறிஞ்சியெனவும், புறவு அல்லது காடு முல்லையெனவும் ,நீர்வளமுடைய பழனம் முதலாயின மருதம் எனவும், கடல் சார்ந்த நிலம் நெய்தல் எனவும் தமிழிலக்கணம் கூறும். வளம் சிறிதுமில்லாத வறண்ட சுரம் பாலையெனப்படும். அவ்வந் நிலத்தில் உறையும் மக்கள், தலைமக்கள், அவர்கள் வழிபடும் தெய்வம், அவர்கட்குரிய உணவு, தொழில், யாழ், அங்குள்ள விலங்கு, பறவை, மரம், பூ முதலாயின வெல்லாம் கருப்பொருள் என்று கூறப்படும். இதிலிருந்தே, இன்ன நிலத்தில் இன்னவை உளவாகுமென்னும் இயற்கை யுண்மையைப் பழந்தமிழ்ப் புலவர்கள் நன்கறிந்திருந்தன ரென்பது பெறப்படு மன்றே! சங்கப் புலவர்கள் இயற்கைப் பொருள்கள் பலவற்றையும் நேரிற் கண்டு, அவற்றி னியல்புகளை நுண்ணிதின் ஆராய்ந்தறிந்து செய்யுட்கள் அமைத்துள்ளார்கள். செய்யுட்களில், அவை, உள்ளவாறாகவும், பொருந்திய உவமங்க

---

* இது 1943-இல் வெளியான திரு. வி. க. மணிமலரிலிருந்து எடுக்கப்பட்டது.

ளோடும் வெளிப்படும் பொழுது, கற்பார்க்கு எல்லையில்லாத இன்பம் விளைக்கின்றன.

முசுண்டை, விண்மீன்கள்போற் பூத்திருக்குமென்றும், கூதாளியின் மலர், வெண் குருகுபோலத் தோன்றும் என்றும், பன்றியின் கொம்பு, அகத்திப்பூப்போல் இருக்கு மென்றும், குரவின் அரும்புகள், அரவின் பல்லை மானும் என்றும் ஞெண்டின் கண், வேம்பின் அரும்புபோல் உயர்ந்து நீண்டிருக்கும் என்றும் கூறியிருப்பன போல்வன வியப்பும் உவகையும் விளைப்பன வாகின்றன. சுருங்க உரைக்கின், சங்கச் செய்யுட்களாகிய எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என்பவற்றை, இயற்கையின் சொல்லோவியங்கள் என்னலாம். அவற்றிலுள்ள ஒவ்வொரு பாட்டும் இயற்கைப் பொருள்களை நம் அகக்கண்முன் தோற்றுவித்து இன்பம் விளைக்கின்றது. உதாரணமாக ஒன்றிரண்டு காண்பாம். குறிஞ்சி நிலத்திலுள்ள ஒரு தலைவியும் தோழியும் தினைப்புனம் காத்தற்குச் சென்று, உயர்ந்த மரத்தின்மீது இடப்பட்டிருக்கும் பரணின்கண் ஏறியிருந்து, தட்டை முதலிய கருவிகளால் கிளிகளை யோட்டுகின்றனர். ஞாயிறு காயும் நண்பகற் பொழுதில், பறவைகள் தத்தம் சேக்கைகளை அடைகின்றன. அப்பொழுது, அவ் விருவரும் அங்குநின் றகன்று, மலையுச்சியினின்றும் தூய வெள்ளாடை போற் பரந்து இழியும் அருவியில், நீராடுகின்றனர்; பளிங்கைக் கரைத்துவைத்தாற்போன்ற சுனைகளிலே, இனிய பல பாட்டுக்களைப் பாடிக்கொண்டு, குடைந்து குடைந்து விளையாடுகின்றனர்; பின் கரையேறி, பொன்னிலே நீலமணியைப் பதித்து வைத்தாற்போல் முதுகிலே தாழ்ந்த பின்னலாகிய கூந்தலைப் பிழிந்து ஈரம் புலர்த்திவிட்டு, சிவந்த கண்களுடன் பல பக்கமும் திரிந்து மலர் கொய்கின்றனர்; செங்காந்தள், சுனைக்குவளை, குறிஞ்சி, வெட்சி, எருவை, குரவம், செவ்விளை, கருவிளை, கோங்கம், போங்கம், செருந்தி, கரந்தை, தில்லை, குல்லை, பாதிரி, சண்பகம் முதலிய நூறுவகையான பூக்களைப் பறித்து வந்து அகன்ற பாறையிலே குவித்து, அவற்றால் தழை என்னும் உடையினைச் செய்து இடையிலே உடுத்தியும், பல்வேறு உருவினையுடைய மாலைகளைப் புனைந்து சூடியும் நெருப்பென விளங்கும் தளிர்களையுடைய அசோக மரத்தின் குளிர்ந்த

நிழலில் இனிது வீற்றிருக்கின்றனர். இவ்வியற்கைப்புனைவு, கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டில் உள்ளது.

இனி, சிறுபாணாற்றுப்படையிலே, "அலைநீர்த்தாழை அன்னம் பூப்பவும், தலைநாட் செருந்தி தமனியம் மருட்டவும், கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும், நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும், கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப் பாடல் சான்ற நெய்தல் நெடுவழி" என நெய்தலும், "பைங்கனை அவரை பவழங் கோப்பவும், கருநனைக் காயாக் கணமயி லவிழவும், கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும், செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும், கொல்லை நெடுவழிக் கோப மூரவும் முல்லை சான்ற முல்லையம் புறவு" என முல்லையும் அணிகலந்தோன்ற வருணிக்கப்பட்டிருத்தலுங் காண்க. அகநானூற்றுச் செய்யுளொன்றில், "குறிஞ்சி நிலத்தில் அசையும் மூங்கிலில் உண்டான துளையில் மேல்காற்றுப் புகுதலால் எழும் ஒலி குழலிசையாகவும், அருவியின் இனிய ஓசை முழவின் இசையாகவும், கலைமான்கள் தாழ ஒலிக்கும் குரல் பெருவங்கியத்தின் இசையாகவும், பூக்களிலுள்ள வண்டின் ஒலி யாழின் இசையாகவும் ஆக, இவ் விசைகளைக்கேட்டு மகிழ்ந்து மந்தியின் திரளாய நல்ல அவை வியப்புற்று நோக்கப் பக்க மலையில் அசைந்தாடும் மயில்கள், களத்திற்புகுந்தாடும் விறலிபோலத் தோன்றும்" என்னும் வருணனை காணப்படுகின்றது. நக்கீரனார் பாடிய அகப்பாட்டு ஒன்றில், மாலைப் பொழுதிலே வானிலே உயர்ந்து செக்கர் வானத்தைத் தீண்டி வரிசையாகப் பறந்து செல்லும் கொக்கினத்திற்கு, நெடுவேளின் மார்பில் அணிந்த முத்தாரம் உவமையாகக் கூறப்பட்டிருப்பது அறிந்து இன்புறற்பாலது.

இவ்வாற்றால் சங்கப்புலவர்கள் இயற்கைப் பொருள்களோடு நன்கு பயின்றவர்கள் என்பது போதரும்.

20. அறிஞர் பெர்னார்ட் ஷா-பிறப்பும் வளர்ப்பும்*

டாக்டர் மு. வரதராசனார், M .A., M. O. L., Ph. D.

அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் 1856 ஜூலை 26-ல் பிறந்தார் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா. அவருடைய தந்தை பொறுப்பற்ற வாழ்க்கை நடத்திய குடிகாரர்; ஆயினும், நல்வாழ்க்கையில் வேட்கை உடையவர்; பிறரோடு இயைந்து நடக்க விரும்பியவர். இசைக் கலையிலும் அவருக்குப் பயிற்சி இருந்தது. அவருடைய மனைவி (பெர்னார்ட் ஷாவின் தாய்) பொறுமை பகைமை முதலிய உணர்ச்சிகளுக்கு இடம் தாராதவர்; ஆயினும், கணவருடைய குடிப்பழக்கம் அந்த நல்ல மனத்தில் வெறுப்பு வளரச் செய்தது; நாளடைவில், கணவரை விட்டுத் தனியே பிரிந்து வாழவும் செய்துவிட்டது. அப்போது அந்தக் குடும்பத்தில் இருந்த சிறுமியர் இருவர்; சிறுவன் ஒருவன். சிறுமியர்க்கு இளையவனாக இருந்த சிறுவனே ஜார்ஜ் பெர்னார்ட். "எங்கள் குடும்பத்தில் தந்தை கவலை அற்றவர்; தாய் யாரையும் கடிந்து திருத்தும் ஆற்றல் அற்றவர். குடும்பத்தில் அன்பும் இல்லை, பகையும் இல்லை, அச்சமும் இல்லை, மதிப்பும் இல்லை; குழந்தைகளை வழிப்படுத்தி வளர்க்கும் முயற்சியும் இல்லை. தாய் ஒருவழி, தந்தை ஒருவழி; மக்களாக இருந்த நாங்களும் ஆளுக்கு ஒரு வழியில் வளர்ந்து வந்தோம்" என்று அறிஞர் ஷாவே எழுதியுள்ளார்.

அவர் சின்ன பையனாக இருந்தபோது, வீட்டைவிட்டு வெளியே சுற்றிப் பார்ப்பதற்காகப் பையனை அழைத்துப்போய் வருமாறு, பெற்றோர், ஒரு வேலைக்காரியிடம் ஏற்பாடு செய்தார்கள்; வாய்க்கால் கரையிலோ அல்லது நாகரிகமான செல்வர் வாழும் பகுதியிலோ அழைத்துப்போய் வருமாறு ஏற்பாடு செய்தார்கள். ஆனால், வேலைக்காரி செய்தது வேறு. தன்னுடைய நண்பர்களைக் காண்பதற்கு இந்த வாய்ப்பை அவள் பயன்படுத்திக்கொண்டாள்; ஏழை மக்கள் வாழும் குப்பங்களுக்கு ஷாவை அழைத்துச்சென்று பொழுது கழித்

---

* அறிஞர் பெர்னார்ட் ஷா என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

தாள். அவனுடைய நண்பன் எவனாவது ஒருவன் அவளை உணவு விடுதிக்கு அழைத்துச் செல்வதும் அங்குக் குடித்து மகிழ்வதும் உண்டு. அப்போது ஷாவுக்கும் பழச்சாறு முதலியவை நிரம்பக் கிடைக்குமாம். ஆனாலும் ஷாவுக்கு அதில் வெறுப்பு வளர்ந்ததாம். அவருடைய தந்தை, குடியின் தீமையைப் பற்றிச் சொல்லியுள்ள அறிவுரைகளை நினைத்து, அத்தகைய உணவு விடுதிகள் மிகக் கெட்ட இடங்கள் என்று ஷா உணர்ந்தாராம். வேலைக்காரியுடன் குப்பங்களுக்குச் சென்று பெற்ற அனுபவத்தைப் பற்றி எழுதியபோது, "என் வாழ்நாள் முழுதும் வறுமைக்குப் பகையாக விளங்கியதற்கும், வறியவர்கள் இல்லாதபடியும் மீண்டும் தோன்றாதபடியும் வழி வகுப்பதில் வாழ்நாள் முழுதும் தொண்டு செய்ய முனைந்ததற்கும் காரணமான முதல் அனுபவம் இதுதான்" என்று அவர் பிற்காலத்தில் குறிப்பிட்டார்.

சுற்றுப்புறத்தாரோடு மதிப்பாகப் பழகுவதையும், உறவினர் வீடுகளுக்குச் சென்று அளவளாவுவதையும் இந்தக் குடும்பம் இழந்துவிட்டது. இளமையில் எந்த உறவினர் வீட்டிற்கும் சென்று வந்ததாக ஷாவுக்கு நினைவே இல்லையாம். "பெற்றோர் இருவரும் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தால், வீடு தீப்பற்றி எரிந்தாற் போன்ற திடுக்கிடான செய்தியாக எங்களுக்கு இருந்திருக்கும்" என்று எழுதியுள்ளார் ஷா. ஜார்ஜ் கார் ஷாவின் குடிப்பழக்கமே அவரை எல்லோரும் புறக்கணிக்கக் காரணமாக இருந்தது. கணவருடைய தவறு மனைவிக்கும் மதிப்பு இல்லாமல் செய்துவிட்டது. அந்த மனைவியையும் எந்தச் சிறப்புக்கும் எந்த வீட்டாரும் அழைக்காமல் புறக்கணித்துவிட்டார்கள். உறவினர் வீட்டிற்குப் பெற்றோருடன் போய் வந்ததாக ஒரு நிகழ்ச்சியும் நினைவில் இல்லை என்று ஷா குறித்துள்ளார்.

தந்தைக்கு வந்த வருவாயைக்கொண்டு குடும்பத்தை எப்படியாவது நடத்தி மக்களைப் படிக்கவைத்திருக்க முடியும். ஆனால், குடிப்பழக்கம் இடையூறாக இருந்து, வருவாயைச் சுரண்டியது ஒருபுறம்; மற்றவர்களுக்கு நிகராக வாழ்க்கை நடத்த வேண்டும் என்று போலி மதிப்புக்கொண்டு சிக்கனத்தைப் புறக்

கணித்தது மற்றொருபுறம்; இந்த இருவகையாலும் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி முதிர்ந்தது.

ஷாவின் தாய்க்கு இசையில் பயிற்சியும் திறமையும் இருந்தன. அந்த இசையே பிற்காலத்தில் குடும்பத்தைக் காக்க உதவியது. லீ என்னும் இசை ஆசிரியர் ஒருவரின் உதவி குடும்பத்திற்குக் கிடைத்தது. அவர் திருமணமாகாதவர்; அடுத்த தெருவில் குடியிருந்தவர். பிறகு ஷா குடும்பத்தாரும் அவரும் ஒரே வீட்டில் குடியிருக்க ஏற்பாடு செய்துகொண்டார்கள். ஷாவின் தாய் அவரிடம் நன்கு இசை பயின்றார்.

இசையாசிரியர் லீ குடும்பத்தில் தொடர்பு கொண்டதால் அவரைப் பார்த்து ஷா சிலவற்றை இளமையிலேயே கற்றுக் கொண்டார். ஆசிரியர் லீ தம் வாழ்வில் போற்றியவை இரண்டு: ஒன்று இயற்கை; மற்றொன்று இசை. இந்த இரண்டும் ஷாவின் வாழ்க்கையில் அப்படியே படிந்துவிட்டன. சன்னல் கதவுகளைத் திறந்துவிட்டுப் படுத்து உறங்கவேண்டும் என்பது லீயின் கொள்கை. ஷாவும் வாழ்நாள் முழுதும் அவ்வாறே செய்து வந்தார். லீக்கு டாக்டர்களிடத்தில் நம்பிக்கை இல்லை. ஷாவின் உள்ளத்தில் இதுவும் படிந்தது. வீடு இசையரங்காக மெல்ல மெல்ல மாறியது. ஷா இளமையிலேயே இசைக்கலை பயின்றார். இசை ஒன்றே இளமையில் குடும்பச் சொத்தாக இருந்த காரணத்தால், பிற்காலத்தில், அவர் இசைக்கலையில் ஆராய்ச்சி மிக்கவராக விளங்கினார். தாயைப்போலவே மக்களும் இசையில் தேர்ச்சி பெற்றார்கள். 1872-ஆம் ஆண்டில் அந்த இசை ஆசிரியர் லண்டன் மாநகருக்குச் சென்று சேர்ந்தபோது, ஷாவின் தாய், தம் பெண்மக்களை அழைத்துக்கொண்டு தாய்நாட்டை விட்டு இங்கிலாந்தின் தலைநகருக்கேபோய் வாழ்க்கையைத் தொடங்கினார். குடும்பம் இவ்வாறு பிளவு பட்டபோது ஷா தம் தந்தையோடு டப்ளினில் தங்கும்படியாக நேர்ந்தது. தாயைப் பிரிந்த ஷா, இசைக் கலையால் பெற்ற இன்பத்தையும் பிரிய நேர்ந்தது; ஆயினும் தனித்திருந்து தாமே இசை பயிலத் தொடங்கினார்.

தந்தை, சர்க்கார் தொழிலில் இருந்தவர். அந்தத் தொழில் மிகையானது என்று அரசியலார் ஆட்களைக் குறைத்தபோது

அவர் தொழில் இல்லாமல் வெளியேற நேர்ந்தது. ஆயினும் ஒருவகையாக ஈடு செய்வதற்காக ஓய்வுச் சம்பளம் (பென்ஷன்) கொடுத்தார்கள். அதை அவர் உடனே மாற்றிவிட்டு, கிடைத்த பணத்தைக்கொண்டு ஒருவரோடு கூட்டுச் சேர்ந்து, பெருத்த வியாபாரம் செய்யத் தொடங்கினார்; ஒரு மாவுமில்லும் வைத்து நடத்தினார். இந்த வியாபாரம் முதலியவற்றையும் தந்தை பொறுப்போடு கவனித்து நடத்தாமல் மற்றவர்களின் கையில் விட்ட காரணத்தால், அவை எப்படியோ ஒருவகையாக நடந்து வந்தன; அவ்வளவே அல்லாமல் செழிக்கவில்லை. "அவர்கள் அந்தத் தொழிலை நடத்தவில்லை; அந்தத் தொழிலே அவர்களை நடத்தி வந்தது" என்று ஷா குறித்திருக்கின்றார். நெருக்கடியும் நேர்ந்தது. ஆனால், தந்தை கண்ணீர்விட்டுக் கலங்கவில்லை; ஒரு மூலையில் உட்கார்ந்து சிரித்துப் பொழுது போக்கினாராம். எப்படியோ அந்தத் தொழில், போராட்டத்திற்கு இடையே நகர்ந்துகொண்டிருந்தது; தந்தையின் இறுதிக் காலம் வரையில் ஒரு சிறு வருவாய் தந்துகொண்டிருந்தது. இது போதாத குறையால்தான், தாய், குடும்பத்தில் இருந்து வறுமைத் துன்பம் படமுடியாமல் லண்டன் மாநகரை அடைந்தார். குடும்பம் இவ்வாறு பிரிந்த பிறகும், தந்தை இயன்ற அளவு சிறிய தொகையைத் தம் குடும்பத்திற்குக் கொடுத்து உதவி வந்தார்; மீண்டும் குடும்பத்தைச் சேர்த்து வாழ வேண்டும் என்பதற்காக ஒருவகை முயற்சியும் செய்யாமல், ஏதோ ஒருவகை ஆறுதல் கொண்டு காலம் கழித்தார். "இந்த நிலைமையில் இருந்துவந்த ஏற்பாடு அன்பற்றது என்றோ, குறையுடையது என்றோ நாங்கள் யாரும் உணரவே இல்லை. பழக்க வழக்கங்களைப் பற்றியோ, மற்ற உணர்ச்சிகளைப் பற்றியோ நாங்கள் கவலைப்பட்டதும் இல்லை" என்று ஷா குறித்துள்ளார். சமூகத்திலிருந்து ஒருவாறு பிரிந்து வாழ்ந்த குடும்பமாக இருந்ததே அதற்குக் காரணம்.

தந்தையின் குடிப்பழக்கம் நெடுங்காலம் கழித்து முடிவுக்கு வந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில், அவர் விழுந்து, பட்ட பெருந்துன்பமே அவரைச் சீர்திருத்தியது; இனிக் குடிப் பழக்கத்தை நிறுத்தாவிட்டால் அழிவு நேரும் என்று உணரச் செய்தது. அவரும் உணர்ந்தார்; ஆனால் உணர்ந்தும் பயனில்லை

என்று சொல்லத் தக்க இறுதிக் காலத்தில் உணர்ந்தார். ஆகையால், அதனால் குடும்பத்திற்கு ஒருவகை நன்மையும் ஏற்படவில்லை.

தாயும் தமக்கையரும் லண்டனுக்குப் போய் வாழத் தொடங்கியபோது ஷாவுக்கு வயது பதினைந்து. வறுமையின் காரணத்தால் உயர்நிலைக் கல்விக்கு வழியற்ற சிறுவனாக வளர்ந்த போதிலும், நுட்பமான அறிவு பெற்றிருந்தமையால் ஷா அப்போதே ஆங்கில நூல்கள் பலவற்றைப் படித்திருந்தார்; பாடல் பல கற்றிருந்தார். ஆயினும், கவிஞர்களில் ஷெல்லி ஒருவரே அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டாராம்.

கல்வித் துறையில் ஷாவுக்கு வாய்ப்புக்குறைவாக இருந்தது போலவே, சமூக உறவிற்கு உரிய நாகரிகப் பழக்க வழக்கங்களில் பயில்வதற்கும் வழி இல்லாமல் இருந்தது. அவர் வளர்ந்த குடும்பம் சமூகத் தொடர்பு குன்றிய குடும்பமாக நின்றதுதான் காரணம். பிற்காலத்தில் உலகத்தாரைப்போல் போலி நாகரிக மதிப்பைத் தேடி மற்றவர்களுக்கு இயைந்து நடக்க முடியாமல் ஷா வாழ்ந்ததற்கும் இதுவே காரணமாக அமைந்தது. சமயத் துறையிலும் ஷா இளமையில் போதிய அளவுக்கு அறியாதவராக வளர்ந்தார்.

சிறுவனாக இருந்தபோது, ஷா, தம் உடன்பிறந்தார் இருவரோடும், ஞாயிறுதோறும் கோயிலுக்குப் போய்வந்தார்; ஆனால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் இளம் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி வழிபாட்டுக்கு இருக்கச்செய்வது தமக்குப் பிடிக்கவில்லை என்று பிற்காலத்தில் எழுதினார்: "இளமையும் சுறுசுறுப்பும் உள்ள நாடி நரம்புகளையும் தசைநார்களையும் உடைய பிள்ளைகள், நல்ல உடை உடுத்துக்கொண்டு அசையாமலும் வாய் திறக்காமலும் அமைதியாகக் கோயில் கட்டடத்திற்குள் அடைபட்டுக் கிடப்பது பெருந் தீமையாகும். அந்தக் கட்டடத்திற்கு வெளியே உலவிக் கைகால்களுக்கு வேலை தருவது இன்பமானதாக உள்ளபோது, உள்ளே நெடுநேரம் அடங்கியிருப்பது பொறுக்க முடியாததாகும். அதனால், உணர்ச்சியுள்ள இளைஞர்கள் தமக்கு உரிமை கிடைத்தபோது, வளர்ந்து பெரியவர்களானபோது, கோயிலுக்குப் போகாமல் நின்றுவிடத் துணியும்படி ஆகிறது" என்று குறிப்பிட்டார்.

அவருடைய பத்தாவது வயதிற்கு முன்பே, குடும்பத்தார் கோயிலுக்குப் போகும் பழக்கத்தை விட்டுவிட்டார்கள் பொறுப்பற்றவர்கள் நடத்தும் குடும்பத்தில் வறுமை புகுந்த வாழ்க்கைப் போராட்டத்தை வளர்த்தால், அங்கு என்ன எதிர் பார்க்க முடியும்? கோயிலுக்குச் செல்லும் பழக்கம் இல்லா விட்டாலும், சிறுவனாக இருக்கும்போதே ஷாவுக்கு வழிபாட் டுப் பழக்கம் மட்டும் இருந்தது. அந்த வயதிலேயே தாமாக வழிபாட்டுரை இயற்றி வழிபடும் திறமை இருந்ததாம். பிற் காலத்தில் பெரும் புலவராக மொழியாற்றல் பெற்று விளங்கிய தற்கு அஃது அறிகுறியாக இருந்தது. அந்தச் சிறுவயதில் இடி முழக்கங்களைக் கேட்டு நடுங்கிய போதெல்லாம் வழிபாட்டின் துணையால் ஒருவாறு உறுதி பெற்றுவந்தாராம். ஞாயிற்றுக் கிழமைகளில் கோயிலுக்குச் செல்லும் பழக்கம் குடும்பத்தில் நின்ற பிறகும் வழிபடும் வழக்கத்தை விடாமல் வைத்திருந்தா ராம். ஒருநாள் மாலையில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, திடீரென்று, "நாள்தோறும் ஏன் வழிபாடு நடத்தவேண்டும்? எனக்கு அதில் ஒன்றும் நம்பிக்கை காணோமே" என்று உள்ளத் தில் புரட்சி தோன்றியதாம். அதற்கு ஏற்ற காரணம் தெரி யாமையால், அன்று இரவு வழிபாட்டை ஷா நிறுத்திவிட்டா ராம்; ஆனால், மனம் அமைதியுறாமல் குழம்பினாராம். மறுநாள் மனக் குழப்பம் குறைந்ததாம்; பிறகு படிப்படியாக இல்லாமல் போயிற்றாம். இன்னும் சிறிது வளர்ந்த பிறகு பைபிளையும் படிக்காமல் பழித்தபோது தந்தை தலையிட்டுக் கடிந்தார்; அதன் பெருமையையும் படித்து உணரவேண்டிய கடமையையும் எடுத்துரைத்தார். ஆயினும் மகன் மனம் மாறவில்லை. தாயோ சமயத்துறையில் மக்களுக்கு ஒன்றும் வழி காட்டவில்லை. இதைப் பற்றி ஷா எழுதியபோது, "என் தாய் இவ்வாறு கவலை யில்லாமல் வளர்த்த முறையினால், என் தமக்கையர் இருவருக் கும் பெருந் தீமையே விளைந்தது. ஆனால், என்னைப் பொறுத்த வரையில் என் அறிவில் சமயத்துறை அழியவில்லை. உண்மை யான நம்பிக்கைகள் குடிபுகுவதற்கு வழிவகுத்தாற்போல் இருந்தது; அறிவுக்கு இயைபான உண்மைகளை உணர முடிந் தது" என்று எழுதியுள்ளார்.

சிறுவன் ஷாவுக்குக் கதை நூல்களைப் படிப்பதில் ஆர்வம் இருந்தது. ஒரு முறை கிராமத்திலிருந்த சித்தியின் வீட்டிற்குச் சென்றிருந்தபோது அங்கே 'அராபிய இரவுகள்' என்னும் கதைப் புத்தகத்தைக் கண்டார். நாள்தோறும் பொழுது விடிந்து சிறிதளவு ஒளி வந்தவுடனே படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து புத்தகத்தை நெடுநேரம் படித்துக்கொண்டிருந்தாராம். நேரம் ஆயிற்று என்று அழைக்கப்படும் வரையில் படிப்பதில் மூழ்கியிருந்தாராம். இதை ஒருநாள் கண்டுபிடித்த சித்தி, அதை எடுத்து மறைத்து வைத்துவிட்டாராம். ஷா விடவில்லை. மறுபடியும் அதைத் தேடி எடுத்துத் தம் படுக்கையின் கீழே ஒளித்து வைத்துக்கொண்டாராம். இதைக் குறிப்பிட்டபோது, தம் சித்தியின் அறியாமையை எடுத்துக்காட்டியுள்ளார். அந்தச் சித்தியே அவரை அந் நாளில் ஒரு குதிரையின் மேல் வற்புறுத்தி ஏற்றிச் சவாரி செய்யவிட்டாராம். ஷா அஞ்சி அஞ்சிக் குதிரை மேலிருந்தவாறு நடுங்கி, செய்வது அறியாமல் திகைத்தாராம். "நாட்டுப்புறத்து மக்கள் இவ்வாறு சிறுவர்களின் உடம்பில் முரட்டுத் தன்மையை வளர்க்கத் தயங்குவதில்லை; ஆனால் உள்ளத்தைக் கோழையாக்கி வருகிறார்கள். அஞ்சாத செயல்களைப் பற்றிய பேச்சுக்களை அவர்களிடம் எந் நேரமும் கேட்கலாம். ஆனால் அஞ்சாமல் எண்ணும் எண்ணங்களைப் பற்றி அறியவே முடியாது. உடலால் முரடராகவும் உள்ளத்தால் மெல்லியராகவும் வளர்க்கவே அவர்களால் முடியும்" என்று எழுதினார்.

இவ்வாறு வளர்ந்து வந்த ஷாவின் வறுமை பொல்லாததாக இருந்தது. இருந்தும், அவர் கடன் வாங்கிச் செலவு செய்ய அஞ்சினார். ஒரு நண்பனிடம் ஐந்து பவுன் கடன் வாங்கியபின் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் போய்விட்டால், அவனுடைய நட்பை ஐந்து பவுனுக்கு விற்றுத் துறந்ததுபோல் ஆகுமே என்ற உணர்ச்சி அவருக்கு இளமையிலேயே இருந்தது. அவருடைய பணமுடையைத் தாமே அறிந்து கொடுக்க முன் வந்த நண்பர்களின் உதவியையும் பெறாமல் மறுத்து வந்தார்.

21. மேடு பள்ளம்*

திரு. அ. மு. பரமசிவானந்தம், M. A., M. Litt.

கணபதி அக்கிரகாரம் என்பது தஞ்சாவூர்ச் சில்லாவில் காவிரிக்கரையில் உள்ள ஒரு சிற்றூர். அது மிகப் பழங்காலத்திலிருந்தே அறிவாளிகள் நிறைந்த ஊராக இருந்தது. காவிரியின் தண்ணீரும், அந் நீரால் விளையும் நெல்லும், பிறவும் அங்குள்ள மக்களை அறிவுள்ளவர்களாக ஆகச் செய்கின்றன. அதிலும், கணபதி அக்கிரகாரம் பரம்பரை அறிவாளிகள் உள்ள ஊர். அந்த ஊரில் இன்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னே பிறந்தவர் அனந்தராமன் அவர்கள்.

அப்போதுதான் 'கும்பினி ஆட்சி' யென்ற கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் ஆட்சிமுறை மாற, ஆங்கிலேயர் நேரடியாக ஆளத் தொடங்கினர். எனவே, ஆட்சி மாறிய காலம் அஃது. ஆங்கிலேயருக்கு உடன் துணையாக இருந்து உதவியவர்களெல்லாம்—நாட்டைக் காட்டிக் கொடுத்து, அடிமைப் படுகுழியில் தள்ளியவர்களெல்லாம்—குட்டி அரசர்களாக மாறிய காலம் அஃது. அந்தக் காலத்திலும் இந்தக் காவிரி ஆறு அமைதியாகத் தன் கடமையில் தவறாது ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் கரையில் அமர்ந்து அரிய கலை பயின்றவர் அனந்தராமன்.

நாடு வேட்டையும், ஆதிக்க வெறியும் ஓங்கி நின்ற அந்த நாளில் அறிவுக்கு இடம் எங்கிருந்து இருக்கும்? அனந்தராமன் அரிய கலை பல கற்றவர். வடமொழியும், தமிழும் நன்கு பயின்றவர். அத்துடன் அப்போதுதான் தலை தூக்கிய ஆங்கிலமும் அவருக்கு வரும். இப்படி மூன்று மொழிகளைப் பயின்ற பெரும் புலவராகிய அவருக்கு அந்த ஊரில் செல்வாக்கு இல்லை. செல்வாக்கு இல்லையாயினும் கெடுதலில்லை; அரை வயிற்றுச் சோற்றுக்கும் வகையில்லை. அவருடைய தாய் தந்தையர் வேறு இருந்தனர். தந்தையார் அவ்வளவு அதிகம் படித்தவர் இல்லையாயினும் ஏதோ ஆண்டவன் கோயிலுக்குப் பூசை செய்கின்ற அளவுக்கு ஆகமம் முதலியவற்றை நன்கு அறிந்தவர்; பிள்ளை

---

* "கறைபடிந்த உள்ளம்" என்ற சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

யைப் பெரிய அறிவாளியாக்க வேண்டுமென்று அல்லும் பகலும் உழன்றவர். அவர்தம் உழைப்பு நல்ல வெற்றியையும் கொடுத்தது ; ஆனாலும் வாழ்வுக்கு வழி காட்டவில்லை.

அனந்தராமன் தமது ஏழ்மையைப்பற்றி எண்ணி எண்ணிச் சிந்தித்தார். சிந்தனையின் முடிவில் அவருக்குத் தெளிவு பிறந்தது. அங்கே அந்தச் சிற்றூரில் வறுமையால் வாடுவதைக் காட்டிலும் எங்காவது சென்று உழைத்துப் பிழைக்கவாவது வழி காணலாம் என அவர் முடிவு செய்தார். அவர்தம் முடிவைப் பெற்றோர்களுக்குத் தெரிவிப்பின் அவர்கள் சிறிதும் இணங்க மாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும் ; எவ்வளவு வாடினாலும் ஊரின் மேல் மாளாப் பற்றுள்ள காரணத்தால் அவர்கள் ஊரை விட்டுச் செல்ல ஒருக்காலும் விரும்பமாட்டார்கள் என்பதை அறிவார். ஆகவே, ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாது, அவர் ஒருநாள் இரவு ஊரை விட்டுப் புறப்பட்டுவிட்டார். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியையும், சோழ நாட்டையும் விட்டுப்பிரிய அவருக்கு மனமில்லைதான். என்றாலும் அவரைப் போன்று ஓர் அடி நிலம்கூட வைத்திராதவர்களுக்குக் காவிரி பொய்யாதிருந்தால்தான் என்ன பயன் ? தம் ஊரை விட்டு மேற்கு நோக்கிச் சென்றுகொண்டே இருந்தார் அனந்தராமன் அவர்கள்.

பரந்த காவிரி பாயும் வளஞ் செறிந்த சோழ நாட்டை விட்டு வெகு தொலைவு வந்துவிட்டார் அவர். அடுக்கடுக்காகப் பல மலை வரிசைகள் அவர்முன் நின்றன. எப்படியோ அனைத்தையும் தாண்டிக் கொங்கு நாட்டு எல்லையையும் தொட்டு விட்டார். பாலக்காட்டுக்கு அருகில் ஒரு சிற்றூர். அந்த ஊரில் மலையாள அந்தணர்கள் அதிகமாக உண்டு ; அறிவுள்ளவர்கள். அவர்கள், வந்த அனந்தராமனை வருகவென்று உபசரித்தார்கள் ; அவரது அறிவின் விசாலத்தைக் கண்டு அவரைப் போற்றினார்கள் ; அங்கேயே அவரை இருத்திக்கொள்ளவும் விரும்பினார்கள்; ஆனால் அவருக்கு ஏற்ற பதவியோ, பணமோ கொடுக்க வழியற்றுத் திகைத்தார்கள்.

அந்த ஊரும் அதைச் சுற்றிலுமுள்ள இன்னும் சில ஊர்களும் ஒரு குட்டி அரசரின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவை.

அது மலையாள நாடாக இருந்த காரணத்தால் அந்தக் குட்டி அரசர் பரம்பரையும்கூட மருமக்கள் தாயவழியில்தான் வந்து வாழ்ந்து கொண்டு இருந்தது. அத்துடன் அந்த நாயர் தலைவர் குலத்துப்பெண்கள் அந்தணர் குலத்து ஆண்களை மணந்து கொள்வதும் உண்டு. அந்தச் சிற்றரசராகிய தளபதி ஆங்கிலரின் கீழ் ஒரு படையை நடத்துபவர். அவர் நாட்டைக் காட்டிக் கொடுத்த திறமைக்கும், பிறவற்றிற்கும் அவர் நிலை உயர்த்தப் பட்டது. அவர்தம் குடும்பத்துக்கென அந்த ஊரில் ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. அதற்கு ஆகமங்களை நன்கு கற்ற ஒருவரைத்தான் அர்ச்சகராக நியமிப்பார்கள். அனந்தராமன் அந்த ஊரில் தங்கிய இரண்டொரு நாட்களிலே முன் இருந்த அர்ச்சகர் பூசனைக்குரிய பலனைப் பெற்று, உலக வாழ்வை நீத்தார். எனவே, ஊரிலுள்ள அனைவரும் ஒருசேர அனந்தராமனையே அர்ச்சகராக்கினார்கள். அவரும் அந்த வாழ்வு போதும் என்று அமைந்து வாழ்ந்தார்.

கோயில் மிகப் பெரியதாக இல்லாவிட்டாலும், பெருஞ் செல்வருக்கு உரியதாதலால் அவருக்கு நிறைய வரும்படி வந்து கொண்டிருந்தது. ஒரு வேளை உணவுக்கும் வழி காணாது அலைந்த அவருக்கு வாழ்வின் தேவைக்கு மேலாகப் பெரும் பொருள் குவிந்தது. அங்கே தஞ்சைச் சில்லாவிலே தம்மைப் பெற்ற தாய் தந்தையர் பிச்சை எடுத்துப் பிழைக்கும் வகையில் வாழத் தமக்கு எதிர்பாராது இப்பெரு வருவாய் வருவதை எண்ணி ஒருபுறம் வருத்தமும் ஒருபுறம் மகிழ்ச்சியும் கொண்டார்; உடனே தக்கவர் ஒருவரை அனுப்பிப் பெற்றோர்களை வரவழைக்க ஏற்பாடுசெய்தார்.

கலைவல்ல, கற்றுணர்ந்த தம் மைந்தர் சென்ற இடம் தெரியாது சிந்தை தளர்ந்து, வாடிய துன்பில் வாழ் விழந்து நின்ற அனந்தராமனின் பெற்றோர்க்கு அவர் அனுப்பிய செய்தி மகிழ்ச்சி யூட்டிற்று. அங்குச் சொந்த ஊரில் தமக்கெனக் காணி நிலம் ஒன்றும் இல்லாமையாலும், தம் மைந்தன் வாழும் இடத்திலேயே அவனுடன் வாழ்வதையே அவர்கள் சுவர்க்கமெனக்கருதிய காரணத்தினாலும் உடனே அவர்கள் அந்த மலையாள நாட்டை நோக்கிப் புறப்பட்டனர். 'யாதும்

ஊரே யாவரும் கேளீர்' என்ற பழந்தமிழ்க் கொள்கையில் புறப்படாவிட்டாலும், நிலபுலமற்றவர்களுக்கு, வாழ வசதி கிடைக்கும் இடம் சொந்த ஊர்தானே என்ற அந்த நிலையில் கணபதி அக்கிரகாரத்தைக் கைவிட்டனர், பரம்பரை பரம்பரை யாக அந்த ஊரில் வாழ்ந்த அனந்தராமனின் பெற்றேர்கள். ஆம். அந்த ஒரு தமிழ்க்குடி, நாளேற ஏற மலைநாட்டாரோடு பழகி மலையாளக் குடியாக மாறும் என்று யார்தாம் எண்ணக் கூடும்! ஒரு தமிழ்க் குடும்பம் மலையாளக் குடும்பமாக மாறக் கால் கோள் விழா அன்று நடைபெற்றது.

சில காலம் அனந்தராமன் தம் பெற்றேருடன் வாழ்ந்து வந்தார். தம் தந்தையார் வந்தபிறகு கோயிற் பணிகளை யெல்லாம் அவரிடம் ஒப்படைத்துவிட்டு, தாம் கலை ஆய்வுத் துறையிலேயே காலம் கழித்துவந்தார்; கோயிலுக்குச் செல்வது கூடக் கிடையாது; எங்கோ சோலை, ஆறு, குளம் என்று இப்படி இயற்கை வாழிடங்களில் தம்மை மறந்து தங்கிவிடுவார்; சில வேளைகளில் வடமொழி, தமிழ்க் காவியங்களில் தம்மைப் பறிகொடுத்து விடுவார். அன்புடன் தாயார் அழைத்துச் சாப்பிடச் சொல்லும் அந்த நேரத்தில்தான் தம் உணர்வு வரப் பெற்றவராவர். அப்போது அவருக்கு வயது இருபத்து நான்கு. அவர் தந்தையார் கோயில் திருப்பணிகளையெல்லாம் குறைவறக் கவனித்துவந்தார். நல்ல வரும்படியும் வந்தது. வாழ்க்கைத் தேர் அப்படியே அசைந்து அசைந்து சென்று கொண்டிருந்தது.

அந்தக் கோயிலுக்கு உரியவர் அந்நாட்டு குறுநில மன்னர் அல்லவா! அவர் அன்று வந்த ஆங்கிலரின் கையாளாகிப் பட்டமும் பதவியும் பேரும் புகழும் பெற்றுச் சிறந்திருந்தார். அவர் தம் குடும்பத்துடன் ஆண்டுக்கொரு முறை அக் கோயி லுக்கு வந்து, தம் குல தேவதைக்குப் பெரும்பூசை செய்து, விழா ஆற்றி வழிபடுவது வழக்கம். அந்த ஆண்டும் அதே திட்டத்தைச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்திருந்தார். ஆங்கில அரசாங்கம் மேன்மேல் வளர்ச்சியுற்ற காரணத்தால் அவர் தம் வாழ்வும் வளமும் வளர்ச்சியுற்றன. பேரரசர் போன்று அவர் விளங்கினர். அந்த ஆண்டு விழாவிற்காக, பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அனந்தராமனுடைய தந்தையார்

விழாவை விதிமுறை தவருது ஆற்றப் பெரு முயற்சி செய தார் என்றாலும் விழாநாளுக்கு முன்னுள், அவருக்கு எழுந் திருக்கமுடியாத அத்துணை வேதனை தரும் நோய் வந்து சேர்ந் தது. தம்மை மறந்திருந்த அனந்தராமனை அருகழைத்து விழா வுக்கு ஆற்றவேண்டிய சிறப்புக்களையெல்லாம் முறைப்படி செய்யச் சொன்னர். அவரும் தந்தையின் உடல் நிலையையும் விழாவின் இன்றியமையாமையையும் உணர்ந்து தம் கடமையை மேற்கொண்டு, விழாச் சிறப்பாக நடைபெறுதற்கு வேண்டிய அத்தனை வகைகளையும் தேடிச் செய்தார்.

விழா நாளும் வந்தது. விடிவெள்ளி தோன்று முன்னமே எழுந்து அனந்தராமன் எல்லாப் பணிகளும் முட்டின்றி முடி வேறத்தக்க வகையில் ஆட்களை அங்கங்கு அமைத்து ஆவன வற்றைக் கண்டுகொண்டிருந்தார். கோயில், அளவில் சிறியதா யினும் விழா என்ருல் பெருஞ் சிறப்புத்தான். அன்று பல மக்கள் திரளாகக் கூடுவார்கள். எத்துணைக் கூட்டம் இருப்பி னும், அக் கோயிலுக்குரிய குறுநில மன்னர் தம் குடும்பத்துடன் அங்கு வரும்போது கோயிலுள் யாரும் இருக்கக்கூடாது என்பது கட்டளை. அவர்கள் வந்தால் செய்யவேண்டிய சடங்கு களை யெல்லாம் முடித்துக்கொண்டு திரும்பிச் செல்லக் குறைந் தது இரண்டு மணி நேரமாயினும் ஆகும்.

அந்தக் குறித்த நேரம் வந்தது. சேரமகனும் அவன் குடும்பமும் கோவிலுக்குள் நுழைந்தார்கள். அந்தத் தலைவனுக்குப் பெரிய பூசாரி இல்லை என்ற வருத்தம் இருப் பினும், அவரினும் அனந்தராமன் நன்கு கற்ற விற்பனர் என்று அறிந்திருந்த காரணத்தால் வருத்தம் இன்றிச் சடங்கு களில் கருத்தூன்றிக் கவனித்துவந்தான். அவனுடன், பதின் மருக்குக் குறையாமல் வந்திருந்தனர். அவருள் இருபது வயதுடைய இளநங்கை ஒருத்தி அனந்தராமனைக் கண்டு அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள். அத் தலைவனுடைய ஒப்பற்ற உடன் பிறந்த தங்கை அவள்; மணமாகாத கன்னிப் பெண்; காதல் வாழ்வில் கருத்தைச் செலுத்திய காரிகை. அவள் அனந்தராமனைப் பற்றி அண்ணன் வாயிலாகவும் அயலவர் வாயிலாகவும் கேள்விப்பட்டிருக்கிருள். ஆனல்,

அவள் கேள்விப்பட்டதெல்லாம் அவனது அறிவுக்கலைத் திறனைப் பற்றியே. அவனது அழகிய தோற்றமும், கண்கவர் வனப்பும், காரிகையின் கருத்தை ஈர்க்கும் பண்பும் அவள் கேட்டறியாதன. 'ஏதோ கோயிற்பூசாரி, சற்றுக் கூடப் படித்தவர், எங்கிருந்தோ பிழைக்க வந்த ஏழை' என்ற அந்த அளவில் அனந்தராமனைப் பற்றி எண்ணிய அவள், அவரை நேரில் கண்டபோது தன்னையே அவருக்கு உரிமையாக்கிவிடத் தீர்மானித்தாள். அவர்தம் குல வழக்கமும் அதற்குத் தக்கதாக அமைந்தது. மலையாள நாட்டில் மாநிலப் பெரு மன்னர் முதல், குறுநில மன்னர் வரை மருமக்கள் தாயத்தைப் பற்றியவர்கள் தாமே! அவர்தம் பெண்கள் அந்தணரை மணந்து மகப் பெறுவது முறை என்று எண்ணினர். எனவே அம் மங்கை நல்லாளும் தன் அண்ணனுடன் சொல்லி எப்படியும் அனந்த ராமனோடு பிணைந்து விடுவது என்று முடிவு செய்துவிட்டாள். பிறகு அவள் கும்பிடவந்த தெய்வம் அந்தக் கோயிலில் இல்லை. அர்ச்சிக்கும் அனந்தராமனே அவளுக்குக் கடவுளானார்.

அனந்தராமன் கலைப்பித்தர்; அழகுக்கு அடிமையாகித் தம்மை மறப்பவர்; தம் எதிரிலே ஒரு அழகு தெய்வம் நின்று கொண்டு தம்மையே நோக்கி நிற்பதைக் கண்டு ஒரு கணம் திகைத்தார்; அவளது காதலைக் கண்களால் அறிந்தார்; எனினும் ஆண்டவன் முன்னும் அவள் அண்ணனாகிய தலைவன் முன்னும் தம் கடமை வழி தவறிக் காதல் நெறியில் புக விரும்பவில்லை. சில சில வேளைகளில் திரும்பிப் பார்ப்பதைத் தவிர்த்து, செயல்கள் அனைத்தும் விழாவிடையில் இருந்தன. அனந்தராமனும், அழகார் செல்வியும் ஒருவருக்கொருவர் தம் காதல் கண்களால் தம்மை நன்கு விளக்கம் செய்து கொண்டனர் அந்த விழாவில். அப்போது அனந்தராமனுக்கு அவள் அத் தலைவனின் தங்கை என்பது தெரியாது.

விழா நன்கு நிறைவேறிற்று. தந்தையும் தெளிவு அடைந்தார். அதற்குள் அனந்தராமனும் அப் பெண்ணைப் பற்றிய தகவல்களை யெல்லாம் அறிந்து கொண்டார். பணத் தாசை பற்றுவிடினும், காதல் வாழ்வில் கருத்தொருமித்து வாழ அவர் தயங்கவில்லை. காவியங்களில் கண்ட கற்பனைக்

காதல் வாழ்வினை, தமது சொந்த வாழ்விடைக் காண விரும்பியது அவர் உள்ளம். அதற்கேற்ற அணங்கே அவள் என்று உறுதி செய்து கொண்டார்.

சில நாட்களாகத் தம் மைந்தர் வாட்டத்தை அறிந்த பெற்றோர்கள் அவரை அதற்குக் காரணம் கேட்டனர். அவர் எதையும் மறைக்காது காதல் கொண்ட நிலையை உரைத்துவிட்டார்; மணவாழ்வினை மேற்கொள்வதாயின் அவளையே மணக்க வேண்டும் என்ற திட்டமான எண்ணத்தைத் திறந்து காட்டிவிட்டார்; இதுவரை மணமே வேண்டாம் என்று கூறிய தம்மைந்தர் மணம் விழைந்ததைக் கண்டு பெற்றோர் ஒருபுறம் மகிழ்ந்தாலும் எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடும் நிலையினை எண்ணி அவர்தம் உள்ளங்கள் இடிந்தேவிட்டன. மருமக்கள் தாயப்படி அவள் வயிற்றில் பிறக்கும் மகனே அடுத்த தலைவனுதற்குத் தகுதி வாய்ந்தவன். அத்தகைய ஒரு அரசி தம்போன்ற ஒரு ஏழையின் மைந்தனுக்கு மனைவியாவது என்றும் இல்லை என்று பலமுறை அனந்தராமன் தந்தையார் எடுத்துரைத்தார்; எனினும், அனந்தராமனது பிடிவாதத்தாலும், அவ்வாறு மணம் நடப்பது அத் தலைவர்தம் குடும்ப நெறியாதலானும் தம் மைந்தனுக்கு அம் மங்கை நல்லாளை மணம் பேச இசைந்தார்.

மங்களம்மாள்—ஆம்! அதுதான் அந்த அழகு செல்வியின் பெயர்—தன் மாளிகை சென்றதும் கோயில் அர்ச்சகரைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தாள். உள்ளக் கருத்தை உணர்த்த அஞ்சவில்லை அவள்; மெள்ளத் தன் உள்ளத்தை அண்ணனிடம் திறந்து காட்டினாள். அவளது கருத்துச் சரியானதாக இருந்தாலும், தன்னுடைய உயர்ந்த செல்வாக்கின் நிலையையும், உஞ்சவிருத்தி செய்யும் ஒரு அர்ச்சகப் பார்ப்பான் நிலையையும் சற்றுநேரம் சீர்தூக்கிப் பார்த்தான் தலைவன். எங்கோ பிறந்து, பிழைக்க வழியற்று, நாடோடியாகத் திரிந்து அங்குவந்து சேர்ந்த அந்த ஏழைப் பிராமணன் எங்கே? பரம்பரை பரம்பரையாகப் பெருஞ் செல்வத்தில் புரண்டு சீரும் சிறப்பும் பொருந்த வாழும் தன் குடும்பம் எங்கே? இருவர்தம் நிலையையும் எண்ணிப் பார்த்தது அவன் உள்ளம். முடிவில் அந்தச் சம்பந்தமே வேண்டாம் என்ற திட்டம் பிறந்துவிட்டது.

மங்களம்மாள் மனமுடைந்து அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

அனந்தராமன் தந்தையார் தம் மகன் கருத்தை எடுத்து விளக்கும் வாய்ப்பினைக் காணும்முன்பே, எப்படியோ மங்களம்மாளுக்கு அவள் அண்ணன் கொடுத்த பதில் தெரிந்து விட்டது; எனவே முயற்சியைக் கைவிட்டார். அந்த நிலை அறிந்த அனந்தராமன், காதல், செல்வத்தால் சீர்குலைகிறதே என்று வருந்தினார். அவர் உள்ளம் கொதித்தது. ஒரு சூளுரையும் எழுந்தது. 'தன்னை அண்டி வணங்கிப் பிழைக்கும் ஒருவன் என்ற காரணத்தால் அல்லவா இந்தத் தலைவன் இப்படி என்னை இகழ்கின்றான்! இதோ நான் திரும்பவும் இந்த ஊருக்கு வந்தால் வரும்பொழுது அவன் வணங்கத்தக்க வகையில் வருவேன். இன்றேல் திரும்புவதில்லை' என்ற சபதத்தோடு அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டார் அனந்தராமன். மறுபடியும் அவர் பெற்றோர்கள் தம் மைந்தனைப் பிரிய நேர்ந்தது கண்டு வருந்தினர்; என்றாலும், அவர்தம் வாழ்க்கைக்கு வழி இருந்தது; அத்துடன் தம் ஊரிலிருந்து நெருங்கிய உறவினர் ஒருவரையும் உடன் அழைத்து வந்து துணைக்கு வைத்துக் கொண்டனர். அனந்தராமன் சென்ற நெறி அறியார் அவர்கள்.

வாழ்வின் மேடுபள்ளங்கள் எத்தனையோ வகையில் உண்டாகின்றன. செல்வத்தாலும், பிறப்பாலும், வாழ்க்கை முறையாலும், பிறவற்றாலும் உலகின் வாழ்வுப் பாதையில் காணும் மேடுபள்ளங்கள் பல. அவற்றைக் களையவேண்டுவது அறிஞர் தம் கடன். கலையும் கலையும் கூடுவதற்கு இந்த மேடு பள்ளங்கள் வழிவிடுவதில்லை. காதல் முகிழ்ப்பதற்கும், கருத்து ஒன்றுபடுவதற்கும் இம் மேடுபள்ளங்கள் முட்டுக்கட்டை யிடுகின்றன. எங்கோ ஒருசிலர்தாம் அந்த மேடுபள்ளங்களைக் கடக்கும் ஆற்றலும் அறிவும் பெற்றுள்ளனர். அவருள் ஒருவர்தாம் நம் அனந்தராமன்.

திரும்பினால் பெருஞ் செல்வத்தோடுதான் திரும்புவேன் என்ற உறுதியுடன் மேற்கு நோக்கிச் சென்றுகொண்டே இருந்தார் அவர். எங்குச் செல்கின்றோம் என்ற எண்ணமே அவருக்கு இல்லை. அவருடன் ஒட்டிவாழ்ந்த அந்தக் கலை, செல்லுமிடமெல்லாம் அவருக்குச் சிறப்பையே அளித்தது. மங்களூர் வரை

சென்றுவிட்டார் அவர். அப்போதுதான் ஆங்கிலேயர், நாட்டைப் பல மாவட்டங்களாகப் பிரித்து மாவட்டந்தோறும் ஆங்கில நீதிபதிகளை அமைத்து ஆணை செலுத்தத் தொடங்கினர். அவர்களுக்கு நாட்டு மொழியை உணர்த்த 'துவிபாஷகராக' அந்தந்த நிலத்துக்கு ஏற்ப நல்ல அறிஞர் அமர்த்தப்படுவர். மங்களூரில் அமர்த்தப்பட்ட ஆங்கில நீதிபதி, எப்படியோ அனந்தராமனது அளப்பருங் கல்வித் திறனையும் பிற நலங்களையும், அவர் மங்களூர் சென்ற சில நாட்களுக்குள் கேள்வியுற்றுத் தம்மிடம் வரப் பணித்து, நேரில் அவர் திறமையை அறிந்து', அவரையே துவிபாஷகராக வைத்துக்கொண்டார். எங்கோ தமிழ் நாட்டின் மூலையில் தமிழ்க்குடியில் பிறந்து, தமிழ் நாட்டுக்கும், மலையாள நாட்டுக்கும் இடைப்பட்ட ஒரு நிலப்பரப்பில் தங்கி மலைநாட்டு மொழியிலும் புலமையுற்ற அனந்தராமன் இன்று அந்த நாட்டின் மேல்கோடியில் ஒரு சிறந்த பதவியை யேற்றுச் செல்வாக்குப் பெற்றவரானார்.

'துவிபாஷி' என்றால் அந்தக் காலத்தில் ஒரு பெருமதிப்பு இருந்தது. அவர் ஒருவர்தாம் ஆங்கில அதிகாரியிடம் அணுகிப் பேசமுடியும். ஏறக்குறைய அவர்தம் கருத்துக்கு மாறுவகையிலேதான் அந்த அதிகாரிகள் நடந்துகொள்வார்கள். நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், பிறவற்றையும் அவர் தாம் அதிகாரிக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். சுருங்கச் சொல்லவேண்டுமானால், அதிகாரிகளைக் காட்டிலும் அவர்களுக்கே நாட்டில் அதிக செல்வாக்கு உண்டு எனலாம். சம்பளமும் அதிகந்தான். அதிலும் அனந்தராமன் போன்ற புலமையும், அறிவும், ஆற்றலும் ஒருங்கே அமைந்த ஒருவருக்கு வாழ்வும் வளமும் பெருகுவதில் வியப்பொன்றுமில்லையல்லவா!

மங்களூரில் 'துவிபாஷி'யாக அமர்ந்த அனந்தராமன் அந்த ஆங்கில அதிகாரிக்கு ஏற்ற வகையிலும், மக்கள் மனமறிந்தும் நடந்து கொண்ட காரணத்தால், அவர்தம் புகழும் செல்வமும் ஒருங்கே வளர்ந்து வரலாயின. ஆண்டுதோறும் ஆயிரக் கணக்காகப் பொருள் பெருகிற்று. அவரது திறனைக்கண்ட அதிகாரி அவருக்கு ஒரு உயர்ந்த உத்தியோகம் தரலாம் என்று

அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்திருந்தார். அந்தக் காலத்தில் பெரிய உத்தியோகங்களுக் கெல்லாம்கூடப் பட்டம் முதலியவற்றைப் பார்ப்பதில்லை. சாதாரண ஒரு எழுத்தாளர் வேலைக்குக்கூட 'எம். ஏ.' பட்டதாரி மனுப்போடும் அநாகரிக வழக்கம் அக் காலத்தில் இல்லை. எனவே அரசாங்கத்தார் அனந்தராமன் அவர்களைப் பாலக்காட்டுவட்டத் தண்டத் தலைவராக அமர்த்தியிருந்தனர். தமது தாய்தந்தையர் வாழ்கின்ற அந்தப் பகுதிக்கே தாம் திரும்பவருகிறோம் என்பதை எண்ணும் போது அவர் மகிழ்ந்தார். அதுவும் பெருஞ் செல்வத்தோடு ஒரு பத்து ஆண்டுகளில் தாம் கொண்ட சூளுரையை நிறைவேற்றப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் அவர் வந்து கொண்டிருந்தார். அவர் தந்தையார் வயதானபோதிலும் இன்னும் அந்தக் கோயிலுக்குப் பூசாரியாகவே இருந்தார். முன்னமே தம் மகனரது புகழையும் செல்வத்தையும் கேள்விப்பட்டிருந்த பெற்றோர், அவர் தமது ஊருக்கே உயர்ந்த உத்தியோகத்தில் வருகிறார் என்பதைக் கேட்டு மிக மகிழ்ந்தனர். அனந்தராமனும் பெற்றோரைப் பணிந்தார். அனைத்தையும் முன்னமே அறிந்தவர்கள் ஆதலின், பெற்றோர் அவரை வரவேற்றார்கள். அனந்தராமனும், தமக்கு இட்ட பணியை ஏற்றார்; எடுத்துவந்த பெருஞ் செல்வத்தைக் கொண்டு நூறு காணிக்குமேல் நல்ல நிலமாக வாங்கிப் பயிரிட ஏற்பாடு செய்தார். பிச்சைக்காரராய் வந்து, கோயில் பூசாரியாகி, குறுநில மன்னரால் இகழப்பட்டு ஊரைவிட்டுச் சென்ற அதே அனந்தராமன் அன்று பெருஞ் செல்வம் மட்டுமன்றி, சிறந்த அதிகாரத்தோடு அந்த மண்ணில் காலை வைத்தார். வாழ்வின் மேடுபள்ளம் வகுத்த வழி அது.

அப் பகுதித் தலைவராக இருந்து, அனந்தராமனது இழி நிலையைப் பரிகசித்த அந்தக் குறுநில மன்னர் வயதான காரணத்தால் பதவியிலிருந்து நீங்கி ஓய்வு பெற்றிருந்தனர். இன்று தம் போன்ற குறுநில மன்னர் பலரைத் தம்கீழ் அடக்கியிருக்கும் தண்டத் தலைவராக உள்ள அனந்தராமன் நிலையை எண்ணி ஒரு புறம் வெட்கமும் ஒருபுறம் மகிழ்ச்சியும் கொண்டார்; தம் அருமைத் தங்கையை அவருக்குக் கொடுக்க முடியாது இகழ்ந்ததை எண்ணி வருந்தினர். ஆனால் காலம் கடந்துவிட்டது. அவர் பதவியில் இல்லை. அத்துடன் அவரது நிலம்பற்றிச் சிறு

சிறு சச்சரவுகள் ஏற்பட்டன. வரி கொடுப்பவர்கள் சரியாகக் கொடுக்காது சதி செய்தனர். அதைத் தீர்க்க வேண்டியவர் தண்டத் தலைவரே. எனவே, அவர்—அந்தத் தலைவர்—மேட்டில் வாழ்ந்த அந்தப் பெருஞ்செல்வர்—அனந்தராமன் முன் கைகட்டி விண்ணப்பத்தாளை நீட்டவேண்டியவரானார். மேடு மடுவாகி, மிகப் பள்ளமாக, மடு மலையாகிவிட்டது. வேறு வழியின்றி அந்தத் தலைவர் ஒருநாள் தண்ட அலுவலர் அவை முன் சென்று, குனிந்தபடியே, தமது விண்ணப்பத்தை அந்தப் பழைய கோயிற் பூசாரியிடம் நீட்டி நின்றுகொண்டிருந்தார். அனைத்தையும் எண்ணி எண்ணி அளவிடும் அனந்தராமனது அழகிய முகத்திலிருந்து அரும்பிய ஒரு புன்னகை அத் தலைவனை ஆட்கொண்டது.

22. உணவு*

திரு. நா. ஹேமாவதி அம்மையார், M.A., L.T.

உணவு இன்றியமையாதது எனச் சொல்லவும் வேண்டுமா? நம்முடைய பசி அதனை நாளும் நமக்கு அறிவிக்கவில்லையா? இருந்தும் என்ன? உணவினைப்பற்றி அறிந்தவர்கள் சிலரே என்றால் யாரேனும் நம்புவார்களா? ஆனால், அதுதான் உண்மை. "எந்திரத்திற்கு எந்த வகையான எரிகரும்பு வேண்டும்? எவ்வளவு வேண்டும்? எப்போது எப்போது வேண்டும்? ஏன் வேண்டும்?" என்று தெளிவாகச் சிறுவனும் சொல்லிவிடுவான் ஆனால் அவ்வாறு தெளிவாக நம் உணவைப்பற்றிக் கூற நாம் ஒவ்வொருவரும் முயன்றதுண்டா? எதையேனும் நாவிற்கு இனிதாக இருந்தால் போதும் என உண்கிறோம்? எப்போதேனும் உண்கிறோம்; எவ்வளவேனும் உண்கிறோம்.

உணவுப் பங்கீடு பெருந்தொல்லை என எல்லோரும் முணுமுணுக்கின்றனர். போதிய உணவு இல்லையே என்று உலகு எங்கும் வருந்துகிறது. ஆனால் இந்த உணவு நெருக்கடியில் எவ்வளவு உணவு பாழாகி ஒழிகிறது என்று எண்ணும்போது அறிவுடைய ஒவ்வொருவரது வயிறும் பற்றி எரியுமன்றோ?

*இது 1951 அக்டோபரில் எழுதிய கட்டுரை

பசியில்லாதபோது உண்ட உணவு உடலில் ஒட்டுமா? உடலை யன்றோ கெடுக்கும் அந்த உணவு? பசியாதமுன் உண்கின்ற பெருங் கொடுமையை நாம் உணர்ந்தோமா? உடலுக்கு வேண்டியவற்றை உண்ணாமல், நாவிற்கு இனியவற்றை உண்ணுவதால் பாழாகும் உணவின் கேட்டிற்கு நாமே பொறுப்பாளி என்பதனை உணர்ந்தோமா? உணவில் உள்ள உயிர்ச்சத்தான உறுப்புக்களைக் கண்பகட்டிற்காகக் களைந்து எறிவதால் உணவினைப் பாழாக்கும் பாவத்தினை உணர்வோமா? தோல் என வீசி எறிகின்றோம்; தவிடு என வாரி இறைத்து நீர் விட்டுக் கழுவிக் கழுவிச் சாக்கடையில் உயிரைக் கரைக்கின்றோம். காய்கறி வெந்த நீரையும் உயிர் வேவவேவக் கமரிடை உகுத்த பால் எனக் கொட்டுகின்றோம். என்ன பாவம்! எவ்வளவு பாழாகிறது?

எந்திரம் எவ்வளவு வேலை செய்கிறதோ அதற்கேற்ற எரி கரும்பினைத் தீனியாக அதற்குத் தரவேண்டும். எந்திரங்களுக்கு வேண்டும் சூட்டினை அறிஞர்கள் அளந்தறிந்து உள்ளார்கள். அதன் பயனாக, இவ்வளவு கலோரி (Calory) சூடு வேண்டும் என்று வரையறுத்து அறிஞர்கள் கூறுகின்றார்கள். அப்படியே மனிதனையும் ஆராய்ந்துள்ளார்கள். இந்த மனித உடல் எந்திரம் வேலை செய்ய வேண்டுமானால் நாளுக்கு 2000 முதல் 6000 கலோரி வரைச் சூடு வேண்டும். வயதிற்கும் வேலைக்கும் ஏற்ப இஃது ஏறவும் குறையவும் செய்யும். அவர் அவர்கள் இதனை முதல் முதல் வரையறுத்துக்கொள்ள வேண்டும். தங்களுக்குவேண்டிய அளவிற்கேற்ற சூட்டினைத் தரும் உணவினை உண்ணத் திட்டம் இடல் வேண்டும். மாணவிகள் குடும்பக் கலையில் இதனைச் சிறப்பாகப் பயின்றுவரக் காண்கிறோம். இந்த உணவுத் திட்டம் அவரவர் வருவாய்க்குத் தகுந்ததாகவும் அமையவேண்டும்.

கலோரி அளவினை மட்டும் அறிந்தால் போதாது? நமக்கு வேண்டும் சூட்டினை எல்லாம் ஒரு பொருள் வழியாகவே அடைதல் கூடும். ஆனால் அது தகாது. நாம் உண்ணும் பொருள்களில், கரிநீர்ப் பொருள் எனத்தக்க கார்போ ஹைட்ரேட்டுகள் உண்டு. இவை மாவுப் பொருள்கள்

என்றும் கன்னற் பொருள்கள் அல்லது சர்க்கரைப் பொருள்கள் என்றும் இருவகையாம். இவற்றில் கரி உண்டு; நீரியமாம் ஹைட்ரஜன் உண்டு; உயிரியமாம் ஆக்ஸிசன் உண்டு. இவை தாம் உண்மையில் எரி கரும்புகள், நம் மூச்சோடு வரும் உயிரியத்தோடு சேர்ந்ததும் இவை எரிந்து ஆற்றலைத் தருகின்றன; உடலுக்கு வேண்டிய சூட்டினையும் தருகின்றன. நம்முடைய தானியங்களில் மாவுப் பொருள்களும், பழம், கரும்பு, மரச்சாறு, முதலியவற்றில் கன்னற் பொருள்களும் இருப்பதனையும் அறிவோம். இவைதாமே அடிப்படை உணவுகள்!

ஆனால் 'நெய்யில்லா உண்டிபாழ்' என்று கிழவி பாடவில்லையா? நெய் ஒரு கொழுப்புப் பொருள். இதுவும் முன்னைய பொருள் போன்றதே. ஆனால், இதிலுள்ள உயிரியம் குறைவு. இது எரிந்தால் சூடு மிகுதியாகும். இது புதைபொருளாக உடலில் இருந்து உணவிலாது வருந்தும்போது எய்ப்பினில் வைப்பாக நமக்கு உதவும் சமய சஞ்சீவியாகும். குளிர் முதலியவற்றைப் பொறுத்துக்கொள்ளும் வகையில் தோலின் கீழே போர்வை போல இஃது அமைவதும் உண்டு. இதனைச் சேம நிதியாகக் கொள்ள வேண்டுமேயன்றி நாள்தோறும் பேரளவில் கொண்டால் உடலம் பருத்து அழகின்றிக்கெடும்; உடலெந்திரம் ஓடுவதும் தடைபடும்: அதன்மீது வீண் சுமையை ஏற்றுவது நல்லதா? உணவுப் பொருள்களுக்குச் சுவையூட்டுவது இப்பொருளே. ஆனால், இது சீரணமாவதற்கு நீண்ட நேரம் ஆவதே ஒரு தற்காப்பாகும்.

எந்திரத்தை ஓட்ட ஆற்றல் வந்தால் மட்டும் போதுமா? சூடு பிறந்தால் மட்டும் போதுமா? உடலின் பலவகையான கருவறைகளையும் நம் உணவுப் பொருள் அமைக்க வேண்டும் அன்றோ? ஆதலின் ஊனாக்கிகள் என்றபுரோடீன்கள் வேண்டும். பருப்பு என்றால் நமது நாவில் நீரூறவில்லையா? பாலிலும் இறைச்சியிலும் முட்டையிலும் இப் பொருள் உண்டு. இதில் முன்னே கூறிய மூன்று பொருள்களோடு நைட்ரஜன் என்பதும் சிறிது எரிகந்தகமும் உள்ளன. இவை உயிரணுக்கள் என்ற செல்களை அமைப்பதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன.

உளுந்தம் பருப்பு வடையையே தின்று களித்து நாளைக் கழிக்கலாமா? இந்த ஊணுக்கியிலும் கரி முதலிய இருப்பதால் இதுவும் எரிந்து ஆற்றலைத்தரலாம்; சூட்டினைத்தரலாம். ஈர விறகினை எரித்தால் புகையும் சாம்பலும் நிறைய விழுந்து அடுப்பினை அவித்து விடுவதுபோல இவை எரிந்தால் எழுகிற கழிவுப் பொருள்களை உடலிலிருந்து அகற்றுவது அருமை. ஆதலின், நெய்ப் பொருளே உண்டு வாழ்வது கூடாது; பருப்பே தின்று வாழ்வதும் கூடாது; மாவும் சர்க்கரையுமே தின்று வாழ்வதும் கூடாது. இவை மூன்றும் கலந்த அளவில் உண்ண வேண்டும். ஆனால் நாம் மிக மிக விரும்பி உண்கிற சிற்றுண்டி களில் பெரும்பான்மையன இவ்வாறு கலவையாக இல்லாமல் இருப்பதனை நினைத்துப் பார்த்திருக்கிறோமா? வாய்க்கு அடிமை யானால் வயிற்றை வளர்க்கலாம்; உடலை வளர்க்க முடியாது; உடலில் வாழும் உயிரையும் வளர்க்க முடியாது. இந்தக் கலவை அளவில் உண்ணாத உணவு எல்லாம் பாழ் என்பதனை என்றும் நாம் மறத்தல் ஆகாது.

நான்காவதாக உணவுப் பொருளில் இருப்பது நீர். நம் உடலில் பெரும்பான்மை நீரே அன்றோ? கழிவுப் பொருளாக ஒழியும் நீர்க்கு ஈடு செய்ய வேண்டாவா? அந்த அளவினை அறிவோமா? அளவுக்குமேல் குடிப்பதும் தவறு; குறைவாகக் குடிப்பதும் தவறு. இந்தச் சிறு உண்மையேனும் அனுபவத் தில் கொண்டுவந்துள்ளோமா?

ஐந்தாவதாக உணவுப் பொருளில் உள்ளவை சில உப்புக் களாம். எலும்புக்குச் சுண்ணாம்புச் சத்து வேண்டும். இரத்தம் உயிரியத்தினைக் கவர வேண்டுமானால் இரும்பு வேண்டும். இன்னும் பலவகைப் பொருள்களும் மிகமிகச் சிறுசிறு அளவில் உடலுக்கு வேண்டியுள்ளன. அவை செய்யும் அற்புதங்கள் பலப்பல. அவை பழம், கீரை, தானியம் முதலியவற்றால் காணக்கிடக்கின்றன. அவற்றின் நுட்பத்தினை அறிந்து கொள்வதே இலக்கியச் சுவையினும் சிறந்த இன்ப அறிவுச் சுவையைத் தரும்.

இவற்றினை எல்லாம்விட இந்த நூற்றாண்டு கண்ட உண்மைப் பொருள்களே சிறந்தவை. இவையே வைடமின்கள்

என்ற உயிர்ச் சத்துக்களாம். இவற்றை A B C D என்று எழுத்துக்கள் கொண்டே பெயரிட்டு அறிஞர்கள் வழங்குகிறார்கள். சில சில நோய்கள் வருகின்ற வரலாற்றினை உணவு முறையே ஆராய்ந்தபோது இந்த உயிர்ச் சத்துக்கள் தம்தம் உண்மையை வெளிக் காட்டலாயின. இந்த நூற்றாண்டில் இந்த உயிர்ச் சத்துக்களைச் செயற்கையாகச் செய்து மருந்தாகத் தரும் வியப்பினைக் காண்கிறோம். சுருக்கமாகக் கூறுமிடத்து, இயற்கையான உணவில் இந்த உயிர்ச்சத்துக்கள் பொங்கித் ததும்புகின்றன; செயற்கையாக இந்த உணவுகளை மாற்றும் போது இவை மறைகின்றன. அதனால் செயற்கை உணவுகளை உட்கொள்ளும் உயிர்கள் பலவகை நோய்களுக்கு உள்ளாகின்றன.

பச்சை இலைகள்மீது விழும் கதிரவன் ஒளியில் A வைடமின் எழுகிறது. இந்த வைடமின் இல்லையானால் குருடு, பேதி, சீதபேதி, நீர்க்கோவை, க்ஷயம் முதலியன வரும். இதனைக் கண்ணோய்க் கூற்றுவன் எனலாம். பால், கீரை, கறியிலைகள், வெண்ணெய், மீன் எண்ணெய், முட்டை, ஈரல், இறைச்சி முதலியவற்றில் இந்த உயிர்ச்சத்து உண்டு. உடலை வளர்த்துப் பழுதுபார்த்து, இரத்தத்தைத் தக்க அளவில் நிறுத்தி, நோய்களின் நின்றும் உடலைக் காப்பாற்றுகிறது இது.

வைடமின் B என்பது பால், முட்டை, ஈரல், தானியங்கள், பருப்பு, வயலைக்கீரை, தக்காளி முதலியவற்றில் நிறைந்துள்ளது. தவிட்டிலும், கோதுமையின் மேல் தோலிலும் உள்ள இந்த உயிர்ச்சத்தினைப் பாழாக்கிப் பின் மருந்தாக அவற்றை உண்ணுவது அறிவுடைமையா! இது மூளை, நரம்பு, மாங்காய் (Kidney), இருதயம் முதலியவற்றை வலிவுடன் நிலை நிறுத்திச் சீரண சக்தியை அளவில் அமைத்து நரம்புநோய் வராமல் காத்தலின் இதனை நரம்பு நோய்க் கூற்றுவன் எனலாம்.

வைடமின் C என்பது இரத்த நோய்க் கூற்றுவனாகும். இது இல்லையானால் இரத்தம் கெட்டு வாய்ப்புண் முதலியன உண்டாய் உயிருக்கே உலை வைக்கும். இரத்தத்தினைத் தூய நிலையில் அமைத்துப் பல்லையும் ஈரலையும் உட்படச் சீரண மண்டில

லத்தினைக் காப்பது இதுவே ஆம். தக்காளி, ஆரஞ்சு முதலிய பழங்களிலும் பச்சைக் காய்கறி கீரைகளிலும், பச்சை இறைச்சி ஈரல் முதலியவற்றிலும் இது வெள்ளமிடுகின்றது. முளைகட்டிய தானியங்களில் இது பொங்கித் ததும்புகிறது. இயற்கை நிலையில் உண்ணுது, இவற்றைச் சமைத்தும் உலர்த்தியும் தகரத்தில் அடைத்தும் வருவதால் இந்த உயிர்ச்சத்துப் பாழாய் ஒழிந்து நாகரிகத்துக்கு நாம் கட்டும் கப்பமாக அழிகிறது.

வைடமின் D என்பதே என்பு நோய்க்குக் கூற்றுவனுகும். எலும்பின் வளர்ச்சி குன்றி மென்மையாவதும், பல் கெடுவதும் நரம்புத் தளர்ச்சி எழுவதும் இந்த உயிர்ச் சத்து இல்லாமையா லேயே ஆம். பால், மீன் எண்ணெய் என்பவற்றில் இது வெள்ள மாக அலைகிறது. முட்டை, வெண்ணெய், தேங்காய் முதலியவற் றிலும் இது உண்டு. இதனை எளிதில் பெறவே கதிரவன் நம் மீது அன்பாய்க் காய்கின்றுன் ; கதிரவன் வெயில் உடலில் பட்ட தும் இது உடலில் ஊற்றெடுத்துப் பாயும். ஆனுல் நம்முடைய நாகரிகம் பல பல போர்வைகளையும் சட்டைகளையும் போர்க் கவசங்களாகப் பூண்டு கதிரவன் நம்மை அண்டாதபடி தடுக் கின்ற வியப்பினை என்ன என்பது ?

செய்யுட் பகுதி

(சிறப்பு)

1. நீதி

சிலப்பதிகாரம்

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்.

—இளங்கோவடிகள்

2. பழமொழி

கருத்தை முகம் அறிவித்தல்

வெள்ளம் வருங்காலை ஈரம்பட் டஃதேபோல்
கள்ள முடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர் கண்ணாய் ! ஒளிப்பினும் உள்ளம்
படர்ந்ததே கூறும் முகம்.

தாம் நன்மை யடைதற்குத் தாமே காரணம்

எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ! மற் றில்லை
தமக்கு மருத்துவர் தாம். 2

வஞ்சகர் தூரத்தில் ஏவப்பட்ட கரும முடித்துத் திரும்பார்

அகந்தூய்மை யில்லாரை ஆற்றப் பெருக்கி
இகந்துழி விட்டிருப்பின் அஃதால்— இகந்து
நினைந்து தெரியானாய் நீள்கயத்துள் யாமை
நனைந்துவா என்று விடல். 3

பிறரை நம்பி மறையை வெளியிட்டவன் கெடுதல்

விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா
அளிந்தார்க ணாயினும் ஆராயா னாகித்
தெளியான் விளிந்து விடும். 4

இருக்க இடம் பெற்றால் படுக்க இடம் பெறுவார்

சிறிதாய கூழ்பெற்றுச் செல்வரைச் சேர்ந்தார்
பெரிதாய கூழும் பெறுவர்—அரிதாம்
இடத்துள் ஒருவன் இருப்புழிப் பெற்றால்
கிடப்புழியும் பெற்று விடும். 5

—முன்றுறை அரையனார்

3. ஏலாதி

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருண்மேல்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் றீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிறை. 1

இளமை கழியும் பிணிமூப் பியையும்
வளமை வலியிவை வாடும்—உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி. 2

குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான்—இறுகானுய்
ஈடற் றவர்க்கீவா னுயி னெறிநூல்கள்
பாடிறப்ப பன்னு மிடத்து. 3

களியான்கள் ளுண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான்—எளியாரை
எள்ளானீத் துண்பானே லேதமின் மண்ணுண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து. 4

தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினுர் வாணிகம்—போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணிலவர்க் கீய்ந்தார்
வைத்து வழங்கிவாழ் வார். 5

—கணிமேதையார்

II. சிறு பிரபந்தங்கள்

1. அற்புதத் திருவந்தாதி

நினைந்திருந்து வானவர்கள் நீள்மலராற் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேற்(கு)
என்செய்வான் கொல்லோ இனி. 1

இனியோநாம் உய்ந்தோம் இறைவன் அருள்சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம் நெஞ்சே—இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைகடலை நீந்தினோம் காண். 2

காண்பார்க்கும் காணலாம் தன்மையனே கைதொழுது
காண்பார்க்கும் காணலாம் காதலால்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்(கு)
ஆதியாய் நின்ற அரன். 3

அரனென்கோ நான்முக னென்கோ அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்—முரணழியத்
தானவனைப் பாதத் தனிவிரலால் செற்றானை
யானவனை எம்மானை இன்று. 4

—காரைக்காலம்மையார்

2. திரு இரட்டை மணி மாலை

அன்பால் அடைவதெவ் வாறுகொல் மேலதோர் ஆடரவம்
தன்பால் ஒருவரைச் சாரவொட் டாதது வேயுமன்றி
முன்பா யினதலை ஓடுகள் கோத்தவை பார்த்து வெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர் ஏறுகந் தேறுவதே. 1

ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்
ஆறெலாம் பாயும் அவிர்சடையார்—வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு. 2

—காரைக்காலம்மையார்

3. திருப்புகழ்

வைத்தீச்சுரன் கோயில்

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலத் தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே
வரத்துறை நீதர்க் கொருசேயே
வயித்திய நாதப் பெருமாளே.

—அருணகிரிநாதர்

4. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்
செங்கீரைப் பருவம்

விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே

கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக்
　　கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல்
　　கருவடி வுண்ணுமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைத்துநின்
　　ஒண்பத நோவாமே
ஒருதா ளுந்தி யெழுந்திரு கையும்
　　ஒருங்கு பதித்துயிர்ந்(து)
அருள்பொழி திருமுக மசைய அசைந்தினி
　　தாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
　　ஆடுக செங்கீரை.

—குமரகுருபரர்

5. முக்கூடற்பள்ளு

சிந்து

ஆற்று வெள்ளம் நாளைவரத்
தோற்றுதே குறி—மலை
　　யாளமின்னல் ஈழமின்னல்
　　சூழ மின்னுதே.
நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே—கேணி
　　நீர்ப்படு சொறித் தவளை
　　கூப்பிடு குதே.
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக் குதே—மழை
　　தேடி யொரு கோடி வானம்
　　பாடி யாடுதே.
போற்று திரு மாலழகர்க்
கேற்றமாம் பண்ணைச்—சேரிப்
　　புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்
　　துள்ளிக் கொள்வோமே.

III. புகழ்ப்பாக்கள்

1. மகாத்மா காந்தி பஞ்சகம்

வாழ்கநீ! எம்மான், இந்த
    வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
    விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
    பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
    மஹாத்மா! நீவாழ்க! வாழ்க! 1

அடிமை வாழ் வகன்றிந் நாட்டார்
    விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி
    ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
    படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்,
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
    புவிக்குளே முதன்மை யுற்றாய்! 2

வேறு

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
    மூலிகை கொணர்ந்தவ னென்கோ?
இடி மின்னல் காக்கும் குடைசெய்த னென்கோ?
    என்சொல்லிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
    வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
    படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய்.

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
    பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
    கடவுளின் மக்களென் றுணர்த்தல்;

இன்னமெய்ஞ் ஞானத் துணைவினை மற்றுங்
கிழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

பெருங் கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய் ;
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த் தொண்டர் தங்கள்
அறவழி யொன்று நீ யறிந்தாய் ;
நெருங்கிய பயன் சேர் 'ஒத்துழை யாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்க நல்லறத்தே. 5

—ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார்

2. சுந்தரன் பாமாலை

(அறிஞர் பெருந்தகையும் பேராசிரியருமாகிய சாவ்பகனூர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இக வாழ்வை நீத்து 1947-இல் ஏப்ரல் மாதத்தோடு ஐம்பது ஆண்டுகள் நிறைந்தன. இந் நிறைவு நாளின் நினைவுக் குறியாகப் பின்வரும் கவிதைகள் பாடப்பெற்றன.)

வெண்பா

ஆரா அமுதம் அனைய தமிழ்வளர்த்த
பேரா சிரியர் பெருமானைச்—சீராரும்
வஞ்சிமா மன்னர் மதித்தகுண சுந்தரனை
நெஞ்சமே நித்தம் நினை.

வேறு

தாலம் புகழும் திருஞான
சம்பந் தப்பேர் முனிவாழ்ந்த
கால மதனை ஆராய்ந்து
கற்றோர் மெச்சக் கணித்திட்டோன்,
ஆலப் புழைமா நகருடைய
அறிஞன் பெருமாள் அரும்புதல்வன்,
சீலஞ் சிறந்த சுந்தரனைச்
சிந்தை மகிழ்ந்து போற்றுவமே

தில்லைப் பெருமான் அருள்பெற்றுச்
செல்வன் நடராஜனைப்பெற்றேன்,
நெல்லை இந்து கலாசாலை
நிறுவித் தலைமை தாங்குகின்றேன்,
சொல்லி லமுதம் கனிந்துசுவை
சொட்டச் சொட்டக் கவிதருவோன்
நல்லன் பஹதூர் சுந்தரனை
நாளும் நாளும் போற்றுவமே. 3

ஊக்கங் குன்றி உரம்குன்றி
ஓய்ந்த தமிழர்க் குணர்வூட்டி,
ஆக்கம் பெருக, அறிவோங்க,
ஆண்மை வளரச் செய்துஉலகில்
மீக்கொள் புகழைப் பெற்றெழுந்த
விறலோன் நமது சுந்தரனைப்
பாக்கள் புனைந்து மகிழ்ந்துநிதம்
பாடி இனிது போற்றுவமே. 4

தேடி வைத்த செல்வமெல்லாம்
திரைகொண் டோட வருந்திமுகம்
வாடி மெலிந்த தமிழணங்கு
மகிழ்ந்து மகிழ்ந்து கூத்தாட,
நாடும் அரிய மனோன்மணிய
நாடகத்தைச் செய்தளித்த
நீடு புகழோன் சுந்தரனை
நித்தம் நித்தம் போற்றுவமே. 5

வையம் புகழும் திருவஞ்சி
வளநா டதனை முடிசூடிச்
செய்ய முறைசெய் தரசாண்ட
சேர மன்னர் சரிதமெலாம்
ஐயம் இன்றிச் சிலையிலெழுத்து
ஆய்ந்து சொன்ன பேரறிஞன்
துய்ய சீலன் சுந்தரன்பேர்
சொல்லி நாளும் போற்றுவமே. 6

ஆடும் தில்லை அம்பலவன்
அடிகள் மறவா அன்புடையோன்,
பாடித் திருவா சகத்தேனைப்
பருகிப் பருகி இன்புறுவோன்,
கோடைப் பதிசுந் தரமுனியைக்
குருவாய்க் கொண்ட குணசீலன்,
ஈடி லாத பேரறிஞன்,
எங்கள் பெரியன் சுந்தரனே. 7

வேறு

சித்திரம் வரைந்து காண்போம் ;
சிலைகண்டு தொழுது நிற்போம் ;
சத்திரம் கட்டி வைப்போம் ;
தருமங்கள் பலவும் செய்வோம் ;
வித்தகன் சுந்த ரன்பேர்
மெய்ம்மையாய் விளங்க வைத்தல்,
இத்தமிழ் நாட்டில் வாழும்
எம்மனோர் கடமை யன்றோ ! 8

வேறு

எம்மொழியும் ஈடாகா திம்மொழிக் கென்றுலகம்
செம்மையுறக் கண்டு தெளிந்திடவே-நம்மினிய
செந்தமிழின் தெய்வச் சிறப்பெல்லாம் யாருரைத்தார்
சுந்தரனைப் போலத் தொகுத்து. 9

—கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை

IV. தனிப் பாடல்கள்

இந்திரன் கலையா யென்மருங் கிருந்தா
னக்கினி யுதரம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்
அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
அகத்தினின் மக்களும் யானும்
அநிலம தாகு மமுதினைக் கொள்வோம்
யாரெதி ரெமக்குளா ருலகில்

சந்தத மிந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெய்யு மெம்மை நிலைசெய்சற் கீர்த்திச்
சாளுவ கோப்பைய னுதவும்
மந்தர புயத்தான் திப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா வன்னோன்
வாக்கினாற் குபேர னாக்கின னவனே
மாசிலீ சானபூ பதியே.

—சொக்கநாதப் புலவர்

ஒருநாள் பாண்டியன் தன் சபையிலிருந்த வித்வான்களை நோக்கி நாரையின் வாய்க்கு எதனை உவமிக்கலாம் என்று வினவ, அவர்கள் அதற்கு மறுமொழி சொல்லாதிருக்க, அன்றிரவில் அரசன் நகர சோதனை வரும்போது, வறுமையால் மெலிந்து பொருள் தேடிவரப் புறப்பட்ட இந்தப் புலவர், மதுரைப்பதியின் ஒரு சத்திரத்தில் படுத்துக்கொண்டு தமது வறுமையை நினைத்துக் கூறியது.

நாராய் ! நாராய் ! செங்கா னாராய் !
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா னாராய் !
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்,
எம்மூர்ச் சத்தி முற்ற வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழை யுள்ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை|யாளனைக் கண்டன மெனுமே.

—சத்திமுற்றப் புலவர்

குறிப்புரை

பொதுப் பகுதி

I. கடவுள் வாழ்த்து

இச் செய்யுளைப் பாடியவர் இராமலிங்க அடிகள். அவர் 1823-ஆம் ஆண்டில் சிதம்பரத்திற்கு வடமேற்கில் உள்ள மருதூரில் தோன்றினர். அவர் பாடிய பாடல்தொகுதிக்குத் திருவருட்பா என்பது பெயர். ஒவ்வொரு பாடலும் படிப்போர் உள்ளத்தை நெகிழ்விக்கும் ஆற்றல் வாய்ந்தது.

தரு-மரம். கனி-பழம். சுகந்தமணம்-நறுமணம். ஆடையில்-கூத்து ஆடும்போது. பொது-மன்றம். அலங்கல்-மாலை.

II. காதை

1. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் என்பது ஐம்பெருங் காப்பியங்களுள் முதலாவது; சேரமன்னன் நெடுஞ்சேரலாதனுடைய மைந்தரும் செங்குட்டுவன் தம்பியாருமாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது. இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு என்பர்.

கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாக ஒப்புவிக்கும் பகுதி அடைக்கலக்காதை எனப்படும்.

பல்கிய-பலவாயிருக்கின்ற. புறஞ்சிறைமூதூர்-புறமதிற்பள்ளி. பூங்கண்-மலர் போலும் கண். பால்மடை-பாற்சோறு. கோவலர்-இடையர். கொடும்பாடு-கொடுமைப்பாடு. தீது-மனத்தழுக்கு. செவ்வியன்-பொறுமை யில்லான். ஏதம்-தீங்கு. வானவர்-வாழ்வோர். கடி-காவல். அஞ்சனம்—மை. மடி-மடிப்புடைவை. ஆயம்-தோழியர். காவல்-செவிலித் தாயார். மண்மகள்-பூமி தேவி. பொற்பு-அழகு. வானம்-காலமழை. பிழைப்பு-தவறுதல். கொற்றம்-வெற்றி.

2. கம்பராமாயணம்

இந் நூல் கம்பரால் இயற்றப்பெற்றது; இராம கதையைக் கூறுவது. கம்பர், சோழ நாட்டில் திருவழுந்தூரில் பிறந்தவர்; திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர்; 12-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்பர்.

1. ஒரீஇ-நீங்கி. தாவரம்-அசையாப் பொருள். சங்கமம்-அசையும் பொருள்.

2. ஆயிடை-அவ்விடத்தில். துப்பு-பவளம். அண்ணல்-இராமபிரான். உடற்ற-போர் செய்ய. சீற்றம்-கோபம்.

3. கூற்று-எமன். முரண்-வலி. துகள்-தூளி; தூசு. நாற-பறக்க. குனிப்பு-வளைவு.

4. மைஉற-தீங்கு அடைய. கவர் அயில்-சூலம். தானை-சேனை.

5. சுரிகை-உடைவாள். அமர்-போர். கிளர்ந்த-விளங்கிய.

6. அரவம்-பாம்பு. ஒலி உலாம்-ஒலி மிக்க. கூயினன்-விளித்தான். வள் உகிர்-கூரிய நகம்.

7. கடையுகம்-யுகமுடிவு. அசனி-இடி.

8. புளினர்-வேடர். உம்பர்-விண்ணுலகர். ஏன்றனன்-ஏற்றுச் சமைந்தேன். துணைவற்கு-இராமனுக்கு.

9. துடி-பாலை நிலப்பறை. எறி-அடி. அம்பி-படகு. ஓட்டலீர்-ஓட்டாதீர்கள். கடி-காவல். பெயர்த்து-மறுபடி.

10. செஞ்சரம்-இரத்தம் தோய்ந்த அம்புகள். உய்ஞ்சு-உய்ந்து; பிழைத்து. ஏசாரோ-இகழ்ந்து கூறார்களோ?

11. புனல்-தண்ணீர். வேழம்-யானை. தோழமை-நட்பு.

12. முன்னவன்-அண்ணன். பின்னவன்-தம்பி. அன்னவை-அவை. சரம்-அம்பு. வாயாவோ-தைக்காமல் போமோ.

13. ஏவம்-துன்பம். கொடுபோய்-கொண்டுபோய்.

14. புவி-உலகு. மாயேனோ-இறக்கமாட்டேனோ. கேண்மை-நட்பு; உறவு. கழிக்குவென்-கழிப்பேன்.

15. தும்பி-யானை. மா-குதிரை. வம்பு-வாசனை. தார்-மாலை

16. கிடக்கிடு-கிடக்கட்டும். சிலை-வில். கூறை-கொள்ளை. தானை-சேனை.

17. கொடை-வள்ளன்மை. சீரை-மரவுரி. பிணக் குவை-பிணக்கும்பல். துன்று-நெருங்கிய. நிரை-அலை. தூராதோ-தூர்க்கமாட்டாதா?

18. சாடி-அழித்து. வேடு-வேடன்.

19. வனம்-காடு. கோ-இராமபிரான். முனியத்தகும்-வெறுக்கக்கூடும். இறை-சிறிதும். ஏ-அம்பு. ஆம்-சாம். கூழ்-பயிர்.

20. பணை-மூங்கில். அரியேறு-ஆண் சிங்கம்.

21. நாவாய்-மரக்கலம். கரியேறு-ஆண்யானை. வேலை-கடல். கொங்கு-மகரந்தம். குறி-பெயர்.

22. திண்மை-கலங்கா நிலைமை. அல்-இருள். மணி-அழகு. நெறி-வழி.

23. துரிசு-குற்றம். மன்-இராமபிரான்.

24. துன்று-நெருங்கிய. குஞ்சி-மயிர்முடி. எயினர்கோன்-வேடர் தலைவன். துண் என்றான்-நடுக்கமடைந்தான்.

25. வற்கலை-மரவுரி. மதி-சந்திரன். துயர்-துன்பம்.

26. நம்பி-சிறந்த ஆண்மகன். பிழைப்பு-தீய செயல்.

27. இடுக்கண்-துன்பம். உலையாத-கெடாத. குறிப்பு-மனக்கருத்து. பெயர்கின்றேன்-திரும்பி வருகின்றேன். நெறி-வழி.

28. மலர் இருந்த அந்தணன்-பிரமன். களிகூர-களிப்பு மிக. சென்னி-தலை. கீர்த்தியான்-மிக்க புகழுடையவன்.

3. வில்லிபுத்தூரார் பாரதம்

வில்லிபுத்தூரார் என்பவரால் இயற்றப்பட்ட பாரதம் வில்லிபுத்தூரார் பாரதம் எனப்படும். வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் தோன்றியவர்; அந்தணர் மரபினர்; வில்லிபுத்தூர் ஆழ்வார் எனவும் அழைக்கப்படுபவர்; வக்கபாகை வரபதி யாட்கொண்டான் என்பவரால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் காலம் பதினான்காம் நூற்றாண்டு ஆகும்.

பாண்டவர்கள் இந்திரப்பிரத்தம் என்னும் நகரத்தை அமைத்துக்கொண்டு, அதில் வாழ்ந்த செய்தியைக் கூறுவது இந்திரப்பிரத்தச் சருக்கமாகும். இஃது ஆதிபர்வத்தின் ஆறாம் சருக்கம் ஆகும்.

1. பஞ்சபூதம்-மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன. புலன்-ஐண்டுப் பொறி: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. புலன்களின் பயன்-விஷயங்கள் : ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஒலி என்பன. ஞாதம்-ஆன்மா. ஆதியான்-முதற் கடவுளாகிய திருமால். பணிவாம்-வணங்குவோம்.

2. ஐயிருபதின்மர்-துரியோதனன் முதலாய நூறுபேர் கௌரவர். ஐவர்-பஞ்சபாண்டவர். தெவ்வர்-பகைவர். வெருவ-அஞ்ச. தமர்-சுற்றத்தார். இகலோன்-வலிமையையுடைய திருதராட்டிரன்.

3. முரசு உயர்த்த வேந்தன்-முரசக் கொடியை உயர நாட்டிய தருமன். முழுமுரசு-பேரிகை. கோடித்து-அலங்கரிப்பித்து. கடி-விளக்கம். எழு-ஒலி எழும். பகீரதி-கங்கை. வலம்புரி-சங்கு. சுருதி—வேதம்.

4. ஆடகம்-பொன். அரி-சிங்கம். பத்தி-ஒழுங்கு. தசும்பு-குடம். சோமன்-சந்திரன்.

5. உதயமால் வரை-பெரிய உதயமலை. ராகம்-நிறம். துதை-நெருங்கிய. அளி-வண்டு. ததைந்த-மொய்த்த. சென்னி-தலை. பதயுகம்—இரண்டு அடி. இதயம் ஒத்து-மனங்கலந்து. நீராசனம்-மங்கள ஆலத்தி.

6. போதர-போக. மடவார்-மகளிர். குழு-கூட்டம். எழ் உயர்-எழுமுழம் உயர்ந்த. குஞ்சரம்-யானை.

7. குரவர்-பெரியோர். மலர் பதம்-தாமரை மலர் போன்ற அடி. கோநகர் - தலைநகரான அத்தினபுரி. இருக்கை-அரசு வீற்றிருத்தல். கொற்றவன் - திருதராட்டிரன். தூநகர்-நல்ல நகரம். வைகும்ஆறு-இருக்கும்படி.

8. அங்கண்-அழகிய இடம். மா-அகன்ற. ஞாலம்-பூமி. அங்குரித்த-தோன்றிய. மாசுணத்தோன்-பாம்புக்கொடியையுடைய துரியோதனன். தழல் வனம்-நெருப்புப்போல் கொடிய காடு.

9. பூ-காயாம்பூ. புயல்-மேகம். இவ்வுழி-இவ்விடம். நாயகக் கடவுள்-இந்திரன். முன்னுதலும்-நினைத்தவுடன். நாகர் நாயகன்-தேவர் தலைவனான இந்திரன்.

10. அமரர் சேகரன் - தேவர் தலைவனான தேவேந்திரன். புயங்கள் பாதலம்-சர்ப்ப சாதியாரது பாதாள உலகம். வியல்-அகன்ற.

11. சமைத்தான்-உண்டாக்கினன்.

12. துகிர் - பவளம். தாளம்-முத்து. ஆகாம்-இடம். அரி-திருமால். இமையோர் - தேவர்கள். பொருப்பு-மலை. தாணி-உலகம். தபதி-சிற்பி.

13. மன்-அரசன். பதி-நகரம். புரை-குற்றம்.

14. சந்திர ஆபதம்-சந்திரனுக்கு ஆபத்து. தினகான் - சூரியன். மந்திரம்-மாளிகை. மஞ்சம்-கட்டில். மறுகு-தெரு. கொந்து-கொத்து. இந்திரா பதி-திருமகள் கணவனை திருமால்.

15. பரிமளம்-வாசனை. மதுபம்-வண்டு. தொடையல்-மாலை. மயிலை-மயில் போன்ற சாயலையுடைய திரௌபதியை. அவனி மயில்-பூமிதேவி. மன்றல்-மணம். வளை-சங்கு. புரிசை-மதில்.

16. உரம்-வலி. எயில்-மதில். கோயில்-அரண்மனை. சிற்பவித்தகன்-விசுவகர்மன். காம்-கை.

17. புரப்பது-பாதுகாப்பது. நவிர்-குற்றம். வாய்மை-உண்மை. உம்பர்-மேல். மஞ்சம் கொடி-மேல் நிலையின் முகப்பு. நூபுரம்-சிலம்பு. அரவம்-ஒலி.

18. சுடிகை-உச்சிக் கொண்டை. அவிர் - விளங்குகின்ற. எறிப்ப-வீச. இரவி-சூரியன். பவனன்-வாயு. புரவி-குதிரை. புரி-நகரம்.

19. இல்லம்-மாளிகை. சாளரம்-பலகணி. நேமி-சக்கரம். பரி-குதிரை. திமிரம்-இருள். நெறி-வழி.

20. சமர்-போர். குடுமி-சிகரம். குமர்-அழிவின்மை. கொடி துகில்-கொடிச் சீலைகள். அமர்-போர்.

21. தசும்பு-குடம். அசும்பு-வழுக்குநிலம். விசும்பு-ஆகாயம்.

22. பதாகை-கொடி. அனிலன்-காற்று. உடு-நட்சத்திரம். கோள்-கிரகம்.

23. துதை-நெருங்கிய. அளி-வண்டு. பொங்கர்-மாக் கொம்பு.

24. ஈட்டிய-தொகுக்கப்பட்ட. புடை-பக்கம். புரிசை-மதில். கோட்டிய-அலங்கரிக்கப்பட்ட. மன்றல்-திருமணம்.

25. பணை-வாத்தியம். துணை-ஒப்பு. புணை-மூங்கில். இணை வரை-இரண்டு மலை.

26. உவகை-மகிழ்ச்சி.

27. விளைஞர்-சுற்றத்தார். பானு-சூரியன். ஓசம்-ஒளி. திகிரி-சக்கரம்.

4. மனோன்மணீயம்

மனோன்மணீயம் என்பது செய்யுளால் ஆன ஒரு நாடக நூல். இதனை இயற்றியவர் திரு. பி. சுந்தரம்பிள்ளை என்பவர்; திருவனந்தபுரத்தில் தோன்றியவர்; 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர். லார்டு லிட்டன் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்பதைத் தழுவி எழுதப்பட்ட இந்த நாடகம், வழி நூலன்று, முதல் நூலேயாகும் என்று கூறுமாறு இருப்பது பிள்ளையவர்களுடைய திறமையைக் காட்டும்.

பாண்டிய மன்னன் ஜீவகன் மகள் மனோன்மணி என்பாள், சேர மன்னன் புருடோத்தமனைக் காதலித்து மணந்த வரலாறு இந்த நாடகத்தில் கூறப்படும். மனோன்மணியின் தோழி வாணி, நடராஜனைக் காதலித்து மணக்கும் செய்தியும் இதில் உடன் கூறப்படுவது.

பாடப் பகுதியாக வந்துள்ளது; மூன்றும் அங்கம் இரண்டாம் களம்-நடராஜனுடைய தனிமொழி.

2. இலக்கு-குறி. 6. காண்டி-காண்பாய். 7. அடி - அடியிதழ். 9. அருத்தி - உண்பித்து. 10. பராகம்-தாது; பொடி; துகள். பரப்பித்து-பரப்பி. 11. ஆசு-உள்ளீடு. 12. தூசு-ஆடை. 14. சிறார்-சிறுவர். 15. புள்-பறவை. அயம்-குதிரை அல்லது ஆடு. 18. புலன்-அறிவு. 22. பனிப்ப-துளிப்ப. 24. என்பு-எலும்பு. தினைப்பர் - அநுபவிப்பர். 26. ஓவாப்பாடு - ஒழியாத துன்பம். 32. வேதித்து-வேறுபடுத்தி. 44. வாணாள்-வாழ்நாள்.

5. இரக்ஷகர்

இதனை இயற்றியவர் ஆசிரியர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். இவர் திருவாங்கூரில் தேரூர் என்னும் சிற்றூரில் கி. பி. 1876-ஆம் ஆண்டில் பிறந்தவர்; 1931-ஆம் ஆண்டுவரையில் தமிழாசிரியாகத் தொண்டாற்றியபின் ஓய்வு பெற்றிருக்கிறார். இவர் பாடிய கவிதைகள் பல. அவை மலரும் மாலையும் எனத் தொகுக்கப்பெற்றுள்ளன. இரக்ஷகர் என்பது இயேசுவின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுவது.

1. பன்ன-விவரித்துக் கூற. 4. அல்-இரவு. 9. சிங்கவேறு-ஆண் சிங்கம்.

III. வருணனை

1. பந்தடித்தல்

இந்த வருணனை சிலப்பதிகாரம் 29-ஆம் காதையாகிய வாழ்த்துக் காதையில் உள்ளது.

1. இலங்கு-விளங்குகின்ற. பொலம்-பொன். கோதை-மாலை. வில்-ஒளி. ஆர்ப்ப-ஒலிக்க. ஆரம்-மாலை.

2. உலாய்-உலாவி.

3. அந்தரம்-வானம்.

2. திருமுனைப்பாடி நாடு

இந்த நாட்டின் வருணனை பெரிய புராணத்துள் திருநாவுக்கரசர் புராணத்துள்ளது.

தொன்மை-பழமை. துகள்-புழுதி; குற்றம். மல்கி-பெருகி; நிறைந்து. சென்னி-சிகரம். மதி-சந்திரன். மன்னி-நிலைபெற்று.

3. பெண்ணையாறு

இந்த ஆற்றின் வருணனையும் மேற்படி புராணத்திலே உள்ளது.

புனப்பண்ணை-குறிஞ்சி நிலம். புறவு-முல்லை நிலம். கனப்பு-திரளை. திரை-அலை. பகடு-எருமை. இனம்-கூட்டம். வனப்பு எண்ண-அழகை மதிக்க.

4. மருதநிலம்

இந்த நிலத்தின் வருணனையும் ஷை புராணத்திலேயே உள்ளது. கதலி-வாழை. களிறுகை-யானையின் துதிக்கை. மருங்கு-பக்கத்தே. வயப்புரவி-வலிமிக்க குதிரை. சகடு-வண்டி. சாதுரங்கபலம்-நால்வகைச் சேனை. நிகர்ப்பன-ஒப்பன. மருதம்-வயலும் வயல் சார்ந்த இடமும்.

5. உதய சூரியன்

புரட்சிக் கவி பாரதிதாசனுருடைய கவிதைகளுள் ஒரு பகுதி இதுவாகும். இவர் புதுவையில் இப்போதுள்ள ஒரு புலவர்; கி. பி. 1891-இல் பிறந்தவர். இவர் இயற்பெயர் சுப்புரத்தினம் என்பது.

1. செங்கதிரோன்-சூரியன். அமுதப்ரவாகம்-அமுதவெள்ளம்.

2. பரிதி-சூரியன். ஆதிக்கம்-ஆட்சி.

6. ஆலமரம்

இந்த ஆலமர வருணனை பாரதிதாசனாருடைய கவிதைகளுள் ஒரு பகுதி.

1. வெடுக்கென-விரைவாக.

2. புள்-பறவை.

IV. நீதி

1. திருக்குறள்

இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தார் என்பர். திருக்குறள் - அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற மூன்று பகுதிகளை யுடையது; 133 அதிகாரங்கள் கொண்டது. 1330 குறட்பாக்கள் அடங்கியது. இதற்குப் பத்துப் பேர்கள் பண்டே உரை எழுதியுள்ளனர். அவர்களுள் பரிமேலழகருடைய உரையே சிறந்தது என்பர்.

1. கடவுள் வாழ்த்து-கடவுளை வாழ்த்துதல். அரிது-உண்டாகாது.

2. வான் சிறப்பு-மழையினது சிறப்புக் கூறுதல். சார்வாய்-துணையாய்.

3. நீத்தார் பெருமை-முனிவர் பெருமை கூறுதல். உரன்-திண்மை. தோட்டி-அங்குசம். ஐந்து பொறிகள் (மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன) ஐந்து. வான்-சிறந்த வீட்டுநிலம்.

4. அறன்வலி உணர்த்தல்-அறம் பொருள் இன்பம் மூன்றினும் அறமே வலியுடையதாதல் என்பதை உணர்த்தல்.

பொன்றுங்கால்-இறக்கும்போது. பொன்றா-அழிவில்லாத.

5. இல்வாழ்க்கை-மனைவியோடு கூடி வாழ்தலின் சிறப்பு. பாத்து-பகுத்துக் கொடுத்து. ஊண்-உண்ணுதல். வழி-சந்ததி. எஞ்சல்-இறத்தல்.

6. வாழ்க்கைத் துணைநலம்-மனைவியின் நன்மை. பேணி-உபசரித்து. தகை-நன்மை. சோர்விலாள்-உறுதியுடையாள்.

7. புதல்வரைப் பெறுதல்-நன்மக்களைப் பெறுதல். உதவி-பதில் உதவி;

8. அன்புடைமை-தொடர்பு உள்ளவரிடத்து அன்புடையவனுதல். அகம்-மனம். வன்பால்-வலியநிலம். வற்றல் மரம்-உலர்ந்ததாகிய மரம்.

9. விருந்தோம்பல்-விருந்தினரை உபசரித்தல். மோப்ப-மோந்தவிடத்து. குழையும்-வாடும். அனிச்சம்-அனிச்ச மலர்.

10. இனியவை கூறல்-இனிய சொற்களைச் சொல்லுதல். உறாஉம்-மிகச்செய்யும். துவ்வாமை-வறுமை.

11. செய்ந்நன்றியறிதல்-பிறர் செய்த நன்மையை மறவாமை. இன்னு-துன்பம். உள்ள-நினைக்க. கெடும்-இல்லையாம்.

12. நடுவு நிலைமை-பகைவர், அயலார், நண்பர் என்னும் மூவகையாரிடத்தும் அறத்தின் வழுவாமல் ஒப்பநிற்கும் நிலைமை. கெடுவல்-கெடக்கடவேன். ஒரீஇ-நீங்கி.

13. அடக்கமுடைமை-மெய், மொழி, மனம் தீயவழியில் செல்லாமல் அடங்குதல் உடையவனுதல். திரியாது-வேறுபடாது. தோற்றம்-உயர்ச்சி. மாண-மிக.

14. ஒழுக்கமுடைமை - நல்லொழுக்கம் உடையவராயிருத்தல். ஒல்கார்-சுருங்கார். உரவோர்-மனவலியுடையவர். இழுக்கத்தின்-தவறுதலால். ஏதம்-குற்றம். படுபாக்கு-உண்டாதல்.

15. பொறையுடைமை-பிறர் தீங்கு செய்தவிடத்துத் தாமும் அத் தீங்கினைச் செய்யாது பொறுத்தலையுடையாதல். ஒறுத்தாரை-தண்டித்தவரை. பொதிந்து-முடிந்து.

16. அழுக்காறுமை-பொறாமைப்படாமை. கெடும்-அழிவர்.

17. வெஃகாமை-பிறர் பொருளை அபகரித்தற்கு நினையாமை. இறல்-அழிவு. வெஃகின் - அபகரிக்கக் கருதினுல். விறல்-வெற்றி.

18. புறங்கூறாமை - பிறரைக் காணுவிடத்துப் பழித்துப் பேசாமை. கண்ணின்று-எதிரே நின்று. கண் அற-கண்ணோட்டம் நீங்க. முன் நின்று-எதிரில் இல்லாமல்.

19. பயனில சொல்லாமை-பயனில்லாத சொற்களைச் சொல்லாமை. நயன்-நீதி. பல்லாரகத்து-பலரிடத்தில்.

2. பழமொழி

இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று; ஒவ்வொரு பழமொழியை இறுதியில் பெற்ற நானூறு வெண்பாக்களையுடையது. பாண்டி நாட்டின் முன்னுறை என்னும் பதியின் அரசர் இயற்றியது; இவருடைய இயற்பெயர் தெரியாது.

1. ஒற்கம்-வறுமை. வற்பம்-பஞ்சம்.

2. தெற்ற-தெளிய. நவைக்கப்படும்-துயர் செய்யப்படும்.

3. ஊழாயினர்-நல்வழியில் ஒழுகுவார். காஞ்சிரை-எட்டி மரம்.

4. விழித்து அலரும் நெய்தல்-கண் விழித்தால்போல மலரா நின்ற நெய்தற் பூ.

5. எய்ப்புழி-தளர்வு வந்த காலத்து. வைப்பு-நிதி. அச்சிடை-அச்சத்தை மேலிட்டு.

V. புகழ்ப்பாக்கள்

1. தேவாரம்

கடவுளைப் பற்றிய ஒரு வகை இசைப் பாட்டே தேவாரம் எனப் படும். இச் செய்யுள் தேவார ஆசிரியர் மூவருள் ஒருவரான திருநாவுக்கரசர் பாடிய பாடலாகும். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குடியில் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் மருள் நீக்கியார் என்பது. இவர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு.

குனித்த-வளைந்த. பனித்த-குளிர்ந்த. பிறவி-பிறப்பு.

2. நாச்சியார் திருமொழி

நாச்சியார் திருமொழி என்பது, ஸ்ரீ வில்லிபுத்தூரிலே பெரியாழ்வாருக்கு மகளாகத் தோன்றிய கோதையார் என்னும் பெயருடைய ஆண்டாள் அருளிச்செய்தது ஆகும். இவர் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்பர்.

நாறுமோ-பரிமளிக்குமோ. மருப்பு-தந்தம்.

3. திருவருட்பா

இராமலிங்க அடிகள் அருளிய அருட்பாடலின் தொகுதியே திருவருட்பாவாகும். அவர் சிதம்பரத்திற்கு வடமேற்கில் உள்ள மருதூரில் 1823-ஆம் ஆண்டில் தோன்றியவர்.

தீம்பருப்பு - முந்திரிப் பருப்பு. விரவி - கலந்து. அநித்தம்-சாஸ்வதம் இல்லாமை. அலங்கல்-மாலை.

VI. சிறு பிரபந்தங்கள்

1. நால்வர் நான்மணிமாலை

நால்வகை மணிகளால் தொகுக்கப்பட்ட மாலைபோல வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைப் பாக்களால் அந்தாதித் தொடையாகத் தொடுக்கப்பட்ட நூல் நான்மணிமாலை யாகும். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் நால்வரைப் போற்றுவது நால்வர் நான்மணிமாலை யாகும். இந் நூலை அருளிச் செய்தவர் துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும்.

1. மலி-நிறை. பிரான்-திருஞான சம்பந்தர். 2. வாயில்-வழி. சொல் வேந்து-திருநாவுக்கரசர். 3. படி-ஒப்பு. ஆருரா-சுந்தரா! மிடி-வறுமை. 4. ஆரணம்-வேதம். வாசகம்-திருவாசகம். தொரு-தோண்டிய. மன்பதை-மக்கள்.

VII. தனிப்பாடல்கள்

1. ஐங்கரன்-ஐந்து கைகளையுடைய விநாயகன். சென்னி-தலை. மயிலவன்-மயில் வாகனமுடைய முருகன்.

2. மிடி-வறுமை. பிணி-நோய். தேசிகர்-குரு.

சிறப்புப் பகுதி

I. நீதி

1. சிலப்பதிகாரம்

இந்த நீதியுரை சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதையாகிய வரந்தருகாதையின் இறுதியில் அதன் ஆசிரியர் இளங்கோவடிகளால் பாடப்பட்டுள்ளது.

பரிவு-குற்றம். இடுக்கண்-துன்பம். பாங்கு-முறைமை. பேணுமின்-விரும்புங்கள். புறஞ்சொல்-கோள் சொல்லுதல். ஊன் ஊண்-மாமிசம் உண்ணுதல். பொய்க்கரி-பொய்ச்சாட்சி. பொருள்மொழி-உண்மைமொழி. ஓம்புமின்-காப்பாற்றுங்கள். அறமனை - இல்லறம். வெள்ளைக்கோட்டி - பயனில சொல்லும் கூட்டம். விரகு-உபாயம். யாக்கை-உடம்பு. தேம்-இடம். ஒல்லுவது-சாரக்கடவது.

2. பழமொழி

1. ஈரம் பட்டஃதேபோல்-ஈரம் உண்டானதுபோல். கள்ளம்-வஞ்சம். படர்ந்தது-நினைத்தது.

2. தெரிதல்வேண்டா-தேடவேண்டா. மருத்துவர்-வைத்தியர்.

3. அகம்-மனம். தூய்மை-பரிசுத்தம். ஆற்ற-மிக. இகந்துழி-தூரமான இடத்தில். கயம்-குளம்.

4. விளிந்தார்-வெகுண்டார். மூளிந்தார்-அன்பு இல்லாதவர். தஞ்சம்-எளிது. அளிந்தார் - அன்புடையார். விளிந்துவிடும்-கெடுவான்.

5. கூழ்-உணவு. கிடப்புழி-படுக்க இடம்.

3. ஏலாதி

ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு பொருள்களால் ஆக்கப்பட்ட ஏலாதி என்னும் மருந்து உடல்நோயை நீக்குவதுபோல அரிய நீதிகள் ஆறு அடங்கிய பாடல் ஒவ்வொன்றும் உயிர்நோயை நீக்கும் என்ற கருத்துடன் எண்பது பாடல்களால் ஆன இந்நூல் தமிழாசிரியர் மகனார் மாக்காயனார் மாணாக்கர் கணி மேதாவியர் என்பவரால் இயற்றப்பட்டது. இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

1. மறை-இரகசியம். மூங்கை-ஊமை.
2. பிணி-நோய்.
3. புலால்-மாமிசம். வெளவான்-அபகரியான்.
4. எள்ளான்-இகழான். ஈத்து-கொடுத்து. ஏதம்-துன்பம்.
5. கைத்து-கையில் உள்ளது.

II. சிறுபிரபந்தங்கள்

1. அற்புதத் திருவந்தாதி

இந் நூல் காரைக்கால் அம்மையார் அருளியது. இவர் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். ஒரு பாட்டின் இறுதி எழுத்து, அசை, சொல், சீர், அடி என்பவற்றுள் ஒன்று அடுத்த பாட்டின் முதலாக அமைந்து வருவது அந்தாதி எனப்படும்.

1. வானவர்கள்-தேவர்கள். பாதம்-அடி. 2. உய்ந்தோம்-பிழைத்தோம். இடர்-துன்பம். கனை-ஒலிக்கும். 3. காதல்-அன்பு. தொல் உலகு-பழைய உலகு. ஆதி-முதல். 4. அரன்-சிவபெருமான். முரண்-மாறுபாடு. தானவன்-இராவணன்.

2. திரு இரட்டைமணிமாலை

இருவகைப்பட்ட மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை போலக் கட்டளைக் கலித்துறை, வெண்பா என்ற இருவகைப் பாடலால் அந்தாதியாகத் தொடுக்கப்பட்ட நூல் இரட்டை மணிமாலையாம். இதனை அருளிச் செய்தவர் காரைக்கால் அம்மையார்.

1. அரவம்-பாம்பு. என்பு-எலும்பு. ஏறு-எருது. 2. அவிர்-ஒளி. நஞ்சு-விஷம்.

3. திருப்புகழ்

உரம்-மார்பு; இருதய கமலம். உறை-வாழ்கின்ற. போதம்-அறிவு. பரம்-மேலானநெறி. சீலம்-நல்லொழுக்கம். நீதர்-நீதியுடையவர்; சிவபெருமான். சேய்-பிள்ளை.

4. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

புலராமே-உலராமல். அஞ்சனம்-மை. கலுழிப்புனல்-கலங்கல் நீர். ஒண்பதம்-ஒளிபொருந்திய அடி. செங்கீரை-ஒருகாலை மடக்கி ஒருகாலை நீட்டிக் கைகளை ஊன்றி முகம் நிமிர்ந்து குழந்தை அசைந்தாடுதல்.

5. முக்கூடற்பள்ளு

மலையாள மின்னல்-மலையாளப் பக்கத்தில் தோன்றும் மின்னல். ஈழம்-இலங்கை. கொம்பு-மரத்தின் கொம்பு அல்லது கிளை. கேணி-குளம். சேற்றில்-சேற்றால். திருமாலழகர்-முக்கூடலில் உள்ள திருமால் ஆகிய அழகர். பண்-இசை.

III. புகழ்ப்பாக்கள்

1. மகாத்மா காந்தி பஞ்சகம்

வையம்-உலகம். வறுமை-ஏழ்மை. மிஞ்சி-மிகுந்து. ஆர்ந்து-அடைந்து. படி-உலகம். நாகபாசம்-நாக பாணத்தால் ஆன தளை. கொணர்ந்தவன்-கொண்டுவந்த அநுமான். குடை செய்தான்-கண்ணன். கணித்தல்-எண்ணல். கலைவாணர்-புலவர்.

2. சுந்தரன் பாமாலை

ஆரா-தெவிட்டாத. தாலம்-உலகம். மெச்ச-பாராட்ட. உரம்-வலி. ஆக்கம்-உயர்வு; செல்வம். திரை-அலை. வையகம்-உலகம். ஐயம்-சந்தேகம். சிலை-கல். ஈடு-ஒப்பு. சிலை-விக்கிரகம். வித்தகன்-அறிவுடையோன்.

IV. தனிப்பாடல்கள்

1. கலை-துணி. உதரம்-வயிறு. அரன்-சிவபெருமான். அநிலம்-காற்று. மந்தரம்-மலை. புயம்-தோள்.

2. வாவி-குளம். பாடு-ஒலி. வாடை-வடக்கேயிருந்து வீசும் காற்று. பொத்தி-மறைத்து. தழீஇ-தழுவி. பேழை-பெட்டி. உயிர்க்கும்-பெருமூச்சுவிடும். ஏழையாளன்-வறியன்; எளியன்.

தமிழ் மொழிப் பயிற்சி

முதலாம் பாகம்

DESK WORK IN TAMIL

BOOK I

(ஐந்தாம் ஆறும் ~~ஏழாம்~~ வகுப்புகளுக்கு.)

VIDVAN S. P. SWAMIDASAN
Trinity College, Kandy.

கலைவாணி புத்தக நிலையம்
130, திரிகோணமலை வீதி, கண்டி

பதிப்புரிமை] [விலை ரூ. 1-50]

முதற்பதிப்பு—டிசம்பர், 1954

முகவுரை

அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழியின் வளத்தைப் பெருக்கும் எழில்மிகு பல நூல்கள் இந்நாட்களில் வெளி வருகின்றன. அந்நூல்களின் அறிவைச் சுவைக்கும் தமிழுலகம் இன்னும் பல நூல்களை எதிர் நோக்கா நிற்கின்றது. நந்தாய்மொழி விரைவில் சிறப்புறு மென் பதற்கு இதுவுமோர் அறிகுறியே.

ஆயினும், நம் இலங்கைத் தீவின் சிற்சில பகுதிகளில் வாழும் தமிழ் மாணவர் ண, ந, ன, ர, ற, ல, ழ, ள என்னும் எழுத்துக்களின் உபயோகத்தை உள்ளவாறு அறியாது பெரிதும் மயங்குகின்றனர். அக்குறையை முறையே களையாதுவிடின் தமிழ் மொழியின் சுவை பெரிதுங் குன்றிவிடும். எனவே எனது முப்பது வருட ஆசிரியர் சேவையில் யான் கண்ட உண்மைகளை அடிப் படையாகக் கொண்டு, அப்பிழைகளைக் களைய இச் சிறு புத்தகத்தை எழுதலானேன்.

மேற் கூறப்பட்டுள்ள எழுத்துக்கள் தனித்தனியே பிரிக்கப்பட்டு அவற்றிற்குத் தனித்தனி பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் சரியான உபயோகம், மாணவர் மனதில் ஆழமாகப் பதியுமாறு பலதரப்பட்ட நூதன அப்பியாசங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர் மனதில் ஏற்படக் கூடிய அற்ப சொற்ப சந்தேகங்களையும் அகற்றுவதற்கு ஒவ்வொரு அப்பியாசத்தின் கீழும் உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. ஏற்ற சொற்களைத் தெரிந்தெடுப்பதில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை நீக்க அவ்வெழுத்துக்களடங்கிய பல சொற்கள் ஈற்றில் அச் சடிக்கப்பட்டுள்ளன. அறிஞர் உலகம் இதை ஆதரிக்கும் என்பது எனது பூரண நம்பிக்கை.

கண்டி
15-11-54.

சு. பொ. சுவாமிதாசன்.

Kabeer Printing Works, Madras (2753)

தமிழ் மொழிப் பயிற்சி

முதலாம் பாகம்

ணி

1. ஏணியின் இரு பக்கங்களிலும் காணப்படும் எழுத்துக்களை நடுவிலுள்ள எழுத்தோடு சேர்த்து சொற்கள் ஆக்குக :

உதாரணம் : **அ ணி ; ஆ ணி.**

அ		ஆ	(1)	(6) ... ...
த		ஏ	(2)	(7) ... ...
து	ணி	கா	(3)	(8) ... ...
ப		கே	(4)	(9) ... ...
பி		தோ	(5)	(10) ... ...
ம		வா.		

2. அவற்றைப், பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) சரசு அழகான தங்க வளையல்கள் **அணிந்**திருக்கிறாள்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

(11) ....

(12) ....

3. குழம்பியிருக்கும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக எழுதுக:

(1) ண்ணெவெய் ....

(2) குக்ணக ....

(3) ஞுன்வண் ....

(4) பம்டமண் ....

(5) ணிண்ம்யபு ....

(6) ண்பெ ....

(7) ம்ண்கிண ....

(8) ணீதர்ண் ....

(9) டிறுண்க ....

(10) டின்பாயண் ....

(உ - ம்.) (1) **ண்ணெவெய். வெண்ணெய்.**

4. வட்டத்திலுள்ள காலி இடங்களை எழுத்துக்களால் நிரப்பி சொற்கள் ஆக்குக :



(உ - ம்.)

(1) க ண் (5) — —

(2) — — (6) — —

(3) — — (7) — —

(4) — — (8) — —

5. அச் சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) நாம் **கண்களினுலே** பார்க்கிறோம்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

6. பின்வரும் மும்மூன்று சொற்களையும் ஒரே வாக்கியத்தில் அமைக்க :

(1) கிணறு, தண்ணீர், மொண்டு.
(2) கிண்ணம், வெண்ணெய், கண்டான்.
(3) மண்டபம், உண்டான், அண்டை.
(4) சண்டை, குண்டு, மாண்டான்.
(5) ஆண்டவன், எண்ணம், வேண்டும்.
(6) பண்டு, கண்டி, ஆண்டார்.

(உ - ம்.)

(1) பாலு கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டான்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

7. பொருத்தமில்லாதவற்றைக் கீறி விடுக :

(1) (துணை, துனை) யோடல்லது நெடுவழி போகேல்.
(2) ஒருவரும் கோடித்துணியைப் பழைய துணியோடு (இனை, இணை) க்க மாட்டார்கள்.
(3) நல்ல தண்ணீருக்கு (மணம், மனம்) இல்லை.
(4) சூரியனுக்கு முன் (பணி, பனி) நிற்காது.
(5) (எண், என்) ஊர் இதுதான்.
(6) சர்க்கரை (இணி, இனி) க்கும்.
(7) குண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்ட போர் வீரன் கீழே (குனி, குணி) ந்து கொண்டான்.

(8) குயவன் மண் (பானை, பானே) செய்வான்.

(9) நீல (வாணம், வானம்) நட்சத்திரங்களால் நிறைந்திருக்கிறது.

(10) தாகத்தைத் (தனி, தணி) க்க தண்ணீர் குடித்தான்.

8. கோடிடப்பட்ட இடங்களில் ஏற்ற எழுத்துக்களை வைத்து நிரப்புக :

(1) தாகத்துக்கு ஏற்றது த ... ணீரே.

(2) ம ... அடித்ததும் மாணவர் வந்தனர்.

(3) வீ ... யின் ஓசை செவிக்கு இன்பமாய் இருக்கும்.

(4) மழை முகங் கா ... ப் பயிர் வாடிவிடும்.

(5) எள்ளிலிருந்து எண் ... ய் எடுப்பார்கள்.

(6) ப ... ம் பந்தியிலே; குலம் குப்பையிலே.

(7) எ ... ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

(8) பெ ... என்ருல் பேயும் இரங்கும்.

(9) வீமன் பா ... டவரில் ஒருவன்.

(10) உண்ண உ ... வு இல்லாதவன் ஏழை.

9. பின்வரும் சொற்களை மாற்றி யமைத்து வாக்கி யங்கள் ஆக்குக :

(1) உண்ட கண்டேன் நரியை நண்டு.

(2) வருவரோ அழுது மாண்டோர் ஆண்டுதோறும் புரண்டாலும் மீண்டும்.

(3) தின்ருன் கண்ணன் வெண்ணெய்.

(4) மணம் பணம் கணமே புரிந்த பெருகிற்று.

(5) கடந்தார் துணையால் இராமர் அணையின் கடலை.

(6) ஆண்டனர் பண்டைக்காலத்தில் மன்னர்கள் பலர் கண்டியை.

(7) கண்டு கொண்டுபோயினர் நகர காவலர் தண் டனைபெற்ற கைதியை வெளியே மீண்டும்.

(8) நெஞ்சம் கோபு துன்பத்தை அண்ணனின் எண்ணி புண்ணுறன் எண்ணி.

(9) பொய்யே எல்லாம் காண்பது கண்ணிறல்.

(10) சினத்தை குன்று ஏறி குணம் கணமேனும் என்னும் நின்றுர் அரிது காத்தல்.

(1) ....

(2) ....

....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

....

(7) ....

....

(8) ....

....

(9) ....

(10) ....

....

10. குழம்பியிருக்கும் சொற்களைப் பொருள் விளங்குமாறு திருத்தி அமைக்க :

(உ - ம்.)

(1)	காட்டு	ஆணை	(1)	காட்டு	ஆனை
(2)	ஆனி	பெட்டி	(2)	....	....
(3)	இராம	பானம்	(3)	....	....
(4)	அரசன்	ஆனை	(4)	....	....
(5)	ஆணி	மாதம்	(5)	....	....
(6)	மாங்	கணி	(6)	....	....
(7)	தலை	பனி	(7)	....	....
(8)	இனிய	பாணம்	(8)	....	....
(9)	உயரத்தை	கனி	(9)	....	....
(10)	காலைப்	பணி	(10)	....	....

11. கோடிடப்பட்ட இடங்களில் பின்வரும் சொற்களை வைத்து நிரப்புக :

நீண்ட, பண்டாரம், குமணன், மொண்டு, நாணம், குணத்தை, ஆண்ட, வண்டியில், நொண்டி, கண்டம்.

(1) ஸ்ரீ விக்கிரமராச சிங்கன் கண்டியை .... கடைசி அரசன்.

(2) .... பெண்களுக்கிருக்கவேண்டிய நாற் குணங்களில் ஒன்று.

(3) கழுத்தில் புண்ணுள்ள மாடுகளை .... பூட்டுவது பாவம்.

(4) நாம் வசிக்கிறது ஆசியா ....

(5) .... தமிழ் நாட்டு வள்ளல்களில் ஒருவர்.

(6) தண்ணீர் .... வரப்போன தங்கை இவள் தான்.

(7) சிலர் பஞ்சம் பிழைப்பதற்காக ....கள் ஆவர்.

(8) கால் ஒடிந்தவன் ....

(9) குரங்குக்கு .... வால் உண்டு.

(10) .... பாராட்டுவதே பெரியோர் தன்மை.

12. பின்வரும் சொற்களை ஓசைப்படி மூன்று பிரிவு கட்குட்படுத்தி எழுதுக :

இணை, கண்டு, காணம், கணை, கீணம், செண்டு, கோணம், துணை, தண்டு, சாணம், மணை, சேணம், நண்டு, புணை, வண்டு.

அணை	ஆணம்	கண்டு

13. பின்வரும் சொற்களை ஏற்ற இடங்களில் அமைத்து கவியைப் பூர்த்தி செய்க :

உண்டு, துண்டு, அண்டை, கண்டு.

.... விழுந்த பழத்தை

.... உடனே எடுத்து

.... துண்டாய் அறுத்து

.... பெரிதும் களித்தான்.

14. பின்வரும் சோடிப்பதங்களை பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்க :

மனம், மணம் ; கனை, கணை ; மனை, மணை ;
அன்னம், அண்ணம் ; பனி, பணி ; கன்னி, கண்ணி.

(உ - ம்.)

(1) **மனம்**போன போக்கெல்லாம் போக வேண்டாம்.

(2) பூக்களின் **மணம்** காற்றில் மிதந்து வந்தது.

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

(11) ....

(12) ....

15. குறிப்புகள் :

(1) ஒரு சொல்லிலுள்ள 'ண்' என்னும் எழுத்தையடுத்து 'ந' வரிசை எழுத்துக்களோ 'ன' வரிசை எழுத்துக்களோ வரா. 'ண' வரிசை எழுத்துக்களே வரும்.

(உ - ம்.) 'கண்நன்' என்றோ 'கண்னன்' என்றோ எழுதுவது பிழை. 'கண்ணன்' என்று எழுதுவதே சரி.

(2) ‘ ண் ’ என்னும் எழுத்தையடுத்து ‘ ர ’ வரிசை எழுத்துக்களோ, ‘ ற ’ வரிசை எழுத்துக்களோ வரா. அதற்கினமான ‘ ட ’ வரிசை எழுத்துக்களே வரும்.

(உ - ம்.) ‘ கண்ரான் ’ என்றோ, ‘ கண்றுன் ’ என்றோ எழுதுவது பிழை ; ‘ கண்டான் ’ என்று எழுதுவதே சரி.

(3) இவ்வெழுத்து சொல்லுக்கு முதலில் வராது.

(4) (கவனிப்பு) ‘ ண ’ என்னும் எழுத்தை உச்சரிக்க நுனி நாவை நுனி அண்ணத்தோடு பொருந்த வேண்டும்.

16. ஒன்பதாம் வினாவின் விடைகளை நன்றாக உச்சரித்துப் படிக்க.

ந

1. கோடிடப்பட்ட இடங்களில் எழுத்துக்களை நிரப்பி சொற்கள் ஆக்குக :

(உ - ம்.)

(1) ந ...	(6) நா ...
(2) ந ...	(7) நா ...
(3) ந ...	(8) நா ...
(4) ந ...	(9) நா ...
(5) ந ...	(10) நா ...

(உ - ம்.) (1) நட (6) நாடு.

2. அச்சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) நாம் கால்களினாலே நடக்கிறோம்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

3. ‘ நிர் ’ என்று துவங்கும் ஐந்து சொற்கள் தருக :
(உ - ம்.) **நிர்ப்பந்தம்**

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

4. பின்வரும் மும்மூன்று சொற்களுக்கும் ஒரே வாக்கியம் தருக :

(1) நண்பன், நாகம், நஞ்சு.
(2) நொண்டி, நரி, கண்டேன்.
(3) அந்த, பந்து, தந்த.
(4) தந்தை, சந்தை, வந்தார்.
(5) நேற்று, கந்தை, அணிந்த.
(6) பாய்ந்து, நீந்தி, சேர்ந்தான்
(7) நாய், நன்றி, செந்து.
(8) நல்ல, நீர், நாடு.
(9) அந்நாள், நீதி, புரிந்தனர்.
(10) சந்தி, அந்தி, சிந்தி.

(உ - ம்.)

(1) **நாகத்தால் தீண்டப்பட்ட நண்பன், நஞ்சு** தலைக்கேறி மாண்டான்.

(2) ....

....

(3) ....

....

(4) ....

....

(5) ....

....

(6) ....

....

(7) ....

....

(8) ....

....

(9) ....

....

(10) ....

....

5. 'அநு' என்று துவங்கும் ஐந்து சொற்கள் தருக:

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(உ - ம்.) **அநுகூலம்.**

6. அவற்றைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) பலர் தங்கள் வேலையில் **அநுகூலம்** கிடைப்பதற்காக ஒருவரையும் வருத்தப்படுத்த மாட்டார்கள்.

(2) ....

....

(3) ....

....

(4) ....

....

(5) ....

....

7. சேர்த்தெழுதுக :

(1) அ + நாள் ....

(2) இ + நாள் ....

(3) எ + நாள் ....

(4) அ + நேரம் ....

(5) இ + நகரம் ....

(6) எ + நாடு ....

(உ - ம்.) **அ + நாள் = அந்நாள்.**

8. எதிர்பதங்கள் தருக :

(1) நீதி ....

(2) நித்தியம் ....

(3) நாகரிகம் ....

(4) அந்தம் ....

(5) காலம் ....

(உ - ம்.) **நீதி × அநீதி.**

9. அவ்வெதிர் பதங்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்க :

(உ - ம்.)

(1) அநீதியாக ஆளும் அரசனை கொடுங்கோல் மன்னன் என்பர்.

(2) ....

....

(3) ....

....

(4) ....

....

(5) ....

....

10. ‘ நவ ’ என்று துவங்கும் ஐந்து சொற்கள் தருக :

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(உ - ம்.) **நவமணி.**

11. பின்வரும் சொற்களை கோடிடப்பட்ட இடங்களில் ஏற்றவாறு அமைத்து எழுதுக :

வேந்தன், ஆந்தை, நீந்துவது, காந்தம், மந்தையை, சந்தோஷமான, எந்த, சேர்ந்தது, பறந்து, வளைந்து.

(1) ஆற்றில் .... அதிக சிரமம்.

(2) உமக்கு .... ஊர் ?

(3) .... மரப்பொந்தில் வசிக்கும்.

(4) .... இரும்பை இழுக்கும்.

(5) மரத்தில் இருந்த காகம் .... விட்டது.

(6) அரசனை .... என்றும் சொல்லுவார்கள்.

(7) வருடப்பிறப்பு யாவருக்கும் ஒரு .... நாள்.

(8) வெளவால் எந்த இனத்தைச் .... ?

(9) தென்னைமரம் .... நிற்கும்.

(10) .... மேய்ப்போர் பாலைக் குடிப்பர்.

12. மாறியிருக்கும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக அமைக்க :

(1) வுநினை .... (6) சுஞ்ந ....

(2) சுநக்கு .... (7) லநீம் ....

(3) ன்ண்நப .... (8) க்ம்நோக ....

(4) ம்கரந .... (9) ந்துப ....

(5) யாநியஅம் .... (10) ழல்நி ....

(உ - ம்.) நினைவு.

13. பிழை நீக்கி எழுதுக :

(1) மநிதன் .... (6) சொன்தம் ....

(2) னல்ல .... (7) பூநை ....

(3) வன்தான் .... (8) பறன்து ....

(4) பார்த்தாந் .... (9) குநின்து ....

(5) எந்நிடம் .... (10) தின்நும் ....

14. சொற்களை மாற்றியமைத்து வாக்கியங்களாக எழுதுக :

(1) உருசியும் நல்ல இல்லை நீருக்கு நாற்றமும்

(2) எப்பொழுதும் நன்மை நினைத்தபடியே நாம் தராது நடப்பது

(3) மட்டுமல்ல உண்டு நாட்டு வாழ்க்கையிலும் நன்மைகள் பல நகரவாழ்க்கையில்

(4) இல்லை தந்தை மந்திரம் மிக்க சொல்

(5) தந்திரம் வாழ்தலே சிறந்த சேர்ந்து

(6) ஆழம் முடியாது காணலாம் ஆழம் நீர் நெஞ்சு காண

(7) செல்லும் நகர்ந்து நத்தை நகர்ந்து

(8) நங்கூரம் கப்பலை இடுவார்கள் நிற்பாட்ட

(9) நாங்கள் நாளைக்கு வருவோம் எல்லாரும்

(10) நல்ல நகருக்கு காற்று நடந்து வாங்க வெளியே செல்லவேண்டும்.

(1) ....

(2) ....

....

(3) ....

....

(4) ....

(5) ....

(6) ....

....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

....

15. பின்வரும் சொற்களைப் பொருத்தமான இடத்தில் அமைத்துக் கவியைப் பூர்த்தி செய்க :

பந்து, சொந்தம், தந்தை, சந்தை.

.... நேற்று மாலை

.... சென்ற காலை

.... வாங்கி வந்து

.... ஆகத் தந்தார்.

16. பின்வரும் சொற்களை கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுக்குள்ளும் ஓசைக்கிசைய வரிசைப்படுத்துக :

குந்தி, சாந்தம், கந்தை, ஏந்தல், சந்தி, காந்தல், சந்தை, தந்தி, சிந்தை, பந்தி, தந்தை, கூந்தல், மந்தி, நிந்தை, நீந்தல்.

எந்தை	காந்தம்	அந்தி

17. குறிப்புகள் :

(1) ‘ந்’ என்னும் எழுத்தை அடுத்து ‘ன’ வரிசையிலுள்ள எழுத்துக்களோ, ‘ண’ வரிசையிலுள்ள எழுத்துக்களோ வரா. ‘ந’ வரிசை எழுத்துக்களே வரும்.

(உ - ம்.) ‘அந்னகரம்’ என்றோ ‘அந்ணகரம்’ என்றோ எழுதுவது பிழை; ‘அந்நகரம்’ என்று எழுதுவதே சரி.

(2) அவ்வெழுத்தையடுத்து அதற்கினமாகிய ' த ' வரிசை எழுத்துக்களும் வரும்.

(உ - ம்.) வந்தான், சந்தை, பந்து.

(3) ' ந ' என்னும் எழுத்து மொழிக்கு முதலில் வரும்.

(4) (கவனிப்பு) ' ந ' என்னும் எழுத்தை உச்சரிக்க அண்ணத்தைச் சேர்ந்த பல்லின் அடியாகிய இடத்தே நாவினது நுனியைப் பரத்தி அதன் வடிவு நன்றாய்ப் பொருந்தும்படி சேர்க்கவேண்டும்.

ன

1. வட்டத்திலுள்ள காலி இடங்களை நிரப்பி எழுதுக :



(உ - ம்)

(1)	கோன்	(5)	....
(2)	....	(6)	....
(3)	....	(7)	....
(4)	....	(8)	....

2. அச்சொற்களைப் பொருள்விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) அரசனைக் கோன் என்றும் சொல்லுவார்கள்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

3. கோடிடப்பட்ட இடங்களை நிரப்பி சொற்கள் ஆக்குக :

(1) ...... ளை	(6) ...... னி
(2) ...... ளை	(7) ...... னி
(3) ...... ளை	(8) ...... னி
(4) ...... ளை	(9) ...... னி
(5) ...... ளை	(10) ...... னி

(உ - ம்.) (1) யானை ; (6) பனி

4. அச்சொற்களை வாக்கியங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) யானை மிகவும் பெரிய மிருகம்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(உ - ம்.)

(6) காலையில் பனி பெய்யும்.

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

5. கீழ்க்காணும் மும்மூன்று சொற்களுக்கும் ஒரே வாக்கியம் தருக :

(1) ஈன்ற, அன்னை, மனம்.

(2) நன்றி, கொன்றவர், என்றும்.

(3) மான், கன்று, ஓடினது.

(4) தினம், தானம், இன்னும்.

(5) மானம், இனிது, மனிதன்.

(6) மன்னன், ஏன், சொன்னான்.

(7) தின்னும், யானை, கனி.

(8) மனை, தனி, கிழவன்.

(9) நுனி, தேன், இனி.

(10) அன்னம், சென்றது, நளன்.

(உ - ம்.)

(1) ஈன்ற அன்னையின் மனம் வருந்த எவ்வித தவறும் செய்யலாகாது.

(2) ....
....

(3) ....
....

(4) ....
....

(5) ....

(6) ....

....

(7) ....

....

(8) ....

....

(9) ....

(10) ....

....

6. சொற்களை ஓசைப்படி பிரித்து கீழ்க்காணும் பிரிவுகளுக்குள் வரிசைப்படுத்துக :

கனம், ஊனம், சனம், குனி, ஏனம், சனி, கானம், சினம், சீனம், தனி, தனம், தினம், தொனி, மோனம், பனி.

இனம்	கனி	ஈனம்

7. மாறியிருக்கும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குக :

(1) னன்ல்மி	....	(6) வம்ன	....
(2) னம்கன்	....	(7) வினைம	....
(3) றுநன்	....	(8) னவாம்	....
(4) பாம்ன	....	(9) ன்அம்ன	....
(5) தெனைன்	....	(10) மூறுன்	....

(உ - ம்.) (1) மின்னல்

8. ‘அன்’ என்று முடியும் பத்து சொற்கள் தருக :

(1)	(6) ....
(2)	(7) ....
(3)	(8) ....
(4)	(9) ....
(5)	(10) ....

(உ - ம்.) செல்வன்

9. கோடிடப்பட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுதுக :

கூனி, மனைவி, குன்று, பொன், கனை, சின்னம், ஞானம், மென்று, முனி, சினை.

(1) இராமர் .... யோடு விளையாடின விளையாட்டு வினையாய் முடிந்தது.

(2) .... ஞல் செய்யப்பட்ட ஆபரணங்கள் அழகாயிருக்கின்றன.

(3) .... பொன்னைவிட விலை பெற்றது.

(4) உணவை நன்ருய் .... விழுங்கவேண்டும்.

(5) செங்கோல் ஒரு அரச ....

(6) குதிரை .... க்கும்.

(7) கோவலனது .... யின் பெயர் கண்ணகி.

(8) நாரத .... வர் சங்கீதத்தில் வல்லவர்.

(9) இலங்கையில் பல மலைகளும் .... களும் இருக்கின்றன.

(10) மீனின் முட்டையைச் .... என்றும் சொல்லு வார்கள்.

10. 'ஆன்' என்று முடியும் பத்து சொற்களைத் தருக :

(1) .... (6) ....

(2) .... (7) ....

(3) .... (8) ....

(4) .... (9) ....

(5) .... (10) ....

(உ - ம்.) படித்தான்

11. கோடிடப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்து எழுதுக :

(1) .... யும் பிதாவும் .... தெய்வம்.

(2) தன் வினை .... ச் சுடும்.

(3) ஒரு .... ச் சோற்றுக்கு ஒரு அரிசி பதம்

(4) மகாமேருவைச் சேர்ந்த காகமும் .... ஆகும்.

(5) .... தேடி உண்ணுமல் புதைக்கவேண்டாம்.

(6) .... கற்ருேன் சிறப்புடையன்.

(7) தாய்வீடு போனுலும் .... நம்பிப் போக வேண்டும்.

(8) எலி வளையாளுலும் .... வளை வேண்டும்.

(9) நல்லாரைக் காண்பது ....

(10) .... வரும் பின்னே மணி ஓசை வரும் ....

12. 'ஏன்' என்று முடியும் பத்து சொற்கள் தருக:

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

(உ - ம்.) பார்த்தேன்

13. மாறியிருக்கும் சொற்களை ஏற்றவாறு திருத்தியமைக்க :

(1)	பசியைத்	தனித்தான்
(2)	மலைக்	காண்
(3)	காட்டில்	தணித்தான்
(4)	வாழைக்	கண்டு
(5)	மயில்	கான்
(6)	மாலவன்	குண்டு
(7)	கல்	கன்று
(8)	வெள்ளை	அண்ணம்
(9)	வெடிக்	குன்று
(10)	நுனி	அன்னம்

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

(உ - ம்.) (1) பசியைத் தணித்தான்

14. பிழை நீக்கி எழுதுக :

(1) மணிதன் ....

(2) கன்வலி ....

(3) கண்ணிப் பெண் ....

(4) என்னெண்டு ....

(5) சீணி ....

(6) பென் குழந்தை ....

(7) நிண்டான் ....

(8) மீண் ....

(9) ஒன்னு ....

(10) பானை ....

15. பொருத்தமில்லாதவற்றைக் கீறி விடுக :

(1) மாங் (கணி, கனி) இனிக்கும்.

(2) பெண்கள் பல ஆபரணங்களை (அனி, அணி) வார்கள்.

(3) வெள்ளம் வருமுன்னே (அனை, அணை) போட வேண்டும்.

(4) எங்கள் பாடசாலை எட்டு (மணி, மனி) க்கு ஆரம்பிக்கிறது.

(5) (பூணை, பூனை) எலி பிடிக்கும்.

(6) (நாண், நான்) அழகாகப் பாடுவேன்.

(7) அரசியைக் (கான, காண) பலர் வந்தனர்.

(8) (பணை, பனை) ஓலையால் பாய்முடைவார்கள்.

(9) (துனி, துணி) ந்தவனுக்குத் துக்கமில்லை.

(10) பேறுதை தலையில் (பேண், பேன்) அதிகரிக்கும்

16. பின்வரும் சொற்களைக் கோடிடப்பட்ட இடங்களில் நிரப்பி கவியைப் பூர்த்திசெய்க :

அன்னம், கன்னி, சொன்ன, மன்னன்.

.... விட்ட நல்ல

.... சென்று மெல்ல

.... வெல்லாம் கேட்டு

.... மகிழ் கொண்டான்.

17. சொற்களை மாற்றியமைத்து வாக்கியங்களாக்குக :

(1) உள பல என்னிடம் பழங்கள்.

(2) யாத்திரை பழைய தலங்களில் ஒன்று குமரி கன்னியா

(3) சொல்லும் பிள்ளை சொன்னதை கிளி

(4) பயன் பாடு உண்டு பட்டால்

(5) என்றும் வீட்டு சொல்வார்கள் புலி பூனையை

(6) நிறம் பொன் மஞ்சள்

(7) கிழமை இன்று சனி

(8) எல்லாம் பொன் மின்னுவது அல்ல

(9) பெரியவன் கொடையில் கன்னன்

(10) அடிக்க, அடிக்க, குனிய, குனிய, மடயன், மடயன், குனிகிறவனும், அடிக்கிறவனும்.

(உ - ம்.)

(1) என்னிடம் பல பழங்கள் உள.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

....

18. குறிப்புகள் :

(1) ஒரு சொல்லிலுள்ள 'ன்' என்னும் எழுத்தை அடுத்து 'ந' வரிசை எழுத்துக்களோ, 'ண' வரிசை எழுத்துக்களோ வரா ; 'ன' வரிசை எழுத்துக்களே வரும்.

(உ - ம்.) 'என்நிட' மென்றோ, 'என்ணிட' மென்றோ எழுதுவது பிழை; 'என்னிட' மென்றெழுதுவதே சரி.

(2) 'ன்' என்னும் எழுத்துக்குப்பின் அதற்கினமான 'ற' வரிசை எழுத்துக்களும் வரும்.

(உ - ம்.) கன்று, குன்று.

(3) 'ன்' வரிசை எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரா.

(4) (கவனிப்பு) 'ன' என்னும் எழுத்தை உச்சரிக்க நாவினது நுனியை மேலே தூக்கி அண்ணத்தைத் தடவ வேண்டும்.

19. கீழே கொடுக்கப்பட்ட எழுத்துக்கள் அடங்கிய இருபது சொற்களை ஒவ்வொன்றின் கீழும் எழுதுக :

ண	ந	ன
(உ-ம்.) மணம்	நகம்	கனம்

20. உச்சரித்துப் படிக்க :

(1) மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

(2) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

(3) தன்வினை தன்னைச் சுடும்.

ர

1. மேலும் கீழுமுள்ள எழுத்துக்களை நடுவிலுள்ள எழுத்தோடு தனித்தனியாகச் சேர்த்து சொற்கள் ஆக்குக :

அ	இ	உ	க	த
		ரை		
ஆ	கீ	கூ	தே	நா

(1) .... (6) ....

(2) .... (7) ....

(3) .... (8) ....

(4) .... (9) ....

(5) .... (10) ....

(உ - ம்.) (1) அரை ; (6) ஆரை

2. அச்சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கி யங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) சில தானியங்களை அரைத்து மாவாக்குவார்கள்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ஆரை கீரை வகைகளில் ஒன்று.

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

3. கீழ்வரும் மும்மூன்று சொற்களையும் ஒரே வாக்கியத்தில் அமைக்க :

(1) இரவு, திருடன், ஓரம்.

(2) இரும்பு, அரம், முரி.

(3) தரித்திரன், இரந்து, திரிவான்.

(4) நெருப்பு, கரி, எரி.

(5) இருமல், மருந்து, அருந்து.

(6) தெரிந்தது, பெரிய, உருவம்.

(7) மரம், கரை, சரிந்து

(8) கரிய, திரை, உயர்த்து

(9) எரிந்து, தரையில், உருண்டு.

(10) குருவி, பொரித்த, இரையை.

(உ - ம்.)

(1) தெரு ஓரம் ஒரு திருடன் நின்றான்.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

4. ‘ரி’ என்னும் எழுத்தைக்கொண்டு முடியும் ஈரெழுத்துச் சொற்களை ஏணியின் கீழ்ப்படியிலிருந்து மேற்படி வரைக்கும் ஒவ்வொன்றாக எழுதுக :



5. அச்சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்க.

(உ - ம்.)

(1) ஆற்றுநீர் நாள்தோறும் கரையை அரித்துக் கொண்டேயிருக்கிறது.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

6. எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குக :

(1) துந்பரு .... (6) ரபாம் ....

(2) ரும்விப்ப .... (7) ருபதித் ....

(3) மயாதைரி .... (8) ரிம்காய ....

(4) மைஉரி .... (9) இக்ம்கர ....

(5) ருபொதும்ந் .... (10) ணகரம்கா ....

(உ - ம்.) (1) துந்பரு-பருந்து.

7. பின்வரும் சொற்களை அவற்றின் ஓசைக்கிசைய பிரித்து கொடுக்கப்பட்டிருக்கும் மூன்று சொற்களின் கீழும் எழுதுக :

உரம், ஏரி, ஈரம், தரம், ஓரம், கீரி, நேரம், சேரி, பாரம், பாரி, சரம், வாரம், சிரம், மாரி, மரம்.

அரம்	ஆரம்	தேரி

8. கோடிட்ட இடங்களை ஏற்ற எழுத்துக்களால் நிரப்புக :

(1) மழையை மா — என்றும் சொல்லுவர்.

(2) சோழனும், சே — னும் பாண்டியனும் தமிழ் அ — சர்கள்.

(3) சி — ப்பு சந்தோஷத்தைக் குறிக்கும்.

(4) தை — யம் புருச இலட்சணம்.

(5) ஏழு நாட்கள் கொண்டது ஒரு வா — ம்.

(6) அரத்தால் இ — ம்பை அறுத்து விடலாம்.

(7) பெ — மை உள்ளவன் சிறுமை அடைவான்.

(8) ஒரு வ — ஷத்தில் பன்னிரண்டு மாதங்கள் உள.

(9) க — ம்பு தின்ன கைக்கூலி வேண்டியதில்லை.

(10) ந — தந்திரமுள்ள மி — கம்.

9. ‘ அர் ’ என்று முடியும் பத்து சொற்கள் தருக.

(1) .... (6) ....

(2) .... (7) ....

(3) .... (8) ....

(4) .... (9) ....

(5) .... (10) ....

(உ - ம்.) பாலகர்

10. பிழை நீக்கி எழுதுக :

(1) நெற்பொறி ....

(2) கைவிறல் ....

(3) வயல் வறப்பு ....

(4) புறுணக் கதை ....

(5) மருவாதி ....

(உ - ம்.) நெற்பொரி

(6) இறவு நேரம் ....

(7) நெல் கருது ....

(8) விறிந்த மலர் ....

(9) பெறிய பறவை ....

(10) சறிந்த மரம் ....

11. ‘ஆர்’ என்று முடியும் பத்து சொற்கள் தருக :

(1)	(6) ....
(2)	(7) ....
(3)	(8) ....
(4)	(9) ....
(5)	(10) ....

(உ - ம்.) தந்தார்.

12. கோடிடப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக :

வைரம், தெரு, ஓரம், தூரம், கரை, நரி, நேரம், ஆரம்பம், ஈரம், விரி.

(1) குறித்த நேரத்தில் கூட்டம் .... ஆகிறது.

(2) சூரியன் பூமியிலிருந்து எவ்வளவு ....?

(3) இந்தத் .... சுத்தமாயிருக்கிறது.

(4) என் மோதிரத்திலுள்ள கல் ....

(5) .... ஆடு பிடிக்கும்.

(6) சில பூக்கள் மாலையில் .... யும்.

(7) இந்தச் சேலையின் .... அழகாயிருக்கிறது.

(8) .... மான உடையோடு நெடுநேரம் நிற்கலாகாது.

(9) படிக்கிற .... விளையாடலாகாது.

(10) கடல் .... சுகத்துக்கு நல்லது.

13. சொற்களை மாற்றியமைத்து வாக்கியங்களாக எழுதுக :

(1) இருக்கிறேன் இறைவன் சுகமாய் நான் திருவருளால்

(2) ஒரு விழுந்தது தெரு பெரிய மரக்கிளை ஓரம்.

(3) கோபம் திரௌபதை துரியோதனன் சிரித்ததால் கொண்டான்.

(4) வீரியம் காரியமே பெரிது அல்ல.

(5) கரையும் கரைப்பவர் கல்லும் கரைத்தால்

(6) மாட்டுக்கு இக்கரை பச்சை அக்கரை

(7) சொல் உன் சுருக்கமாக சரித்திரத்தை

(8) அரை துவங்குகிறது இன்று வருட எங்கள் பரீட்சை

(9) ஒரு விரோதிக்கிருன் காரணமுமின்றி கேசவன் என்னை.

(10) ஓடும் குதிரை விரைவாக.

(உ - ம்.)

(1) நான் இறைவன் திருவருளால் சுகமாய் இருக்கிறேன்.

(2) ....

(3) ....
....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

....

(9) ....

....

(10) ....

14. கொடுக்கப்பட்ட சொற்களில் பொருத்தமான வற்றைத் தெரிந்து கோடிடப்பட்ட இடங்களை நிரப்பி கவியைப் பூர்த்தி செய்க :

உரை, நரை, தரை, துரை.

.... த்து நன்றுய் இளைத்த

.... கள் சொன்ன இனிய

.... யைப் பெரிதும் விரும்பி

.... யில் விழுந்து பணிந்தார்.

15. குறிப்புகள்.

(1) 'ர்' என்னும் எழுத்துக்குப்பின், அடுத்துவரும் வல்லினத்தின் ஒற்று வரும். (உ - ம்.) அர்ச்சனை, அர்ப்பணம், அர்த்தம்.

(கவனிப்பு)

(2) 'ர' என்னும் எழுத்தை உச்சரிக்க, நாவின் நுனியை மேலே தூக்கி, அந்நுனியால் அண்ணத்தைச் சிறிது தடவவேண்டும்.

16. உச்சரித்துப் படிக்க :

(1) வீரியமல்ல காரியமே பெரிது.

(2) அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.

(3) கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்.

ற

1. இரு புறங்களிலும் உள்ள எழுத்துக்களை நடுவிலுள்ள எழுத்தோடு தனித்தனியாகச் சேர்த்து சொற்களாக்குக :

அ		த	(1) …………	(6) …………
உ		நெ	(2) …………	(7) …………
எ	றி	ப	(3) …………	(8) …………
க		பொ	(4) …………	(9) …………
கு		ம	(5) …………	(10) …………

(உ - ம்.) (1) அறி (6) தறி

2. அச்சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) என் சாமர்த்தியங்களை எல்லாம் என் தகப்பனார் நன்றாக அறிவார்.

(2) ……………………………………………………

(3) ……………………………………………………

(4) ……………………………………………………

(5) ……………………………………………………

(6) ……………………………………………………

(7) ……………………………………………………

(8) ……………………………………………………

(9) ……………………………………………………

(10) ……………………………………………………

3. வட்டத்திலுள்ள காலி இடங்களை ஏற்ற எழுத்துக் களால் நிரப்பி சொற்கள் ஆக்குக :

(உ - ம்.)



(1)	(6) ... ...
(2)	(7) ... ...
(3)	(8) ... ...
(4)	(9) ... ...
(5)	(10) ... ...

(உ - ம்.) (1) அறு

4. அச்சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கி யங்களில் அமைக்க :

(உ - ம்.)

(1) வசந்தன் கயிற்றைக் கத்தியால் **அறுத்தான்.**

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

5. பின்வரும் மும்மூன்று சொற்களையும் ஒரே வாக்கியத்தில் அமைக்க :

(1) பறவை, சிறகு, முறிந்த

(2) கொற்றவன், வெற்றி, சிறந்தான்

(3) உறுதி, பிறந்தவர், இறப்பது

(4) குறவர், உறைவர், குன்று

(5) பறை, அறை, அறிவி

(6) பாறை, ஏறி, தவறி

(7) சிறை, அறை, இறந்தான்

(8) குறை, முறை, கூறு

(9) சிறுவன், எறிந்து, மறைந்தான்

(10) வறண்டு, இறைத்தான், கிணறு

(உ - ம்.)

(1) சிறகு முறிந்த பறவை மரத்திலிருந்து கீழே விழுந்தது.

(2) ....

(3) ....

(4) ....

(5) ....

(6) ....

(7) ....

(8) ....

(9) ....

(10) ....

6. மாறியிருக்கும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குக :

(1) றுழிமமொ ....
(2) விதுற ....
(3) ந்ன்றதிதா ....
(4) ப்டுபாறைமு ....
(5) ச்லேசிசாறை ....
(6) றுன்சிவ ....
(7) றுஊய்கா ....
(8) றிஅவு ....
(9) நறின் ....
(10) றுமைபொ ....

(உ - ம்.) (1) மறுமொழி.

7. பின்வரும் சொற்களை ஓசைக்கிசைய கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் கீழ் வரிசைப்படுத்துக :

நிறை, பொறுப்பு, புறம், மறை, மறம், உறுப்பு, பறை, முறம், வெறுப்பு, நிறம், முறை, கறுப்பு, திறம், அறுப்பு, துறை.

அறம்	ஒறுப்பு	திறை

8. பின்வரும் சொற்களைக் கொண்டு கோடிடப்பட்ட இடங்களை ஏற்றவாறு நிரப்புக :

அறிகுறி, ஏறினுன், அறம், வறுமை, பறக்கும், கறை, எறிந்தான், தேறினுன், ஆறு, நிறைந்தது.

(1) .... செய்ய விரும்பு.

(2) திருடனுடைய கத்தியில் இரத்தக் .... இருந்தது.

(3) கந்தன் பந்தைச் சுவரில் ....

(4) நாகன் மரத்தின்மேல் ....

(5) .... மிகவும் கொடியது.

(6) எறும்பு முட்டைக்கொண்டு திட்டை ஏறுவது மழைக்கு ....

(7) கழுகு மிகவும் உயரமாய்ப் ....

(8) என் தம்பி பரீட்சையில் ....

(9) என் பெட்டி பரிசு புத்தகங்களால் ....

(10) என் அண்ணன் .... பழங்கள் தந்தார்.

9. குழம்பியிருக்கும் சொற்களை பொருள் விளங்கு மாறு திருத்தி அமைக்க :

பந்தை	எரி	(1)	....
வீட்டு	இரை	(2)	....
அடுப்புக்	கறி	(3)	....
மரத்தை	எறி	(4)	....
மிருக	இறை	(5)	....
காட்டு	மறை	(6)	....
ஆட்டுக்	கரி	(7)	....
கை	உரை	(8)	....
திரு	மரை	(9)	....
செய்யுள்	உறை	(10)	....

(உ - ம்.) பந்தை எறி.

10. பொருத்தமில்லாதவற்றைக் கீறிவிடுக :

(1) சமையற்காரன் வாழைக்காயை கத்தியால் (அறி, அரி) ந்தான்.

(2) தச்சன் பலகைகள் (அரு, அறு) த்தான்.

(3) இளஞ்சந்திரனைப் (பிறை, பிரை) என்று சொல்லு வார்கள்.

(4) சோமு இப்பொழுது மனம் (மாரி, மாறி) விட்டான்.

(5) பஞ்சத்தால் பலர் (இறந்து, இரந்து) விட்டனர்.

(6) பூனைக்கு இரவில் கண் நன்றாகத் (தெறி, தெரி) யும்.

(7) ஜவஹர் பலமுறை (சிரை, சிறை) சென் றிருக்கிறார்.

(8) இந்தப் பசு நன்றாய்ப் பால் (கற, கர) க்கும்.

(9) ஒருவர் செய்த நன்றியை ஒருநாளும் (மர, மற) க்கலாகாது.

(10) பழ (மற, மர) ங்களைப் பல இடங்களிலும் வளர்க்க வேண்டும்.

11. பிழைநீக்கி எழுதுக :

(1) ஆரு மனிதர் ....

(2) துரைமுகம் ....

(3) எலிப்பொரி ....

(4) சிரு பையன் ....

(5) பாற்த்த படம் ....

(6) ஒறு நாள் ....

(7) பெறிய வீடு ....

(8) கோழி இறத்தம் ....

(9) நாற்பது திருடர் ....

(10) இராச கிறீடம் ....

12. கோடிடப்பட்ட இடங்களில் பொருத்தமான எழுத்துக்களை வைத்து நிரப்புக :

(1) உ ... ந்த நீரைப் பனிக்கட்டி என்று சொல்லு கி ... ம்.

(2) தந்தை சொல்லை மீ ... வது தருமமன்று.

(3) அதிக வாசிப்பால் அ ... வு பெருகும்.

(4) சிலர் உலகத்தை வெ ... த்து துறவிகளாகிறார்கள்.

(5) ஒருவரிடம் உபகாரம் பெற்றவுடன் நன்றி கூ ... வேண்டும்.

(6) மதுபானம் வெ ... யை உண்டாக்கும்.

(7) வீணையின் சாவியை விளையாட்டாக மு ... க்காதே.

(8) கீழே விழுந்த பாத்திரம் பொடிப்பொடியாய் நொ ... ங்கிற்று.

(9) பெண்களின் நெ ... றியைப் பிறைக்கு ஒப்பிடுவர்.

(10) கற்றோனுக்குச் சென்றவிடமெல்லாம் சி ... ப்பு.

13. பின்வரும் சொற்களைக் கோடிடப்பட்ட இடங்களில் நிரப்பி கவியைப் பூர்த்தி செய்க :

சீறி, மீறி, கூறி, பீறி.

.... போன எல்கை

.... வந்த மானை

.... பாய்ந்து சிங்கம்

.... கொன்ற தங்கே

14. பின்வரும் வாக்கியங்களிலுள்ள சொற்களை ஏற்றவாறு மாற்றியமைக்க :

(1) பற்றவேண்டும் அடிகளை இறைவன் உறுதியாய்
(2) புரு பறவை கபடற்ற ஒரு
(3) பறை காலத்தில் பழைய செய்வர் அறைந்து விளம்பரம்.
(4) ஒருவனுடைய சரீர மானத்தையும் அழகைக் குறைக்கும் கெடுப்பதோடு வறுமை
(5) காடு பூமி உறைவர் ஆள்வர் பொறுத்தார் பொங்கினர்.
(6) உள்ள அருகே காட்டில் நீர்த்துறைகள் மறைந்து வன விலங்குகள் இருக்கும்.
(7) சிறுக சிறுக விதைத்தவன் அறுப்பான்
(8) செடி, ஆறு வந்தார்கள் மறைவிலிருந்து திருடர்கள்.
(9) சிறியோர் பெரியோர் செய்த பொறுத்துக் கொள்வதே சிறு முறைமை பிழைகளை
(10) மரப்பட்டைகளிலிருந்து உறுதியான செய் கிறார்கள் கயிறுகள்

(1) ....

(2) ....

(3) ....

....

(4) ....

....

(5) ....

....

(6) ....

....

(7) ....

(8) ....

....

(9) ....

....

(10) ....

....

15. குறிப்புகள்.

(1) ஒரு சொல்லிலுள்ள 'ற்' என்னும் எழுத்தை யடுத்து 'ர' வரிசை எழுத்துக்கள் வரா; அந்த 'ற' வரிசை எழுத்துக்களே வரும்.

(உ-ம்.) 'கற்ரவன்' என்று எழுதுவது பிழை; 'கற்றவன்' என்று எழுதுவதே சரி.

(2) 'ற்' என்னும் எழுத்தின்பின் வல்லின ஒற்றுக்கள் வரா.

(உ-ம்.) 'பற்க்கள்' என்று எழுதுவது பிழை; 'பற்கள்' என்று எழுதுவதே சரி.

(3) நிகழ்கால வினைச்சொல்லின் ஈற்றயலாக 'ற' வரிசை எழுத்துக்களே வரும்; 'ர' வரிசை எழுத்துக்கள் வரா.

(உ-ம்.) வருகிரேன், வருகிரான் என்றெழுதுவது பிழை; வருகிறேன், வருகிறான் என்றெழுதுவதே சரி.

(4) இவ்வெழுத்து மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வராது.

(5) (கவனிப்பு) 'ற' என்னும் எழுத்தை உச்சரிக்க, நாவினது நுனியை மேனோக்கி எடுத்து அந்நுனியால் அண்ணத்தைத் தடவவேண்டும்.

16. பின்வரும் எழுத்துக்களின் கீழ் அதே வரிசை எழுத்துக்களைக்கொண்ட இருபது சொற்களை எழுதுக:

ர	ற

17. உச்சரித்துப் படிக்க:

(1) சிறகு முறிந்த பறவை மறுபடியும் பறந்தது.

(2) சிறுக விதைத்தவன் சிறுக அறுப்பான்.

(3) பாறையில் ஏறின மனிதன் தவறிக் கீழே விழுந்தான்.

ல

1. வட்டத்தில் வெறுமையான இடங்களை எழுத்துக்களால் நிரப்பி சொற்கள் ஆக்குக :

(உ - ம்.)



(1) ... ... (5) ... ...
(2) ... ... (6) ... ...
(3) ... ... (7) ... ...
(4) ... ... (8) ... ...

(உ - ம்.) (1) கலை.

